வேளாளர் மரபில் தோன்றி உலகத்தில் அனேக சித்துக்களாடினவர். இவர் வாத, வைத்திய, யோக, ஞான மார்கங்களைத் தெளிவான நடையில் உலகத்தோர் எளிதில் அறியும்படிப் பாடியவர். இவராலேற்பட்டவனேக பாடல்கள் அகத்தியர் பெயரால் வழங்கும். இவர் அனேக கால முயிரோடிருந்து பிறகு சமாதி புகுந்தாரெனச் சொல்லப்படும்; (அகம்+பேய்+சித்தர்) மனமாகிய பேயை வென்று சித்தியடைந்தவரென இவருக்கு காரணப் பெயராகக் — கொள்ளினும் பொருந்தும்.

He was one of the Siddhars † of the Tamil country belonging to the Vellala caste or community. He was said to have performed many miracles in the world.

He compiled several treatises in clear easy verses on Alchemy, Medicine, and Mental and Moral Philosphy. Many of his poems are erroneously attributed to 'Agastiyar. He was said to have lived for several years and then entered Samadhi. The name can also be applied to him literally as indicating one who conquered the ever restless (devilish) mind.

மேலும் மூச்சை அடக்கிப் பிடித்து மூலக்கனலாகிய குண்டலி சக்தியை எழுப்பி மணி மந்திர மருந்துகளின் உதவியால் மாறாத மதி யமுத முண்டு, நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய இவைகளை அறியாது நித்திய உடம்பைப் பெற்றவர்கள். ககன குளிகை கொண்டு அனேக அண்டங்களைச் சுற்றி ஆங்காங்குள்ள அதிசயங்களைக் கண்டு ஆனந்திப்பவர்கள்.

தமிழ் வைத்தியத்திற்குக் காரண கர்த்தர்களாகி உலகத்தாருக்குப் பயன்படும்படி அனேக நூற்களைப் பாடி வைத்த மகான்கள். இவர்கள் தொகை எழுவதினாயிரம் என்று சொல்லப்படும்.

† The Siddhars were of a Tamil Sect which maintained Siva for its God, and rejected everything else in the Saiva system which was inconsistent with pure Theism. They were persons holding tremendous powers in themselves and who, if they chose could retain their bodies for Ages or disintegrate them by chemical processes, powers of words or concentration of will. They had investigated and studied fully all kinds of drugs, minerals and poisons and their physical, chemical and psychological properties and therefore they knew what was beneficial and what was not to their existence.

They held that the body was the one and only instrument with which one could attain success in Spiritual evolution and growth and that if the body could only be made strong and perfect they could get rid of birth and death eventually after the full growth and development of the soul.

They attained Spiritual awakening by rousing the Kundalini (Serpent fire or power as it is termed) lying dormant at the base of the spinal column in the region of the sacral plexus and thereby attained all Siddhis. They were the masters of their bodies and could change the very materials in them by re-arranging the molecules in such a fashion that they had no more sickness of death. They could send mental electricity without the aid of the nerve - channels and thus work all over the universe with any one at any place.

They could fly through the aerial with the aid of animated mercurial pills. Many of the most wounderful medicines of the present day owe, their origin to them notably the use of metals regions medicines. They are 70,000 in number.

Dawson in his classical Dictionary of Hindu Mythology gives a brief account of these Siddhars.

For further details see under the appropriate head *(சித்தர்).*

அகப்பை, மருந்துகளைக் கையாள்வதற்காக வேண்டித் தேங்காயோட்டினாற் செய்த ஒரு வகைச் சட்டுவம். இது சாந்தகப்பை அல்லது குழியகப்பை, தட்டகப்பை, சிற்றகப்பையென மூவகைப்படும். அன்றியும் சில்லியகப்பை, துளைக்கிட்டிய அகப்பை, மூட்டையகப்பை, திரியக்கு அகப்பை கச்சகப்பை என வேறு வகைகளும் உண்டு. A domestic utensil consisting of an oval or circular bowl made of cocoanut shell with a long bamboo stick for handle attached to it; something in the shape of a spoon. There are three kinds of it namely - trowel shaped big spoon, plate like spoon (used in the kitchen) and small spoon; the other kinds are also mentioned above; 2. *(அசம் + பை)* உடம்பினுள்ளிருக்கும் பை, அதாவது இரைப்பை, degestive pouch inside the body i.e., the stomach 3. கருப்பப்பை, the uterus or the womb.

அகப்பை, மூக்கன் மூக்கு நீண்ட பறவை, a bird with a long beak.

அகமமரம், அகமரம், வெள் வேல மரம், a tree; white - bark Acacia, - Acacia leucophloea

அகமமிர்தம், உடம்பினுள்ளிருக்கும் அமிர்தம் அதாவது நாதவுப்பு, nectar in the human body i.e., fluid secreted by glands.

அகமம், மலை, mountain; 2. மரப்பொது, a tree in common.

அகமரித்த கருப்பம், *(அகம்+மரித்த+கருப்பம்)* இதற்கு மூன்று வித அர்த்தங் கொள்ளலாம். (a) உள்+அழிந்த+கரு அல்லது சினை, an embryo which suffered death in the womb within the first three months of pregnancy. (b) உயிர்+துறந்த+கருப்பிண்டம், a foetus which diet before its viablility i, e, before the sixth month. (e) உள்+இறந்த+குழந்தை, a child which died in the womb after its viability but before devliery i,e, between the sixth and the ninth month after conception. 2. தெய்வச் செயல், வாத பித்த சிலேட்டும சம்பந்தம், பத்தியக்கேடு ஆகிய காரணங்களினால் வயிற்றிலுள்ளிறந்த குழந்தை. மேனாட்டு வைத்தியமுறையில் அடியில் கண்டபடி இதற்கு அனேக காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. An embryo of foetus or a child which died in the womb from causes Providential, disordered state of the three humours in the system, failure in keeping up the regimen etc.

NOTE:- In the Western system of medicine; it has been said that the death of the foetus refered to may also be due to following causes:-

1. General diseases,

2. Emotional Disturbances.
3. Irregular diet.
4. Toxic state or disease relating to circulation.
5. Abortive drugs.
6. Diseases of the uterus.
7. Diseases of the foetus.
8. Maternal or paternal diseases like syphilis etc.,

NOTE:2 (in law) Evidence of immaturity or of such imperfect development that goes to indicate non - viability as well as evidence of intra - uterine death, are the determining factors to establish that a child had suffered death only in the womb and that it could not have been born alive.

அகமரித்த கர்ப்பம், கருப்பங்காலங் கடந்து, கருப்பைக்குள், மரித்த பிண்டம் தங்கி நிற்றல், retention of the dead fetus in the uterus beyond the period of normal gestation - Missed labor.

அகமரித்தல், உள்ளே இறத்தல் அதாவது வயிற்றினுள்ளே குழந்தை சாகுதல், dying inside, which means deth of an infant or foetus in the womb.

NOTE: A child that has died before birth shows signs of ante-partum rigormortis (stiffness of death before delivery) or of macertation or mummification after its birth.

அகமரிப்பு, கருப்பையினுள் நேர்ந்த *சாவு,* death which occurred in the womb - intra-uterine death.

அகமருந்து, உள்ளுக்குச் சாப்பிடும் அல்லது கொடுக்கும் மருந்து, medicine takne or given internally; 2. உடம்பினுள் புகட்டு மருந்து, medicine which is administered or injected into the body.

Note:- இது 32 வகைப்படும். அவை குடிநீர், சூரணம், மாத்திரை, லேகியம், செந்தூரம், பேதி மருந்து நீர்ப்பெருக்கி முதலியன. It consists of 32 kinds - such as decoction, powder, pill, electuary oxide, purgative, diuretic etc see. தொகை யகாரதி.

அகமனம், *(அ+கமனம்)* பெண்ணிடம் சேராதிருத்தல்; புணராமை, abstinence from sexual intercourse; 2. *(அகம்+மனம்)* உள்ளே யிருக்கு மனம், mind within.

அகமனி, பெண்ணிடம் சேராதவன், a confirmed bachelor, a celibate; 2. ஆகாயமார்க்கத்திற்கு செல்லமுடியாதவன், one who in incapable of traveling in the aerial regions as opposed to *கமனி* one who is capable of doing so with the aid of mercurial pills called 'Gagana kuligai' (animated).

அகமாலிகள், கருங்குமிழ், a black variety of Kandahar tree - Gmelina arborea alias G. tomentosa,.

அகமுகம், உள்நோக்கிய முகம், இதனை அந்தர் முன் நோக்கமெனவுங் கூறுவர், face turned inwards, as in an abscess. 2. தனக்குள் பார்த்தல், (in philosophy) inward look.

"அஞ்ச புலன் வழியிற் போகாது
அகமுகமாய்"
(வள்ளலார் சரித்திரம்)

அகமூலம், உள்மூலம் அதாவது ஒருவரும் பார்க்க முடியாதபடி ஆசனத்திற்குள்ளுண்டாகும் ஓர் வித மூல நோய், Piles withing the anal orifice; hemorrhoids within the sphinceter ani - Internal piles; 2. உள்ளிருக்கும் மூலாதாரம், one of the six psychic centres in the human body situated in the sacral region; 3. உள்வேர், internal root; 4. *உட்காரணம்;* internal causes; 5. உடம்பினுள்ளே இருக்கும் ஆதி வஸ்து அதாவது ஆன்மா, the primordial substance inside the body i.e., the soul.

அகம், தனியம், grain, 2. மரப்பொது; tree in general; 3. மனம், mind, 4. வெள்வேல் a tree, white-bark Acacia - Acacia, leucophloea; 5. உள், interior; 6. உட்பக்கம், the inner part, inside; 7. *மார்பு,* chest or thorax; 8. வேதனை, pain; 9. குணாகுணம், natural disposition; 10. *பாம்பு,* a snake; 11. மலை, mountain; 12. காமயின்பம், sexual pleausre; 13. ஆகாயம், ether; 14. ஆன்மா, the soul; 15. பகல், day; 16. அகங்காரம்; the operative principle of transmigraion - Egotism.

"அகமறலிவ்வுடல் அடக்கமறிவார்
அக மாளதிவ்வுடல் அட்டமக்கூறு"

17. உடம்பு, as in

"தேகமென்ற அகமறியார் சண்டி
மாண்பார்,"
(இராம-வைத்தி-சூத்திரம்)

NOTE:- (In Vedantam) சிதாபாச சொரூபம், தானென்னு மமதை, the product of Mahat. (In Sankyam) the third of the 8 elements of creation - Individualisation.

அகம்பனம், மூச்சுத் திணறுதல், the suspension of the vital function when the lungs are deprived of air; suffocation.

அகம்பாவம், see அகங்காரம்.

அகம்பியகை, சோர புருடனோடு சேர்ந்த பெண். a married woman who has had illicit intercourse; an adulteress; 2. சோரம் போன பெண், an unmarried female guilty of fornication, - A fornicatress.

அகம்மியம், சேரக்கூடாமை, that which is unift to be approached.

அகம்மியா, (அகம்மியம் -அளவின்மை) அளவு கடந்து புருடர்களோடு கூடும் பெண், விபசாரி, a prostitute; a harlot. NOTE: கணக்கற்ற புருடர்களோடு சேருவதால் பலவித நோய்கட் குள்ளாவளெனக் கருதியே இவளைக் கூடுவது தகாதெனக் கொள்ளப்பட்டது. Cohabitation with prostitutes in forbidden because of the danger of catching contagious diseases.

அகம்மகியா கமனம், பொது மாதரைச் சேர்தல், cohabiting with a public woman or a prostitute; *(2)* சோரப்புணர்ச்சி அதாவது பிறன் மனையாளைப் புணர்தல், illicit intercourse with a married woman - Adultery; 3. விபசாரம், fornication.

அகம்மியாகமனம், பண்ணல், சோரத்தனம் செய்தல், to commit lewd actions. 2. பிறன் மனையாளோடு புணர்தல், to commit adultery.

அகம்மியாகமனன், தூர்த்தன், he who commits lewd acts; a fornicator; 2. பிறன் மனைவியைப் புணருபவன், an adulterer.

அகம்மியை, see அகம்மியா.

அகர காயம், உடம்பின் முன் பக்கம், the fore or front part of the body.

அகரக் களங்கு, சூதக்களங்கு, an impure oxide of mercury.

அகரத்திரவம், பாலேடு, தயிரேடு, the thin upper part of standing milk or curd.

அகர நீர், முத்தச்சிப்பியின் நடுவிலிருக்கும் நீர் *(திருவள்ளு - பஞ்ச)* the water deposited in the centre of a pearl - oyster.

அகர பரணி, பூனைக்காலி, a plant, Cow-hage or Cat-bean - Mucunna pruriens alias Car-popogon pruriens.

அகரபாதம், பாதத்தின் முற்பகுதி, the fore part of the foot.

அகரம், தமிழ் முதலெழுத்து,

"அகரமுதல் அவ்வெழுத்தும் ஆதியாகும்
அறிந்தோர்க்கு இதிலேதான் வெளியதாகும்."

(அக. முது. ஞானம்)"

the first letter of the Tamil Alphabet; 2. மூன்றெழுத் தொன்று; இது சிவனைக் குறிக்கும்;

"அறைகுவேன் அகரமது சிவமதாக்க
ஆச்சரியம் உகரமது சத்தியாக்க"

(சுந்த, ஞானம்.)

one of the three mystic letters (A+U+M) referring to Siva. 3. இரசம், mercury - Hydrargyrum; 4. மூலாதாரம்,

"அகரவெழுத்தால்
அஞ்செழுத்தேறலாம்"

one of the six psychic centres of the body situated at the base of the spinal column at the sacral region.

அகராஜசம், சிவதை, a herb, Indian Rhubarb - Ipomaea Turpethum.

அகரி, ஓர் வகைப் புல், a kind of grass - Andropogon serratus.

அகரு, இது வொரு காட்டுச் செடி, குத்துக்குத்துகளாக விருக்கும். இதில் சில சிறிய மரங்களாகவும் வளரும். இதன் இலைகள் மாறி மாறியும் ஓரங்களிலரும்பு வாய்ந்தவை களாகவும், பூ பூனை வாலைப் போலவு மிருக்கும். காய், மூன்று அறைகளுள்ளது. இதில் இரண்டு விதங்கம் உண்டு-1 தெப்பல் அகரு இது மருந்திற்குபயோகப்படும். 2. கிருஷ்ண அகரு இது கருப்பாகவும் கனம் வாய்ந்ததாயுமிருக்கும். தண்ணீருக்குளமிழும். இதற்கு இந்துஸ்தான் தேசத்தில் 'ஊதேகறகி' என்று பெயர். இது தமிழ் தேசத்து மரமல்ல. ஆகவே இதைப்பற்றி அனேகமாய்த் தெரியவராது. a kind of woody shrub found in groups but some of them grow into even small trees. Leaves usually alternate, with toothed margins. The flowers resemble the tail of the cat and the fruits contain three cells each. It consists of two kinds namely - 1. Floating Agaru used in medicine. 2. sinking agaru, a black and heavy variety sinking in water. It is called "oothay karaki' in Hindustani. It is not a native of the Tamil country and so, very little is known about it; 2. ஓர் மரம், a kind of tree, the wood of which is fragrant; Agallochum - Amyris Agallocha. 3. *(அ+கரு)* in Sanskrit கனமில்லாமை, not heavy 4. அகருக்கட்டை, the fragrant light wood of அகரு tree; eagle wood - Aquila xylaloo.

NOTE: 1. (In Botany) it is said to belongs to Excoecaria genus and the species best known are classified as Agallocha (Tigers' Milk) and Sebifera (China tallow)

The other South Indian species, indigenous and naturalised are Baccata, Cochin, Chinensis, Indica, Insignis and Oppositifolia.

NOTE:-2. This name is also used for (a) Aquilaria Agallocha (Eaglewood) (b) Pterocarpus santalinus (Red sanders) as in அகருசந்தம்"

அகருக்கட்டை, அகரு மரத்தின் கட்டை. இதைப் பீனசம், தலைவலி, தினவு, புடைகள் முதலியவைகளுக்கு

உபயோகிக்கலாம், fragrant aloe wood of the tree - Amyris Agallocha. It is used in catarrh of the nose, headache, prurience, swellings etc. NOTE:- It is very doubtful if this could be the Agil mentioned in the Tamil Materia Medica and sold in bazaars. The varieth appears to be a different one.

அகருகந்தம், செஞ்சந்தனம், a tree; Red sanders - Pterocarpus santalinus. NOTE:- The term is apparently used for Red sanders without distinction as both are fragrant.

அகரு சந்தனம், செஞ்சந்தனம், see note under அகருகந்தம்.

அகருத் திராவகம், அகருக்கட்டையினின்றிறக்கும் வடிநீர், a liquid extracted from Agaru wood. It is used for strength, cleaning bowels and promoting digestion.

அகருமந்தம், குங்கிலியம், a resinous gum, Indian Dammer - Shorea robusta.

அகரோகம், சயரோகம், consumption; 2. உள் நோய், internal disease.

அகர், அகரு, which see.

அகர்க்கட்டை, அகருக்கட்டை, a kind of fragrant wood - Amyris Agallecha.

அகர்ணகம், see அகர்ணம்.

அகர்ணம், (அ+கர்ணம்) காதின்மை, lack of ears, absence of ears; 2. காது கேளாமை, thickness of hearing; defect in the power of hearing; 3. செவிடு, lack or loss complete or partial of the sense of hearing - Deafness.

அகர்நாதன், (அகரம்+நாதன்) பகலுக்கு நாதன், அதாவது சூரியன், ruler of the day i.e., the Sun.

அகர்முகம், (அகர் = பகல்) விடியற்காலம், the first appearance of light in the morning day-break, dawn; 2. காலைப் பொழுது (வைகறை) morning time i.e., till 10 a.m.

அகல சத்து, (அகலம் + சத்து) மலைச்சத்து அதாவது சிலாசத்து, ஓர் உபரசச்சரக்கு fossil-exudation; stone-lac supposed to issue from stones of mountains in hot weather - Bitumen. It is produced in mountains where iron abounds. It is classified in Tamil medical treatises as one of the 120 kinds of natural drugs.

அகல நடத்தல், மெதுவான அகண்ட நாடியின் நடை, slow and broad pulsation; a pulse full with wide excursions. see அகற்றி நடத்தல்.

அகல முனி, அடுதின்னாப்பாளை, a plant which even the goat will not eat, owing to its extreme bitterness, worm-killer-Aristolochia bracteata.

அக மூலி, மலை மூலி, herbaceous plant growing on mountains; mountain herb.

அகலம் மார்பு, the chest breast; 2. பூமி the earth; 3. ஆகாயம், the sky; 4. மலை, mountain.

அகலவாலி சுறோதம், வால் நீண்ட குரங்கு, a long-tailed monkey - Macaca ferox.

அகலமுக வூதல், மருந்திட்டுச் சீலைமண் செய்த அகல் சிவக்கும்படி ஊதுதல், blowing red hot the luted earthen vessel containing medicine.

அகலறை, மலையினுட்குகை, the cave in a mountain; 2. மலையினுச்சி, the top of a mountain; 3. மலைப்பாகம், the part of a mountain.

அகலாதரை, ஆடாதோடை, a plant, winter cherry - Adatodha vesica alias gendarussa adatodha.

அகலிகம், புழுக்கொல்லி, see அகலமுனி.

அகலியம், மரப்பொது,tree in common.

அகலுள், பூமியினுட்பக்கம், the interior of the earth, underground; 2. பெண் குறியினுட்புறம், the membranous canal extending from the external orifice in the vulva to the uterus - Vagina. 3. யோனிவாயில், the vaginal orifice.

அகல், நிதம்பம், அதாவது அடிவயிற்றிலிருந்து பெண் குறிவரை மேகன வெலும்புக்கு முன்தோன்றிப் பருவ காலத்தில் மயிரால் மூடப்பட்டிருக்கும் நிணமேடாகிய , அல்குலின் மேற்பகுதி, an euphemism for the Mons veneris - that portion of the body extending from the lower part of the abdoment forming the eminence in front of the pubis, (which is at the front of the pelvis) covered with hair at puberty in the female; 2. வெள்வேல மரம், a tree, white bark Acacia - Acacia leucophloea; 3. பெருமர், tooth-leaved tree of Heaven - Ailanthus excelsa; 4. மண் விளக்கு, an earthen lamp 5. ஓர் அளவு, a measure, 6. விரிவு, expanse; 7. அகில், Chittagong wood - Chukrussia tabularis.

அகவஞ்சம், வெள்ளி, silver - Argentum.

அகவடி, அடியின் உட்புறம் அதாவது உள்ளங்கால், the underside of the foot; sole.

அகவலி, உள்வலி, internal pain, as opposed to புறவலி, external pain; 2. மனவன்மை, strength of the mind. see அகநோய்.

அகவலிமை, உடம்பினுள்ளமைந்த வலிவு, bodily strength,

அகவாசிகம், கருங்குறிஞ்சா, a black variety of குறிஞ்சா, a plant; Common Indian Ipecacuanha - Tylophora asthmatica.

அகவாயில், மனம், the mind.

அகவாயுக்கள், உடம்பினிலுள்ள அந்தக்கரணங்களைச் சீவனோடு கூட்டி நின்று ஆட்டுவிக்கும் ஐந்து வித வாயுக்கள், அவையாவன - 1. வைரம்பன், 2. முக்கியன் 3. பிரபஞ்சனன், 4. அந்தரியாமி, 5. மகா பிராணன், The five vital airs, which in communion with the soul, are supposed to operate upon the intellectual faculties of human beings. NOTE:- The soul is said to be embedded in the five-fold sheaths or garments. Ordinarily the soul and its coverings are manifested together. But the soul is different from the sheaths when the Upadhis are not manifested.

அகவிதழ், பூவினுள்ளிதழ் (In botany) the inner petals of a flower, 2. பூந்தாது, the male of, organ of fructification in flowers with in the petals - steamen.

அகவு, அமுக்கிரா, Horse root Withania (Physalis) Somnifera.

அகவுயிர், உடம்பினுள்ளுயிர், the life or soul in the body.

அகவை, வயது, the period which represents the whole or a part of the age of any animal or object; age; 2. பதினாறு வயதுக்குட்டப்பட்டவள், a female under sixteen years of age.

அகவைரம், உள் வைரம், (In biology) formation of knobby or wart like prominences in the heart of a tree Inner tuberosity.

அகழான், அகழெலி, நண்டைப் போல் வளையில் வசிக்குமோர் வகை யெலி, வயலெலி, இது பத்தியத்திற் குதவும், a field rat Millardia meltada. It is useful in diet.

அகழிப்பவுத்திரம், வாத பித்தத்தினால் மறைந்து அகழியைப் போல் ஆசனவாயைச் சுற்றி நான்கு பக்கமும் துவாரங்களை யுண்டாக்கி இரத்தம் சீழ் முதலியவைகளை யொழுகச் செய்யுமோர் வகைப் பவுத்திரம். இதற்கு வட மொழியில் 'பரிட்சேபி பகந்தர விரணம்' என்று பெயர். An abnormal channel of communication between the bowel and the surface round the anus A kind of Anal Fistula.

அகழெலி, வரப்பெலி; வயலெலி களுக்குள்ளிது வொரு பெரிய சாதி. இதன் மயிர் நீளமாயும் சிறிது முரடாயும் கபில நிறம் வாய்ந்து மிருக்கும். சிறு மயிர்கள் மிருதுவாயும் புகை நிறம் வாய்ந்ததாயுமிருக்கும். வயிற்றின் பாகத்தில் மயிர் வெளுப்பும் சாம்பல் நிறமுங் கலந்ததாக விருக்கும். முழு நிறமோ சாதாரண வெலியின் நிறத்தைப் போலிருக்கும். தலை சிறியது; காதும் சிறியது. சிறுமயிர்களடர்ந்து காணும். வால் உடம்பின் நீள முண்டு. மீசை நீளம் அடர்த்தி, பற்கள் மஞ்சளாயிருக்கும். குளம் தோண்டும் ஒட்டர்களிதைப் பிடித்துண்பார்கள். இது வளைக்குள் சேகரித்து வைத்திருக்கும் நெற்கதிர்களைத் தோண்டியெடுத்துத் தங்களுக்கு மழைக்காலத்தில் உதவும் படிக்குக் கொண்டு போவார்கள். mole-rat-Nesokia Indica alias Arvicola Indica alias Musdubius. Its fur is rough long and some what brown; the short furs softer but dusky, paler beneath and tinged grey. The colour is like that of the common rat; head short, ears small, and tail naked and nearly as long as the body; ears small and covered with fine small hair; whiskers long and full and incisors orange yellow. Tank diggers or wodders as they are called, capture this animal in great numbers and used them as food; they plunder the graia stored up in the holes and take it home for use in winter.

அகளங்கம், (அ+களங்கம்) குற்றமற்றது, that which is free from impurities; 2. பிறவிப்பாஷாணம் முப்பத்திரெண்டில் ஒன்றாகிய சீதாங்க பாஷாணம், one of the 32 kinds of native or natural Arsenic.

அகளம், தாழி, a large pot with a wide mouth, 2. மிடா, a large earthen pot of storing grain; 3. சாடி a jar.

அகளி, தண்ணீருற்றும் அகண்ட சட்டி, a wide-mouthed water-pot; 2. கொப்பரை, a kettle; see அகளம்.

அகள், see அகவு.

அகற்பப் பிராணயாமம், மூச்சொடுக்கும் பழக்கம், breathing exercise ordinarily without meditation.

அகற்பித மரணம், (அ+கற்பிதம்+மரணம்) நியமித்த காலத்திற்கு முன்னுண்டாகும் சாவு; அகால மரணம், death occurring before the prescribed time - Premature death or untimely death.

அகற்றல், விரித்தல், to unfold; 2. உச்சாடனம் magic art causing one to disappear 3. விசால மாக்கல், to extend to widen.

அகற்றி நடத்தல், நடக்கும் போது அரையாப்புக் கொண்டவன் போல் காலை அகலவைத்தல்; to straddle whit walking; to walk with the legs far apart like a person suffering from bubo on the grain or from hydrocele.

அகற்றுதல், காலை விரித்தல், to widen the legs apart.

அகனம், வேங்கை மரம், a tree called the Indian Kino - Pterocarpus bilobus.

அகனாதி, கொடிவேலி, வெண்கொடிவேலி, a shrub, Leadwort or white-flowered Leadwort, Ceylon Leadwort-Plumbago Zeylanica 2. செங்கோடி வேலி, Rosby - flowered Leadwort, Officinal Leadwort - Plumbago rosea 3. வெள்ளைக்குன்றிமணி, White Indian liquorice - Ahrus precatorius (albiflora).

அகனாதிகம், see, அகனாதி.

அகன், எருக்கு, a milky shrub, Swallow wort bearing curled flowers - Calotropis gigantea.

அகன்மணி, உயர்ந்த ரத்தினங்களிலொன்று, one of the superior gems; a flat gem.

அகன்றநாளம், விரிந்த இரத்த நாளம், enlarged vein; varicose vein.

அகன்றில், ஆண் (அன்றில்) பறவை, the male of a bird noted for its attachment to its mate - Indian Nightingale.

அகன்னம், செவிடு, deafness, see அகர்ணம்.

அகன்னிய சனி, நாளுக்கு நாள், from day to day.

அகாண்ட குசுமம், காலந்தவறிப் பூத்தல், blossoming out of season.

அகாண்ட சாதம், (அ+காண்டம்+சாதம்) அகாலப் பிறப்பு அதாவது காலமில்லாத காலத்தில் பிறந்தது, premature birth.

அகாண்ட சூலை, குத்தல் வலி, acute pain.

அகாண்ட பாதசாதம், பிறந்தவுடனிறத்தல், dying soon after birth.

அகாண்ட பாதம், அகாலசம்பவம், unnatural or untimely occurrence.

அகாண்டம், (அ+காண்டம்) அகாலம், காலமில்லாத காலம், out of season before the natural time; 2. முண்ட மில்லாதது, that without a trunk.

அகாத சுரம், கொடிய சுரம், a condition marked by excessively high temperature or aggravated febrile symptoms - Hyperpyrexia.

அகாத நோய், அதிக நோய், a virulent disease.

அகாத பசி, கொடிய பசி, extreme hunger - Hyperorexia, see அதிபசி.

அகாத பித்தம், கொடிய பித்தம், excessive secretion of bile - Hypercholia.

அகாதப் புளிப்பு, மிகப் புளிப்பு, excess of acidity - Hyperacidity.

அகாதம், மிகுதி, excess - Hyper.

அகாத வலி, பொறுக்க முடியாத வலி, excessive sensibility to pain - Hyperalgesia; 2. அதிக வலி, excessive pain - Hyperalgia, 3. ஆழ்ந்த வலி, deep-seated pain.

அகாத வியர்வை, அதிக வியர்வை, excessive sweating - Hyperephidrosis.

அகாத வுதிரம், மிகுதியான இரத்தம், vast quantity of blood - Polyemia; 2. அளவிறந்த இரத்தம், super abundance of blood - Plethora.

அகாதவொழுக்கு, மிகுதியான வொழுக்கு அல்லது போக்கு, excessive evacuation as in bleeding or purging Hypercenosis.

அகாதிதகம், (அ+காதிதம்) கடித்துத்தின்னக் கூடாதது, that which can only be swallowed and not masticated.

அகாத்தியம், கடித்து உண்ணத் தகாதது, that which is not fit for chewing.

அகாந்தம், தான்றி, a large tree, Devil's abode; Belleric Myrobalan - Terminalia belerica.

அகாமவினை, தான் விரும்பாமலே, நோய், காமவிகாரம், தெய்வீகம், பயம், அவிவேக முதலியவைகளா லியற்கையான அறிவழிந்து செய்யுந்தொழில், any indiscriminate or foolish action done through disease, lasciviousness, accident, fear, ignorance etc, without any desire on one's part and for which he is not responsible.

NOTE:- வினைகள் காமியம், அகாமியம் என இருவகைப்படும். காமியம் ஒன்றை விரும்பிச் செய்வது; அகாமியம், ஒன்றையும் விரும்பாது ஈசுரப்பிரீதியாகச் செய்வது. அகாமியத்தை அகாமிய வினையெனவுங் கூறுவர்.

Actions are of two kinds namely (1) that which is done with desire and (2) that which is done without desire as a work for god.

அகாயம், (அ+காயம்) உடம்பின்மை, absence of body; 2. தேகமற்றது, that which has no material body.

அகாரம், தமிழில் முதலெழுத்து.
"அவ்வெழுத்தும்
அகாரமுதலந்தமாச்சு"
(சுந்த. ஞானம்)

the first letter in the Tamil Alphabet; 2. எல்லாவற்றிற்குங் காரணமாயுள்ளது,

"அகாரமல்லோ கருவுடனே விந்துவாச்சு
அகராமல்லோ அன்னையொடு தந்தையாச்சு
அகாரமல்லோ ஆடுகிற வித்தையாச்சு
அகாரமல்லோ கண்கான தெட்டதாச்சு
அகாரமல்லோ மதியுடனே விதியுமாச்சு
அகாரமல்லோ அகண்டபா வெளியுமாகி
அகாரமல்லோ குருவுடனே சீடனாச்சு
அகாரமடா உபதேசப் பொருளுமாச்சே".
(கௌசி. குத்.)

"ஆளப்பா அகாரமது மூலமாகும்." (சுப். ஞா.)
it stands for that which is the life of everything in this world as could be learnt from the above stanzas.
3. இது சிவனைக் குறிக்கும்,
"குணங்காமற் சொல்லி வைத்தேன்
அகாரம் ஈசன்
கூடிநிற்கும் உகார மல்லோ
சத்தியாகும்."
(அக.மெய்.ஞா.)

It represents the God Siva;
4. இது காரணத்தைக் குறிக்கும்,
"காணுநீ அகாரமொடு
உகாரமென்பார்
காரணமாங் காரியந்தா னென்று
சொல்வார்." (கொங். ஞானம்.)

"கேளே அகாரம் கெடியாம்
சிவரூபம்
நானே உகாரம் நலமான சத்திதான்
வேனே மகாரம் விளக்கு
மவுனமே"
(சட்டமுனி நிகண்டு)

"அகார காரணத்துனேயனேகனேக
ரூபமாய்."
(சிவ-வாக்.)

of the two namely cause and effect, it stands fro the cause of that which brings about any change.
5. மூன்றெழுத்தி லொன்று, one of tbe three mystic letters; 6. வீடு, house; மரம், a tree; 8. மாமரம், a mango tree - Mangifera indica. 9. நாயுருவி, Indian burr - Achyranthes aspera.

அகாரவுப்பு, கல்லுப்பு, Rock-salt Sodium Chloride. It is found, in many places in vast deposits and is cut out in the solid state from mines; 2. நாயுருவி உப்பு, salt extracted from the plant, Indian burr.

அகாலகருப்பம், ஏற்ற காலத்திலுண்டாகாமல் அக்காலத்திற்கு விரோதமாக முந்தியோ அல்லது பிந்தியோ உண்டாகுங் கருப்பம், அதாவது,
1. பெண்கள் பருவமடைந்து மாதவிடாய் தோன்றுவதற்கு முன்னும்.
2. பதினொன்று அல்லது பன்னிரண்டு வயதிற்கு முன்னும் அல்லது ஐம்பது அல்லது

ஐம்பத்திரண்டு ‹ [illegible]திற்குப் பின்னும், ஏற்படும் கர்[illegible]ம். சில பெண்களுக்கு ஒன்பது [illegible]யதிலும் சிலருக்கு எழுபத்திரண்டாம் வயதிலும் கருப்பம் ஏற்பட்டதாகச் செல்லப்பட்டுகிறது.
3. பிள்ளை பெற்ற 8 வாரத்திற்குள்ளுண்டாகும் கருப்பம்.
4. மூன்று வருடம் வரையிலும் சிலருக்கு அசைவு மாத்திரமின்றிச் சிசு வுள்ளேயிருந்து கொண்டு பிறகு மிக்கப் பிரயாசையோடு வெளிப்படும். இதனைத் தமிழில் 'மும் மாங்காய்' எனவும் வடமொழியில் 'லீநாக்கிய கர்ப்பம்" எனவுங் கூறுவர். Pregnancy occuring before or after the usual period as in the following cases-
1. before the appearance of catamenia.
2. At the earliest age (before the eleventh or the twelfth year) or at the lates age (between the fiftieth and the fifty - second year).

The youngest age at which this conditions is reported to have occurred is 8 years and 10 months (9 years) and the latest recorded age is 72 years although it usually ceases between the ages 40 and 50.

3. Eight weeks after a womans' last confinemen.

4. Pregnancy continuing for a period of 3 years. The child is said to lie concealed in thw womb for a period of 3 years without movements. This is termed 'Mummaangai' in Tamil and 'Linakya Garbham' in Sanskrit.
NOTE:- This is unknown in Western Medical Science as the normal condition of pregnancy in women is only 280 days of 10 lunmar months. It is very much doubted if this could be Spurious pregnancy i.e, any condition in the abdomen that simulates pregnancy as in Hysteria - Psendocyesis.

அகாலகலிதம், காலமில்லாத காலத்திலேற்படும் இந்திரிய ஸ்கலிதம், untimely discharge of semen as, nocturnal emission.

அகால சம்பவம், காலமில்லாத காலத்திலுண்டாகும் சம்பவம், happening not at the right season; untimely occurrnce; 2. சாதாரணமாய் ஏற்படம் காலத்திற்கு முன்னதாக வுண்டாகும் சம்பவம், what happens before the usual time - Premature happening.

அகாலசூதகம், ஏற்பட்ட காலத்திலல்லாது இயற்கைக்கு விரோதமாக வுண்டாகும் மாத விடாய் அல்லது தீட்டு. உதிரம் பெண்களுக்கு 12 வயது முதல் 40 வயது வரைக்கும் சாதாரணமாக 28 நாளைக்கொருமுறை யோனித் துவாரத்தின் வழியாக வெளிப்படுவதால் இப்போக்கிற்கு மாதவிடாய் அல்லது மாத முழுக்கு என்று பெயர் இடப்பட்டது.

சிலருக்குக் கருப்பந் தரித்தும் மாத மாதம் சோணிதம் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். இதற்குத் 'தங்கு பிண்டம்' எனவும் வடமொழியில் 'சுப்தி பிண்டம்' எனவும் பெயர். மற்றுஞ் சிலருக்குக் கருப்ப காலத்திலல்லது மற்றக் காலங்களிற் சூதகம் தோன்றாது.

இத் திட்டு தேகக்கூறு, சோகை, கருப்பவாயு முதலான நோய்களுக்குத் தக்கவாறு மேற்கண்ட கெடுப்படிக் காணாமல் வேறுபட்டுக் காணும். இம் முறைக்கேடு சிலருக்கு 23 வயதிலேயே ஆரம்பித்துச் சில வருஷங்களுக்குள் போக்கு முழுவதுமே நின்று விடும். அல்லது 77 வயது வரை நீடித்துக் கொண்டு மிருக்கும்.

Menstruation which does not occur regularly at the usual period - Irregular menstruation.

During the menstrual life (12 to 40 years) is generally occus once in 28 days.

Sometimes, it may occur evey during the whole period of pregnancy or only during pregnancy and not at other times.

It may also be irregular owing to diseases of various kinds such as, Anaemia, Hysteria etc.

At the end of menstruel life usually occuring between the ages 45 and 50 (Menopause) this, irregularity may commence.

Menopause may occur even as early as the 23rd year or as late as the 77th year.

NOTE: 1. The uterine discharge (Metrorrhagia) occurring between the menstrual periods is independent of the menstrual discharge.

NOTE:-2 Hemorrhage from the uterus is due to systemic disease. It is sometimes seen during the course of eruptive fevers-Pseudo-menstruation.

அகால நரை, பித்தக் கோளாறினால் சிறு வயதிலுண்டாகும் நரை, permature grayness of young adults from bilious causes.

அகால நித்திரை, நியமிக்கப்பட்ட காலத்தில்லாமல் மற்றக் காலங்களில் இயற்கைக்கு விரோதமாகக் தூங்குதல். அதாவது பகல் நித்திரை. sleeping during unusual hours - Day-sleep.
NOTE: Sleeping during the day should be avoided by adults especially after meal as it tends to induce dyspepsia and possible liver diseases.

அகால பகிஷ்டை, see அகால சூதகம்.

அகாலகப் பக்குவம், காலமில்லாத காலத்தில் பெண்கள் பருவமடைதல்.

சாதாரணமாகப் பெண்கள் 11 அல்லது 12வது வயதில் பக்குமடைவார்கள். சூதகத்தைக் கருதிப் பக்குவமடைந்ததாகக் கருதப்படாது. சில பெண்கள் ருதுவாவதற்கு முன்னமே பருவமடைந்து விடுவார்கள். இது தேக வியல்பையும் திடத்தையும் பொறுத்தது. மற்றுஞ் சிலரோ நோயினாலும், நல் வாழ்க்கையினால் உழைப்பின்றி யிருப்பதாலும், நெடுங்காலம் வரைக்கும் பருவமடையாதிருப்பார்கள்.

The attainment of pubery (in a female) at am improper age.

A girl between 11 and 12 would be immature. Puberty may not generally be attained at the first menstruation but only subsequently.

Some girls may have all the bodily developments of puberty before menstruation and this depends upon the nature, strength and other pathological conditions of the body. Some other may not mature for some years after the catamenial flow, as in the case of girls in good circumstances for want of exercise and development of the body. Sexual maturity may be attained before the onset of menstruation but it is very rare.

NOTE:-1 Puberty is the period at which the generative organs of the female become capable of exercising the functions of reproduction - Reproductive Maturity.

NOTE:-2 The attainment of puberty is not a suddçn event. It is a process spread over many months or year. menstruation is one of the steps though it may he delayed.

அகாலப்பசி, பொய்ப் பசி, imaginary or false hunger; 2. நீரிழிவு முதலிய வியாதிகளினால் காலந்தவறி உண்டாகும் பசி, Untimely hunger caused by the effects of diseases such as, diabetes etc - Exaggerated hunger.

அகாலப் பருவம், காலமில்லாத காலம் unseasonable time; before the season; see அகாலப் பக்குவம்; 3. அகால ருது, Which see.

அகாலப் பிரசவம், ஐந்து மாதம் முதல் எட்டு மாதத்திற்குள் கருப்பிண்டம் காலந்தவறி வெளிப்படல், the premature expulsion of the foetus before the child is viable, i.e.,

occurring at any time between the 5th and the 8th month after conception - Miscarriage.

NOTE:- According to the old belief, the period of viability of an infant is its 8th month or the months subsequent and not the 6th month and after as it is since found out.

2. சரிமாத மாகுமுன் கருப்பையிலிருக்கும் உயிர் வகித்த சிசு, இறந்தோ அல்லது உயிருடனோ காலந் தவறி வெளிப்படுதல். labour taking place before the normal period of gestation, but when the foetus is viable - Premature delivery alias Premature labor.

NOTE:1-Premature delivery is one before 266 days and a protracted pregnancy is one after 280 days. 2. This is opposed to காலப்பிரசவம், a full time propedelivery.

NOTE:-2 According to some authors, expulsion of the ovum during the first three months is abortion; from this time to viability (3 to 6 months) it is termed immature delivery or miscarriage and from the period of viability to that of maturity (6 to 9 months) premature delivery.

NOTE:3- In law, the term msicarriage is applied to expulsion at any period short of the full terus (A period of 273 to 280 days or about 40 weeks)

3. மேற்கண்ட கால அளவைக் கடந்து பெண்கள் கருப்பத்தில் குழந்தை அசைவின்றி இருந்து 3 வருடத்திற்குப் பின் மிக்கப் பிரயாசையுடன் வெளிப்படுதல், labour taking place without due regard to the above prescribed time limits, afer 3 years, during which the child may remain concealed in the mother's womb without exhibting any symptom of its movements.

NOTE:- This is unknow in Western Medical Science. For explanation see அகால கர்ப்பம், under clause 4.

அகலாப் பிரேதவடக்கம், நெடுங்காலம் நோயினாலும் நரம்புத் தளர்ச்சியினாலும் சுணங்கி சவத்தைப் போல் உயிரொடுங்கிக் கிடக்கும் நோயாளியை இறந்ததாகத் தப்பெண்ணங் கொண்டு காலத்திற்கு முன்னதாகவே புதைத்தல், the premature burial of a living patient as a result of suspended animation brought about in hum by the crisis of a lingering disease or of nervous exhaustion.

NOTE:- This grave error is generally committed under the advice of the physician in attendance, who, unable to distinguish natural death from suspended animation (trance) through ignorance of psychological principles involved in it, announces that the patient is dead.

அகால பிறப்பு, see அகாலோற்பணம்.

அகாலப் புணர்ச்சி, காலமில்லாத காலத்தில் அதாவது, பகற் காலத்திலும், உண்டவுடனும், உணவு செரிப்பதற்கு முன்னும், எண்ணெய் தேய்த்து முழுகிய காலத்தும், நோய்கொண்ட காலத்திலும், பத்திய வேளையிலும், பெண்கள் மாதவிடாய்க் காலத்திலும், ருதுவாகாத சமயத்திலும் கொக்கோக நூலில் நியமிக்கப்பட்ட காலங்கள் தவிர மற்றக் காலங்களிலும், மாதர்களோடு சம்போகம் செய்தல், sexual intercourse during unseasonable and unsuitable time, contrary to all rules of precept and practice such as, day time, immediately after meal and before its digestion, after an oil-bath, during illness or while under medical treatment, during the menstrual period or before the attainment of puberty in females etc., and also at times other than those contemplated in the erotic or sexual science of Kokkohamuni.

NOTE 1. Such intercourses are considered undesirable and therefore to be abstained from, from hygienic standpoint. Human beings are not provided with natural instinct as the animals are and therefore the need for the power of discretion in this respect.

NOTE 2.-The second half of the night is considered to be the best time on hygienic and sceientific grounds - for sexual intercourse for the reason, that the night meal would have been digested by the time and the mind will be calm and undisturbed without cares or anxieties. 2. பருவமடையாததற்கு முன் பெண்களைப் புணருதல், intercourse with a girl before her puberty. c.f. அக்கிரமப் புணர்ச்சி.

அகாலப்பூப்பு, பெண்கள் காலமில்லாத காலத்தில் பூப்படைதல், development of the sexual organs before or after the prescribed time 2. மகளிர் அகால சூதகம் அதாவது பெண்களுக்குச் சாதாரணமாகச் சரியான வயதில் மாதவிடாய் ஏற்படாமல், நோய், பைசாசம், கருப்பக்கோளாறு முதலியன போன்ற காரணங்களினால் வெகுநாள் கழித்து உண்டாகும் சூதகம், instead of appearing at the usual age, the menstrual discharge is delayed owing to illness, devilry (Hysteria), diseases of the generative organs and so on - Delayed menstruation. See also

அகாலசூதம்; 3. காலமில்லாத காலத்தில் பூத்தல், (In botany) blossoming out of season.

அகாலப் போசனம், காலமல்லது வேளை தவறிப் புசித்தல், food taken at irregular intervals; untimely meal.

அகால மரணம், ஏற்பட்ட காலத்திற்கு முன் சம்பவிக்கு மரணம், death happening before the normal time - Premature death; **2.** காலமில்லாக் காலத்திலேற்படுஞ் சாவு, an untimely death; **3.** திடீரென ஆபத்து நேர்ந் துண்டாகுஞ் சாவு, an accidental death

அகாலமிருத்து, see அகால மரணம்; **2.** அநியாய மரணம், death caused by murder, suicide etc - Unnatural death.

அகாலமூப்பு, வயதடையாததற்கு முன்னமே கிழத்தன மடைதல், premature old age - Senilism.

அகாலம், ஏற்பட்ட காலத்திற்கு முன் அல்லது பின், before or after the prescribed time - Unseasonable time; **2.** பருவமின்மை, unseasonableness; **3.** அளவில்லாத காலம், unlimited duration.

அகால ருது, ஏற்பட்ட காலந்தவறி யுண்டாகு மகளிர் முதற் பூப்பு.

இது பெண்களுக்கு 12 அல்லது 14 வயதிற்குள்ளுண்டாகும். இதற்கு முன்னோ அல்லது பின்னோ உண்டாவது முறைமைக்கும் வழக்கத்திற்கு விரோதமாகக் கருதப்படும். இது மனித வமிசத்திற்கும், தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்கும், கூட்டுறவின் சம்பந்தத்திற்கும் ஆகாரத்திற்கு தக்கவேறுபடும்.

மேனாட்டில், 13 வயது முதல் 19 வயதிற்குள்ளும், நமது தேசத்தில் 12 வயது முதல் 15 வயதிற்குள்ளும் ஏற்படுவது சகசம்.

சுசுருதர் ஆயுள்வேதத்தில் 12 வயதிற்குப் பின்னென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் 10 வயதிலும் 15 வயதுக்கு மேற்பட்டு 20 வயது வரை தாமதித்து முண்டாகும்.

இது வாழ்க்கைக்கும், உடம்பின் தன்மைக்கும் தக்கவாறு ஏற்படும்.

நமது நாட்டில் 15 வயதுக்கு மேம்பட்டுண்டாவது மிகவும் அபூர்வம்.

The first menstruation which does not occur at the proper time or age.

NOTE:- Menstruatin is the monthly dischage of mucous and blood from the womb, beginning as a rule, about the age of puberty and continning as long as the capacity for child-bearing lasts.

It commences ordinarily between 12 and 14 years of age and the discharge appearing before or after this period, is considered an irregularity. This may very according to race, climate, (warm - early, cold - late) social condition, mode of life etc.

The normal period at which is occurs amongst Europeans is from age 13 to 19; among Indians it is between the ages 12 and 15.

According to Ayurvedic science of Susruta, the menstrual discharge begins after the 12th year.

Indigent girls seldom menstruate before 12 yeas, but girls well-nourished and in good circumstances may begin to menstruate at 11 years. Menstruation at or before the age of 10 and beyond 13 is uncommon.

It may be delayed even till after the age of 20. This delay sometimes occurs in girls who exhibit at this period of life an extraordinary fatty development of the body - Delayed menstruation.

In India however, menstruation is seldom delayed beyond 15 years.

NOTE:- A child 3 years is reported to have had a bloody vaginal discharge every month and another girl aged

5 years is said to have menstruated every 6 weeks and was sexually developed as much as a girl of 12 or 13 years.

அகலவடக்கம், ஆன்மாவைப் பிரமத்தி லடங்கச் செய்வதற்காக, யோகிகள் தங்களுக்கு மரணம் அணுகாததற்கு முந்தியே, பூமிக்குள் குழிவெட்டி அதிலிறங்கி அடங்குதல், premature burial sought by a living Yogi voluntarily in a grave lined with masonry and covered with a large stone, for purposes of entering into Samadhi to attain union with the universal soul or the Divine Spirit.

This is a condition self-induced and purely hypnotic arising from auto suggestion.

NOTE:- By this the ego is blotted out, the mind becomes super=conscious and the subject enjoys absolute and undisturbed rest.

For further particular see under samadhi.

அகால வழுக்கை, நோயினாலல்லாது இயற்கையாகவே வாலிபர்களுக்குச் சிறு வயதிலேயே தலையில் உண்டாகும் வழுக்கை, the idiopathic premature baldness of young adults - Alopecia Premaetura alias Alopecia simplex.

NOTE: It is most common in males and is often associated with premature grayness.

அகாலவுண்டி, see *அகாலப்போசனம்*.

அகால வெள்ளெழுத்து, *எழுத்து முதலிய சிறிய வுருவங்கள் கண்ணுக்கு முதலில் காணப்பட்டுப் பிறகு காரணமில்லாமலே மயங்கி மறையுந் தன்மையையுடைய, சிறுவர்களுக்குப் பித்தக் கோளாறுகளினாலுண்டாகும் ஓர் வகைக் கண்ணோய்*, an eye disease arising in youngsters from bilious causes in which small objects which were at first visible, suddenly disapper owing to some defects in the lens of the eyes - Errors of refraction.

NOTE: This is opposed to காலவெள்ளெழுத்து, which is in popular language called 'old sight' a condition that is reached at about 45 to 50 years of age, and in which from growing inelasticity of the crystalline lens of the eye (failure of accommodation) the near point of distant vision is removed to an inconvenient distance from the eye, with consequent diminution in size of the retinal image - Presbyopia.

அகாலோற்பணம், *(அகாலம் + உற்பணம் = அகாலப் பிறப்பு) காலந்த தவறிப் பிறத்தல்*, birth before or after the prescribed time; 2. *காலந்தவறிக் காய்த்தல்*, (in botany) bearing fruit at an unseasonable time.

அகி, *இரும்பு*, iron - Ferrum; 2. *ஈயம்*, lead Plumbum; 3. *ஓர் வகை மரம்*, a kind of tree 4. *சூரியன்*, ths Sun; 5. *பாம்பு*, a snake.

அகிகண்டம், *(அகி+கண்டம்* - snake and fragment) *மயிர்மாணிக்கம்*, wild fenugreek - Sida rhombifolia.

அகிகாந்தம், *காற்று*, wind air; 2. *சூரியகாந்தம்*, sun stone - Jasper.

அகிகை, *இலவமரம்*, silk-cotton tree - Bombax Malabricum; 2. *பட்டுப் பருத்தி, அதாவது இலவம் பஞ்சு*, silk-cotton-Bombax pentandrum.

அகிகோசம், *பாம்புச் சட்டை*, the slough or cast-off skin of a snake.

அகிச்சத்திரம், *ஓர் விஷம்*, a kind of vegetable poison? 2. *ஓர் பூடு*, a plant - Odina pennata?

அகிஞ்சிரம், *செங்கத்திரி*, caper shrub - Capparis sepiaris alias Cactus opimtia, 2. *கருக்குவாளி*, the plant - Momordica Cochin-chinensis.

அகிஞ்சை, *கொல்லாமை*, abstinence from killing; 2. *(அ+கிம்சை = அகிம்சை) துன்பம் இல்லாமை*, Harmlessness; *இது மருவி, அகிஞ்சை என வரும் போலும்*.

அகிதம், *உணவு*, food; 2. *நன்மை இல்லாதது*, that which is not conformable to a standard of taste; 3. *தீமை*, evil, 4. *(அ+இதம்)இதமின்மை*, unpleasantness.

அகிதுண்டிகன், *பாம்பாட்டி*, a snake charmer; a snake exhibitior.

அகிநிர்வலயோனி, see *அகிகோசம்*.

அகிபதி, *பெரும்பாம்பு*, a big snake 2. *பாம்புக்கரசன்*, king of snakes.

அகிபத்திரம், *கரும்பு*, sugar cane-Saccharam officinarum.

அகிபந்தன், *இரும்பு, ஈயம் இவைகளைக் கட்டும் சீர்பந்த பாஷாணம்*, a kind of native arsenic capahle of consolidating iron and lead.

அகிபுக்கு, *கீரி*, a mungoose - Herpestes Mungo; 2. *மயில்*, the pea-cock-Pavocristatus; 3. *கருடன்*, the Brahminy kite - Haliastur indicus.

அகிபுசம், *கருடன்*, the Brahminy kite - Haliastur indicus; 2. *மயில்*, the peacock - Pavo Cristatus; 3. *கந்தநாகுலி*, the inchneumon plant - Vanda roxburghi.

அகிபுட்பம், *நாகேசுரப்பூடு*, a plant, Ceylon ironwood - Mesua Roxburghii.

அகி பூதனம், *குழந்தைகளுக்கு மலவாயிலண்டை சேரும் மலமூத்திராதிகளை அடிக்கடி சுத்தப்படுத்தாத காரணத்தை முன்னிட்டு அவ்விடத்தில் தினவுடன் குருக்கள் கண்டு பின்னர் பாம்பைப் போல் சட்டை கழற்றித் துன்புறுத்துமோர் சரும நோய்*, Itch-like eruptions appearing about the anus in children and resulting in sloughing, owing to the deposit of urine, perspiration, feces etc. consequent on the neglect in cleanising that part.

அகிபேனம், *பாம்பின் விஷம்*, seliva of the snake; the snake-poision; 2. *அபினி*, opium-Papaver Somniferum.

அகிமரால், **அகிமார்**, *வெள்வேல மரம்*, a tree white bark Acacia - Acacia leucophloea alias Vachellia fernesiana.

அகிம்சை, *மனோவாக்குக் காயங்களால் தீங்கு செய்யாமை*, not causing harm or injury to others by thought, word or dead. see *அகிஞ்சை*.

அகியாகாசம், *கற்பூரப் புல்*, lemon grass - Andropogon schoenanthus.

அகிரன், *நெருப்பு*, fire; 2. *சூரியன்*, the Sun.

அகிரிபு, see *அகிபுக்கு*

அகிருதித்துவம், see அந்தக்கேடு.

அகிருத்தியம், தப்பான செய்கை; illegal action as rape, adultery etc.

அகிருத்திரம விஷம், மரம், புல், பூண்டு முதலான அசரப் பொருள்களினாலும், பாஷாண முதலிய தாதுக்களினாலும், தேள், பாம்பு, சிலந்தி முதலிய பிராணிகளின் சங்கம விஷத்தினாலு மேற்படும் விஷநோய், diseases arising indirectly from the vegetables, mineral and animal poisons. It is opposed to கிருத்திரம விஷம் - poisons imported into the system directly by mixing it with other substances.

அகிரை, குரலடைப்பு, obstruction to the place of production of the voice, 2. குரலின் மை, voicelessness due to some perpheral lesion - Aphonia.

அகிர், தலைச்சுண்டு, a scurf, which forms on the head and comes off in small scales or particles like bran - Dandruff. See அசர்; 2. ஓர் வகைப் பாஷாணம், a kind of posion?

அகிலங்கட்டை, அகருக்கட்டை, Aquila or eagle wood - Zylaloo.

அகில சரீரம், உடம்பின் முழு பாகம், the body as a whole; 2. எல்லாப் பிராணிகளினுடம்பு, bodies of all creatues in general.

அகிலதம், வெற்றிலைக்கொடி, the betel plant or creeper.

அகில மாமூலி, நன்னாரி, a fragrant root. Indian Sarasaparilla - Hemidesmus indicus.

NOTE:-It is also called Country or False Sarasaparilla - Periploca indica.

அகிலமேதகம், அடுக்கு நந்தியாவட்டம், Double blossomed common wax-flower; Doghane - Tabernaemontana coronaria.

அகிலமேதகி, செந்தொட்டி, சிறு காஞ்சொறி climbing nettle - Tragia involucrata.

அகிலம், எல்லாம், all; the whole; 2. பூமி, earty; 3. நீர், water.

அகிலி, செவ்வகில் மரம், a tree; Red Cedar - Cedrela Toona.

அகிலி மீனா, ஓர் மரம், Chittagong wood - Chukrassia tabularis. See note under அகில்.

அகிலோலிகம், see அகிலதம்.

அகில், அகிற்கட்டை; பஞ்ச விரைகளிலொன்று; இது அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் என நான்கு வகைப்படும்.

இது தான் கள்ளி மரத்தினுட் பாகத்திலிருக்கும் வாசனைக் கட்டை. இதை அகருக்கட்டையெனக் கொள்ளப்பொருந்தாது. வாசனையிலொன்றாயிருந்தாலும் இது வேறினம். இது மரத்தினடுவிலும் அடிப்பாகத்திலுமுண்டாகும் வேறுபாட்டினா லிவ்வாசனையைக் கொடுக்கும். இது சாதாரணமாய் மஞ்சளாக விருந்தாலும் இதில் நான்கு வகை நிறங்களுண்டு. இது மிகவும் விலையுயர்ந்தது மல்லாமல் மருந்திற்குச் சிறந்ததாகவுங் கருதப்படும். இது கோவிலில் நறும்புகையிடவும் சுடுகாட்டில் பிணத்தைச் சுடவும் உபயோகப்படும். இக்கட்டையைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கஷாயமிட்டுக் கொடுக்கச் சுரமும், சன்னியும் தீரும். இதைக் கடைகளில் நிறுத்து விற்பார்கள். இதிலிருந்து மணி மாலை செய்து பூசைக் குபயோகிப்பார்கள். தற்காலத்திலிது கிடைப்பதரிது. ஆசாம், மலாயநாடு, இமயமலை முதலிய விடங்களிலுள்ள மலைச்சாரல்களி லகப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

A fragrant wood known as Agil-wood or Indian scented wood - one of the five aromatics. It consists of four varieties - white, red, yellow and black. The correct botanical name † is not known.

It is the aromatic wood which is formed inside the Kalli tree (Euphorbia genus). It should not be confounded with Agaru (eagle wood). Although the fragrance may be nearly the same, they belong to different botanical groups. The interior part, or trunk possesses or absorbs aroma from the oleaginous

† NOTE: There is much confuison about this name as could be evinced from the several kindred names in colloquial use with different terminations and this is quite evident from Lushington's Vernacular List of Plants, wherein it will be found that—

(1) அகல், அகில், அகிலை, அகிலிமீனா, all these refer to one and the same plant Chittagong-wood — Chukrussia tabularis.

(2) அகணி, அகணியகில், அகுணி, அகுணியகில், all these refer to White Cedar — Dysoxylum binecteriferum.

(3) அகில், Iron- wood — Hopea parviflora, of Malabar.

(4) அகில், Agilwood— Hemicylia Porteri.

(5) அகில், அயில், Cedrela Toona, which in Malayalam is known as Agil and in Canarese, Davadaru.

(6) அகில், தில்லைமரம் — Blinding-tree, Tiger's milk Spurge — Excoecaria agallocha alias E.Crenulate.

(7) அகில், அகரு, ஓர் வாசனை மரம், Aquila or Eagle-wood — Aquilaria agallocha.

particles stagnating there & concentratings as the result of diseased action. Although the wood is usually yellowish in colour, it generally consists of 4 distinct colours.

The wood is very costly and is useful in medicine. The resinous extract is burnt in temples and the wood is broken into chips and used in decoction in fever and delirium. It is sold by weight in bazaars. It is also used for making rosary beads. It is rarely to be found now, but is said to be available on the mountainous tracts of Assam, Shylet, Malaya and the Himalayas.

அகில் தூள், அகில் கட்டையினின்று தயாரித்த ஓர் வாசனைப் பொடி, a kind of aromatic powder prepared from Agilwood; **2.** அகருப்பொடி, sandal or eagle - wood powder.

அகில் மரம், வாசனையுள்ள அகில் மரம்; a fragrant Agilwood tree - see அகில்.

அகிவிஷபாகம், பாம்பின் விஷ மிறக்கல், neutralising the poison of snake. **2.** கந்தநாகுலி, the ichneumon plant - Vandaroxburghii. see அகிபுசம்.

அகிவைரி, பாம்பின் சத்துரு அதாவது மயில் a pea-cock-Pavo Cristatus; **2.** கருடன், the Brahmini Kite - Haliastur indicus,
NOTE:- The word indicates all creatures hostile to snakes, in general.

அகிற் சட்டை, ஓர் வாசனைக் கட்டை, இக்கட்டையின் லேபனம் தளர்ந்த தேகத்தை யிறுகச் செய்யும். இதன் புகையால் சுரம், வாந்தி, அருசி, அயர்ச்சி முதலியன நீங்கும். A sweet scented wood of Agil (used for burning the dead). The powder of this wood when rubbed on the body, will make it sound and strong and its smoke will cure fever, vomiting, insipidness and languor. see அகில்.

அகிற் குறடு, அகிற்கட்டை.

None of these terms will apply to Agil contemplated in Tamil Medicine for the reason that it is said "கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்" which means that the word Agil will be formed inside a Kalli tree — Euphorbia genus.

Moreover, in the Tamil Materia Medica பதார்த்த குண சிந்தாமணி, it will be found that Agaru and Agil are differentely classified and different properties are ascribed to them; whereas no such distinction could be seen eleswhere. Even Doctor Ainslie, in his Materia Medica admits that he was not able to ascertain whence it came or what the appearance of the tree was.

It is not to be forgotten here that the bazaarmen taking advantage of its rarity, sell under its nameother fragrant woods which are cheap and easily procurable such as, Davadaru — Erythroxy lon Areolatum, and Red sandal — Pterocarpus santalinus.

அகிற் கூட்டு, ஏலம், காசுக்கட்டி, கற்பூரம், தேன், அகில் ஆகிய இவைகள் சேர்ந்த வாசனைக் கலவை, a mixture of five aromatic ingredients - Cardamom, catechu, camphor honey and Agilwood, used for perfuming the hair.

அகிற் சிலை, see அகில் மரம்.

அகிற் புகை, அகிற் கட்டையின் புகை, the smoke of burning Agilwood to perfume the hair of women.

அகிற்றூள், (அகில் + தூள் = அகிற்றூள்) the fragrant powder of Agilwood, see அகில் தூள்.

அகினிறம், துருசு, copper acetate; blue vitriol; copper sulphate - Cupric sulphus.

NOTE: The preparation adopted originally by the Hindus especially the Tamillians as described in the Tamil Medicial science refers to a compound akia to copper acetate and not copper sulphate since no sulphur is found in its composition. see துருசு.

அகிம், அராபி, பாரசீக வைத்திய நூற்களில் தேர்ச்சியடைந்த யுனானி வைத்தியன், a physician who is well acquainted with Persian and Arabic system of medicines.

அகுச மாதிதம், சிவப்புக் குண்டு மிளகாய், a variety of red chilly.

அகுசலாபு, அதிவிடயம், a medicin[al] root used in dysentery. Indian Atee[s] - Aconitum Heterophyllum.

NOTE:- There is another roo[t] common in the bazaars of Souther[n] INdia which is erroneously considere[d] as a variety and called நாட்(டு) அதிவிடயம், while in fact it [is] not but probably it is another specie[s] of Aconitum.

அகுட கந்தம், பெருங்காயம், asafoetida - Ferula asafoetida.

அகுடம், கடுகு ரோகிணி, a dru[g] used as a purgative for childre[n] a cathartic drug - Helleborus nige[r]; **2.** கருப்புக் கடுகு ரோகிணி, blac[k] Hellebore.

அகுட ரோகிணி, see அகுடம்.

அகுடாரிசம், கருங்குங்கிலியம், blac[k] Dammer - Canarium strictum.

அகுட்டம், மிளகு, black pepper [-] piper nigrum; **2.** கடுகுரோகிணி, s[ee] அகுடம்.

அகுணம், இலட்சண மில்லாமை ugliness, disagreeable appearance; [2.] குண மில்லாமை, lack of t[he] requisite qualifications; **3.** குற்ற[ம்] defect; **4.** துர்க்குணம், bad qualit[y] **5.** குறைவு, want deficiency.

அகுணன், குணமற்றவன், a man of no character; **2. வேண்டிய குணங்களற்றவன்,** an unqualified person.

அகுணி, நொண்டி, a cripple; **2. ஓர் வகையகில்,** as **அகுணியகில்,** an eagle-wood without fragrance; Bastard or white cedar - Dysoxylum binectariferum; **3. துர்க்குணன்,** a man of bad character.

அகுணியகில், செம்பில் மரம், a tree, Cupcalyxed white ceder - Dysoxylum binectariferum.

அகுதி, வேலமரம், a tree of Accia genus **2. கருவேல மரம்,** black Babool - Acacia Arabica.

அகுப்பியகம், see **அகுப்பியம்.**

அகுப்பியம், *(அ+குப்பியம்)* **இழிவில்லாத வுலோகம், அதாவது, பொன், வெள்ளி** - not a base metal but gold or silver.

அகும்பை, கவிழ்தும்பை, a plant, a species of Trichodesma - Borago Indica.

அகுரம், சடராக்கினி, fire in the stomach - Gastric fire.

அகுரா, அகுர், see **அகோரி.**

அகுரு, குக்குலு, அகருக் கட்டையைப் போல் வாசனையுள்ளதாலிதற்கிப் பெயர், indian bdellium - Amyris agallocha alias Balsmodendron roxburghii. It is so called fom its fragrance similar to that of Agilwood; **2. அகிலமரம்,** a kind of fragrant tree - Aquilaria agallocha; **3. இலகுவானது,** that which is light; **4. கனமில்லாதது,** that which is not heavy; **5. நூக்கமரம்,** Sissum - Dalbergia sisso.

அகுலாதிகம், கரிசலாங் கண்ணி *(கரி+சலாங்கண்ணி)* a medicinal plant known as Eelipse plant - Eclipta prostata.

அகுலி, நறுவிலி, a tree, common sebesten - Cordia obliqua.
NOTE:- The correct pronounciation is **நறுவிழி,** but colloqually it is **நறுவிலி.** The following are the different speices-
சிறு நறுவிலி- Cordia myxa
பெறு நறுவிலி, - a variety bearing large fruits - Cordia obliqua.
நாய் நறுவிலி, - Cordia monoica.
பொன் நறுவிலி - Cordia sebesten a (speciosa)
நாறு நறுவிலி - Eugenia Jambolana (caryophyllifolia)
அச்சி நறுவிலி -Cordia sebestena.

அகுலோதிகம், நீலக்கொடி வேலி, blue flowered leadwort, Cape lead-wort - Plumbago capensis.

அகுவைக் கட்டி. அரையாப்புக்கட்டி inflammation and swelling of a

lymphatic gland properly and generally of the groin and usually following syphilitic and other venereal affections - venereal bubo.

அகுளி நாதன், நவநாத சித்தர்களிலொருவன், one of the nine original Siddhars.

அகுளுதி. அகுளுதி, வேப்பமரம், margosa tree - Azadirachta indica
NOTE: The correct spelling appears to be **அருளுறுதி**

அகுளை, கருஞ்சேம்பு, a black or blue variety of **சேம்பு,** a garden plant - Caladium nymphaeifolium.

அகுள், களகம்பளத் தோல், the excrescense of a goat's neck.

அகூடகந்தகம், அகூடகந்தம், பெருங்காயம், asafoetida- Ferula Asafoetida.

அகூபாரம், அகூபாரன், கடல் ஆமை, sea - turtle - Chelonia.
2. கடல், sea; **3. கல் மலை,** rock; hill.

அகேசம், மொட்டை, shaven head; **2. வழுக்கை,** baldness - Alopecia; **3. மயிரின்மை, மயிர்க்குறைவு,** absence or lack of hair - Atrichia.

அகேசன், மயிரில்லாதவன், one who has lost the hair on the scalp - a bald headed man; **2. மொட்டையன்,** one with clean shaven head.

அகை, கூறுபாடு, division, section.

அகைதல், வருந்தல், suffering; **2. துளிர்த்தல்,** phshing out new shoots.

அகைத்தல், வருத்துதல், causing to suffer; **2. அறுத்தல்,** cutting into pieces; **3. கிளைத்தல்,** sending forth a growth as, from the seed of a plant.

அகைமம், புல்லுருவி, a parasitic plant - Loranthus pentandrus; **2. குருவிச்சை,** Honey - suckls Mistletoe - Loranthus elasticus; **3. கருந்தாளி,** a tree - Diospyros Ebenum alias D. assimilis.

அகையுருவி, புல்லுருவி, a plant which grows on another plant and feeds upon its juices - Parasite.

அகையுலாதிகம், கருங்காணம், black horse gram; forest horse gram Dolichos medicagineus.

அகோடம், பாக்கு மரம், areca-nut tree - Areca catechu; **2. கோண அல்லது வளைவில்லாதது,** that which is without a bend; **3. கழுகு** an eagle - Falconinae.

அகோரக் காய்ச்சல், கடுமையான காய்ச்சல், a high fever Hyperpyrexia.

அகோரப் பசி, *கொடிய பசி,* a voracious hunger; *2. அடங்காப் பசி,* a gluttonous appetite - Adephagia.

அகோரப் பல்லதகி, *சங்கிலை,* the leaf of a plant - Monetia barlerioides, alias Azema tetracantha; *2. பீச்சங்கிலை,* smooth Volkameria - Cleodendron inerme.

அகோர மயமாதி, *உடம்பினுள் உஷ்ணத்திற்குக் காரணமான இடம் - ஆச்கினை,* the seat of heat in that portion of the body situated in the forebrain - Thermogenic centre (in the Carpus striatum)
NOTE:- It corresponds to the Medulla oblongata and is one of the six psychic centres in the human body. When the mind reaches this centre, the man is said to attain perfection in all faculties of Astral life.

அகோர விரம், *சுவாதிஷ்டானம்,* one of the 6 psychic centres of the body that is situated in the genital region. NOTE: This corresponds to the Hypogastric centre where from the selfish sentiments are alleged to originate. For further details see under *ஆறாதாரம்.*

அகோரவுபாதி, *மிகவும் கொடிய வலி,* excessive pain - Hyperalgia,

அகோர வெரிச்சல், *பொறுக்க முடியாத வெரிச்சல்,* unbearable burning sensation in the body.

அகோ ராத்திரம், *பகலிரவு,* day and night.

அகோரி, *மோதிரக்கள்ளி,* a rambling shrub 10-15ft - Hugonia obovata. It is also called creeping falsah. Bruised roots are used in reducing inflammatory tumours and in bites of serpents.

அகோரை, *உஷ்ணநாள்,* a sultry day.

அக்கக் கொடி, *அக்கிக் கொடி,* twin leaved mountain ebony - Bauhinia diphylla.

அக்கசாலை, *பொன், வெள்ளி உலோகங்களைக் கொண்டு வேலை செய்யுமிடம்,* an industrial establishment wherein works in gold and silver are carried on; *2. தட்டான் கடை,* a gold smith's shop; *3. நாணயச் சாலை,* a Mint.

அக்கணம், *பொரிகாரம், வெண்காரம்,* an artificial salt - Sodium biborate - Borax *2. அந்தட்சணம்,* at the same instant or time.

அக்கணா, *தான்றி மரம்,* a tree, Beleric Myrobalan - Terminalia belerica.

அக்கணாகிதம், *கருங்கற்றாழை,* a kind of black medicinal aloe, Hepatic aloe - Aloevera (officinalis)?

அக்கண்டகம், *நெபத்திகை,* a medicinal shrub (unidentified).

அக்கதம், *பங்கப்படாதது,* that which is not defiled or polluted.

அக்கதயோனி, *ஆடவனோடு புணராத பெண்,* a woman who has had no carnal connection with a man - A virgin.

அக்கதேவி, *சோளைப் புல்,* guinea grass - Panicum maximum.

அக்கந்தம், see *அக்கணா.*

அக்கபாரி, *கருஞ்சடைச்சி,* a black species of Matted-Hair plant; Common Indian Linden - Grewia tiliaefolia; *2. ஓர் கறுப்பு நீர்ப்பூண்டு,* a black variety of an aquatic plant - Cerataphyllum demersum; *3. கருநிமிளை,* black bismuth.

அக்கப்பிரம், *மாமரம்,* mango tree - Mangifera indica.

அக்கமணி, *உருத்திராட்ச மணி,* a bead sacred to Siva; *2. உத்திராட்ச மரம்,* a tree, olive linden - Elaeocarpus tuberculatus.

அக்கமம், *பொறாமை,* jealousy, envy.

அக்கமலம், *குடலில் மலம் தங்குவதால் ஏற்படும் நோய்,* a disease of the intestines due to detention of faecal matter; intestinal colic due to accumulation of faeces - Stercoral colic. See *பக்கமலம்.*

அக்கமினி, *கொள்,* gram, horse gram - Dolichos tomentosus.

அக்கமுன்றி, *கண்,* the eye.
''மைந்தனே அக்கமுன்
விட்டுப்பாரே''
(கருலூ. கெவும்

அக்கம், *வெள்ளெருக்கு,* a plant, whit flowered giant swallow - wort Calotropis gigantea (albiflora); *ஆன்மா,* the soul; *3. கண்,* ey *4. பொன்,* gold; *5. உருத்திராட்சப்* a sacred bead worn by religiou mendicants of the Siva Sect Elaeocarpus tuberculatous; *6. உப்* common salt; *7. தானியம்,* grai *8. தான்றி மரம்,* a tree; Beller Myrobalan - Terminalia belerica; *துரிசி,* blue vitriol - Copper sulphat properly copper acetate.

அக்கர கணரோகம், *கணச்சூட்டினா வாய், வயிறு, குட முதலியவுறுப்புகள் வெந் தேகவாட்டம், வாய் நாற்றம் சுரப் மயக்கம், முதலிய குணங்களை காட்டு மோர் வகைக் கண நோ இது முக்கியமாய்ச் சிறு குழந் முதல் 12 வயது வரையி தொடரும்,* a kind of wasting diseas marked by the presence of diffus white patches due to inflammatio of the mouth, stomach, intestin etc. The usual symptoms are, giddiness, loss of flesh, fetid breat fever etc. It occurs especially in wea

children and young. sters up to twelve years of age- Ulceration of the alimentary tract.

NOTE:- கணரோகம் என்பது மாதா பிதாக்களின் நாதவிந்துக்கு ளடங்கிய வாதாதி தோஷங்களி னின்றும் உற்பத்தியாகிக் கருப்பாசயத்துச் சிசுவைப் பற்றி அச்சிசுவினது எழுவகைத் தாதுக்களும் வன்மையடையுங் காலத்து விருத்தியடைவதா லிது கணரோக மெனப் பெயர் பெற்றது (அறு-வை).

A kind of congenital disease of the child arising from the maturity of had humours inherited from the parents. It is an atrophy resulting from the enlargement of the bowels and tabes mesenterica. The disease progresses as the child advances in age.

அக்கரகார கஷாயம், அக்கரகார வேரினின்று இறக்கிய வோர் வகைக் கொப்புளிக்கு நீர், இது பல் வலித்தால் கொப்புளிக்க உதவும், (In English medicine) a decoction prepared from the pellitory root. Tincture of Pellitory - Tinctura Pyrethri. It is used as a local application for tooth ache.

2. தமிழ் வைத்தியர்களால் இவ்வேருடன் சித்தரத்தையையும் இஞ்சியையும் சேர்த்துக் குடி நீராக விறக்கிச் சன்னிபாத சுரம், பாரிச வாயு முதலிய வியாதிகளினால் சோர்வடைந்த நோயாளிகளுக்கு உத்தீபன மருந்தாகக் கொடுக்கப்படு மோர் வகைக் குடிநீர்.

(In Tamil medicine) an infusion of this drug with Lesser galangal and ginger is prescribed by the Tamil physicians as a cordial and stimulant in lethargic state of Typhus fever and paralytic affections.

அக்கர காரம், வட ஆப்பிரிக்கா தேசத்தில் விளையுமோர் வகைப் பூ மரம், a flower bearing tree growing in North Africa. It resembles a large daisy - Anacyclus pyrethrum alias Anthemis pyrethrum. It is not a native of this country.

அக்கரகார வேர், அக்கரகார மரத்தின் வேர், (மருந்து வேர்). இது முக்கியமாய் வட ஆப்பிரிக்காக் கண்டத்திலிருந்து பம்பாய் வழியாகக் கொண்டு வரப்படும். எல்லாக் கடைகளிலும் காணலாம். இது துண்டு துண்டாகவும் மேற்புறம் மங்கல் நிறமாகவும் உள்ளே வெண்மையாகவுமிருக்கும்.

இதை மெல்லுவதனால் வாய்க்கு அழற்சியையும், நாக்கிலும் உதட்டிலும் விரு விருப்பையுங் கொடுக்கும். பல் வலிக்கு மெல்லுவதுண்டு. இதைக் கஷாயமிட்டுக் குடிக்க வாத நோய் குணப்படும், the root (medicinal) of a plant - Anacyclus pyrethrum, Pellitory root-Pyrethri radix. It is imported from North Africa via Arabia and Bombay and is available in almost all the bazaars. It will be seen in pieces about the size of the little finger and is externally hrown and internally white.

When chęwed, the pungency of the root is felt by a glowing heat in the mouth and a pricking sensation on the lips and the tongue. It is used as masticatory in tooth-ache. An infusion of this drug is useful in cases of rheumatism.

NOTE:- It has an acrid resinous principle pyrethrin.

The powder of the root is used in the Unani system of treatment of patients to excite transpiration by being rubbed on the skin. It is also used as an ingredient in snuff. see also அக்கிராகாரம்.

அக்கரக் கழிச்சல், வாய்ப்புண்ணாகி, குடல் வெந்து, அசீரணபேதியை யுண்டாக்கும் ஓர் நோய், a disease marked by sore throat, gastro intestinal catarrh with diarrhoea - Spruc, see அக்கரன்.

அக்கரக் காய்ச்சல், வாயிலழற்சியை யுண்டாக்கி நாக்கிலு முதட்டிலும், சிறு கொப்புளங்களை யெழுப்பு மோர் வகை காய்ச்சல், a kind of fever accompanied by inflammation of the mouth and ulcers on the lips and the tongue - Aphthous fever, alias Febris aphthose.

அக்கரசி, உள் நேக்காட்டினால் நாக்கில் காளான் பூத்தது போல் காணு மோர் விரண நோய், fungus of thrush upon the tongue - Oidium albicans, alias Saccharomyces albicans

அக்கரசுரம், see அக்கரக்காய்ச்சல்,

அக்கரடிப் பூண்டு, மருளூமத்தை, insane plant, a kind of Indian Dhatura - xanthium orientale.

அக்கரத்தான், தான்றி மரம், a tree Belleric Myrobalan or Devil's Abode - Terminalia belerica.

அக்கரப் படுவன், சுரங் கண்டு, வாய் வெந்து நாற்றத்துடன் வாய் நீரொழுகி, நாக்கிலு முதட்டிலுங் கொப்புளம் பொங்கித் துன்புறுத்து மோர் நோய். இது சாதாரணமாய்க் குழந்தைகளுக் குண்டாகி முலையுண்ண முடியாமல் துன்புறுத்தும், a grave form of catarrhal stomatitis characterised by the formation of small ulcers on the lips and the tongue with copious salivation fetid breath and slight fever. It is common especially in children and causes much pain to them while suckling - Ulcerative Stomatitis.

2.கண்ணிமையில் சிறு கொப்புளங்களையெழுப்பி வலியை யுண்டாக்கிக் கண்ணீர் வடியச் செய்து பீளை தள்ளு மோர் வகைக் கண்ணோய், an ulcerative inflammation of the eyelids attended

with mucopurulent secretion - Blepharitis.

அக்கரப் புண், வாய், நாக்கு, உதடு இவ்விடங்கள் வெந்து அதனாலேற்படும் விரணம், a sore caused by the ulceration of the mouth, tongue and the lips - An aphthous sore; 2. மேலிமையிலுண்டாகும் புண், a sore on the upper eyelids.

அக்கரமாந்த சுரம், see அட்சரமாந்த சுரம்.

அக்கரம், வெள்ளெருக்கு, a plant, white flowered giant swallow -wort - Calotropis gigantea (albiflora); 2. மாமரம், mango tree - Mangifera indica; 3. பஞ்சாட்சரம்; the five mystic letters - a Siva formula (ந,ம,சி,வ,ய); 4. அக்கராகாரம், Pellitory root - Anthemis Pyrethrum; 5. உடம்பினுறுப்பி னுட்பக்கத்தைக் கவர்ந்துள்ள சளிசவ்விற் கழற்சி யுண்டாகிக் காணும் சிறு சிறு கொப்புளங்கள், (In medicine) ulcneration of the mucuos menbrane lining the interior wall of any organ in the body. See அட்சரம்.

6. அட்சரம், அதாவது குழந்தைகளுக்கு வாயினுள் உண்டாகும் சிறு சிறு கொப்புளங்கள். இதில் பல மாதிரியுண்டு. Thrush or more correctly the whitish spots in the mouth of infants - Aphthae. There are different kinds in this-

(a) சாதாரணமாய்ச் சிறு குழந்தைகளுக்குக் கணச்சூட்டினால் வயிறு கோளா றடைந்து வாய், வாக்கு, உதடு ஆகிய இவ்விடங்களிற் சிறு கொப்புளங்களை எழுப்பு மோர் வகை நோய். இது அச்சர மெனவும் வழங்கும், a disordered state of the stomach characterised by the appearance of small white ulcers or vesicles in the mouth, and on the lips and the tongue. It chiefly affects small children and is generally associated with febrile affections - Aphthous Stomatitis alias Parasitic Stomatitis.

(b) நாக்கினடியி லட்சரம் பொங்கி அதனால் ஈரல், மண்ணீரல் முதலிய வீங்கி மரணத்தை யுண்டாக்கும் நோய், a fatal disease characterised by aphthous ulceration under the tongue and enlargement of the liver and the spleen - Cachectic aphthae.

(c) உஷ்ணப் பிரதேசங்களில் குழந்தைகளுக்கு மாந்த நோயினால் அழற்சி யுண்டாகிப் பொங்கும், அட்சரம், aphthous eruptions with digestive disturbances attacking generally children in tropical countries - Tropical aphthae.

see also அட்டாட்சரம்.

7. விஷக் காற்றினாலிரத்தம் முறிந்து அதனால், தாகம், கைகாலுளைச்சல், உடம்பு சில்லிடல் முதலிய குணங்களைக் காட்டு மோர் வகைக் கழிச்சல், a kind of acute diarrhoea of the nature

of cholera produced by the altered condition of blood in the system through infectious causes arising from the floating of poisonous microbes in the air. The symptoms are - thirst, cramp in extremities, cold, skin etc, Miasmatic contagious diarrhoea. see அக்கரன்.

8. மேலிமை தடித்து, வலியுண்டாகிக் கண்ணீர் வடிந்து, பீளை தள்ளுமோர் வகைக் கண்ணோய், an eye-disease characterised by the painful inflammation of the upper eye-lid, with catarrhal and muco-purulent secretion; a kind of Blephartis - Croupus opthalmia.

அக்கரம்பில்லம், கண்ணிமை விறைத்தலுடன் புருவ முழுதும் நீர் கட்டித் திரண்டு புடைத்து விம்மிக் கண் சிவந்து, வலியுண்டாக்கிப் பீளை தள்ளுமோர் வகைக் கண்ணோய், a disease of the eyes accompanied by swelling of the eye-brows, stiffening of the eye-lids, and inflammation and pain with muco-purulent discharge. Oedema of the eye-lids associated with severe conjunctivitis - Blepharitis Ciliaris.

அக்கரம், புழுவெட்டு, இமை மயிர் உதிருவதுடன், இமையில் விரணம், அனற்போல் காந்தல், இரத்தம் வடிதல், வீக்கம் அல்லது தடிப்பு ஆகிய குணங்களை யுண்டாக்குமோர் வகைக் கண்ணோய், a pustular disease of the eye-lid marked by the loss of hair in the eye-lashes due to the presence of microorganisms, inflammation, burning sensatioon, swelling or thickening, oozing of blood etc. A parasitic disease of the eye-lids - Ulcerative Blepharitis, e.f. Tinea Ciliorum.

அக்கரம் பொங்கல், வாய், உதடு அல்லது நாக்கு, இவ்விடங்களில் அழற்சியினாற் சிறு கொப்புளங்க ளெழும்புதல், formation of small ulcers in the mouth, the lip or the tongue owing to inflammation of the mucous membrane - Stomatitis. See அக்கரப்புண்.

அக்கரம்மா, வெள்ளெருக்கு, a plant - white Madar - Calotropis gigantea. (albiflora).

அக்கர விரணம், see அக்கரப் புண், 2. கண்ணின் மேலிமையின் விரணம், ulceration of the upper eye-lid - A kind of Blepharitis.

அக்கரன், மூன்று வித வாந்திபேதிகளிலொன்று; இது, நாபியின் கீழ்ச்சார்ந்து, உஷ்ண பேதி போலும், செரியா மாந்தம் போலும், வெண்மையாயும், சோறு சோறாகவும், பேதி கண்டு, குடலிரைச்சல், குமட்டல், நெஞ்சுக் குத்தல், நாவறட்சி, தாகம் இடைபொருந்தாமை, வியர்வை,

வலி, உடல் குளிரல், முதலிய குணங்களைக் காட்டும் ஓர் வகை வாந்தி பேதி.

"கூர்ந்து விடும் அக்கரத்தின் கழிச்சல் கண்டால்
குளிருமுடல் சோறாக வெடுக்கும் பேதி
நேர்ந்ததிலே பருக்கை விழுந்தாகங் காணும்
நேராகக் காலுடம்புக் கடுப்புக் காணும்.

One of the three kinds of Cholera contemplated in the Tamil Medical science. It is marked by an acute catarrhal inflammation of the mucous membrane of the stomach and the intestines, enteric pain, thirst, perspiration, parched tongue, restlessness, rumbling noise in the stomach, nausea, chest pain, presence of partially digested food in the stools, cold skin etc. The other two kinds are - Komban and Paudwan.

அக்கரா, அக்கராகாரம், see அக்கரகாரம்.

அக்கராசி, வாலுளுவை, climbing staff plant - Celatrus paniculata; **2.** வாலுளுவை யரிசி, seed of C. paniculata.

அக்கரோட்டு, ஓர் வகைப் பருப்பின் கொட்டை, Walnut (Englis) - Juglans regia; **2.** நாட்டு அக்கரோட்டுக் கொட்டை, Bengal Walnut - Aleuritis Triloba. It is also called Belgaum Walnut or Country, Wild or Indian Walnut. See also அக்குரோட்டு

NOTE: It is found grown in great perfection in Bhutan. It is imported into India from the seaports of the Persian Gulf. The plant posesses a peculiar plesant scent, but it also causes headache to those who remain long in its shade in hot weather.

அக்கலாட்டி, காசுக் கட்டி, black catechu Catechu nigrum.

அக்கவாலதி, நெருஞ்சில், see அக்கிலு,

அக்கழலை, (அக்கு+அழலை) see அக்கழற்சி.

அக்கழற்சி, (அக்கு+அழற்சி) எலும்புக்குண்டாகும் அழலை, inflammation of a bone - Osteitis.

அக்கழிவு, (அக்கு+அழிவு) எலும்பிற் கேற்படு மழிவு, death or decay of bone - Osteolysis or Osteonecrosis.

அக்களவு, (அக்கு+அழிவு) எலும்பின் அளவு, the size of a bone; **2.** பூநீர், a liquid salt said to be obtained from the soil of fuller's earth during the dew season. Several versions are told about the method of collecting this. For details see under பூநீர்.

அக்கறக்கி, செந்தினை, red millet - Setaria melinis alias S. italica.

அக்களக்காய், பூவந்திக் கொட்டை; soap nut - Sapindus emarginatus.

அக்கன், கருடன், a Brahmini Kite - Haliaster indicus, **2.** குருடன், a blind man; **3.** நாய், a dog.

அக்காகலம், அகுரு மரம், a tree, Aquila or eagle - wood - Xylaloo.

அக்கா குருவி, கூச்சலிடு மோர் வகைக் குருவி, a screeching bird - Eudynamis honorata.

இக்காடச் செல்வி கண்டன், தாவிச் செல்லும் அணிற்பிள்ளை, a species of rodents living in trees and distinguished by their powers of leaping and their long and bushy tails; **2.** பறவையணில், flying squirrel - Petaurista philippensis.

அக்காடிதம், கௌரி பாஷாணம், a kind of prepared arsenic; **2.** ஓர் வகைப் பரங்கி வைப்புப் பாஷாணம், a kind of arsenic prepared according to the process of the Chinese?

அக்காடிப் பயறு, அங்காடிப் பயறு, அதாவது மொச்சைக் காய், black seeded dolichos - Lablab vulgaris.

அக்காடுதி, அக்காத்தான், தான்றி, see அக்கரத்தான்.

அக்காரடலை, சர்க்கரைப் பொங்கல், raw rice boiled in milk with sugar and ghee added to it.

அக்காரப் பட்டை, மாமரப் பட்டை, the bark of a mango tree; **2.** புளிமாமரப் பட்டை, the bark of a sour mango tree - Buchanania augustifolia.

அக்கார மோனி, கருப்புக் கோவை, a black variety of creeper - Bryonia grandis alias Coccinia indica.

அக்காரம், சர்க்கரை, sugar; **2.** கருப்புக் கட்டி, jaggery **3.** கரும்பு, sugarcane; **4.** மாமரம், mango tree - Mangifera indica.

அக்கார வடிசில், see அக்காரடலை.

அக்காரை, சிற்றுணவு, a light food consisting of a sweet cake.

அக்காவெலும்பு, முழங்காலெலும்பு, kneecap - Patella.

அக்காளம், தரகம்புல், a species of grass?

அக்காளன், காட்டுப் புல், a kind of wild grass?

அக்கி, கண், eye; **2.** உஷ்ணம், heat; **3.** ஓர் பூச்சி, an insect, **4.** கற்றாழை, a plant, Indian aloe medicinal aloe - Aloe vera (officinalis) **5.** அத்தி a tree Indian or country fig tree - Ficus glomerata; **6.** அக்கிப்பூடு, which see; **7.** அக்கி புறப்பட்டவன், one who is suffering from herpes.

8. வெயில் காலத்தில் உஷ்ணத்திலும், காய்ச்சலின் கொதிப்பினாலும் உடம்பில் பல விடங்களிலும் சிவந்து அம்மைக் குருமாதிரி சிறு சிறு கொப்புளங்கள் எழும்பி எரிவு கண்டு பிறகு விரணமாகிப் பட்டையிட்டு நீங்கு மோர்வித சரும நோய், an acute inflammatory affection characterised by the development of groups of vesicles on a patch of inflammed skin or mucous membrane in several parts of the body. It is healed up on the formation of a scab over the wound. The condition occurs most frequently in young people and in summer. It is also due to febrile affections - Herpes.

அக்கிக்கண், அக்கியைப்போல கண் சிவந்து சிறு குருக்களை எழுப்பி யெரிச்சலை யுண்டாக்கு மோர் கண்ணோய், an eye disease characterised by small vesicles as in the case of herpes with burning sensation - Herpes Ophthalmicus; 2. அக்கினிக் கரப்பன், an exanthematous eruption on the skin followed by burning sensation - A severe type of herpes.

3. கருவிழியின் மேற்றோலில் சிவந்து அக்கியைப் போல் சிறு சிறு கொப்புளங்களெழும்பி எரிவு கண்டு விரணமாகுமோர் கண்ணோய், herpetic inflammation of the cornea - herpes corneae.

அக்கிக் கல், ஒரு வகை வெண் படிகம், a sub species of chalcedony, which is a variety of quartz with a clouded whitish colour more or less transparent - Eye-stone.

2. ஓர் வித சிவப்பு இரத்தினம், a red or flesh (liver) coloured gem - Cornelian. It is usually found near Broach and is brought from Bombay. In Hindustani it is termed - 'Akik-i-surkh'.

3. ஓர் வகை மஞ்சள் இரத்தினம், a gem of a yellowish or greenish colour not of a great value - Chrysolite.

4. (அக்கி + கல்) கண்ணின் கல், stone of the eye. i.e. lens.

அக்கிக் காய்ச்சல், உடம்பில் அக்கியையெழுப்புமோர் வகைக் காய்ச்சல், a fever accompained by herpes - Herpetic fever 2. உடம்பில் சிறு குருக்களை யெழுப்பு மோர் வகைக் காய்ச்சல், an eruptive fever, also the eruption which characterises such fever - Exanthema. 3. குழந்தைகளுக்கு அக்கியை யெழுப்பும் காய்ச்சல், remittent fever in children followed by a rash - Exanthema subitum.

அக்கிக் கொடி, ஓர் வகைக் கொடி, a creeper twin leaved Mountain - Ebony - Bauhinia diphylla alias. B. Buchanani.

அக்கிச் சூர் (அக்கி = கண், சூர் = நோய்). கண்ணோய், a disease of the eye; 2. (அக்கி-சூர்) அக்கி நோய், Herpes.

அக்கிடம், வசம்பு, the root of a plant, sweet flag - Acorus calamus; 2. கற்றாழை Indian aloe - Aloe vera (officinalis)

அக்கித் தாரை, கண்ணின் நடுவிலுள்ள துவாரம், the round aperture in the iris of the eye; 2. கண் மணி, the apple of the eye; the pupil of the eye.

அக்கி நீர், அக்கியினின்று வடியும் நீர், inchor running from the herpes's sore; 2. கண்ணினின்று வடியும் நீர், water or fluid from the eyes; 3. கண்ணீர், tears; 4. பனிக்குடத்து நீர், the liquid contained in the amniotic sac in which the foetus lies or floats - Liquor Amni.

அக்கி நோய், கண்ணோய், diseases of the eye in general; 2. அக்கி, herpes.

அக்கிப்படலம், (அக்கி + படலம் = கண்படலம்) sclerotic coat of the eye. It is the hard white and fibrous membrane, which, with the cornea, forms the outermost coat of the eye - Sclerotica.

2. கண்ணின் நரம்பின் வழியாய்க் காணும் அக்கியைப் போன்ற குருக்களை எழுப்பி வலியையுண்டாக்கு மோர் நோய், an acute inflammatory disease of the eye marked by groups of small vesicles of the nature of herpes along the course of the ophthalmic nerve - Zoster opthalmicus;

3. கருவிழியின் மேற்றோலில் சிவந்த அக்கியைப் போன்ற குருக்கள் எழும்பி எரிவு கண்டு விரணமாகித் துன்புறுத்து மோர்விதக் கண்ணோய், an eye disease characterised by the formation of small vesicles on the cornea, which ulcerate and then heal. Herpetic inflammation of the cornea - Herpes Cornese. see அக்கிக் கண்.

அக்கிப்படுவன், குளிர் சுரங்கண்டு உடம்பிற் சில பாகங்களில் சதை வீங்கிச் சிவந்து வலி கண்டு தினவும் எரிச்சலுங் கூடிய குருக்களையெழுப்பிச் சில நாளைக்குள் குணமடையுமோர் சருமநோய், a contagious skin disease appearing with eruptions on certain parts of the body. It is marked by chillness, fevers, local redness of the skin, and intense itching and burning on the affected parts. It usually ends in recovery in a few days unless complicated with some other affection - Idiopathic Erysipelas.

அக்கிப் படை, உடம்பில் அக்கியைப் போலெழும்பு மோர்விதப் படை, a variety of ring worm characterised by small vesicles in clusters of the nature of herpes - Herpes farinosus.

அக்கிப் பீச்சல், அக்கிப் பீச்சிடல், அக்கி யெழும்பல், the formation of grouped vesicels on an inflamed skin in any part of the body Herpes.

2. பல்லி மூத்திரம் உடம்பில் படுவதால் சிறு சிறு கொப்புளங்கள் எழும்புவதற்காகச் சொல்லப்படும் அக்கியைப் போன்ற ஓர் விரணம், a group of small ulcers said to be formed on the surface of the skin as a result of blistering caused by the urine of lizards.

அக்கிப் புடை, அம்மையைப் போன்ற குருக்கள் உடம்பின் மேல் திரட்சியாக வெழும்புதவனாலுண்டாகும் சிவந்த வீக்கம், a swelling on a reddish base caused by the eruption of vesicles and papules in groups on the surface of the skin Herpes Zoster.

அக்கிப் பூடு, கொடிமா மரப்பூடு, a species of spreading mango tree; 2. படரும் பூடு, (In botany) any plant that spreads.

அக்கி மச்சா, அமுக்கிராவிலை, the leaf of a plant, Horse root Withania somnifera.

அக்கியம், நாகமணல், lead ore; 2. துத்தநாக மணல், zinc ore.

அக்கியெழுதல், அக்கிப் புண்ணின் மேல் செங்காவிக் குழம்பால் சிங்கம் அல்லது நாயுருவம், குசவனிடம் சென்று எழுதிக் கொள்ளல். இதனாலக்கிப் புண் குணப்படு மென்பது சிலர் அபிப்பிராயம், to paint a lion or a dog with solution of red ochre on the herpe's sore for acure and it is generally done by a potter.

அக்கிர கத்தம், கை நுனி, the extremity of the arm; 2. வலக்கை, the right hand.

அக்கிரகரம், see அக்கிரகந்தம்.

அக்கிரசங்கை, கணைக்காலின் முன் பாகம், the anterior horder of the leg from the ankle to the knee - Shin; 2. முன் தொடை the front portion of thigh.

அக்கிர சருமம், நுனித்தோல், the foreskin, 2. ஆண் குறியின் நுனித் தோல், the foresking of the penis Prepuce.

அக்கிர சூதகம், மகளிர் முதற் பூப்பு, the first menstruation.

அக்கிரணம், அக்கியினாலேற்பட்ட விரணநோய், herpes's sore.

அக்கிர பாசம், முன் பக்கம், the fore part of anything; 2. நுனி, the extreme point of anything; 3. உடம்பினுனி

அதாவது கை, கால், உறுப்பு, one of the extremities of an animal body, namely the arm or the leg, especially the latter.

அக்கிர பாணி, see அக்கிரகந்தம்.

அக்கிரம சூதகம், முறைமைக்கு விரோதமாகக் காணும் மாதவிடாய், menstruation which does not recur at proper intervals - Irregular Menstruation. See also அகாலசூதகம்.

NOTE: Diseases of the womb such as Amenorrhoa (Scanty of Suspended flow or Failure of the monthly courses) and Dysmenorrhoea (painful menstruation) and Menorrhagia (Excessive Menstruation) come under this head.

அக்கிரமப் பிரசவம், பிரயாசையினாலும், காலத்தினாலும் அபாயத்தினாலும் வேறுபட்ட பிரசவம், labor differing from its natural state by its difficulty, duration or danger involved - preternatural labor.

அக்கிரமப் பிரதே வடக்கம், பாம்பு முதலிய விஷப் பிராணிகளினால் கடியுண்டு, சில சமயங்களில் உயிரடங்கிச் சவத்தைப்போல் கிடக்கும் நோயாளியை, இறந்து விட்டதாகத் தப்பெண்ணங் கொண்டு, தவறுதலாகப் புதைத்தல். இது காரணம் பற்றியே, மேற்கண்ட சவத்தை 90 நாழிகை வரைக்கும் புதைக்கக் கூடாதென்று சத்தியாரூடம், சித்தாரூடம், நாகாரூடம் முதலிய சில தமிழ் நூற்கள் கூறுகின்றன. a wrong or mistakne burial of a living patient in the cataleptic state induced by snake-bite or sting of poisonous insects, on the authoritative pronouncement of the doctor in attendance.

Therefore, it is clearly laid down in some of the Tamil treatises on poisons, that such patients should not be buried till 36 hours are elapsed, during which time, consciousness may be restored, if the patient is properly treated. See also அகாலப் பிரதே வடக்கம்.

அக்கிரமப் புணர்ச்சி, (அக்கிரமம் = 1. ஒழுங்கின்மை, 2. முறைமைக் கேடு, 3. அநீதம், 4. கொடுமை)

1. ஒழுங்கீனப்புணர்ச்சி, அதாவது- சுகாதார விதிக்கு விரோதமாக மாதவிடாய்ப் பெண், கர்ப்பிணி, நோயாளி அல்லது பத்தியமாக விருக்கும் பெண் ஆகிய இவர்களைப் புணருதல், (In medicine) irregular sexual intercourse wiht a woman during her menstrual period or pregnancy or during her illness or dietetic treatment, contrary to all rules of hygiene;

2. முறை கேடான புணர்ச்சி, அதாவது - தரும சாஸ்திரத்திற்கு விரோதமாகக் கைம்பெண், பொது மகள், வேற்றுப் பெண், முதலியவர்களையும், முறைமைக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மாறாகத் தாயார், உடன் பிறந்தாள், மூத்தவள், குரு பத்தினி முதலானவர்களைச் சோரத்தனமாய் புணருதல். (In Moral philosophy) illicit intercourse or in other words clandestine sexual connection with a widow, a virgin, a prostitute or other women, with whom sexual intercourse is prohibited because of their relationship such as mother, sister, elderly woman, Guru's wife and so on, against all principles of morality and the established rules and customs of society;

3.அநீதப் புணர்ச்சி, அதாவது சட்டத்திற்கு விரோதமாக அயலான் மனைவி, பருவமடையாப் பெண், இசையாப் பெண் முதலியவர்களையும், பிரக்கினையற்ற அல்லது உயிர் துறந்த பெண்களையும் வலியப் புணர்தல். (in law) illegal intercourse i.e., copulation with a married woman amounting to adultery under section 497 I.P.C. or with a woman forcibly against her will and without her consent or with a girl under 12 years of age amounting to rape under section 375 I.P.C. or with a woman who is dead or unconscious;

4. கொடும் புணர்ச்சி, அதாவது இயற்கைக்கு விரோதமாக எம்மனிதனுடனாவது பெண்ணினிடமாவது ஆசனப் புணர்ச்சி செய்தல், அல்லது கீழ் வகைப் பிராணிகளுடன் சம்போகம் செய்தல். Unnatural offence like anal coitus and carnal intercourse against the order of nature with any man or woman amounting ot Sodomy or an unnatural connection of a man or a woman with the lower order of animals amounting to Bestiality as a means of sexual satisfaction under section 377 I.P.C.

5.அதீதப்புணர்ச்சி, அதாவது அறியாத் தனத்தினால் நினைத்த போதெல்லாம் வரம்பு கடந்து புணர்தல், indiscriminate sexual intercourse - Pantogamy. see also அசுபாவப் புணர்ச்சி.

அக்கிரம மலம், அகாலத்தில் மலங் கழித்தல், passing stools at irregular intervals - Defecation.

அக்கிரமம், (அ+கிரமம்) ஒழுங்கின்மை, irregularity; (in medicine) not occurring successively or at proper time; 2. முறைமையல்லாதது, non-conformity to rule; 3. அநியாயம், injustice; 4. கொடுமை, cruelty.

அக்கிர மாமிசம், இரத்தாசயம், the primary organ of the blood's motion an animal, namely the heart; 2. இரத்தாசயத்தின் மாமிசம்; the muscles of the heart.

அக்கிரம், உச்சி, the upper part of anything especially the head in an animal 2. மேற்பாகம், the front side of anything; 3. நுனி, the tip as in அக்கிரசருமம்.

அக்கிரரோகம், சாதாரணமாய் கண் சிவந்து பிறகு மாறி விடும்; மலர விழிக்க வொட்டாது, கண்ணீர் ஒழுகி, இமை தடித்துக் கடைக் கண்ணில் அறுப்பது போல வலியையும் கூச்சத்தையு முண்டாக்கிப் பீளை தள்ளுமோர் கண்ணோய், (அகத்-நய-விதி), an inflammation of the superficial tissues of the eye, especially of the conjunctive, which will soon disappear. It is marked by an acute pain on the ocrnea of the eye, a catarrhal or muco - purulent secretion and swelling of the eyelids - Conjuctivitis.

அக்கிரவம், தான்றிக்காய், the fruit of the tree, Belleric myrobalan - Terminalia belerica.

அக்கிரா, அக்கிராகரம், see அக்கிராகாரம்.

அக்கிராகாரம், ஓர் வித வேர், ஓர் கடைச்சரக்கு இது ஆப்பிரிக்கா, ஸ்பெயின் முதலிய தேசயங்களில் ஏராளமாய் விளைந்து அவ்விடங்களிலிருந்து ஏற்றுமதியாகி வருகிறது. இதை வாயிலிட்டு மெல்ல, உதட்டிலும், நாக்கிலும் விரு விருப்பையும் எரிச்சலையும் தரும். இதனால் பல் வலி, உண்ணாக்கு வளர்த்தி, சைத்தியம், நாக்குப் பிரளாமை முதலியன குணமாகும். வாய் கொப்பளிக்க வுதவும். வாயில் நீருறச் செய்து தாகத்தைத் தீர்க்கும், இதன் கஷாயம் வாத நோய்களுக்கு மிக உபயோகப்படும். Pellitory root - Anthemis Pyrethrum alias Anacyclus pyrethrum - Pyrethri radix. It is a medicinal root commonly sold in all bazaars. It is imported from Africa and Spain where it is procurable in abundance.

When chewed, it excites a pricking sensation on the lips and the tongue and a glowing heat in the mouth. In tooth ache, in relaxation of the uvula and tonsils and in paralysis of the tongue, it is used with advantage as a local application. It promotes saliva and allayas thirst and is frequently employed in gargles. An infusion of this drug is useful in cases of rheumatism.

NOTE:- It is a stimulant and an irritant when locally appled.

Tincture of Pellitory (Tinctura Pyrethri) is also prepared from this

root. The plant with the flower resembles a large daisy. The root when dry, is tough, fibrous and of the thickness of a quill, externally grey and internally white. It is a valuable sialogogue. see அக்காரகாரவேர்.

அக்கிராகியச் சரக்கு, வைத்தியத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத சரக்கு, In medicine non official drug a drug not recognised by the pharmacopocia.

அக்கிராகியம், அக்கிராசியம், சம்மதி - பெறாதது, that which is not authorised; **2.** எடுக்கத்தகாதது, that which is inadmissible.

அக்கிராசன், க்ஷயரோகத்தை யுண்டு பண்ணுமோர் வகைக் கிரகதோஷம், an evil planetary influence said to develop consumption.

NOTE: Diseases are also supposed to occur without any assignable cause and sometimes they get cured in the usual course without medicines. Such facts are usually attributed to the metereological changes and their action upon the human system, which, the Therapeutic science is unable to make out. For further details see under கிரக தோஷம்.

அக்கிராத்தம், கை நுனி, extremities of the hand; **2.** வலக்கை, the right hand, see அக்கிரகத்தம்.

அக்கிராந்தம், சோம்பு, aniseed, seeds of the plant - Pimpinella Anisum.

NOTE:- The name of these seeds is often misapplied to several other seeds such as Fennel seeds, Dill seeds, etc.

அக்கிரியம், முதலி லுண்டானது அல்லது பிறந்தது, the first- born.

அக்கிரு விரல், the toe or the finger.

அக்கிருகம், மாஞ்சரோகணி, a rare plant used by Siddhars for strengthening the body. A drug unidentified?

அக்கிலாங் கொடி, கருப்பு நாகதாளி, Black and few-spined Prickly Pear-Opuntia nigricans.

அக்கிலிபதை, ஆண் தன்மை, the condition of mature manhood. **2.** ஆண் சக்தி the procreative power, virility; **3.** ஆண்மை, the virile power, as opposed to பெண்மை, the puerile or feminine power.

அக்கிலு, நெருஞ்சில், இது ஓர் முட்பூடு. இதன் சமூலமே மிக்க உப்யோகமாயினும், காய்கள் மாத்திரம் மிகச் சிறந்ததாகக் கொள்ளப்படும். நீர்ச்சுருக்கு முதலிய மூத்திர நோய்களுக்கு இதை தமிழ் வைத்தியர்கள் கஷாயமாகக் கொடுப்பார்கள். a

thorny plant - Tribulus Lanuginosus. All parts of this plant, and especially the fruits, are held in high reputation in Southern India as a diuretic irrespective of the presence of any medical agent. This is prescribed by Tamil Vythians in decoction in certain cases of painful or difficult urination (நீர்ச்சுருக்கு, Dysuria)

அக்கி வகை, பலவிதமான அக்கிகள், அவைகளாவன, different kinds of herpes and they are.-

1. கண்ணினர் மேற்றொலி லெழும்பு மக்கி, herpetic inflammation of the cornea - Herpetic corneae.

2. உடம்பிற் படை அல்லது வண்டு கடியைப் போற் றிணவுடன் காணும் அக்கி, herpes in the form of ring-worm with an itching sensation - Herpes desquamans.

3. காய்ச்சலினால் பொங்கி முகத்திற் கொப்புளங்களைப் போலெழும்பு மக்கி, fever blisters in the form of herpes occurring in clusters in the face - Herpes Facialis or Herpes febrilis.

4. ஆண்குறி அல்லது பெண்குறியிற்காணு மக்கி, herps of the genital organs - Herpes genitalis.

5. கர்ப்பிணிகளுக்குக் காணுமோர் வகையக்கி, herpes peculiar to pregnant women - Herpes gestationis.

6. கைகளிலும் பாதங்களிலும் வளையங்களைபோற் காணு மக்கி, a form of herpes occuring on the hands and feet - Herpes iris.

7. உதட்டிற்காணு மக்கியைப் போன்ற புண், herpes in the lips - Herpes labialis.

8. பெண்களுக்கு மாதவிடாய்க் காலத்திற் காணுமக்கி, a form that occurs at the menstrual ephoch - Herpes menstrualis.

9. ஆண்குறி பெண் குறியின் வெளிப்புறத்தே காணுமோர் வகை யக்கி, herpes on the external surface of the genitals - Herpes progenitalis.

அக்கிள், கைக்குழி, the arm-pit-Axilla see also அக்குள்.

அக்கில் தாங்கி, கொண்டி அல்லது முடவர்கள் நடந்து போவதற்காக வுபயோகிக்குங் கோல், a staff reaching from the armpit to the ground with a cross-piece at the head to be placed under the arm or shoulder, to support the lame or cripped persons while walkign - Crutch.

அக்கில பாய்ச்சல், அக்கிளில், கூச்சமுண்டாகும்படிக் கையினால் புரண்டல், to tickle one in the arm-pit, see அக்குள் பாய்ச்சல்.

அக்கிறாடம், பச்சை, a precious gem Emerald.

அக்கினி, கொடி வேலி, white - flowered lead wort - Plumbago Zeylanica; **2. அக்கினி தேவன்,** god of fire invoked on many solen occasions; **3. எரிச்சல்,** burning; **4. செங்கோடி வேலி,** Roys - Flowered Leadwort or fire-plant-Plumbago rosea (the root is a powerful cautic); **5. நெருப்பு,** fire; **6. பொன்,** gold; **7. நெரிஞ்சில்,** a plant - Tribulus Lanuginosus; **8. வெடியுப்பு,** saltpetre - Potassium nitrate; **9. நவச்சாரம்,** solder, Sal Ammoniac - Ammonium Chloride; **10. மூலாக் கினி,** Thermogenic heat at the rectum; **11. உதராக்கினி, ஜடராக்கின்** fire in the stomach - Gastric fire; **12. பித்தம்,** bile; **13. சமிக்குஞ்சக்தி,** digestive faculty; **14. சேங்கொட்டை,** marking-nut or dhoby's nut - Semicarpus anacardium; **15. அக்கினிமண்டலம்,** Gastric region; **16. மூத்திரம்,** urine, **17. புடமிட வைக்கும் நெருப்பு,** fire used in calcining metals **18. அக்கினிப் பிலவு,** which see. **19. ஐம்பூதத் தொன்று,** one of the five elements; **20. சுழிமுனை, அதாவது மூலாதாரத்திலிருந்து உச்சித் துவாரம் வரைக்கும் நிற்கும் நாடி.**

"மோப்பா அண்டாண்ட முடிவிற்சென்று
மெய்யான அக்கினியில் மேலிதில்வே"
(கடை. பின்' ஞா.)

"அக்கினியாகிய சுழிமுனை தன்னில்
அடர்ந்து வாயு அரையங்குல மோடிடில்"

one of the passages in the central nervous system extending from the base of the spinal coloum known as "Sacral plexus" to the top of the spinal cord through the vertebral coloumn. It is active only in those who practise yoga.

NOTE: 1. Fire ordinarily refers to the fuel burning on a hearth or in any other palce as expalined under Note. 3, but physiologically, it is differently classified according to its use for a particular purpose, as for instance-

1. ஓமாக்கினி அல்லது ஓமத்தீ, sacrificial fire;
2. உதராக்கினி அல்லது சடராக்கினி - அடி வயிற்றுத்தீ, digestive or gastrice fire;
3. மூலாக்கினி, அல்லது மூலத்தி, Thermogenic heat, chiefly the one in the rectum;
4. சடாக்கினி அல்லது உடம்புச்சூடு, animal heat;
5. காமாக்கினி அல்லது காமத்தீ, sexual heat or passion;
6. கோபாக்கினி, fiery anger.

NOTE: 2. உதாரக்கனி, is the name given to the active principle or fluid to which the phenomena of the heat were formerly attributed. It is one of the amount of this heat (calorific) that the digestive faculty of the stomach depends, for, this, heat is supposed to give rise to hunger.

According to the Indian Medical Science, it is divided into four classes in consistence with the nature of its action. It is apparently due to the constitutional changes in the system, and therefore, the degree of hunger caused thereby in each case, is measured by the used of the following terms-

1. சமாக்கினி - மத்திம பசி, moderate appetite;
2. விஷமாக்கினி - ஒரு சமயம் பசியும் மற்றெரு சமயம் பசியின்மையும், appetite at one time and no appetite at the other;
3. தீட்சணாக்கனி - தீவிரப் பசி, keen appetite;
4. மந்தாக்கினி - மந்தப்பசி, dull appetite.

NOTE:3- The Tamilians reckon 3 kinds of fire which are used in preparing medicines and they are-

1. கமலாக்கினி, a small fire glowing like bymphae or lotus flowers.

2. தீபாக்கினி, a moderate fire spreading out flames.

3. காடாக்கினி, a great fire, conflagration.

அக்கினி இரசம், இரசம், கெந்தி, கடுக்காய் முதலான சரக்குகளைச் சூரணித்துக் கருவேலங் கொழுந்தினாலரைத்தக் காசத்திற்காகச் சாப்பிடு மோர் வகை மாத்திரை (அநு, வை) a kind of pill containing Mercury, slphur, and gall-nut as its chief ingredients. It is ued in asthma.

அக்கினிகட்டல், நெருப்பை, மூலிகையாலாவது மந்திர சக்தியாலாவது சுடாதிருக்கும்படிச் செய்தல், to stop the power of fire by medicinal plants or by witch crafts; **2. மூத்திரத்தைக் கட்டல்,** suppression of urine.

அக்கினி கண்டம், உத்திரத்தீ, abdominal or gastric fire; **2.** உடம்பினுள் மூலாதாரம், சுவாதிட்டான மென்னு மிரண்டாம் ஆதாரங்களுக் கிடையேயிருக்குமோர் பகுதி, that portion of the pelvic region between the pelvic and hypogastric plexuses, representing the seat of fire.

3. கொங்கணர் கடைக்காண்டத்தில் சொல்லியுள்ள நாற்பத்து முக்கோணதச் சக்கரத்தினோர் பகுதி. மந்திரநூலி லிச்சக்கரம் தேவிக்கு ஆதி பீடமென்றும் எல்லாவித மந்திர யந்திரங்களிலும் மிகவும் சக்தி வாய்ந்த தென்றும், மேன்மையைத் தரக்கூடிய தென்றும், சித்தர்களிதைப் பூசித்து அஷ்டமாசித்திகளைப் பெற்றதாகவும் கூறப்படும், இதை வடமொழியில் ஸ்ரீ சக்கரமெனக் கூறுவார்கள். That portion

demonstrating the philosophical conceptions of fire in a diagram called **நாற்பது முக்கோணம்**, consisting of 40 magic triangles. It is a mysterious diagram described in the secret Science of 'Kadaikkandam' a work attributed to Khonganar, a great Siddha. It is said to possess miraculous powers. The school of Siddhars attributes extraordinarly virtues to it and through the medium of this centre, it is said that one can attain suprenatural powers.

NOTE: It Expresses the mind's domination over the universal energy (Sakthi). All mysteries of magic, all symbols of gnosis, all figures of occultism are resumed in the sign of this diagram which is proclaimed to be the greatest and the most potent of all. It is indeed the sign of the absolute and the universal synthesis. It may be roughly compared to the Pentagram described in the Ceremonial Magic of the Kabalistic School or to the Double Triangle of solomon forming the six pointed star, called the solomon seal.

அக்கினி கபம், **கடல் நுரை**; a decayed cuttlefish bone Sepia octopedia, alias Ossepiac; **2. சூரிய காந்தம்**, a glass which collects the rays of the sun into a focus, producing intense heat and it times producing even fire - Burning glass.

அக்கினிகம், see **அக்கனி முகம்; 2. ஓர் பாம்பு**, a kind of serpent; **இந்திரகோபப் பூச்சி**, a scarlet insect· Lady fly - Mutella occidentalis.

அக்கினி கம்பி, **ஓர் வகை வெடியுப்பு, அகஸ்தியர் பஞ்சகாவிய நிகண்டின்படி இதற்கு ஆறாங்காய்ச்சலுப்பு என்று பெயர். இது பஞ்சபூத உப்பில் அக்கினியின் கூறாகிய உப்பாதலினாலும், கம்பிகம்பியாகத் திரண்டிருப்பதினாலும் இதற்கு அக்கினிகம்பி என்று பெயர் வந்தது போலும்**, a kind of saltpetre obtained by boiling it six times as per process laid bown in the agastyar's works (**பஞ்சகாவிய நிகண்டு**). It is so called because it contains more of the virtues of fire (one of the five elements) and it crystallises itself into long needle shapes,

அக்கினி கரப்பன், **நமைச்சலையும், எரிச்சலையுமுண்டாக்கும் அக்கியைப் போன்ற ஓர் வகைக் கரப்பன்**, a skin disease of the type of herpes attended with itching and burning - Herpes desquamans alias Tinea imbricata; **2. நமைச்சலையும், எரிச்சலையுமுண்டாக்கும் ஓர் வகைக் கரப்பன் நோய்**, red spots consisting of small papulae and terminating in a browish itchy scab; a kind of eczema marked by itching and burning - Eczema papulosum.

அக்கினி கரப்பான், see **அக்கினி கரப்பன்**.

அக்கினி கருப்பம், see **அக்கினி கர்ப்பம்**.

அக்கினி கருப்பன், **கெற்பத்தில் பிறந்தவன்**, he who was born from the mothr's womb.

அக்கினி கருப்பை, **சாமைப் பயிர்**, a kind of millet - Panicum.

அக்கினி கருமம், **தீயினாற் சுடல்**, actual cauterization (as an ulcer) by means of heated wire or rod - Thermocautery. **2. மருந்தின் சக்தியானுடம்பிற் சூடு எழுப்பும ஆற்றல்** - Thermogenetic potency.

அக்கினி கர்ப்பம், **நெருப்பைத் தன்னிடமாகக் கொண்டது**. Pregnant with fire; **2. சூரிய காந்தம்**, a gem said to contain and give out sun's heat, the sunstone; **3. கடல் நுரை**, a frothy substance engendered by the submarine fire; **4. தீப்பொறி**, a spark; **5. நீர் மேல் நெருப்பு (மகா மேஹதிஷ்மதி)**, a fire plant - Ammannia vesicatoria?

அக்கினி கலை, **சுவாசம்**, respiration; **2. சூரியகலை**, the vital air passing through the right nostril. It has for its quality heat; **3. இடகலை, பிங்கலை**, currents of Prana coming through the nostrils or more properly, the two channels called Nadis for the currents of Prana working respectively in the left half of the body, (the left sympathetic) and the right half of the body (the right sympathetic); **4. சுவாசத்தின் பகுதி அதாவது உள்வாங்கல் அல்லது வெளிவிடல்**, a part of respiration referring either to inhalation or exhalation; **5. நெருப்பு அல்லது உஷ்ணத்தைப் பற்றிக் கூறும் நூல்**, the science of heat - Thermology.

அக்கினி கல்பம், **நெருப்பு அல்லது உஷ்ணத்தன்மை வாய்ந்தது**, that which has the nature of fire or heat as the case may be.

அக்கினி காரியம், **சமையல் முதலிய வீட்டு வேலை**, cooking and other domestic work; **2. சூடு போடல்**, (In medicine) the application of a cautery or causitc.

அக்கினி கீடம், **கடி வாயிலில் இரத்தங் கம்மி இலுப்பைப் பூ, பேரீச்சங் காய் முதலியன போல் கொப்புளங்களை யெழுப்பி யெரிச்சலை யுண்டாக்கு மோர் வகை விஷப் பிராணி. இது 24 வகைப்படும்**, a class of venomous creature causing swelling in the bitten part, which becomes livid and gives rise to boils of varied sizes. It consists of 24 kinds; **2. ஓர் வகைப் பிராணியின் விஷம்**, the poison of a particular kind of creatures. See **அக்கினிபாதச் சிலந்தி**.

அக்கினி குணப்பாடு, நெருப்பு அல்லது வேறு வகை உஷ்ணத்தினாலுடம்பிலுள்ள நோயைக் குணப்படுத்தல், treatment of diseases in the system by the application of heat - Thermotherapy.

அக்கினி குணம், உடம்பினிலுள்ள சூட்டை• எழுப்புங் குணம், the quality of producing heat - Thermogenic property.

அக்கினி குமாரன், *சன்னி, சைத்தியம், பேதி முதலிய வியாதிகளினாலுடம்பு சீதளமடையுங் காலத்துச் சூடுண்டாகும்படிச் செய்ய அனுபானத்திற் கொடுக்குமோர் வகை மாத்திரை,* a kind of medicinal pill which produces a quickly diffused and transient increase of vital energy and heat in the hodily system - a diffusible or a general stimulant.

அக்கினி குமாரி, *அகத்தியர் 1500ல் சொல்லியபடி பதினெண் குட்டம், மகோதரம், விப்புருதி முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் ஓர் வகைக் குளிகை,* a medicinal pill used in curing the eighteen kinds of leprosy, abdominal dropsy (ascites), abscess etc, as prescribed in Agastiyar's work (1500).

அக்கினி கெற்பம், அக்கினி கை, see அக்கினிக்கூர்மை..

அக்கினி கொழுந்து, நெருப்புச் சிறுசுவாலை, the little flame of a fire.

அக்கினி கோதகம், பெண்கள் தீட்டுக் காலத்தில் தினப்படியாடுங் குளியல், the daily bath during the menstrual period or period or uncleanliness.

அக்கினி கோத்திரம், நெய், ghee; 2. நெருப்பு, fire.

அக்கினி கோபம், *பித்தம்,* bile - one of the three humours in the body.

அக்கினி கோமுச்சிரவல்லி, கொடிவேலி, a plant, white-flowered Leadwort - Plumbago Zeylanica.

அக்கினிக் கட்டு, நெருப்பைத் தம்பித்தல், the art of stopping the action of fire - a kind of magic.

அக்கினிக் கணம், நெருப்புப் பொறி, spark.

அக்கினிக்கண், இரத்தக்கண், blood-shot eye.

அக்கினிக் கண்ணன், செங்கண்ணன், a man with red eyes; 2. கோபக்கண்ணை புடையவன், a man with fiery eyes.

அக்கினிக்கல், தீக்கல், a very hard stone which strikes fire whit steel; 2. *சக்கிமுக்கிக் கல்,* a species of quartz, flint.

அக்கினிக் கள்ளி, கொப்புளங்களை யெழுப்புமோர் விதக் கள்ளி, a kind of spurge the juice of which on coming in contact with the body, causes blisters - Euphorbia (genus).

அக்கினிக் காஷ்டம், அகருக்கட்டை, which see; 2. அகில், which see.

அக்கினிக் காற்று, நெருப்புக் காற்று, a fierce hot wind.

அக்கினிக் குமரம், *மாந்தம், சீதளம்,* முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் வகைக் கூட்டு மருந்து, a medicinal compound used for curing indigestion, cold etc - Stomachic stimulant.

அக்கினிக் குமார ரசம், *இரசம்,* கெந்தி, *முதலிய சரக்குகளைச்* சேர்த்து, அசீரணம், பேதி முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் மருந்து, *(அநு.வை.)* a medicinal preparation consisting of Mercury, Sulphur, Pepper etc, as its chief ingredients, given for indigestion, diarrhoea etc - Stomachic tonic.

அக்கினிக் குளிகை, *சுரம், சன்னி முதலிய* நோய்களுக்கு தட்சிணாமூர்த்தி திருமந்திரம் 1500-ல் *சொல்லிய* முறைப்படித் தயாரித்த ஓர் *மாத்திரை,* a pill prepared as per process laid down in he work of Dakshinamurthy Tirumandiram (1500). and prescribed for delirium, fever etc.

அக்கினிக் கூர்மை, கடல் நுரை, decayed cuttle-fish bone - Os sepiae; 2. *சவுட்டுப்பு,* a kind of salt extracted from the Fuller's earth or Dhoby's earth. It has for its property heat.

அக்கினிக்கூறு, உடம்பிலுள்ள சூட்டின் தன்மை the nature or effect of heat in the system; 2. நெருப்பின் பாசம், section of the fire; *3.* உடம்பில் சூடுண்டாகும் பகுதிகள், different centres in the body producing heat - Thermogenic centres.

அக்கினிக்கேது, *(அக்கினிக்கு + ஏது)* புகை, smoke.

அக்கினிக் கொடி சிறுதேக்கு, fire creeper - Cleodendron serrata.

அக்கினி சகன், அக்கினி சகாயன், *வாயு,* air; 2. *காற்று,* wind.

அக்கினி சக்தி, *சீரண சக்தி,* the power of digestion. 2. நெருப்பின் வல்லமை, the power of fire.

அக்கினிசஞ்சீவி குமாரன், *18 வகை சன்னிக்கும்* தேனில் அல்லது *இஞ்சிச் சாற்றில்* இழைத்துக்

கொடுக்கும் போகர் முறைப்படிச் செய்த ஓர் மாத்திரை, a pill prepared according to the process of Bogar and macerated in honey or juice of ginger before use. It is prscribed for 18 kinds of delirium and apoplexy.

அக்கினி சமதீபனம், *சீரண சக்தியைத் தூண்டுதல்,* stimulation of digestion; **2.** *சீரண சக்தியைக் கிரமப்படுத்தல்,* regulation of digestion; **3.** *சமாக்கினி,* moderate appetite.

அக்கினி சம்பவம், நெருப்பினின் றுற்பத்தி, production from fire; **2.** காட்டுக் குங்குமப்பூ, safflower - Carthamus tinctorius, **3.** நெருப்பினால் ஏற்பட்ட நிகழ்ச்சி, that which happened from the action of fire or is resulting from fire.

அக்கினி சருமன், மஞ்சள், saffron - Curcuma longa.

அக்கினி சர்ப்பம், கொள்ளி வாய்ப் பேய், a meteor that appears in the night and flirts about over marshy grounds - The ignis - Fatuus. It is known by several names such as "Will-O'- the wisp, Jack-o-lantorn, Fire-drake, Feolish-fire, Corpse candle etc.

அக்கினி சாதகம், *அசீரணம், சீரணக்குறைவு,* indigestion or want of digestion.

அக்கினி சாந்தம், ஓமம், bishop's weed - Sison ammi.

அக்கினி சாரம், கண்ணிடு மருந்து, medicines for the eyes - Collyrim; **2.** கடல் நுரை a .frothy substance floating on the sea.

அக்கினி சாலம், கடல் நுரை, decayed cuttlefish bone-Os sepiac; **2.** நெருப்பைக் கொண்டு செய்யு மோர் தந்திரம் அல்லது மாயா வித்தை, a trick or magic performance with the agency of fire; **3.** ஓர் பூண்டு, அதாவது நீர்மேல் நெருப்பு, a plant, (unidentified).

அக்கினி சிகம், (அக்கினி + சிகம்), fire flame flame from flower; **2.** கார்த்திகைக் கிழங்கு, the root of November-flower plant - Gloriosa superba; **3.** *மஞ்சள்,* saffron - Crocus indicus; **4.** *சீந்தில்,* moon creeper-Menispermum cordifolium.

அக்கினி சிகை, குங்குமப்பூ, a safflower platn, European saffron - Crocus sativus; **2.** கார்த்திகைக் கிழங்கு - Methonia superba alias Gloriosa superba.

அக்கினி சிலாசம், மலைமேல் விளையுங் கொடி வேலி, leadwort growing on the top of hills or mountains; **2.** கருங்கொடி வேலி, நீலக்கொடி வேலி, a plant Cape Lead wort or Blue - flowered Leadwort - Plumbago capensis.

அக்கினி சிலேட்டுமம், இருமல், கோழை, உடம்பெரிச்சல், கால் கை அழற்சி, தாகம், உண்ட பின் பசி முதலிய குணங்களைக் காட்டு மோர் விதச் சிலட்டும நோய், a phlegmtic disease characterised by cough, bronchial secretion, thirst, burning sensation of the limbs; hunger after food etc - A kind of consumption.

அக்கினி சிலை, நெருப்புக் கல், flint used in olden days to strike fire. see அக்கினிக் கல்.

அக்கினி சில், வெந்தோன்றி, a plant called flame flower - Gloriosa superba. See அக்கினி சிகம்.

அக்கினி சிவாகம், see அக்கினி சிலாசம்.

அக்கினி சேகரம், மஞ்சள், turmeric - Crocus indicus; **2.** குங்குமம், a frgrant tree - Crocus sativus; **3.** குங்குமத்தூள், a kind of red powder worn by Indian ladies on their forhead; **4.** *குசும்பா மரம்,* a tree the seeds of which are used by dyers - Carthamus tinctorious.

அக்கினி சேகவன், கருநாபி, a black variety of poisonous plant - Aconitum ferox; **2.** கருநாபிக் கிழங்கு, the poisonous root of plant; black aconite root.

அக்கினிச் சலம், குப்பைமேனி, a plant a vermifuge - Acalypha indica; **2.** கார்த்திகைக் கிழங்கு, the root of November-flower plant - Gloriosa superba; **3.** நெருப்பும் தண்ணீரும், fire and water.

அக்கினிச் சிலம், (see *அக்கினிசிகம்)*

அக்கினிச் சிவம், குப்பைமேனி, a rubbish plant - Acalypha indica. It is used as an antidote to poisonous bites.

அக்கினிச் சுவாலை நெருப்பின் கொழுந்து, flame of fire; **2.** பெருந்தீ, large fire - Conflagration; **3.** சிவன், the god Siva; **4.** சிரிஞ்சிப் பூ, a plant with red flowers used by dyers - Grislea tomentosaa; **5.** விளக்கை, *(தாதகிப்பூ)* fire-flame bush-Woodfordia floribunda.

அக்கினிச் சூரணம், கொடி வேலியுடன் மற்ற சரக்குகளுஞ் சேர்ந்த ஓர் வகைச் சூரணம், a medicinal compound . in which the lead-wort forms the chief ingredient.

அக்கினிச் சூனு விரசம், பலகறைப் பற்பம், சங்கு பற்பம், கெந்தி, ரசம் ஆகியவற்றை வேப்பம்பட்டைச் சாற்றிலரைத்து அனுபானத்திற்குத் தக்கபடி, சயம், சுரம், குன்மம் முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் ஆயுள் வேத மருந்து *(அநு.வை.)* An Auyrvedic

medicinal compound consisting of sulphur, mercury and certain other calcined mineral powders impregnated with calcium oxides as ingredients, and given for comsumption, fever, dyspepsia etc.

அக்கினிச் செடி, செங்கொடி வேலி, a fireplant, Rosy-flowered Lead-wort-Plumbago rosea.

அக்கினிச் சோர்வை, புண்ணாக்கக் கூடிய ஓர் சிலை மருந்து, a plaster used to raise blisters on the skin - Vesicating or Cantharides plaster; 2. காரச்சிலை, blister plaster.

அக்கினிதமம், கண்டங்கத்திரி, a narcotic plant, Jacquins nightshade - Solanum Jacquini.

அக்கினிதம், அசரணத்தைப் போக்கு மோர் மருந்து, a medicine which removes indigestion - Stomchic; 2. உடம்பில் உஷ்ணத்தைக் கொடுக்கும் வஸ்து, that which lends heat to the system.

அக்கினி தீபதி, அசிரணத்தால் வயிற்றிரைச்சல், rumbling noise in the stomach from indigestion.

அக்கினி தீபனம், சிரண சக்தியை வளர்க்கு மருந்து, a medicine that excites the action of digestion and strengthens the functional activity of the stomach - Stomachic; 2. சிரண சக்திப் பெருக்கம், increase of the power of digestion. See அக்கினிதம்.

அக்கினி தோஷம், பாசகநீர்க் கோளாறினாலுண்டாகும் நோய், defects arising from gastric disorders.

அக்கினித் தம்பம், அக்கினிக்கட்டு, அதாவது நெருப்பு சுடாமற்படிச் செய்யும் வித்தை suspending the action of fire - a kind of magic; 2. நெருப்புத் தூண், ppillar of fire; 3. அறுபத்து நான்கு கலைக்கியானங்களிலொன்று, one of the 64 Indian arts and sciences.

அக்கனித் தம்பனம், நெருப்பு சுடாமற்படிக்குச் செய்யுமோர் வித்தை, the art of subduing the action of fire by magic. See அக்கினித் தம்பம்.

அக்கினித் திட்டம், see அக்கினி வரை.

அக்கினித் தியாகியானோன், பொட்டிலுப்பு, Nitrate of Potash - Potassae Nitrus.

அக்கினித் திர சம்மதி, பால் அல்லது தயிரேடு, the thin upper layer on the surface of milk or curd - Cream.

அக்கினித் திராவகம், சாதாரணமாக வழங்கும் வெடியுப்புத் திராவகத்தின் இனத்தைச் சேர்ந்த ஓர் வகைச் செயநீர். இதைத் தமிழ் வைத்தியர்கள் வெடியுப்பு, படிக்காரம், கடலைப் புளிப்பு முதலியவற்றைக் கொண்டு வாலையிலிட்டு இறக்குவார்கள். இதை மூத்திர அடைப்புக்கும், தீபக மருந்தாகவும் உபயோகிப்பதுண்டு, Fire water; a kind of acid obtained by distillation, Nitrous acid-Acidum Nitrosum.

The Tamil Vythians used to prepare this in the following way.-

saltpetre	......20 palams
Alum	.......16 palams
Kadalay pulippu	.....18 palams.

Theses are mixed and distilled with an increasing heat till the nitrous acid is obtained in the receiver. These are considered by them a diuretic and also a tonic after a long continued fever. (Ain. M.Med).

This term is now commonly used for Nitric acid although it differs very much in composition and in the process of its preparation, as laid down in the Tamil Medical Works.

அக்கினித் தீநுரை, கடல் நுரை, the decayed cuttle-fish bone - Os sepiae.

அக்கினித் துண்டவடுகம், அக்கினி மாந்தத்திற்குக் கொடுக்கு மோர் வித ஆயுள் வேத மாத்திரை, *(அறு.வை.)* a medicinal pill given in Ayurveda for dyspepsia.

அக்கினி நீர், பாசக நீர், gastric fluid. 2. மூத்திர நீர், urine.

அக்கினிபம், பொன், gold.

அக்கினிபயம், நெருப்பைக் கண்டா லேற்படுமோர் விதப் பயம், morbid dread of fire or heat - Thermophobia.

அக்கினிபலம், சிரணசக்தி, power of faculty of digestion.

அக்கினி பல்லி, இருட்டில் பிரகாசிக்கு மோர் கொடி அதாவது சோதிஷ்மதி, fire - brand creeper; a creeper shining in dark - Cardiospermum halicacabum.

அக்கினி பாதச்சிலந்தி, விஷங் கொண்ட சிவந்த பாதங்களையுடைய வோர் வகைச் சிலந்திப் பூச்சி. இதன் கால்கள் உடம்பில் பட்ட விடங்களில் கொப்புளிக்கச் செய்யும், a kind of spider possessing in its leg a powerful poisonous principle which causes blisters when coming in contact with the body - A kind of blistering spider.

அக்கினி பாதை, நெருப்பினாலேற்பட்ட வேதனை, injury or suffering caused by the action of fire,

அக்கினி பித்த சுரம், 6 நாள் முதல் 10 நாள் வரை பசி தாகமின்மை, அரோசிகம், வாய்க்கசப்பு, எரிச்சல், கைகாலுளைவு முதலிய குணங்களைக் காட்டு மோர் வகைக் காய்ச்சல், a fever characterised by

loss of appetite with thirst for a duration of 6 to 10 days, nausea, bitterness of taste, burning sensation, pain in the limbs etc - A kind of gastro - bilious fever.

அக்கினி பிரத்தரம், தீக்கல், flint; 2. சூரிய காந்தக்கல், sun-stone.

அக்கினிபீசம், பொன், gold; 2. காட்டு சீரகம், a seed (digestive) wild cumin - Veronia anthelmintica.

அக்கினிப்பாகு, புகை, smoke, see அக்கினிக் கேது.

அக்கினிப் பிரபம், ஓர் விஷப் பூச்சி, a venomous insect?

அக்கினிப்பிரளயம், வடவா முகாக்கினி, அல்லது ஊழித்தீ, submarine fire destructive in nature, causing the final conflagration at the end of the world.

அக்கினிப் பிரீதி செய்தல், புடமிடல், to calcine; 2. நெருப்புக்கு இரையாகச் செய்தல், to give anything as an offering to fire, as for example, the burning of the dead.

அக்கினிப் பிலவு, காட்டுப் பலா, பேய்ப் பலா, a tree - Jungle Jack, wild Jack - Atro carpus hirsuta.

அக்கினிப் பிழம்பு, நெருப்புச் சுவாலை, flame of fire. See அக்கினிச்சுவாலை.

அக்கினிப் பிளாஸ்திரி, புண்ணாக்குவதற்காக உபயோகிக்கு மருந்துச் சீலை, a blistering plaster - Cerate of Cantharides; plaster of cantharides - Emplastrum cantharidis. see also அக்கினிச் சேர்வை.

அக்கினிப் புடைப்பு, நெருப்புக் கொப்புளம், a collection of watery fluid beneath the superficial layer of the skin - Blister.

அக்கினிப்பூ, நீர், தண்ணீர், water - Aqua.

அக்கினிப் போக்கு, உடம்பினுள் உஷ்ணம் பரவியிருக்கும் நிலைமை, the distribution of heat in the system; 2. உடம்பிலுள்ள உஷ்ணம், பேதி, மூத்திரம் முதலியவைகளால் கழிதல் அல்லது உடம்பை விட்டகலல், the dissipation of bodily heat by means of radiation, discharge of excretions etc. - Thermolysis.

அக்கினி மச்சம், இறால், fire-fish; prawn so called because it contains phosphorous - Astacus.

அக்கினி மணி, சூரியகாந்தக் கல், a kind of flint said to emit fire when exposed to the sun - Burning glass, Sun-stone.

அக்கினி மண்டலம், மூலாதாரம் முதல் நாபிக் கமலம் வரை, (In physiology the seat of fire in the

abdominal region extending from the pelvics to the naval region. - Gastric region; 2. மூலாதார முதல் சுவாதிஷ்டானம் வரை. இது நாற் சதுரமாய், நடுவே மூன்று கோணமாய், பிருதிவியும் அப்புவுங் கூடின விடத்தேயுள்ளது. (வே.தத், கட்டளை).

"தொடர்ச்சியாஞ் சுவாதிஷ்டானத்தின் கீழே
சுகமாக நடுமை மக்கினி மண்டலந்தான்
முடர்ச்சியாய் முக்கடராய் மூலமட்டும் பரவி
முனைந்த சுவாதிட்டான் மட்டு நிற்கும்."
(பூகி. வை.சிந்)

(In Psychology) that portion or the region extending from the sacral plexus to the Hypogastric centre; 3. அடி வயிறு, the abdomen; 4. மூன்று மண்டலத் தொன்று, one of the 3 regions of the body.

NOTE: Psychologically, the body is divided into 3 regions, viz. those of the sun, moon and fire (ஆதித்த மண்டலம், சந்திர மண்டலம், அக்கினி மண்டலம்)

அக்கினி மதனம், காமத்தீ, the fire of sexual love; heat of passion.

அக்கினிமந்த சுரம், 7 அல்லது 10 நாள் வரை பசி, தாகமின்மை, பலவீனம், எரிச்சல், மலபந்தம், தலைவலி, அரோசிகம், ஏப்பம்,வாந்தி, விக்கல், கை, கால் வலி முதலிய குணங்களைக் காட்டு மோர் விதக் காய்ச்சல், இது சில நாளைக்குள் விஷ சந்நிபாதம், பேதி முதலான குணங்களைக் காட்டும், a fever marked by absence of hunger and thirst for a duration of 7 to 10 days, weakness, burning sensation, constipation, headache, tastelessness, belching, vomitting, hiccough, pain in the limbs etc. It sometimes brings about several complications such as, typhoid, diarrhoea etc. in the later stages as an after effect.

அக்கினி மந்த மூலயோகம், சீத பித்தத்திற்கும் கொடுக்கு மோர் ஆயுள் வேத மருந்து, (அநு.வை.) a medicinal compound in Ayurveda given for diseases of the digestive organs.

அக்கினி மந்தம், உடம்பிற் சூடு மிகுதியாகக் கொண்டு சாப்பிட்டவுடன் வயிறு பொருமிக் கொண்டிருக்க, அதன் மேல் மறுபடியும் சாப்பிடுவதாலும், மிகுதியாய்க் கொதிக்கும் நீரை உட்கொள்வதாலு முண்டாகும் ஓர் செரியாமை நோய், impaired or imperfect digestion arising from excessive heat in the system or from some erros in the diet, or by drinking water excessively - hot-Indigestion.

It is also said to be due to catarrh of the mucous coat of the stomach and to the presence of abnormal ferments arising from gastric disorders - Dyspepsia;

2. முள்ளை அல்லது பக முள்ளை, spinous fire-brand teak

or Indian Headache tree — Premna integrifolia; **3.** *சடராக்கினிக் குறைவு*, gastric insufficiency; **4.** *பசியின்மை*, loss of appetite - Anorexia see Note **2.** under **அக்கினி.**

அக்கினி மந்த வாயு, அசீரணத்தினால் வயிற்றிலும், குடலிலும் வாயு தங்கி அதனாலேற்படு மோர் வாயு நோய், a condition marked by the presence of gases in the alimentary canal. It arises mainly from the fermentation of the contents of the stomach and the intestines - Flatulent Dyspepsia.

அக்கினி மரம், *காட்டுப்பலா,* see *அக்கினிப் பிலவு,* **2.** சேங்கொட்டை மரம், see **அக்கினி.**

அக்கினி மாடன், நெருப்பினிடத்தில் பிரியத்தை யுண்டாக்கு மோர் வித பைசாசம், devilish nature creating a morbid desire or mania for fire (infemales) - A kind of hysteria.

அக்கினி மாதா, *(அக்கினி + மாதா* = fire mother), from raising blisters, கொடிவேலி, a plant White-flowered leadwort-Plumbago Zeylanica.

அக்கினி மாந்தம், see *அக்கினி மந்தம்.*

அக்கினி மாந்தி, வாதமடக்கி, a tree, Wind-killer-Cleodendron phlomodies.

அக்கினி மாந்தியம், வயிறு கோளாறடைவதினால் அன்ன பானாதிகளைச் சாதாரணமாய்த் தகிக்கக்கூடிய வல்லமை யற்று மாந்தம் ஏற்பட்டு அதனால் புளியேப்பம், வயிற்றுப் பிசம், மலபந்தம் முதலிய தீக்குணங்களை யுண்டாக்கித் துன்புறுத்துமோர் விதச் செரியாமை நோய். இதற்கு மந்தாக்கினி ரோகமெனவும் பெயர், a derangement of the stomach, resulting in the disoreder of its functions as tympanites, sour belching, constipation etc., due to insufficient quantity or impaired quality of the gastric juice or to the deficient action of the gastric muscles - Atonic dyspepsia.

அக்கினி மாருதி, *அகத்தியர்* which see.

அக்கினி மானி, உஷ்ணம் அல்லது சூட்டின் வேறுபாடுகளை நிர்ணயிக்குங் கருவி, an instrument for recording heat variation - Thermograph; (thermometer).

அக்கினி முகச் சிலந்தி, *அக்கினி பாதச் சிலந்தியைப் போன்ற ஓர் வகைச் சிலந்தி.* இவ்விடத்தில் முகத்தில் விஷமென்பதே வித்தியாசம், a kind of blistering spider of the species of **அக்கினிபாதச் சிலந்தி.** The only difference is that his insect contains the poisonous principle in its face instead of in the legs. Mandibles are furnished with a curved claw perforated at the

extremity, like a poison fang. A gland furnishes a certain colourless poisonous fluid which is injected into the object wounded by the claw - A species of spider.

அக்கினிமுகச் சிலந்தி விஷம், இச் சிலந்தி உடம்பில் படுவதினாலேற்பட்ட விஷம், இது அதிக நோயையும் நெருப்பாற் சுட்ட கொப்புளங்கள் போன்ற கொப்புளங்களையும் பிறப்பிப்பது மல்லாமல், தாகம், எரிச்சல், நடுக்கல், மூர்ச்சை, இரத்தம் வடிதல் முதலியவைகளையு முண்டாக்கும், poisoning caused by the said spider coming in contact with the hody. It not only raises blisters on the surface of the skin, hut it also causes thirst, burning sensation, shivering, fatigue, bleeding, etc.

அக்கினி முகச் சூரணம், கொடி வேலிச் சூரணம். இதைக் கர்ப்பிணிகளுக்குக் கொடுத்தால் கருவைக் கரைக்கு மென்பதாகக் கருதப்படும். கட்டிகளுக்கும் மேக விரணங்களுக்கும் உபயோகப்படும், the root of the plant (Plumbago Zeylanica) reduced to powder. It is considered that this powder administered during pregnancy will cause abortion. It is also useful in bubo and other venereal ulcers.

2. கொடிவேலியுடன் பெருங்காயம், கோஷ்டம், ஓமம், கடுக்காய், திப்பிலி ஆகிய எட்டுச் சரக்குகளை இடித்து, அசீரணம், வயிற்றுக் கோளாறு, பசிதீபனம் இன்மை முதலியவைகளுக் குபயோகிக்கும் மருந்துப் பொடி, a medicinal powder consisting of the following ingredients along with Lead wort, viz, asafoetida, Arabian constus, Bishop's weed, gall-nut and long-peper. It is used in indigestion, loss of appetite and other gastric disorders etc.

அக்கினி முகம், உடம்பில் பட்ட விடங்களில் நெருப்புப் பட்டாற் போல் விரணத்தை யுண்டாக்குந் தன்மையை யுடைய ஓர் கொட்டை, அதாவது சேங்கொட்டை, the nut of the Fire-face tree causing blisters on the skin; marking-nut - Semicarpus anacardium; **2.** சித்திரமூலம் a plant, the bark of which invariahly acts as a vesicatory; Leadwort-Plumbago Zeylanica, **3.** *கார்த்திகைக் கிழங்கு*, the root of a plant, which also possesses similar blistering properties - Gloriosa superba.

NOTE:- The nut of the tree - Anacardium occidentale called cashew nut *(முந்திரிக் கொட்டை)* is also sometimes called marking - nut from its blistering nature.

அக்கினிமுக லவணம், சித்திரமூலம், சிவதைவேர், இந்துப்பு முதலானவைகளைப் புடமிட்டு அக்கினி தீபன

முண்டாகக்கொடுக்குமோர் மருந்து. *(அநு.வை.)* a compound of salt extracted from Blister root and Turbith root, and used for promoting digestion.

அக்கினி முகி, *(அக்கினி + முகி =* fire face, from corrosive properties), சேங்கொட்டை, marking nut. See அக்கினிமுகம்.

அக்கினிமூலம், marking nut, Semicarpus anacardium **2.** பெருங்குடலின் கீழ்ப் பகுதியில் தங்கியிரா நின்ற சூடு அல்லது உஷ்ணம் அதாவது மூலாக்கினி, (In Physiology) the animal heat lying stored up or lodged in the descending colon; the thermogenic heat of the large intestines.
3. அபான வாயுவின் காரணமாய், உடம்பின் சூட்டை உட்கொண்டிருக்கும் மூலாதாரம் (In Psychology) the sacral plexus supposed to be one of the thermogenic centres in the humna system; heat through the action of Apana (one of the 10 vital airs in the system)

அக்கினி மூல வாயு, மலம் சப்தத்துடன் கழிந்து, கிறுகிறுத்த வயிறு வலித் துளையும் போது மலத்தில் இரத்தம் சற்றுக் கலந்து விழுந்து, பலங் குன்றி, முகம் பேதப்பட வெளுத்துக் காணும் ஓர் வாயு நோய், a disease characterised by frequent evacuation of stools mixed with blood, causing colic pains, giddiness, progressive failure of strength etc. It is marked by pinched features and anaemia - Dysenteric diarrhoea.

அக்கினி மூலி, கற்றாழை, a plant Common Indian aloe - Aloe typica; **2.** கொடி வேலி, see அக்கினி.

அக்கினி யாசயம், இரைக் குடலோடு சேர்ந்திருக்கும் சிறிய குடலின முதற் பகுதி, இது சுமார் 12 விரற்கடை நீள மிருக்கும், the first part of the small intestines beginning at the pylorus. It is about 12 finger's breadth long - Duodenum, **2.** உணவுகள் நன்றாகப் பக்குவமாவதற்கு வேண்டிய பித்தம் தங்கியிருக்கு மிடம், அதாவது பித்தாசயம், the per-shaped membrancous sac in the right lobe of the liver, constituting the reservoir for the bile - Gall bladder; . உடம்பின் உஷ்ணத்திற்கு உறை விடம், thermogenic centre in the system.

அக்கினியாடன், எட்டி மரம், strychnine tree - Strychnos nux vomica.

அக்கியாளு முறை, உடம்பினிலுள்ள சூட்டைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தல், regulating or controlling the bodily temperature - Thermotactic.

அக்கினியாள் வோன், உடம்பின் சூட்டைக் கட்டுப்படுத்துவதற்கு மூளையி லமைந்த வோர் வஸ்து, an eminence of gray sbustance in the brain for controlling the bodily heat - Tuber cinereum.

அக்கினியிணக்கம், உடம்பினி லுற்பத்தியாகும் உஷ்ணம், சமரச நிலையடைதல், the normal adjustment of the bodily temperature - Thermotaxis.

அக்கினியுப்பு, வெடியுப்பு, a kind of salt, Nitre - Potassium nitrate; **2.** ஆறாங் காய்ச்சலுப்பு, a native preparation of potassium nitrate - Nitras potassae; *3.* பூநீரினின்று காய்ச்சி யெடுக்கும் ஐந்தாங்காய்ச் சலுப்பு, a kind of salt boiled and filtered five times in the course of its extraction from the fuller's earth; *4.* தலையோட்டி னின்று தயாரித்த ஓர் வகை யுப்பு,

"அண்டமதான அக்கினியுப்பை
கண்டறியார்கள் காசினி மூடர்
பிண்ட மதனிற் பிறந்தது காணார்
சண்டனைச் சேர்வர் சாஸ்திரம் பார்த்தே".

(சட். சூத்.)

an euphemistic term used for denoting a kind of salt extracted from the skull of the foetus.

அக்கினியோற்பத்தி, உடம்பினுள்ளேற்படும் சூடு அல்லது உஷ்ணம், the generation of heat within the animal body - Thermogenesis.

அக்கினி ரசம், இந்திரகோபப் பூச்சி, a red coloured insect known as Lady fly ; Mutella occidentalis. It is classified as one of the natural drugs *(உபரசச் சரக்கு)* described in the Tamil medical science on account of its great usefulness in medicines; **2.** பொன், gold; *3.* நெருப்பின் வீரம், virulence of fire; *4.* பாசகநீர், gastric fluid.

அக்கினி ரணம், நெருப்புச் சுட்டதினாலேற்பட்ட புண், any injury caused by fire or dry-heat-Burns.

அக்கினி ரோகணி, அக்குள் கட்டி, a suppurative axillary gland; a hard inflammatory swelling in the arm-pit; **2.** சுரத்தினாலடிபட்டு உடம்பு இளைத்தவர்களுக்கு அக்குளில் கட்டி யுண்டாகி நெருப்பைப் போல் எரிச்சலையும் சதை வெடிப்பு, சித்தப் பிரமை, மயக்கம், முதலியவைகளையும் விளைவிப்பது மல்லாமல் சில சமயம் 7 நாளைக்குள் மரணத்தையு முண்டு பண்ணுமோர் நோய், a very fatal contagious epidemic disease characterised by fever, pain, swelling of the axillary lymphatic gland delirium and coms. In majority o cases, it may end in death - Buboni plague.

அக்கினி, ரோகம், ஓர் வகைக் கண்ணோய், a kind of eye-disease; **2.** பித்த நோய், bilious disease.

அக்கினி லிங்கம், நெருப்பின் அடையாளம் அதாவது புகை, smoke, as an indication of fire.

அக்கினில், நெருஞ்சில், a thorny plant - Tribylus terrestris.

அக்கினி வகை, மருந்தெரிக்கும் திட்டம் அல்லது எரிப்புத் திட்டம், exactness or accuracy in determining the quantity of heat required for burning for purposes of preparing medicines. See notes under அக்கினி.

அக்கினிவர்ண சிலந்திக்கடி, கடிவாயில் எரிச்சலையும், சுரம், மயிர்க்கூச்சம், உடம்பெரிவு, குருக்கள் ஆகிய குணங்களையு முடாக்குமோர் வகைச் சிகப்பு சிலந்திக்கடி, a bite of the red species of spider marked by a reddish base and burning sensation, at the affected part, followed by fever, horripilation, and eruptions or pustules, in the body.

அக்கினி வர்த்தனம், உதராக்கினியை அதிகப்படுத்து மருந்து, a stimulant increasing the digestive power or exicting the functional activity of the stomach, -Stomachic; **2.** ஓமம், Bishop's weed - Carum copticum.

அக்கினி வல்லபம், குங்குலியம், resin of a tree known as Bdellium - Shorea robusta.

அக்கினிவாகம், அக்கினிவாகு, புகை, smoke; **2.** ஆடு, sheep.

அக்கினி வாகனம், வெள்ளாடு, goat; **2.** ஆட்டுக்கிடா, he-goat.

அக்கினி வாதம், பாசக நீரால் ஏற்பட்ட வாதநோய், a kind of gastric disease - Gastralgia.

அக்கினி விகாரம், உண்ட உணவுகளை வயிற்றினுள் பக்குவம் செய்வதற் கேற பாசக நீர் கோளாறடைவதனா லுண்டாகும் நோய், a disease caused by gastric disorders - Gastricism; **2.** சமிக்கும் சக்தியின் வேறுபாடுகள், the change in the digestive faculty; **3.** பித்தக் கோளாறு, bilious disorders.

அக்கினி விசர்ப்பி, சுரம், பேதி, தாகம், மூர்ச்சை, வாந்தி, பிரமை, நித்திரைக் கேடு, உடம்பில் சில விடங்களில் நெருப்புக் கொப்புளங்களைப் போன்ற கொப்புள வெரிச்சல் கண்டு அவ்விடங் கறுத்தல், மற்ற விடங்களில் நீலம் அல்லது இரத்த நிறமுண்டாதல் முதலியவைகளை யுண்டாக்கு மோர்விதச் சரும நோய். இது படருந் தன்மையது, an acute specific, febrile disease with inflammation of the skin. It is accompanied by an eruption of a fiery acrid humour in some part of the body, and a peculiar blue colour in other parts, The symptoms are - purging, thirst, swooning, vomiting and the characteristic rash with a well defined margin upon the skin. It is of a spreading nature - St. Anthony's fire, Erysipelas.

அக்கினி விடபாகம், உடம்பில் விஷமேறி இரத்தம் முறித்து அதனால் வாதபித்த மதிகரித்து, வயிறளைதல், வாந்தி, கோழை, மூர்ச்சை, வாய் நீரொழுக்கு, வீக்கம், புரட்டல், உடம்பு மெலிதல், இருமல், பக்க நோய் முதலியவைகளை யுண்டாக்கும் உடம்பினோர் நிலைமை. இது அசாத்தியம், a condition of the body in which the quality of the blood is altered by the reason of the presence in it of a poison collected in the system. It is marked by the following symptoms - increase of humours in the system, with rumbling noise in the stomach, -vomiting, salivation, swelling, restlessness, emciation, cough, pain on the sides and so on. It usually terminates in deth Akind of Toxemia (Blood Poisoning).

NOTE: சாதாரணமாக, விடபாகம் என்றால், உடம்பிலிரத்தம் முறிந்து விஷத்தன்மை கொள்ளல். இது அடியில் கண்ட காரணங்களினா லுண்டாகும். அவையாவன மீன் முள், நெல்லின் வால், காடி, புணர்ச்சி, புழு, சமைத்தழிந்த பண்டம், செம்பினூறல் சேர்ந்த கறி அன்னம் புசித்தல் முதலியன. இது எண் வகைத்து, அவையாவன - வாதம், பித்தம், சிலேட்டுமம், திரிதோஷம், எரிவு, காந்தல், சன்னி, அக்கினி, a common term denoting any ailment or condition induced by the absorption of septic products, arising from the introduction into the blood putrefactive germs or decomposing organic matters such as, bones of fish, alchohol, diseased meat, food saturated with vedigris etc - Blood poisoning. According to Indian Medical science, it consists of eight kinds as enumerated above.

அக்கினி விடம், அதிக உஷ்ணத்தினால் இரத்த நிலைகளிலோ, அல்லது உடம்பிலுள்ள வேறு கருவிகளிலோ ஏற்படும் விஷம். any toxic substance formed in the blood or any other living organism in the body by heat - Thermotoxin.

அக்கனி வியாபகம், சூடு அல்லது உஷ்ணம் பரவுதல், diffusing of heat - Thermodiffusion.

அக்கினி விரணம், தீச்சுட்ட புண், an injury on the body caused by fire - Burns. **2.** சூடு போட்ட புண், cauterised wound.

அக்கினி விருத்தி, *சரண சக்தி வளர்தல்,* increase in the digestive power Improved digestion; **2.** *பசியை யுண்டாக்கு மருந்து,* a medicine that excites the action of and strengthens the stomach - Stomachic.

அக்கினி வீரியம், பொன், gold.

அக்கினி வேச சம்மிதை, *சரக சம்மிதை* யென்னு மோர் ஆயுள் வேத நூல், an Ayurvedic science named 'Charaka Samhita.'

அக்கினி வேசர், *சரகசம்மிதை* யென்னும் ஆயுள் வேத நூலையியற்றி வோர் இருடி. இவர் ஆத்திரே ரிஷியின் ஆறு மாணாக்கர்களுள் ளொருவர். ஆத்தியேர் உலகத்தாருக்குவதும்படி ஆயுள் வேத நூலை இயற்ற வேண்டிக் கைலாசகிரியில் நடந்த வைத்திய சங்கத்தில் அதிக முயற்சி யெடுத்துழைத்தவர். ஆத்தியேர் வாக்கின்படி அவரது மாணாக்கர்களறுவரும் தனித்தனியாக வைத்திய நூல்களெழுத, அவைகளுள், அக்கினிவேசர் எழுதியது மிகவும் பொருத்த முள்ள தாகவும் அனுபவத்தை யொட்டினதாகவு மிருக்கக் கருதி, ரிஷிகளால் அதைக் சிறந்ததாக எடுக்கப்பட்டது. சரகசம்மிதை என்பது அக்கினி வேசரால் எழுதப்பட்டுப் பின்னர் சரகரால் வடமொழியில் திருத்தி வைக்கப்பட்டுள்ள நூல். இது சுமார் கி.மு. 1,000 வருஷத்திற் முந்தியிருக்கலாமென ஊகிக்கப்படும். A Rishi (saint) who compiled an Ayurvedic science now called Charaka samhita. He is one of the six pupils of Atreya who took prominent part in the Sanitary Commission held in the Himalaya Mountains for purposes of introducing Ayurveda into this world. It is said that each of the 5 pupils wrote a treatise on medicine and the Sages selected that of Agnivesa as the most practical.

This was subsequently modified by Charaka, under whose name it became known and his book is undoubtedly the most ancient and continues to be the most celebrated medical work in the possession of the Modern Hindus. It is in Sanskrit and it is not definitely known at what period of the world's history it was written. It is roughly calculated to be at about 1000 B.C. (Em. Med. men).

அக்கினி வேதனை, நெருப்பினா லுண்டாகுமெரிச்சல், burning sensation caused by fire, see அக்கினிபாதை.

அக்கினி வேந்திரம், கல்லுருவி, (கல் + உருவி, to draw out stone, as from the bladder) gravel plant Ammannia baccifera; **2.** இலவங்கம், clove tree - Caryophyllus aromaticus. **3.** நீர் மேல் நெருப்பு என்னும் ஓர் பூண்டு, fire on water or water-fire, a kind of plant, blistering Ammannia - Ammannia vesicatoria?

NOTE: Cool to touch but causing blisters. In Hindi, it is called 'Dadmari'. Pounded leaves are applied to herpetic eruptions. The botanical name seems to be incorrect, for, the plant remains unidentified. It cannot be taken as a synonym of கல்லுருவி.

அக்கினினிர்ம மந்தினி, தழுதாழை, a medicinal shrub, wind-killer - Cleodendron phlomoides.

அக்கு, எலும்பு, bone; **2.** பலகறை, a small univalve shell called cowry; **3.** உகாமரம், sand-paper tree - Dillenia indica; **4.** உத்திராட்சமணி, seed of Eleocarpus. It is a bead worn by religious persons and mendicants; **5.** எட்டிமரம், nux vomica - Strychnos nux vomica; **6.** அகில், eagle wood-Aquillaria agallocha; **7.** கண், eye; **8.** சங்கு, chank.

அக்குக் கணம், எலும்பைப் பற்றிய ஓர் கணநோய், இது சாதாரணமாய்க் குழந்தைகளுக் கேற்படும். இதனால் எலும்பிற் குள்ளிருக்கும் மச்சை தாது தாக்கப்பட்டு அழிவுறும், a disease, chiefly in infants, affecting the bones in the system and in which the cells of the bone-marrow disappears - Ostectabes; **2.** குழந்தைகளுக்கு உச்சிக்குழி மூடாமல் எலும்புகளைத் தாக்கி, அதனால் அவைகள் மிருதுவாகி, வளைந்தும், கோணலாகியும் காணுவது மன்றி, ஈரல், கெடுதலையடைந்து, நரம்பு நோய், சுரம், வலிப்பு, சதை வலி முதலிய குணங்களையும் காட்டும், a constitutional disease in children marked by bending and distortion of the bones, delayed closure of the fontanels, and degeneration of the liver and the spleen. There are often nervous affections, feverishness, convulsions, pain in the muscles etc - A kind of rickets.

அக்குக் கழலை, எலும்பின் மேலுண்டாகுங்கழலை, a hard tumour developing on a bone - Osteoma; **2.** எலும்பிற்கு ஏற்படும் கழலை, tumour of a bone - Osteoncus.

அக்குக் குறுக்கம், எலும்பு சிறிதாகல், dimunition of a bone - Retarded Ossification.

அக்குக் குறுக்கி, எலும்பு சிறியதாக்கும் ஓர் நோய், a disease causing diminution in the size of a bone - Rickets; atrophy of bone - Osteanabrosis; **2.** கண்களைச் சிறிய தாக்குமோர் கண்ணோய், a disease

causing the eyes to become very small.

அக்குசாடம், see அக்குறோட்டு.

அக்குச் சுருக்கம், see, அக்குக் குறுக்கும்.

அக்குணி, *சிறிதளவு,* a small quantity.

அக்குணிப் பிள்ளை, *சிறு குழந்தை,* child congenitally small; **2.** தோஷத்தினால் இளைத்துச் சிறிதாகவுள்ள குழந்தை, child abnormally small due to bad humours of the system or to emaciation with no obvious cause - Marasmus infantalis.

அக்குத் திமிர், *கண்ணின் சதைக்குண்டாகுமோர் திமிர் நோய்,* paralysis of the external ocular muscles - Ophthalmia Externa or Ophthalmo plegia externa.

அக்குப் பீளை, *கண்பீளை,* muco-purulent discharge from the eyes.

அக்குமணி, *கண் மணி,* pupil of the eye.

அக்குரு, விரல், finger; **2.** அகில், which see.

அக்குருக்கி, (அக்கு + உருக்கி) எலும்புருக்கி, நோய், a disease causing necrosis or degeneration of the bone - Osteonecrosis.

அக்கு ரோசம், *கருஞ் சீந்தில்,* a black variety of **சீந்தில்,** moon creepr - Menispermum cordifolium alias Tinosphora cordifolia.

அக்குரோட்டு, see அக்குறோட்டு,

அக்குரோதம், *மதனகாமப்பூ,* a flower which excites venery, Cupid's plant - Pergularia minor alias P.tomentosa.

அக்குல்லி, see அங்குல்லி.

அக்கு வலி, எலும்பிலேற்படும் நோவு, pain in a bone or in the bones - Ostealgia or Ostalgia; **2.** கண்வலி, pain in the eye.

அக்குவா, *பலகாரம்,* cake, sweet cake.

அக்குளிக் கபம், *கடல் நுரைக் கிழங்கு,* a kind of root (unidentified)

அக்குளுக் காட்டுதல், see அக்குள் *பாய்ச்சல்.*

அக்குளுத்தல், *கூச்சமுண்டாக்கல்,* to tickle, to excite or irritate lightly with the finger-tips so as to cause a peculiar uneasy sensation; **2.** *(அக்கு + உளுத்தல்)* எலும்புளுத்தல், necrosis of bone - Osteonecrosis.

அக்குளுத்து, *அக்குள் பாய்ச்சுவதினா லுண்டாகுங் கூச்சம்,* the action or condition excited by a tickle; sligh nervous irritation caused by gently touching with the finger tips under the arm-pit.

அக்குள், *கக்கம்,* arm-pit-Axilla. see also அங்குள்.

அக்குள் கட்டி, அக்குளில் நிலப்பூசினிக் கிழங்கைப் போல் பருமனும் கெட்டியாயுமுள்ள கட்டியை யெழுப்புமோர் விரணநோய், an inflammatory swelling of a lymphatic gland of the size of white yam under the arm-pit - Bubo.

அக்குள் படை, அக்குளில் ஏற்படும் *படை,* ring worm of the axilla (Arm-pit) - Tinea axillaris.

அக்குள் பாய்ச்சல், கையாற் தொட்டுக் *கூச்சம்* அல்லது *சிரிப்பை* யுண்டாக்கல், to touch or poke a person lightly in the arm pit to provoke a peculiar uneasy sensation or to excite a spasmodic laughter - Titillation. see also அக்கில் *பாய்ச்சல்,*

அக்குள் மயிர், கமுக்கட்டு *மயிர்,* the haris in the arm pit (axilla) Glandebalae.

அக்குறுக்கு. see அக்குக் குறுக்கி.

அக்குறோட்டு, இது ஒரு பெரிய மரம். இதன் பூக்கள் வெண்மையாயும், பூனை வாலைப் போல மிருக்கும். திருவனந்தபுரம், மைசூர் முதலிய விடங்களில் காணப்படும். ஆனால் இமயமலை, காஸ்மீரம், திபெத், காபூல் முதலிய விடங்களில் ஏராளமாக உண்டு. இது பார்வைக்கு அழகாயும் ஒவ்வொரு பாகமும் நறுமணம் வாய்ந்ததாயுமிருக்கும், கோடை காலத்தில், இம் மரத்தின் கீழ், அதன் நிழலுக்காக நிற்பவர்களுக்குப் பூமணத்தினால் தலைவலி ஏற்படுவதுண்டு. இதிலிருந்து ஓர்விதப் புளிப்புத் திரவமும், இதன் கொட்டைப் பருப்பிலிருந்து எண்ணெயும் எடுப்பார்கள். இவ்வெண்ணெய் விளக்கெரிப்பதற்கும், சமையலுக்கு முதவும். இக்கொட்டை மிகுதியாகத் தின்பதுண்டு. இதில் நாட்டு அக்ரோட்டு என்பது மற்றோர் இனம். இது பெல்காம் முதலிய விடங்களில் மிகுதியாக வுண்டு. Walnut tree Juglams Regia alias Jovis glans. This is a large tree with white flowers in catkin. It is found in Travancore, Mysore and some other parts in Southern India, but grows in great perfection on the Himalayas, Cashmere, Tibet, Kabul and so on. It is elegant to look at and all the parts of the plant possess a peculiar pleasant scent, but causes head ache to those who remain long in its shade in hot weather. The pericarp contains tannic acid and gallic acid. The oil procured by heat from kernels is used for burning lamps and for culinary

purposes. Country walnut tree Alcuritis triloba is another species found largely grown in Belgaum. Hence it is also known as Belgaum Walnut or Lumhang nut tree.

NOTE: The word Akhrot is the Hindi name used in Tamil as such. There are several varieties of this, the best being the thin shelled or Canghazee acroot. The Belgaum Walnut or the Indian Walnut is non officinal like castor oil. For details see under நாட்டு அக்குறோட்டு.

அக்குறோட்டெண்ணெய், அக்குறேட்டுக் கொட்டையின் பருப்பினின்று வடிக்கு மெண்ணெய். இதற்கு இலங்கையில் "கெகூ". என்று பெயர். the oil extracted from the kernel of the seed by heat. It is called 'Kekoo' in Ceylon.

அக்கெலும்பு, மார்பெலும்பு, breast bone Sternum; 2. (அக்கு + எலும்பு) கண்குவளை, the bony socket of the eye Orbit.

அக்கொல்லி, see அகக் கொல்லி,

அக்கோடகம், அக்கோடம், கடுக்காய், Indian gall nut or ink nut Terminalia chebula.

அக்கோடிகம், கருஞ்சூரை, a black variety of the shrub, Jujubi zizyphus oenoplia.

அக்கோரம், ஊசிக் காந்தம், the magnetic oxide or iron which attracts needls; load stone Feri oxidum. It is a combination of the protoxide and peroxide of iron. see காந்தம்.

அக்கோலம், தேற்றா மரம், clearing nut tree Strychnos pototorium. It is so called from its power of purifying muddy water.

அக்ரணி வாசி, அமுக்கிறா், horse - root or Indian winter cherry Physalis somni fera alias Withania somnifera.

அக்ரா, see அக்கரா காரம்.

அக்ரோட்டு, see அக்குறோட்டு.

அக்னியாசம், பித்தமிருக்கும் பை, the pearshaped reservoir for the bile on the under surface of the liver - Gall Bladder; 2. பாசக நீருக்கு உறைவிடம், the seat of gastric juice i.e., stomach; 3. மூத்திரப் பை, the membraneous sac which serves as a reservoir for the urine - Bladder. NOTE: It is a common term referring to the above mentioned three internal organs.

அங்க கஷாயம், உடம்பின் சத்து, இது விந்துவைக் குறிக்கும், the essence of the body referring to the semen virile; 2. மூத்திரம் urine.

அங்ககம், அங்கம், organ of the body; 2. (அங்க + அகம்) அவ்யவத்தின் உள்பாகம், the interior part of an organ.

அங்கஈனம், அவயவக் குறைவு, defect or want of an organ; 2. அங்கப்பழுது, deformity of an organ.

அங்கஈனன், உடம்பினில் உறுப்புக் குறைந்தவன் அல்லது உறுப்புப் பழுதானவன், one who is wanting in the perfection of bodily organs or having organic deformity.

அங்கக்கிரகம், பலவீனத்தால் கெண்டைக்கால், கை, இவ்விடங்களில் தானாகவே காணும் நரம்பு இசிவு, இதைக் 'கெண்டையேறல்' எனச் சொல்வது முண்டு, a spasmodic and painful contraction of the muscles of the calf and the arm observed in weak or debilitated persons or in theose of neurotic tendency - Cramps.

அங்கக்கிரியை, உடம்பினில் உள்ள உறுப்புகளின் தொழில், functions pertaining to an organ in the body; 2. உடம்பையடுத்த தொழில், (in Physiology) physical functions as opposed to mental ones; 3. உடம்பிற்கு எண்ணெய் பூசல், anointing the body;
4. உடம்பில் கஞ்சி அல்லது தைலம் ஊற்றிக் கைகளால் அழுத்தியும், கால்களால் மிதித்தும், துவட்டியும், வாதத்தால் ஈடுபட்ட நோயாளிக்குச் செய்யும் பலவித சிகிச்சை; இதை மலையாளத்தில் 'நெளரக்கிழி,' 'உழிச்சல்', 'தாரை,' எனச் சொல்வதுண்டு, (in Medicine), an Ayurvedic treatment adopted in Malabar in which the whole body is anointed with mediciated conjee or oil and massaged or otherwise pressed by foot. It is a variety of mechanic massage consisting in a systematic therapeutic friction stroking and kneading of the body.

This treatment is generally resorted to, in cases of nervous affections or other similar aliments in order to effect a cure or to bring relief at least to the patient. 5. உடம்பினில் கத்தியால் அறுத்துச் செய்யுந் தொழில், (in Surgery) any act performed with instruments on the body. 6. வாயினாலும், பார்வையினாலும் மனோவல்லமையினாலும் உடம்பினில் செய்யு மோர் விதத் தொழில், (In Psychology) a Psychic healing performed on the body of the patient by making passes before the eyes or by gazing or by sending vital force to the affected party by Will-power.

NOTE:- It consists of three kinds viz - Pranic healing, Mental healing and Spiritual healing.

7. அடயோகத்தில் செய்யும் உடம்பையடுத்த பலவிதத் தொழில்கள், the physical exercise

done in the course of the practice of Hatha yoga.

அங்கக் குறி, *உடம்பின் குணம்,* bodily symptom; **2.** *உடம்பின் அடையாளம்,* descriptive marks on the body; **3.** *ஆண் அல்லது பெண் குறி,* genital of a male or a female.

அங்கக் கறிப்பு, *உடம்பின் இலட்சணம்* (in Physiology) the general design and structure of the body; **2.** *உடம்பினால் காட்டும் சைகை,* any action of the body or limbs intended to express in idea or feeling such as, nodding the head to express assent or dissent etc., **3.** *ஆண் அல்லது பெண் காட்டும் காமச் சேட்டைகள்* (in Erotic science) the desire expressed or indicated by gestures of a male or a female through love or passion; **4.** (in Medicine) *நோயாளிகளின் உடம்பில் காணும் அடையாளங்கள்,* several symptoms found in the body of a patient.

அங்கக் குறிப்பு நூல், *பொதுவாக உடம்பின் இலட்சணத்தைப் பற்றியும் அவயங்களின் குறிப்புகளைப் பற்றியும் சொல்லும் நூல்,* science dealing in the general designs of the body and its organs, as learned by dissection - Anatomy.

அங்கக் கூறு, *உடம்பின் பேதம், சுபவாம் முதலியவை* peculiarity of the constitution or temperament - Idiosyncrasy; *உடம்பின் பகுதிகள்,* different parts of the body; **2.** *உடம்பின் தன்மை,* nature of the body.

அங்கக்கோற் பூச்சி, *உடம்பினுள்ளே வசிக்கும் கோற் புழு,* a round worm found inside the body.

அங்க சங்கம், *புணர்ச்சி,* copulation.

அங்கச பிசாகம், *கருநாயுருவி,* black variety of the plant, Indian burr - Achyranthes aspera.

அங்கசம், *இரத்தம்,* blood; **2.** *நோய்,* disease, sickness; **3.** *மயிர்,* hair; **4.** *காமம்,* sexual passion having a propensity to sexual enjoyment; **5.** *சங்குத் திராவகம்,* an acid prepared from a kind of impure arsenic called 'Sangu Pashanam' used in Indian Medicine; **6.** *ஆயுள் வேதப்படிப் பல மூலிகைகளின் உப்புகளைக் கொண்டு செய்யுமோர் திராவகம்,* according or Ayurveda, it is an acid prepared from different kinds of salts obtained by incinerating the roots of several plants; 7. *காமவிகாரம்,* disorder due to sexual impulse; **8.** *குடிமயக்கம்,* intoxication.

அங்க சலனம், *உடம்பின் நடுக்கம்,* an involuntary trembling of the body through cold, fear or disease; **2.** *உடம்பசைவு,* alternate contraction

and relaxation of the muscles of the body - Tremor.

அங்க சலன வாதம், *(அங்கம் + சலனம் + வாதம் = உடம்பு + அசைதல் + வாத நோய்). வாயுபண்டங்களை மிதமிஞ்சி யுண்பதிலிருந்து வாத மதிகரித்து நரம்புகளைத் தாக்குவதனால் அது உடம்பு முழுவதும் பரவி சாதாரணமாய்க் கை கால்களில் நடுக்கத்தை யுண்டாக்கு மோர் வகை வாத நோய். இதற்கு உதறுவாதம் என்றும், கம்பவாதம் அல்லது நடுக்குவாதம் என்றும் பெயர். இது சாதாரணமாய் 40 வயதிற்கு மேற்காணும்,* a kind of paralysis, progressive in its course by the aggravated condition of Vaya arising from consumption of food containing excess of starchy substances. It affects the whole nervous system and is marked by a characteristic tremor of the limbs and the head. It is also know as Paralysis agitans, Shaking palsy or Parkinson's disease. It is most common in males over 40 years of age.

அங்க சாதனம், *அங்கப் பயற்சி,* bodily exercise.

அங்ககபாதி, *சிறுபுள்ளடி* - a medicinal plant - Hedysarum.

அங்ககூதம், *கொன்றை,* a flowering tree, common cassia - Cassia fistula.

அங்கசேட்டை, *உடம்பின் சலனம்,* involuntary actions of the body, spasmodic affections of the bodily organs; **2.** *கை மெய்காட்டல்,* distortion of the countenance from habit as, grimace etc., signs made by a lunatic.

அங்க தேசம், *உடம்பினுறுப்புகளைத் தறித்தல், அல்லது அழித்தல்,* excision or mutilation of a member or part of the body - Amputation; **2.** *அவயவக்குறைவு,* absence or defect of any part or organ; **3.** *உறுப்பழிவு,* loss by mutilation etc., of an organ or a part thereof.

அங்க சேதனம், *உடம்பினுறுப்பை அறுத்து வேறுபடுத்தல்,* the removal of limb or part of the body by using knife, ligature, or any other means - Amputation.

அங்க சோதனை, *உடம்பின் பரிட்சை,* examination of the body.

அங்கச் சோர்வு, *ஆண்குறித் தளர்ச்சி,* want of erectile power in the penis - Impotency.

அங்கடத்தன், *பாசிப்பயறு,* green gram - Phaseolus mungo.

அங்கண பாஷாணம், *மிருத பாஷாணம்* a mineral poison, a kind of arsenic in its natural state.

அங்கணப் பிரியம், *(அங்கணம் + பிரியம்,* dear to woman) *அசோகு,* Asoka tree Saraca indica.

அங்கணம், *கடுக்காய் மரம்,* common myrobalan tree, Indian myrobalan Terminalia chebula; **2.** *பத்து முழ மளவு,* 10 cubits's measure; **3.** *வெள்ளெருக்கு,* white flowered giant swallow wort Calotropis gigantea (albiflora); **4.** *இலவணம்,* any salt, but generally common salt; **5.** *பொரிகாரம்,* an artificial or manufactured salt Borax, a mineral chemically called Sodium Biborate, ($Na^2 B_4 O_7$) **6.** *சேறு,* mire.

அங்கணன், see *அங்கண பாஷாணம்.*

அங்கணி, *கற்றாழை,* common Indian aloe Aloe vera (officinalis); **2.** *செங்கற்றாழை,* dull red flowered aloe, hepatic aloe aloe vera.

அங்கணிதம் பூண்டு, *பருத்தி,* cotton tree Gossypium arboreum.

அங்கணைக் கள்ளி, see *ஐங்கணுக்கள்ளி,*

அங்க தந்திரம், *ஓர் மாந்திரீக நூல்,* a Tantric science treating of magical diagrams, marks of figures.

அங்கதம், *பாம்பு,* snake; **2.** *மார்பு,* breast **3.** *யானை உணவு,* elephant's food.

அங்கதாரி, *சிவன்,* soul; **2.** *எலும்பு,* bone; **3.** *உடம்பு,* body.

அங்கதி, *வாயு,* wind; **2.** *நெருப்பு,* fire; **3.** *நோய்,* disease.

அங்கத் தளர்ச்சி, *இலேபனக் குறைவு,* want of erectile power; **2.** *உடம்புத் தளர்ச்சி,* bodily relaxation owing to advance age, - Infirmity.

அங்கத் தீ, *உடம்பினுள் காணும் உதராக்கினி,* fire in the stomach Gastric or Digestive fire, see *அக்கினி;* **2.** *உடம்பினில் பரவி நிற்கும் சூடு,* the heat felt through out the system - Animal heat; **3.** *உடம்பினில் பல விடங்களில் உற்பத்தியாகும் சூடு,* the thermogenic heat at the different centres of the body; **4.** *காம வின்பத்தால் உடம்பினில் ஏற்படும் சூடு, காமச்சூடு,* heat arising in the body from excess of passion or love.

அங்கத் துறப்பு, *ஆசனவாய் திறத்தல்,* relaxatioon of the anus; **2.** *உடம்பு திறந்த படி யிருத்தல்,* naked condition of the body.

அங்க நதி, *மூளையின் நீர்,* the cerebro spinal fluid; **2.** *உடம்பினின்று வரும் மூத்திரம்,* urine discharged from the body.

அங்க நியாசம், *(அங்கம் + நியாசம்* - body touching) *உடம்பின் ஒவ்வொரு பாகத்தையும் தொட்டு மந்திரம் சொல்லுதல்,* the mental appropriation of the various parts of the body to tutelary divinities by chanting mantrams and prayers and by touching the several part with sacred ashes. c.f. *கரநியாசம்.*

அங்கந் திறத்தல், *வாந்திபேதி, கிராணி, கழிச்சல் முதலிய நோய்களின் காரணங்களை முன்னிட்டு ஆசனவாய் திறந்து போதல்,* gaping of the anus owing to the relaxed condition of the sphinctre muscles. It is sometimes noticed in cholera, chronic diarrhoea or dysentary.
NOTE:- This condition of the anus is considered a sure symptom of death according to the Indian Medical science.

அங்க பங்கம், *அவயவக் குற்றம்,* defect in the organ of a body; **2.** *அவயவப் பழுது,* mutilation or deformity of an organ; **3.** *வாதத்தால் ஏற்படும் அவயவச் சோர்வு: சோர்வாதம்,* loss of motion in a living part or member - Paralysis.

அங்க பறை நாதி, *இலவங்கப்பட்டை,* sweet bark - Cinnamomum Zeylanicum.

அங்க பாதி, *முடக்கற்றான்,* a plant, palsy curer - Cardiospermum hali cacabum.

அங்க பாலி, *மருத்துவச்சி,* midwi nurse; **2.** *ஓர் பூடு,* a plant - Medica esculenta?

அங்கப்படி *யெலும்பு, குதி சேணத்து அங்கவடியைப் போ விருக்கும் காதின் எலும்பு,* stirrup-shaped bone of the mid ear articulating with the incus. is one of the chains of small bo found in the tympanic cavity - Stap

அங்கப் பயிற்சி, see *அங்கசாதன*

அங்கப் பழுது, *அவயவத்தின் குற்ற* defect in an organ of the bo **2.** *அவயவக்கேடு,* malformation deformity in an organ.

அங்கப் பானை, *இறந்தவரது சாம் எலும்பு முதலியவைகளடங் பானை,* an earthen vessel contai the bones and ashes of the dea

அங்கப் பிச்சு, *உடம்பிலிருக் பித்து,* bile in the system.

அங்கப் பிரளி, *தன் உடம் சுருட்டிக் கொள்ளுந் தன்மையு செந்து, மரவட்டை,* a crea capable of twisting its body in round fold; millepedes - Hydenoca inebrains.

அங்கப் புண், *உடம்பினுறுப்புக ஏற்படும் புண்,* sore or w developed in an organ; **2.** *ஆண் கு*

புண், sore or ulcer on the penis; 3. உடம்பினில் காணும் புண், itches, sore or other wound on the body.

அங்க மண், சவுட்டு மண், a soft friable clay which absorbs grease and is much used in fulling cloth - Fuller's earth.

அங்க மருடம், அவயவ வலி, pain in the limbs; 2. உடம்பு வலி, pain in the body; 3. வாத நோய், pain in the joints.

அங்க மர்த்தன், உடம்பை அமுத்தித் தேய்ப்பவன், a servant who shampooes his master's body Shampooer.

அங்கம், உடம்பின் பாகம், a part of the body; 2. அவயவம், an organ or member of the body with a determined function; 3. அரையின் மேலுள்ள உடம்பின் பகுதி, the portion of the main body without the limbs - Trunk; 4. எலும்புக் கோர்வை, the solid frame-work of mere bones-Skeleton; 5. உடம்பு, body; 6. எலும்பு, bone, 7. கட்டில், cot, bedstead; 8. கொன்றை, common cassia Cassia fistula; 9. மேனியழகு, well-formed • human shape - Symmetry; 10. வைத்திய நூல், medicial science; 11. ஆத்துமா, the soul; 12. கோளகபாஷாணம், one of the 32 kinds of mineral posion; 13. மனம், mind; 14. பத்து, the numeral ten; 15. மூளை, brain.

அங்கம் திறத்தல், see அங்கந் திறத்தல்.

அங்கயற் கண்ணனி, கற்பூர வல்லி, (lit) camphor-creeper or thick-leaved lavender - Amisochilus carnosus alias Lavendula carnosa. It is a common pot-herb used for sore-throat and other ailments. it is also known as 'burrage'.

அங்கரங்கம், உலகவின்பம், worldly pleasures.

அங்காரத்தான், தான்றி, a tree, devils' abode - Terminalia belerica. In Mysore it is known as 'Tari' and hence the botanical name - Myrobalan tarica.

அங்கரமாதி, கௌரி பாஷாணம், a kind of native arsenic - Yellow oxide of arsenic.

அங்கர மோதகி, கரு நாரத்தை, black bitter orange - Citrus aurantium (nigrum). It is a rare fruit with medicinal virtues, found on the hill tops.

அங்கர வல்லி, see அங்கார வல்லி.

அங்கராகம், (அங்கம் + ராகம் = body + Anointing) உடம்பிற்பூசல்,

application of unguents or cosmetics to the body (especially after bath); 2. பூசும்பரிமளம், an external application to the skin of perfumes, scented cosmetics etc.

அங்கராகி, பூசும்பரிமளம், smearing perfumes · Cosmetics. see அங்கராகம்.

அங்கருகம், உடம்பின் மயிர், hair on the body.

அங்க ரூபகம், மயிர், hair.

அங்க லட்சண நூல், உடம்பின் அவயங்களின் அமைப்பு, அழகு முதலான இலட்சணங்களைப் பற்றிக் கூறும் நூல், that branch of science describing the structural beauty, symmetrical disposition of organs and due proportion of the several parts of the body to each other See also சாமுத்திரிகம்.

அங்க லட்சணம், உடம்பினுறுப்புகளின் அழகு, அமைப்பு, திட்டம் முதலியவைகள் அளவாகப் பொருந்திய தன்மை, the structural beauty, and well proportioned organs of the body.

அங்கலாகாசம், மாத்திரைக் கோல், a magic rod or want used by conjurors occultists, seers and other psychologists to effect a cure in diseases or to attain success in any of their attempts.

அங்கலாய்த்தல், ஆவலோடு இச்சித்தல், to desire earnestly or eagerly.

அங்கலாய்ப்பு, பேராசை, greediness; 2. இலகுவில் தீராத ஆசை, desire not easily satisfied.

அங்கலி, ஐவிரலிக் கொவ்வை, Bryony creeper Bryonia laciniosa; 2. முலை, breast.

அங்கவம், பழவற்றல், dried fruit Prune.

அங்கவன், மிருதபாஷாணம், see அங்கணன்.

அங்கவாதம், உடம்பின் உறுப்புகளுக்குக் காணும் வாதநோய், rheumatism or other nervous affection of the limbs or organs of the body; 2. உடம்பையடுத்த வாதம் a constitutional affection of the nerves of the whole body; 3. எலும்பிற்காணு மோர் வாதநோய், neuralgia of the bone Osteoneuralgia.

அங்கவாவகம், உடம்பைப் பிடித்தல் அல்லது தேய்த்தல், shampooing or rubbing the body,

அங்கவிகுருதி, உடம்பினோய், disease of the body; 2. உடம்பினுறுப்புகளின் நோய், disease of an organ in the body;

3. உடம்பின் மாறுபாடு, change of appearance in the body, as in collapse, fainting, apoplexy etc.

அங்க விகிர்தம், அங்கக் குறைவு, defect in an organ; **2.** உடம்பின் வேறுபாடு, structural changes of the body or its parts.

அங்கவியல்பு, see அங்க விலக்கணம்.

அங்கவிலக்கணம், உடம்பின் தன்மை முதலிய குணாதிசயங்கள், the natural disposition or other distinguishing characteristic features of the body or its parts.

அங்கவீனன், உடம்பினுறுப்பிழந்தவன், one deprived of an organ or organs in the body. See அங்கஹீனன்.

அங்களி, see அங்கனி.

அங்கனம், கடுக்காய் மரம். Indian gall nut tree Terminalia chebula. see அங்கணம்.

அங்கனி, கற்றாழை, Common aloe Aloevera (officinalis),

அங்கனைப்பால், பெண் பால் அதாவது முலைப்பால், woman's breast milk.

அங்கா, வாய் திறப்பு, as in கொட்டாவி, opening the mouth, as in yawning.

அங்காகமம், மதனநூல், an erotic science; **2.** கொக்கோம், a scientific treatise on sex and sexual enjoyments.

அங்காகருஷ்ண, வலிக்கிற அல்லது இழுக்கிற, characterised by convulsion or spasm Spasmodic.

அங்காகருஷண நாசசாரி, இழுப்பைக் கண்டிக்கும் மருந்து, an agent allaying or relieving convulsions or spasmodic pains, as narcotics, nitrites etc.

அங்காகருஷணம், அவயத்தை இழுத்தல், contraction of a limb; **2.** இழுப்பு contracture of a limb, as in paralysis; **3.** வலிப்பு, convulsion.

அங்காகருஷண வாதம்; (அங்க + ஆகருஷணம்) நாக்குப் போன்ற அவயவத்தை உள்ளுக் கிழுக்கு மோர் வகை வாத நோய், a kind of paralysis in which organs like the tongue etc, are drawn in.

அங்காங்கம், உபாங்கம், anxilliary or secondary organs.

அங்காதிபாத சாஸ்திரி, உடற்கூறு பயின்றோன், one whois versed in the doctrine and principles of anatomy; one who has studies the structure of the body by dissection Anatomist.

அங்காதி பாதம், உடம்பினுள் இந்திரியக் கருவிகளின் கட்டுப்பாட்டு வியக்கங்களையும், தொழிற்களையும் அவைகளினுபயோகங்களையும், கருவிகளின் உயிர்ப்பு, வளர்ச்சி, இறப்பு முதலியவைகளையும் பற்றி கூறுமோர் வைத்திய நூல். The medical science which treats of the structure, phenomena and the functional activities of the living organism and its parts, as also of the general laws of living and the growth and death of the living bodies, as learned by dissection - Anatomy; **2.** முழு வுடம்பு, the body as a whole,

அங்காத்தல், கொட்டாவி விடல், to have the mouth open involuntarily through drow. sines - Yawning; **2.** வாய் திறத்தல், opening the mouth.

அங்காப்பு, வாய் திறப்பு, opening of the mouth; **2.** அண்ணாந்தல், gaping, looking upwards; **3.** கொட்டாவி, yawn; **4.** தாகம், thirst.

அங்காரக மணி, பவளம், coral; **2.** இரத்தினம், ruby.

அங்காரகம், பிருங்கராச மென்னுமோர் படர்கொடி, அதாவது கையாந்தகரை, a spreading creeper; white or yellow amaranthes - Verbesina calendulacea alias Eclipta prostata; **2.** கரிசலைத் தைலம், a medicated oil prepared by boiling the expressed juice of the said plant with turmeric and some other vegetable substances; **3.** கரி, Charcoal.

அங்காரகன், நெருப்பு, fire; **2.** சிவந்த நிறமுத்து, pearl of a pink colour.

அங்கார தாளிகை, சூட்டடுப்பு, an earthenware portable heating apparatus for baking, used in an Indian house hold; **2.** நெருப்புச் சட்டி, கணப்புச் சட்டி, fire-pot.

அங்கார பரிபாசிதம், பொரித்த கறி, fried curry.

அங்கார மஞ்சரி, கழற்சி, a plant - Caesalpinia bonducella.

அங்காரமாதி, கெவுரி பாஷாணம், see அங்கரமாதி.

அங்காரம், கரி, charcoal; **2.** நெருப்பு, fire.

அங்காரன், see அங்காரகன்.

அங்கார வல்லன், குறிஞ்சா, scammony swallow-wort - Secamone emetica.

அங்காரவல்லி, சிறு தேக்கு, blue flowered saw-leaved Glory tree - Cleodendron sphoenanthes; **2.** குறிஞ்சா, green wax flower -

Secamone emetica; **3.** *பெருங்குமிழ்*, a plant Galedupa arborea; **4.** *கஞ்சா*, gunjah - Cannabis sativa.

அங்கார வாயு, *திணர்வாயு*, noxious suffocating gas like that in wells, pits, mines etc - Chokedamp.

அங்கார வாரிதி, *கையாந்தகரை*, a medicinal plant known as white amaranthus - Eclipta prostata.

அங்காரி, *வெண்காரம்*, borax - Sodium biborate; **2.** *நெருப்புச் சட்டி*, a portable firepot. 'See *அங்கார தாளிகை*.

அங்காரிகம், *கரும்புத் தண்டு*, the stalk of the sugar cane; **2.** *பலாசு*, the bud of *கிஞ்சுகம்* - Butea frondosa.

அங்காரிகை, *கரும்பு*, common sugar cane - Saccharum officinarum; **2.** *நன்னாரி*, Indian sarasaparilla - Hemidesmus indicus alias Periploca indica alias Asclepias pseudo-sarsa.

அங்காரித, *சுட்ட*, charred; **2.** *எரித்த*, burnt;

அங்காரிதம், *ஓர் கொடி*, a creeper; **2.** *பலாசு*, the early blossom of *கிஞ்சுகம்*, -Butea frendosa.

அங்காணுகூல, *உடம்பிற்குத் தகுதியாக*, agreeable to the body.

அங்கானு லேபனம், *(அங்க+அனுலேபனம்) உடம்பிற் பூசுதல்*, anointing the body.

அங்கி, *எலும்பு*, bone; **2.** *சடராக்கினி*, gastric fire; **3.** *நெருப்பு*, fire; **4.** *சாதிலிங்கம்* red sulphide of mercury - Cinnabar; **5.** *கவசம்*! (a) a layer covering a surface (b) (In medicine) a thin external coat of clay over the surface of a vessel containing medicine (c) anything hermetically sealed, to prevent escape, of air, gas or spirit - Lute.

அடைக்காய், *பாக்கு,* areca-nut.

அடைக்குஞ் சவ்வு, *மூடு சவ்வு,* a door-like contrivance to regulate the blood circulation - Valve.

அடை சீலை, *காரச்சீலை,* a corrossive plaster used for abnormal or morbid growth of flesh or in sores; **2.** *பாழச்சீலை,* lint; **3.** *மருந்துச்சீலை,* plaster; **4.** *புண்ணின் வாயில், மருந்திட்டு அடைக்கப்பட்ட சீலை,* cloth soaked in medicine and plugged as is done to the mouth of a sinus - sore.

அடைசு பொட்டணம், see *அடைசீலை.*

அடைசு மருந்து, வாய் ரணத்திற்காகக் கொப்புளிக்கு மருந்து நீர், any liquid preparation for washing the mouth and the throat - Gargle.

அடைத்த குரல், கம்மிய குரல், a hoarse voice, as when affected with cold etc.

அடைநிலப் பீர்க்கு, see அதளை.

அடைந்தெழுந்திடுதல், கண்ணீல் நீர் வடிந்து, விழிகடுத்து, இமைகள் வீங்கிக் கண் சிவந்து, எரிச்சலுண்டாகிப் பீளைகட்டும் ஓர் நோய், அன்றியும், பூச்சி ஊர்வது போல் அரிப்புண்டாக்கி மூக்கில் நீர் வடிவதுடன் அடுத்தடுத்து வலியையும் உண்டாக்குமென்பர், a kind of ophthalmia characterised by itching sensation, water running through the nose and intermittent pain in the eyes.

It is usually attended with mucopurulent discharge, irritation of the eyes, swelling of the eyelids, etc.

அடைபட்ட, தடைப்பட்ட, obstructed; 2. ஊடுருவிச் செல்லாத, imperforate.

அடைப்பம், அடைக்கும் வஸ்து, a stopper or a plug.

அடைப்பன், கடுக்காய், Indian gall nut Terminalia chebula; 2. மாடுகளுக்குத் தொண்டையில் வரும் ஓர் வெக்கை நோய், an inflammation of the throat or parts adjacent to it, a common disease in cattle - Anthrax.

அடைப்பன் கட்டு, ஆடு மாடுகளுக்குண்டாகுமோர் வகை வெக்கை நோய், a splenic fever in sheep and cattle caused by minute organisms introduced into the blood-Malignant anthrax; 2. ஆடு மாடுகளின் அடப்பன் கட்டு நோவினால் மனிதர்களுக்கு முண்டாகும் தொண்டையடைப்பு, a malignant pustule caused in man by infection from the animals so affected - Contagious anthrax.

அடைப்பான், See அடைப்பன்.

அடைப்பான் வந்தை, அடைப்பன் நோயையுண்டாக்கும் பூச்சி, germs bringing about anthrax - Bacillus anthrasis.

அடைப்பு, அடைக்க ஏற்பட்டது அதாவது மூடி, that which serves to close the way or obstruct a flow as in done by a plug or a cork; . அடைத்தற்றொழில் as in காதடைப்பு, blocking up as of or as is done to, a way or passage; 3. தடை, obstruction; 4. துவாரத்தை மூடுகை, closing, as of a hole; 5. அவயவத் தடை அதாவது மலம், யோனி, செவி, கண் முதலான துவாரங்களில் ஏற்படும் தடை (In Pathology). Imperforation purely congenital of anormal opening or canal as of the anus, vagina, meatus, auditorius, pupil etc - Atresia.

NOTE:-Even the blocking up of organs due to various disease come under this group. e.g. Bladder in கல்லடைப்பு, intestinal canal, in குடவடைப்பு, heart, in மாரடைப்பு, and so on. Atresia of the anus and the uterus may also be included in this.

அடைப்புக் குச்சு, தக்கையைப் போன்றது, cork; 2. குப்பி முதலானவைகளுக் குப்யோகிக்கும் மூடி, a stopper.

அடைப்புக் குழல், குழாயின் வழியாய் வரும் தண்ணீர் முதலிய திரவ வஸ்துக்களை நிறுத்த உபயோகிக்கும் ஓர் வகைத் திருப்பு மூடி, a turning cock used to stop or regulate the flow of water or other liquids, and gases - Stopcock.

அடை மண், வண்டல், மண், settled mud i.e., alluvial deposit; 2. ஆறு, ஏரி, கடல் இவைகளினின்றும் நீர் ஓடுவதாலும் அல்லது வழிவதனாலும் படிந்த மண், deposits formed by the overflowing of water in rivers, lakes and seas; silt 3. பொருக்கு மண், sand and clay mixed with gravel and pebbles; 4. களி மண், clay; 5. மணல். sand.

அடை மாங்காய், உப்பிட்டுக் காய வைத்த மாங்காய், salted mango dried up; 2. மாங்காய் ஊறுகாய், mango-pickle.

அடையங்கம், உளுந்து, black gram - Phaseolus radiatus.

அடையல், திரவம் தெளிதலினாலுண்டான வண்டல், a substance deposited fromm a liquid in which is had remained suspended - Precipitate.

அடையன், see அடைப்பன்.

அடையாளம், நோய் முதலியவைகளின் குறி, symptoms, such as those of diseases; 2. காயக் குறி, a scar.

அடையோடுறுதல், ஓர் வகைக் கண்ணோய் a kind of eye-disease?

அடைவாக வுண்ணல், நடுவில் விடாதபடித் தொடர்ச்சியாய் மருந்துண்ணல், taking medicine continuously.

அடைவிச் கச்சோலம், கஸ்தூரி மஞ்சள், round Zedoary, yellow Ledoary - Curcuma Amada. See அடவிக் கச்சோலம்.

அடைவு, முறை, order; 2. ஆம்பல், water lily - Nymphaea edulis.

அடை வைத்தல், அடை கார்க்கும்படிக் கோழியை விடுதல், to set a hen on eggs.

அட்சத்தி, *திப்பிலி,* long pepper - Pipe longum.

அட்சதரோகம், நகச்சுற்றுண்டாகி நகத்தின் வேரைக் கெடுத்து அந்த நகம் விழுவதற்கு முன்னமே மறு நகத்தை முளைக்கச் செய்யுமோர் நோய். இதற்கு வடமொழியில் உபநகரோகம் என்று பெயர், an inflammation of the bulbous ends of the fingers affecting the root of the nail. A fresh nail crops up before the original one is shed; - Whitlow.

அட்சதை. *முழுவரிசி,* unbroken rice; 2. *பொரியரிசி,* fried rice.

அட்சமணி, *உருத்திராட்சம்,* bead sacred to Siva - Eleocarpus ganitus.

அட்சம், *அட்ச மணி,* which see; 2. *வெங்காயம்,* onion; 3. *கண்,* eye; 4. *தான்றி,* devil's abode - Terminalia bellerica; 4. பூண்டின் பெயர்களில் விதையைக் குறிக்கக் கடை மொழியாக வரும் சொல் *(உ-ம்)உத்திராட்சம், கோகிலாட்சம்,* etc. In the name of plants, it is a termination showing the seed, as in Eleocarpus, and Coix barbata.

அட்சயம், *கல்லுப்பு,* common salt dug out from the bed at the bottom of the sea.

அட்சய ரசம், கொங்கணவர் வாத காவியம் *3000-ல்* சொல்லியுள்ள *10* வகை ரசக் குளிகைகளிலொன்று, இது சாரணைக் குதவும், இதைப் பதினொரு தடவை விடு வித்தாக்கால் அட்ட மாசித்தி யாடலாம். பூரணத்திற் சென்று நிலைக்கலாம், திரும்பலாம். இதன் பெருமை அடியிற் கண்ட செய்யுளினால் விளங்கும்.

"ஓடலாம் அட்சய மாம் ரசத்தைக் கேளு
உத்தமனே பதினொறுக்கால் விடுவித்தாக்கால்
ஆடலாம் அஷ்டமா சித்திபெட்டும்
அணிமாவும் கரிமாவும் வகிமாவோடு
தேடலாம் மகிமாவும் பிராத்தியோடு
சேர்ந்தபெட்டு மாடலாம் செப்பக்கேளு
நீடலாம் பூரணத்திற் சென்று புக்கி
நிலைக்கலாம் திரும்பலாம் நீங்கள் கேளே

one of the 10 kinds of mercurial pills described in Konganavar's work on Alchemy. It can be animated as per process laid down therein and if this is donw eleven times, one can succeed in the performance of 8 kinds of miracles (vide *அஷ்டசித்தி).* this pill will also enable him to absorb himself into the Absolute and return to his orginal state at pleasure, as explained in the above stanza.

அட்சய வடம், பூர்வகாலத்தில் கயையிலிருந்த அழகிய ஆலமரம், undecaying Banyan the name of a very ancient sacred tree that was in Gaya.

அட்சரச முத்தி பலம், விளா, wood-apple-Feronia elephantum.

அட்சரத் துடையான், ஈ fly

அட்சர போளம், *கரிய போளம்,* black myrrh - a black substance extracted from aloes and dried up.

அட்சரப் புல், *பீளசப்புல்,* a kind of grass - Panicum Dactylon.

அட்சர மாந்த சுரம், குழந்தைகளுக்கு அசீரணத்தால் வாயில் அட்சரம் பொங்கி அதன் காரணமாய் ஏற்படும் காய்ச்சல், a kind of frver common in children, causing inflammation of the mouth and ulcers on the lips and the tongue. It generally arises from indigestion. Aphthous fever - Febris apthosa. See *அக்கரக் காய்ச்சல்.*

அட்சர மாந்தம், குழந்தைகளுக்கு எலும்பில் களலேறிக் குளிர் சுரம் கண்டு, உடல் மெலிந்து, வாய் உதடு புண்ணாகிப் பேதியையுண்டாக்கு மோர் வித மாந்த நோய், a form of stomatitis marked by cold, fever, ulcers on the lips, and diarrhoea. It is due to the absorption of heat in the system by the bones - Thrush. See *அக்கரப்படுவன்.*

அட்சரம், நாக்கு வெடிப்பு, crack in the tongue; 2. *மந்திர வெழுத்து,* magic letters; 3. நாக்கு முற்றிலும் வெதுப்பினாற் சிவப்பாகி ஆங்காங்கு சிறு சிறு கொப்புளங்களை யுண்டாக்கி நாவில் மழுங்கிய முள்ளுகளைப் பரப்பியது போற் காணப்படும் மோர் நோய். இது நாபி, கழுத்து குடல் முதலியவைகளிலும் பிறக்கும், an inflammation of the mouth characterised by painful shallow ulcers on the tongue that render its surface uneven - Stomatitis.

It may also arise in the stomach throat, the intestines etc.

NOTE: இவ்விதக் கொப்புளங்கள் அடியிற் கண்டபடியும் வேறு காரணங்களினாலும் ஏற்படலாம். Similar ulcers may also be produced from other causes in several organs as mentioned below.

1. *வாயினுட் சவ்விற் காணும்* the formation of small superficial ulcers on the mucous membrane of the mouth - Apthous stomatitis.

2. *இரசகந்த பாஷாண மருந்துகளினால் ஏற்படும்,* ulcerous stomatitis due to mercurial, supphuric or arsenical poisoning - Mercurial or Arsenicalis stomatitis.

3. *காயம், உஷ்ணம் அல்லது மருந்துச் சரக்கு வகைகளினாலுண்டாகும்,* tha

which is due to some mechanical, thermal or chemical cause Stomatitis traumatica.

NOTE: 2 It may also be found in diphtheria, tuberculosis, syphilis, sprue, uremia, scurvy and other diseases.

NOTE 2 It may appear in several forms such as:

1. simple and uncomplicated inflammation and redness of the mouth Catarrhal stomatitis.

2. Stomatitis with fever transmitted from an animal Epidemic stomatitis.

3. Gangrenous sore mouth Noma or Gangrenous stomatitis. See also அக்கரம்.

அட்சர ரேகை, மண்டையின் பின் புறத்தில் குறுக்காக வோடுமோர் எலும்புப் பொருத்து, a suture running across the skull on its back portion Lamboid suture.

அட்சர வகுப்பு, வாயிலுண்டாகும் கொப்புளங்களின் பல வகைகள், different varieties of stomatitis. See notes under, அட்சரம்.

அட்சர விருட்சத்தி, பலா, jack tree Artocarpus integrifolia.

அட்சாரம், காரமின்மை, absence of alkali.

அட்சி, கண், eye; **2.** உடம்பின் சில திறந்த பாகங்களைப் பரிசோதிக்கும் கண்ணாடி, an instrument for examining certain openings in the body Speculum.

அட்சிகம், ஓர் மரம், dalbergia tree.

அட்சி கோபம், கண் சிவப்பு, inflammation of the eye..

அட்சி கோளம், கண் விழி, eye-ball.

அட்சி பாகம், கண் இரைப்பையின் அழற்சி, இதில் வீக்கம் இருந்தாலும் அல்லது இல்லாமலு மிருக்கலாம், an inflammation of the eye-lid with or without any local swelling. **2.** சாதாரணக் கண்ணோய், ordinary inflammation of the eyes Ophthalmia.

அட்சி தாரை, கருவிழி, pupil of the eye.

அட்சி படலம், கண்ணின் தோல், coat of the eye.

அட்சி பந்தம், கண்ணோயில் கட்டும் கட்டு, bandage for the eyes in eye-diseases; **2.** கண்கட்டு வித்தை, a kind of illusion in magic; **3.** கண்ணைக் கட்டல், binding the eyes.

அட்சி புருவம், கண் புருவம், eye-brow.

அட்சி லோமண், கண் மயிர், eye-lash.

அட்சி தர்ப்பணம், கண்ணில் துளித் துளியாக விடும் மருந்து, A fluid medicine to be dropped into the eye - Eye-drops.

அட்சி பாகத்தியம், கண் சிவந்து கருவிழியில் காணுமோர் வகைக் கண்ணோய். இதனால் கருவிழியில் வெண்ணிறச் சதை படர்ந்து மூடிக்கொள்வதுடன், குத்தலும், வலியும் காணும். இது திரிதோஷங்களினா லுண்டாகுமெனக் கொள்ளப்படும். The appearance of a whitish milky film over the black of the eye slowly but completely shrouding it with its mass and attended with acute pain. This is due to the concerted action of the three Doshas in the system-

அட்சி பாகாத்திய ரோகம், கண்கள் வீங்குதல், கலங்கல், நீர்க் கம்மல், பீளை வடிதல், கருவிழி வெள்விழி சிவத்தல், எரிச்சல், அடிக்கடி வலியுறல், ஆகிய குணங்களை யுண்டாக்கிப் பார்வையைக் கெடுக்குமோர் கண்ணோய், a disease characterised by inflammation, swelling burning sensation, mucopurulent discharge and frequent pain. It destroys the eye-sight in the end.

அட்சீபம், மாமரத்திலோர் வகுப்பு, a species of mango tree; **2.** முருங்கை; drumstick tree - Moringa pterygosperma.

அட்ட கசம், ஆடாதோடை, இதை வேலிகளில் சாதாரணமாய்க் காணலாம். Malabar nut tree, Justicewort - Adhatoda vasica. It is a medicinal shrub commonly found in all hedges in S. India.

அட்ட கணம், எட்டுவிதக் கணரோகம், அவையாவன;- சூலிகுணம், முக்குக்குணம் or (மூலக்கணம்), ஆமக்கணம், தேரைக்கணம், மகாகணம், கழிக்கணம், கழிகணம், வறட்கணம், A disease in children similar to tabes with progressive wasting of the body or a part of it. It consists of eight kinds, as enumarated above. See கணரோகம், and foot - note under அக்கர கணரோகம்.

அட்ட கனி, see அட்டகசம்.

அட்டகத்தாதி, சிவப்புச் சக்கரை வள்ளி, red sweet potato; Panicled Batatas - Ipomaca digitata alias Convolvulus Batatas.

அட்டகந்தம், எட்டுவித வாசனைத் திரவியங்கள், eight kinds of perfumes viz;-
1. சந்தனம், Sandal; 2. அகரு,

Agallochum; *3.* **கஸ்தூரி,** musk; *4.* **பச்சைக் கருப்பூரம்,** Crude Camphor; *5.* **பச்சிலை,** Acheon leaf; *6.* **குங்குமப்பூ,** European saffron; *7.* **விலாமிச்சை,** Kus Kus; *8.* **கோஷ்டம்,** Costus.

அட்டகம், வசம்பு, sweet flag - Acorus calamus; *2.* **எட்டெண் தொகுதி,** a collection of eight; *3.* **புரியட்டகம்,** In Siddhars's philosophy)the three psychophysical centres within the human system viz. *(அனாகதம்)* the cardiac plxus, *(விசுத்தி)* the Carotid plexus and *(ஆக்கினை)* the medulla oblongata together with the five psycho-astral centres above the human body viz. Natham, Vindhu, Sakthi, Sivan and Parai forming in all, the eight centres converging the dynamic forces of Prana responsible for the death of human beings.

So any one who reaches by concentration beyond these 8 centres constituting the moral zone, averts death and becomes immortal. For details see under *புரியட்டகம்.*

அட்டகம்பப் பாவை வழலை, an efflorescent salt obtained from the soil of fuller's earth.

அட்டக ராசி, சிறு சிமிட்டி, an unidentified plant?

அட்ட கருமக் கரு, எட்டு வித மாந்திரீகத் தொழில்களில் உபயோகிக்கும் கரு மருந்து, a black magical paint consisting of roots, plants, bones, skin etc. as ingredients. It is used for attaining success in the practice and performance of the eight kinds of black-magic.

அட்ட கரும சித்தி, எட்டுவித மாந்திரீகத் தொழில்களினாலடையும் சித்தி, an accomplished success derived from the practice of the eight kinds of magic; success in Witchery.

அட்ட கருமப் பலகை, எண்வகை மாந்திரீகத் தொழில் புரியுங்கால் ஒவ்வொரு தொழிலுக்கும் தக்கபடி உபயோகிக்கும் வெவ்வேறு மரங்களாற் செய்த உட்காரும் மனைகள். இம்மனைகள் மீதிருந்துதான் மந்திரம் செபிக்க வேண்டும். eight sitting planks made of different kinds of wood and used while chanting mantrams in the performance of the eight 'kinds of magic. They are respectively used according to teh prescribed rules of Mantric science (see *கருரார் அஷ்டமா சித்தி).*

அட்ட கரும வித்தை, பஞ்சாட்சரத்தின் மாறலினால் செய்து முடிக்கும் எட்டு வகை மாந்திரீகத் தொழிலையடுத்த அசாத்திய காரியங்கள், அவையாவன:- (in Mantric science) the eight kinds of supernatural powers attained by one as a result of the performance of the following eight kinds of magic according to the permutations and combinations of the five sacred letters *(ந.ம.சி.வ.ய.)* known as Panchakshara and thye are:-

1. **ஆக்கருடணம்,** invoking a spirit by means of incantations.

2. **உச்சாடணம்,** the expulsion of evil spirits by adjurations and ceremonies - Exorcism.

3. **பேதனம்,** causing seperation, dissention, discord etc. in a family or among friends.

4. **மாரணம்,** causing death by magic spell or sorcery.

5. **மோகனம்,** power of enchanting.

6. **வசியம்,** getting a person into one's power.

7. **வித்து வேடணம்,** causing enmity or hatred.

8. **தம்பனம்,** suspending the natural functions such as (1) stopping or restraining the power or action of fire (2) stopping the flow of water or blood (3) depriving one of the power of speech, action or mortion (4) checking the ferocity of wild beasts, etc.

அட்டகவுடலம், புரியட்டகம், see **அட்டகம்.**

[அ]ட்டகாசம், see **அட்டகசம்.**

அ[ஸ்]டகிராம், மைசூரில் இருக்கும் [அஸ்]பகாவிலிருந்து வருமோர்வித [வெ]ள்ளை மணற் சர்க்கரை, a granulated white sugar exported from Aska in Mysore.

அட்ட கீடம், எட்டு வகை விஷ செந்துக்கள், அவையாவன;- ஒணான், தவளை, அடவி ஈ, வீட்டுப்பல்லி, காட்டுக் கொசு, குளவி, மலைக் கட்டெறும்பு, சிலந்திப் பூச்சி, the eight kinds of poisonous creatures, and they are:- blood sucker, frog, jungle-fly, house-lizard, malarial mosquito, wasp, stick-ant and the spider.

அட்ட குட்டம், எட்டு வகையான குட்டரோகம், அவையாவன, the eight kinds of leprosy viz.

1. **கருங்குட்டம்,** black leprosy a disease of the skin associated with very dark shots of pigmentation - Macula nigra.

2. **இரணக்குட்டம்,** Macula lata plateri;

3. **வெண்குட்டம்,** White leprosy - Muculae albidae Lepra alba or albida.

4. **செங்குட்டம்**, ciopper stain of the skin - Macula syphilitica.

5. **கிருமி குட்டம்**, leprosy infested with parasites - Macula cerulea.

6. **நீர்க்குட்டம்**, leprosy with discharge of bad fluid.

7. **விறற் குறை குட்டம்**, - Lepra mutilens.

8. **சொறி குட்டம்**, Eczematous psoriasis - Lepra -itchthyosis.

அட்டகுல செல்வம், see **அட்டசித்தி**.

அட்ட குவடு, *திராமலை*, a mountain containing a mineral called thara (copper and spelter).

அட்டகுறி, நோயாளிக்குச் சிகிச்சை செய்வதற்கு முன் வைத்தியர்கள் கவனிக்க வேண்டிய எட்டுவித அடையாளங்கள், eight different kinds of tests to he applied or attended to by a physician before arriving at a correct diagnosis. See அட்டமக்குறி.

அட்ட குன்மம், செரியாமையினாலெழுந்த எட்டு வித குணங்களுடைய குன்ம நோய்கள். அவையாவன; எரி, சத்தி, சன்னி, சிலேத்துமம், சூலை, பித்தம், வலி, வாதம், the eight kinds of indigestion or dyspepsia characterised by (1) burning sensation, (2) vomiting (3) fever followed by delirium, (4) phlegm (5) biliousness (6) piercing pain as in colic etc. (7) convulsion and (8) rheumatism or other nervous affections.

அட்டகுன்மலேகியம், வயிற்று நோய், வயிற்றுப் பிசம், செரியாமை, முதலிய எட்டுவகை நோய்கள் தீருவிதற்காக, அகஸ்தியர் வைத்திய காவியம் 1500-ல் செல்லியுள்ளபடித் தயாரிக்குமோர் வகை லேகியம், an electuary prepared as per process laid down in Agastya's work (1500) on medicine. It is prescribed for eight kinds of dyspepsia such as, colic; tympanitics, indigestion.etc.

அட்ட கோணம், *பூரகம்*, Yogi's method of scientific inhalation; **2.** எட்டுக் கோணமுள்ள மந்திர சக்கரம், an octagonal diagram used in magic.

அட்டக்கரி, *மிக்கக் கறுப்பு*, jet black, said of a persons's complexion.

அட்டக்காய், *சாதிக்காய்*, nutmeg - Myristica fragrans.

அட்டசாந்தி நெய், எலும்புருக்கி, சயம் பெரும்பாடு, முதலிய எட்டு வகை நோய்களுக்குக் கொடுக்கும் மருந்து நெய், இதன் முறை அகத்தியர் வைத்திய காவியம் 1500-ல் சொல்லப்பட்டுள்ளது, a medicated ghee prepared by boiling several drugs in cow's ghee, as contemplated in Agastyar's work (1500) on Medicine. It is prescribed for eight diseases viz. Tuberculosis of the bone, consumption menorrhagia etc.

அட்டசார நிகண்டு, தேரையர் செய்த ஓர் தமிழ் வைத்திய நூல், a medical treatise compiled in Tamil by Terayar.

அட்ட சித்தி, யோக மார்க்கத்தை அனுசரித்த சித்தர்கள், அடையும் எட்டுவித சித்திகள், (பலன்கள்) அவையாவன, the eight kinds of Siddhis or super human powers attained by Siddhars addicted to Yoga practice and they are:

1. அணிமா - அணுவாகுதல், the faculty of reducing oneself to the size of an atom.

2. மகிமா - பெரிதாதல், the power of increasing one's bulk without limit.

3. கரிமா - பாரமாகுதல் அல்லது சூக்குமமாகுதல், the power of increasing one's weight or disintegrating the atoms of the body and enabling it to pass through more solid matter.

4. இலகிமா - இலேசாகுதல், becoming very light like feather Levity.

5. பிராத்தி - விரும்பியவற்றை அடைதல், the power of attaining everything desired.

6. பிராகாமியம் - இயற்கைக்கு விரோதமாக விரும்பிய விடத்திற்குச் செல்லல், the power to overcome natural obstructions and go any where.

7. ஈசத்துவம் - முத்தொழிலியற்றல், supreme domination over animates and inanimates in nature i.e., power to create, preserve and destroy.

8. வசித்துவம் - யாவற்றையும் தன் வசப்படுத்தல், இயற்கையை மாற்றிக் கோரிய வடிவ மாதல், power of changing the course of nature or assuming any form in creation.

அட்டசித்துக் குளிகை, அட்டமா சித்திகளை யாடுவதற்கு ஆதாரமாகச் சித்தர்களுபயோகிக்கும் சாரணை தீர்க்கப்பட்ட ஓர் இரசக் குளிகை, a kind of mercurial pill sufficiently animated and used by Siddhars with a view to help them in exercising the eight super-human powers attained hy them.

அட்ட சூரணம், திரிகடுகு, பருத்தி வதை, கழற்சிப் பருப்பு, பெருங்காயம், வளையலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, கருவேம்பு ஆகிய எண்வகைச் சரக்குகள் சேர்ந்த மருந்துப் பொடி. இதை எல்லாவித வாயுக்களுக்கும் அனுபானம் கண்டு

கொடுக்கக் குணமாகும், a powdered mixture consisting of 8 drugs viz. 1. traid (of dry ginger, pepper and long pepper); 2. cotton seed; 3. bondue seed; 4. asafoetida; 5. glass gall (fel vitriol) 6. rock-salt; 7. seasalt; 8. black neem.

This is a good remedy for all kinds of rheumatic affections and other disorders of Vayu, if given mixed in proper mediums such as honey, ghee etc. as prescribed.

அட்ட சூலை, எட்டு விதச் சூலை நோய், eight kinds of diseases characterised by piercing or darting pain. It takes its name from the organ affected; 2. **மல வாயில் கடுத்து, நீர் துளித்துளியாய் விழுமோர் சூலை நோய்,** a servere darting pain in the rectum attended with the passing of urine in drops. See **அஷ்ட சூலை.**

அட்ட தந்திர வாதம், உணர்ச்சியற்று, வாய் நீர் கசந்து, பற்கிட்டி, மூச்சற்றுப் பிணத்தைப் போற் கிடக்கச் செய்யு மோர் வித வாத நோய், a nervous affection marked by loss of consciousness, bitter taste, lock jaw, breathlessness, and prostration - Asthenia.

அட்ட தளம், எட்டு இதழ்களையுடைய தாமரைப் புட்பம், a lotus flower with eight petals.

அட்டதற்கம், இலவங்கப்பூ, the flower of the clove tree - Carophyllum aromaticus.

அட்டதா, எட்டுப்பிரிவு, eight sections or divisions; 2. **எண் மடங்கு,** eight times.

அட்ட தாதிகம், சிறு கொன்றை, small-leaved cassia - tree - Cassia fistula.

அட்ட தாது, எண் வகை உலோகம், அவையாவன, வெள்ளி பொன், செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம், the eight kinds of minerals such as gold, silver, copper, iron, bell-metal, the dark metal (of copper and spelter), lead or tin and Zinc.

அட்டதாய், சரமூலம், கொடி வேலி, எருக்கு, நெருஞ்சில், மாவிலங்கு, முதலிய தாயைப் போன்ற எண்வகை மூலிகைகள், the eight kinds of mother drugs such as Laburnam, Lead wort. Mudar, Caltrop, garlic pear, etc.

அட்டதானப் பரிட்சை, வைத்தியர்கள் நோயாளிகளைப் பரீட்சிக்கும் போது நாடி, முகம், மலம், அமுரி, கண், நாக்கு, உடம்பு, தொனி முதலியவைகளைக் கவனித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள், the examination of a patient in the following eight points

with a view to correct diagnosis namely pulse, facial expression, stool, urine eyes, tongue, the body in general and the voice - Objective signs.

அட்டதானம், உடம்பிலுள்ள எட்டு இடங்கள், the eight situtations in the body, viz, pulse, face, feces, urine eye, tongue, body and voice.

அட்ட திசம், அட்டதிசை, எருக்கு, a milky shrub, Swallow-wort - Calotropis gigantea.

அட்ட திசை மூலம், எருக்கம்வேர், the root of **எருக்கு,** see **அட்டதிசை.**

அட்டதிசை மூலி, எருக்கிலை, the leaves of the shrub, swallow wort - Calotropis gigantea.

அட்ட திசை ரசம், சுத்த ரசம் அதாவது எருக்கம் பால், the milk of the swallow wort.

அட்ட தீரசம், அரப்பொடி, iron flings.

அட்ட தேறல், காய்ச்சின சாராயம், distilled arrack.

அட்ட நவ கண்டம், பழு வெலும்பு, rib bone.

அட்ட பரிசம், see **அட்ட மெய்ப் பரிசம்.**

அட்ட பாதம், எட்டுக்கால், பூச்சி, any eight legged insect; 2. **சிலந்திப் பூச்சி,** the spider, See. **அட்டாபதம்.**

அட்ட பிரமி, பெரும் பிரமி, a large species of **பிரமி,** a plant - Gratiola monieri.

அட்ட புகைச் சொல், கோரோசனை, a concretion found in the stomach and the intestines of some animals such as cow etc - Bezoar.

அட்டபுட்பம், எண் வகைப் பூக்கள், the eight kinds of flowers used in daily worship. They are:

1. **புன்னை,** Alexandreian laurel Calophyllum inophyllum.

2. **வெள்ளெருக்கு,** white flowered Giant swallow wort Calotropis gigantia (albiflora).

3. **சண்பகம்,** Golden flowered Champak or Indian magnolia Michelia Champaca.

4. **நந்திய வர்த்தம்,** Common wax flower; Dogbane Tabernaemontana Coronaria.

5. **பாதிரி,** Yellow flowered Fragrant Trumpet flower Stereospermum chelonoides alias Bignonia Siuaveolens.

6. நீலோற்பலம், blue water-lily-Pontederia alias Nymphoea Stellata.

7. அலரி, Indian oleander Nerium odorum.

8. செந்தாமரை, Red lotus Nelumbium speciosum.

அட்டமக சித்துக் குளிகை, எட்டுத்தரம் சாரணை தீர்ந்த கசன ரசக் குளிகை, a mercurial pill animated eight times and endowed with the power of taking one through the etheric region.

அட்டமகா ரோகம், ஜபம், தபம், ஓமம். இவைகளினாலன்றி மருந்துகளினால் எளிதில் தீராதென்றறிந்து ஆயுள்வேத பண்டிதர்களினால் மகாரோகங்களென வரையறுக்கப்பட்டுள்ள எண் வகை நோய்கள், அவையாவன, வாதம், கல்லடைப்பு, குட்டம், மேகம், மகோதரம், பவுத்திரம், மூலம், கிராணி, the eight kinds of diseases declared in Ayurveda to be incurable, unless by spiritual means such as, meditation, devotion or prayers, sacrificial fire etc. and thy are:

Bhuematism, stone in the bladder, leprosy, diabetes, or other urinary commplaints, drospy, fistula, piles, and chronic dysentery. See அசாத்திய ரோகம்.

அட்டமக் குறி, நோயாளிகளிடம் கவனிக்க வேண்டிய எட்டுவிதக் குறிகள். அவைகளின் விவரம் அடியிற் கண்ட செய்யுளால் விளங்கும், the eight symptoms to be studied in a patient before treatment as detailed in the following stanza viz-

Examination of 1. hand (pulse); 2. the two eyes; 3. facial expression; 4. condition of teeth; 5. condition and colour of the tongue; 6. fees; 7. urine; 8. the body as a whole.

"அட்டமக்குறியா மென்பர்
அங்கை கண்முகம் பள்ளாக்கு
விட்டிடு மல நீர் தேகம்
விளம்பு மிவ்வுறுப்போ டெட்டாம்
இட்டமா நாடி பார்க்க
இயம்பு நூலறிந்து கொண்டு
மட்டிலா வியாதி பேத
வகையினை தெளிகவன்றே".

(சுந்தரானந்தர்).

see also அட்டதான பரிட்சை and அட்டக்குறி.

அட்டமா சித்தி, எட்டுவித சித்திகள், see அட்டசித்தி, 2.எட்டுவித சித்திகளைக் கொடுக்கும் சாரணை தீர்ந்த இரசக் குளிகை, an animated mercurial oill bestowing the eight supernatural powers. See அட்டசித்துக் குளிகை.

அட்டமா சித்தி மூலி, அட்டகரும சித்தி அதாவது ஆகருஷணம், உச்சாடனம் முதலிய எட்டுவித மந்திரங்களை அனுசரிக்குங்கால் உபயோகிக்கும் மூலிகைகள், roots of plants possessing psychic virtues, used in the performance of the eight kinds of magic.

2. வசியத்திற்காக வுபயோகப்படும் வடக்கே ஓடிய சங்கம்வேர், the root of Monetia branched out towards the North, used in magic to bring a woman or an enemy to one's side

3. அணிமா முதலிய எட்டுவித சித்திகளைப் பெறுவதற்காக வேண்டி உபயோகிக்கும் மந்திரசக்தி வாய்ந்த மூலிகைகள், psychic plants used in the attainment of the eight superhuman powers.

See அஷ்டகரும மூலிகை

அட்ட மாந்தம், குழந்தைகளுக்குச் சாதாரண மாய்ச் செரியாமையினால் உண்டாகும் எட்டுவித மாந்த நோய்கள், the eight kinds of children's diseases arising from indigestion viz-

1. செரியா மாந்தம், indigestion.

2. பேரர் மாந்தம், Visceral obstruction.

3. மலடி மாந்தம், disgust of milk.

4. பெரு மாந்தம், Flux and cold.

5. வாத மாந்தம், Inflation.

6. சுழி மாந்தம், curling of eyes.

7. வலி மாந்தம், convulsions or fits.

8. கண மாந்தம், dysentery and fever.

அட்டமிகை, அரைப்பலம், half a palam.

அட்ட முகடு, உச்சி, crown of the head.

அட்ட மூலம், எட்டு வித மூலிகைகள், the name given for a group consisting of the following eight drugs, viz-

1. According ot Tamil Siddha Medicine either group (a) cr (b).

(a) 1. கண்டு பாரங்கி, Cleodendron serratum.

2. காஞ்சொறிவேர், Tragia involucrata (root of)

3. கோரைக் கிழங்கு, cyperus rotundus,

4. சித்திர மூலம், Plumbago rose alias P. zeylanica.

5. சுக்கு, dry ginger,

6. நன்னாரி, sarasaparilla.

7. செவ்வியம் (மிளகு) black pepper.

8. அரத்தை, galangal.

(b) 1. விஷ்ணுகரந்தி, Evolvulus alsinoides.

2. கஞ்சாங்கோரை, ocimum album.

3. கோரைக் கிழங்கு, Cyperus rotundus.

4. ஆடாதோடை, Adhatoda vesica.

5. துளசி, ocimum sanctum (Basil)

6. பேய்ப்புடல், Tricosanthes laciniosa

7. பற்பாடகம், Mollugo cerviana.

8. சீந்தில், Menispermum Cordifolium.

2. According to Ayurveda (Sanscrit)-

1. ஜீவகம் (சீந்தில்வு, Menispermum cordifolia (Moon-creeper)

2. ரிஷபகம் (மூங்கிலுப்பு)- Bamboo salt.

3. மேதை (அமுக்கிராக் கிழங்கு) - With ania somnifera.

4. மகாமேதை (நன்னாரி) Sarasaparilla.

5. ரித்தி (சிற்றாமுட்டி), Lesser galangla.

6. விருத்தி (பேராமுட்டி), Greater galangal.

7. காகோலி (வெங்காயம் போன்றது), a plant like onion - Tizyphus Napeca.

8. க்ஷீரகாகோலி (வெள்ளை இரளி)- another white variety of No. 7

NOTE:- Although the title is the same for the above three groups, the composing drugs are different. In Tamil Siddha Medicine, Nos. 1 and 2 are purely febrifuges; while No 3 in Sanskrit (Ayurveda), is a tonic.

அட்ட மெய்பரிசம், அடியிற் கண்ட செயல்களினால் ஏற்படும் உடம்பின் எட்டு விதமான உணர்ச்சி, the eight sensations of the body arising from eight different kinds of actions, such as-
ஊன்றல், pressing.
கட்டல், binding.
குத்தல், stabbing or pricking.
தடவல், rubbing.

தட்டல், patting.
பற்றல், seizing.
வெட்டல், cutting.
தீண்டல், touching.

அட்டம், அண்ணம், the uvula; 2. மேல்வாய், the palate or the upper part of the mouth; 3. எட்டு, eight; 4. சாதிக்காய், nutmeg - Myristica fragrans.

அட்டம் விதை, வாதுமைப் பருப்பு, almond kernels.

அட்டயோகம், see அட்டாங்க யோகம்.

அட்டயோசம், அரப்பொடி, iron filings, See அட்ட தீ ரசம்.

அட்டரக்கு, உருக்கிய வரக்கு, melted wax.

அட்டரித்தான், கோவை, a creeper, Indian caper - Bryonia grandis.

அட்டர், சாதிக்காய், nutmeg - Myristica fragrans.

அட்டலோக பற்பம், எட்டு வித லோகங்களாலாகிய பற்பம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், பித்தளை, வங்கம், துத்தநாகம், முதலியவைகளை ஒன்றாகச் சேர்த்துப் புடமிட்டெடுத்த ஓர் வகைப் பொடி, a medicinal compound obtained by calcination of 8 metals viz, Gold, silver, copper, iron, bell-metal, brass, lead and zinc.

அட்ட லோகம், see அட்ட தாது.

அட்டல், நெருப்பில் காய்ச்சுதல், heating in the fire.

அட்ட வசியம், see அட்டமாசித்தி.

அட்ட வத்தனாதி, கடுகு, mustard.

அட்டவத்தி, நெருஞ்சி, யானை நெருஞ்சில், a thorny plant; large caltrop Pedalium murex.

அட்ட வருக்கம், எட்டு வகை மருந்துக் கூட்டு, A group of 8 drugs viz

1. இந்துப்பு Rock slat Sodii chloridum

2. ஓமம், Bishop's weed Sison Ammi.

3. கருஞ் சீரகம், Black cumin Negella sativa.

4. சீரகம், cumin seed Cuminum Cyminum.

5. சுக்கு, dry ginger, Zingiber officinales.

6. திப்பிலி, long pepper Piper longum.

7. பெருங்காயம், asafoetida - Ferula foetida.

8. மிளகு, Pepper - Piper nigrum.

அட்ட வருக்கு, அட்ட வர்க்கம், see அட்ட வருக்கம்.

அட்ட விகாரம், மனிதருக் குண்டான எண்வகைக் கெட்ட குணங்கள், the eight kinds of bad qualities in man. They are;-

1. காமம், Lust
2. குரோதம், Hatred.
3. மதம், madness
4. மாற்சரியம், Envy
5. உலோபம், Avarice
6. மோகம், Sensuality
7. வேகம், Severity.
8. இடும்பு, pride.

அட்டவித பரீட்சை, see அட்ட குறி,

அட்டவிருட்சம், விசேஷ குணம் வாய்ந்த எட்டு வித அபூர்வமான மரங்கள். இவைகளை எளிதிற் காணுவதரிது, the eight kinds of trees selected in the Tamil Medical science, as the most superior among trees on account of their extraordinary virtues. It is said that they are visible only to the Spiritualists. They are:-

1. உரோம விருட்சம், a tree, so called probably, from its pubescence resemhling wool, like that of a willow tree.

2. எருமைக் கனைச்சான் - a milky tree with a peculiar characteristic, A leaf is said to drop whenever a buaffalo lows under it.

3. சுணங்கன் விருட்சம் அல்லது நாய்க்குட்டி மரம், a tree said to produce sound like the bark of a dog, when a person happens to pass under it.

4. திலகம் அல்லது மயிலை, a tree probably peacock's foot - Vitex alata.

5. இரச காந்த விருட்சம் - a tree supposed to have in it the properties of mercury and magnet.

6. சாயா விருட்சம் - a tree, which does not cast its shadow, probably from its transparent nature.

7. சோதி விருட்சம் - a luminous milky tree in darkness, probably on account of its inherent phosphoric quality.

8. முண்டினி மரம் - another variety; Nos. 1 and 5 are useful in Alchemy; 2. keeps off hunger and sleep; 3 and 7 used in Magic; 4 and 8 are used for rejuvenation; 6 enables one to fly in the aerial regions.

அட்டவெச்சம், உடம்பிற் காணப்படும் எட்டு விதமான

குறைபாடு, the eight kinds of defects found in the body viz.

குருடு, blindness
செவிடு, deafness
ஊமை, dumbness
பேடு, impotency.

இருகை, இரு கால் முடம், lameness; lacking of two hands and two legs.

அட்டனாதிப் பூடு, பெருந்தும்மட்டி, a large variety of bitter apple - Cucumis colocynthis.

அட்டாங்க சங்கிரகம், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வாக்படாச்சாரி எழுதிய வோர் ஆயுள் வேதநூல், a work on medicine written about 2000 years ago by Vakbhatachary, an authority on Ayurveda.

அட்டாங்கம், உடம்பிலுள்ள எண் வகையுறுப்புகள், அவையாவன:- the eight members of the body viz-
தலை, ஒன்று, one head.
கை, இரண்டு, two hands.
கால், இரண்டு, two legs.
செவி இரண்டு, two ears.
மார்பு அல்லது மெய், ஒன்று, chest or the trunk.

NOTE:- Some authors describe it as the feet, hands, shoulders, forehead and breats.

அட்டாங்க யிருதயம், சிந்து தேசத்திய வாக்படாச் சாரியாரால் இயற்றப்பட்ட வோர் ஆயுள் வேத நூல். இது சரகம் சுசுருதத்தினின்று தொகுக்கப்பட்டது. இதில் அங்காதி பாத விவரம், வைத்திய பாகம், சத்திரம் செய்யும் முறை, கண்ணோய், மருத்துவம், சுகாதாரம் முதலியவைகளைப் பற்றிக் கூறும். இதன் முறைகள் சிறந்தவைகளாகக் கருதி மலையாளத்தில் கையாளப்பட்டு வருகிறது.

இது ஓர் காரணப் பெயர். எட்டு அங்கங்களில் இருதயம் எப்படிச் சிறந்ததோ அவ்விதமா வைத்தியத்திற்கு இது சிறந்தது. a work on Ayurveda written by Vakbhatachary, a native of Sindh in Western India. It deals in Anatomy, Medicine, Surgery, Ophthalmology, Midwifery and Hygiene.

NOTE:- Literally the term means the heart of eight sections in Ayurveda. It is in high repute amongst the Malayalee Veidyans in the South.

அட்டாங்க யோகம், யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாஹாரம், தியானம், தாரணை, சமாதி ஆக இவைகள் எட்டும் அடங்கிய யோகாப் பியாசம், the eight-fold yoga practices consisting of the 8 kinds of steps or stages as enumerated below:-

1. யமம், restraint of the appeties.

2. நியமம், religious observances.

3. ஆசனம், position or posture of the body.

4. பிராணாயாமம், breathing in a patricular way.

5. பிரத்தியாஹாரம், restraining the senses.

6. தியானம், silent meditation.

7. தாரணை, fixing the mind on a member of the body.

8. சமாதி, silent contemplative worship.

NOTE:-NO3 is a position practised so as to bring the mind and body into a state of subjugation to one's will.

NO.4 is a correct form of breathing and the only scientific method of charging oneself with Vitality and Personal Magnetism

No 6 is the extension of concentration. It is one of the means of controlling the rising waves of the mind and purifying the memory and thus gaining for the soul all powers of Nature.

NO 8 is the treansformation of mental consciousness in the form a Atman in which the mind becomes super-conscious.

அட்டாசிக் காய், சிறுபும்மட்டிக்காய், a small species of Bryonia; bitter apple - cucumis colocynthus.

அட்டாட்சரம், (அட்ட + அட்சரம்) வேதாகமப்படி எட்டெழுத்து மந்திரமாகிய ஓம் நமோ நாராயணாய. அது ஓர் விஷ்ணு மந்திரம், விஷ்ணுவைத் துதிக்கும் போது தினப்படி செபிக்கும் மந்திரம், அது பேயை விரட்டும். அது நால் வகை மந்திரங்களிலொன்று. மற்ற மூன்று மூன்று மந்திரங்களாவன - பஞ்சாட்சரம்; சடாட்சரம்; துவாத சாட்சரம், (In religious philosophy) the eight lettered incantation viz. Om, Namo Narayanauya, It is Vishnu mantram and is prescribed to be uttered in daily prayer. It is also used to exorcies demons. It is one of the four well known special mantrams. The other three are - five lettered, six-lettered and twelve - lettered. For details see under அட்சரம்.

2. வைத்திய நூலின்படி குழந்தைகளுக்கு காணும் எட்டு வித அட்சர நோய்கள். அவையாவன: (In medicine) the eight kinds of Stomatitis in children and they are:-
1. சூலியட்சரம், inflammation of the mouth with the formation of ulcers, marked by pain, salivation and fetid breath - Aphthous stomatitis
2. நீலியட்சரம், ulcers on the tongue, and the lips, with fever and fetid breath - Ulcerative stomatitis.
3. சோதி யட்சரம், affection of the tongue and the teeth, with fetid breath - Stomatitis scorbutica.

4. வீழி யட்சரம், affection of the tongue, the liver and the spleen - Cachetic aphathae.
5. குண்டியட்சரம், socre mouth, raw tongue, affection of the liver and diarrhoea - Sprue or Tropical Stomatitis.
6. கபாலி யட்சரம், a form of stomatitis invding the pharynx, the gullet and the sotmach - Mycotic Stomatitis.
7. குமரி யட்சரம், simple and uncomplicted inflammation of the mouth - Catarrhal stomatitis.
8. உள்ளட் சரம், another form affecting children internall.

அட்டாட்சர வாசி, (அட்ட+அட்சரம்+வாசி) எட்டுவித அக்கர ரோகங்களைக் குணப்படுத்துவது, that which cures the eight kinds of aphathae. It is so called, probably from its property of curing the above mentioned eight kinds of Aphathae. 2. ஆடாதோடை, a small shrub; winter cherry Adathoda vasica.

அட்டாதச மூலம், பதினெட்டு வகை மூலிகை, the eighteen kinds of medicinal plants viz-
1. எருக்கு, Giant swallow wort Calotropis gigantea.
2. கண்டங் கத்திரி, yellow herried night shade - Solanum Zanthocarpum.
3. கரந்தை, sweet basil Olimum Basilicum.
4. கறிமுள்ளி, black thorny shrub Solanum indicum
5. குமிழ், a thorny sh arborea.
6. கொடிவேலி, l Plumbago Zeylanica.
7. சங்கங் குப்பி, a shr inermis.
8. சிற்றாமல்லி, sma Jasminum fragrans.
9. தழுதாழை, a plant phlomoides;
10. தூதுளை, a th Solanum trilobatum.
11. நன்னாரி, Indian Hemidesmus indicus.
12. நொச்சி, Willo Vitex negundo.
13. பாதிரி, trumpet Bignomia chelonoides.
14. பேராமல்லி, larg Jasminum undulatum.
15. மாலிங்கம், a tre Crataeve Roxburghii.
16. முருங்கை, Drun Anoma moringa.
17. வில்வம், Bael tr marmelos alias Feronia
18. வேர்க்கொம்பு, d Zingiber officinale.

அட்டாதச குணம், உ பதினெண் அவையாவன, the attributed to the huma they are:
1. அதிசயம், surprise
2. இன்பம், pleasure.
3. உவகை, delight.
4. உறக்கம், sleep
5. கேதம், grief
6. கையறவு, selfishn

1. **யமம்,** restraint of the appeties.

2. **நியமம்,** religious observances.

3. **ஆசனம்,** position or posture of the body.

4. **பிராணாயாமம்,** breathing in a patricular way.

5. **பிரத்தியாஹாராம்,** restraining the senses.

6. **தியானம்,** silent meditation.

7. **தாரணை,** fixing the mind on a member of the body.

8. **சமாதி,** silent contemplative worship.

NOTE:-NO3 is a position practised so as to bring the mind and body into a state of subjugation to one's will.

NO.4 is a correct form of breathing and the only scientific method of charging oneself with Vitality and Personal Magnetism

No 6 is the extension of concentration. It is one of the means of controlling the rising waves of the mind and purifying the memory and thus gaining for the soul all powers of Nature.

NO 8 is the treansformation of mental consciousness in the form a Atman in which the mind becomes super-conscious.

அட்டாசிக் காய், சிறு தும்மட்டிக்காய், a small species of Bryonia; bitter apple - cucumis colocynthus.

அட்டாட்சரம், (அட்ட + அட்சரம்) வேதாகமப்படி எட்டெழுத்து மந்திரமாகிய ஓம் நமோ நாராயணாய. அது ஓர் விஷ்ணு மந்திரம், விஷ்ணுவைத் துதிக்கும் போது தினப்படி செபிக்கும் மந்திரம், அது பேயை விரட்டும். அது நால் வகை மந்திரங்களிலொன்று. மற்ற மூன்று மூன்று மந்திரங்களாவன - பஞ்சாட்சரம்; சடாட்சரம்; துவாத சாட்சரம், (In religious philosophy) the eight lettered incantation viz. Om, Namo Narayanauya, It is Vishnu mantram and is prescribed to be uttered in daily prayer. It is also used to exorcies demons. It is one of the four well-known special mantrams. The other three are - five lettered, six-lettered and twelve - lettered. For details see under அட்சரம்.

2. வைத்திய நூலின்படி குழந்தைகளுக்கு காணும் எட்டு வித அட்சர நோய்கள். அவையாவன: (In medicine) the eight kinds of Stomatitis in children and they are:-

1. **சூலியட்சரம்,** inflammation of the mouth with the formation of ulcers, marked by pain, salivation and fetid breath - Aphthous stomatitis

2. **நீலியட்சரம்,** ulcers on the tongue, and the lips, with fever and fetid breath - Ulcerative stomatitis.

3. **சோதி யட்சரம்,** affection of the tongue and the teeth, with fetid breath - Stomatitis scorbutica.

4. **விழி யட்சரம்,** affection of the tongue, the liver and the spleen - Cachetic aphathae.

5. **குண்டியட்சரம்,** socre mouth, raw tongue, affection of the liver and diarrhoea - Sprue or Tropical Stomatitis.

6. **கபாலி யட்சரம்,** a form of stomatitis invding the pharynx, the gullet and the sotmach - Mycotic Stomatitis.

7. **குமரி யட்சரம்,** simple and uncomplicted inflammation of the mouth - Catarrhal stomatitis.

8. **உள்ளட் சரம்,** another form affecting children internall.

அட்டாட்சர வாசி, (அட்ட+அட்சரம்+வாசி) எட்டுவித அக்கர ரோகங்களைக் குணப்படுத்துவது, that which cures the eight kinds of aphathae. It is so called, probably from its property of curing the above mentioned eight kinds of Aphathae. 2. **ஆடாதோடை,** a small shrub; winter cherry Adathoda vasica.

அட்டாதச மூலம், பதினெட்டு வகை மூலிகை, the eighteen kinds of medicinal plants viz-

1. **எருக்கு,** Giant swallow wort Calotropis gigantea.

2. **கண்டங் கத்திரி,** yellow - berried night shade - Solanum Zantbocarpum.

3. **கரந்தை,** sweet basil Olimum Basilicum.

4. **கறிமுள்ளி,** black thorny shrub Solanum indicum

5. **குமிழ்,** a thorny shrub Gmelina arborea.

6. **கொடிவேலி,** lead wort Plumbago Zeylanica.

7. **சங்கங் குப்பி,** a shrb Valkameria inermis.

8. **சிற்றாமல்லி,** small jasmine Jasminum fragrans.

9. **தழுதாழை,** a plant Cleodendron phlomoides;

10. **தூதுளை,** a thorny plant Solanum trilobatum.

11. **நன்னாரி,** Indian Sarasaparilla Hemidesmus indicus.

12. **நொச்சி,** Willo=leaved justicia vitex negundo.

13. **பாதிரி,** trumpet flower tree Bignomia chelonoides.

14. **பேராமல்லி,** large jasmine Jasminum undulatum.

15. **மாலிங்கம்,** a tree, garlic pear Crataeve Roxburghii.

16. **முருங்கை,** Drumstick tree Anoma moringa.

17. **வில்வம்,** Bael tree Crataeva marmelos alias Feronia pellucida.

18. **வேர்க்கொம்பு,** dried ginger Zingiber officinale.

அட்டாதச குணம், உடம்பிற் குரிய பதினெண் குணங்கள், அவையாவன, the 18 qualities attributed to the human system and they are:

1. **அதிசயம்,** surprise.
2. **இன்பம்,** pleasure.
3. **உவகை,** delight.
4. **உறக்கம்,** sleep
5. **கேதம்,** grief
6. **கையறவு,** selfishness.

7. நரை, greyness
8. நினைப்பு, thought.
9. நீர் வேட்டல், thirst.
10. நோய், disease.
11. பசி, hunger
12. பயம், fear
13. பிறப்பு, birth
14. மதம், self conceit
15. மரணம், death
16. வியர்த்தல், perspiration.
17. வெகுளி, anger.
18. வேண்டல், desire or avarice..

அட்டா தசம், (8+10) பதினெட்டு, eighteen.

அட்டபத பத்திரம், பொன் தகடு, gold leaf.

அட்டாபதம், எட்டுக்கால் பூச்சி, eight legged insect, 2. சிலந்திப் பூச்சி, spider. See அட்டபாதம்; 3. பொன், gold; 4. சரபப் புள், a fabulous eight legged bird supposed to have the favulty of attacking a lion.

அட்டாலை, ஓர் மரம், a kind of tree?

அட்டாளை, see அட்டாலை.

அட்டி, அதிமதுரம், wild liquorice Glycirrhiza glabra; 2. செஞ்சந்தனம், red sandalwood Pterocarpus santalinus; 3. குதிரை, நோய், a disease in horses affecting the fore legs Wind gall; 4. இலுப்பை, long leaved bassia Bassia longifolia; 5. எட்டி, nux vomica Strychnos nux vomica; 6. பருப்பு, the inner kernal of shelled seeds; 7. குன்றிவேர், Indian liquorice root Abrus precatorius.

அட்டிக தாகம், see அதிமதுரம்.

அட்டிகம், சாதிக்காய், nutmeg Myristica fragrans.

அட்டி காலா, see அட்டிக தாகம்.

அட்டி தாமதம், சிறு சீரகம், cumin seed Cuminum cyminum.

அட்டி மதுசாரம், அட்டி மதுரம், அட்டி மதுரி, அதி மதுரம், Liauorice - a Gylecirrhiza glabra; 2. நாட்டு அதிமதுரம் அல்லது குன்றி வேர், Indian liquorice root Abrus precatorius.

அட்டிமாமதி, கரு நொச்சி, a black species of purification plant - Justicia gendarussa.

அட்டிமை, ஓமம், Bishop's weed Sison ammi; 2. சீரகம், Cumin seed Cuminum cyminum; 3. கருஞ்சீரகம், blackcumin Nigella sativa.

அட்டியம், அதிமதுரம், which see.

அட்டி யோசம், அரப்பொடி, iron filings.

அட்டிர பாணிதம், சிவப்புப் புளியம் பிரண்டை, a red species of sour wild vine (பிரண்டை) -Vitis setosa.

அட்டிரம், இலுப்பை, long-leaved bassia - Bassia longifolia.

அட்டிலம், வீக்கம், swelling.

அட்டிலா ரோகம், see அட்டிலா வாதம்,

அட்டிலா வாதம், நாபியின் கீழாக மூத்திரப்பையிற்கும் மலவாயிலுக்கு மிடையே வாயு தங்கி அதிகரித்துச் சிறு கல்லைப் போல் களதியாயும் கெட்டியாயுமுள்ள கட்டியை எழுப்பும் ஓர் வாதநோய்.

இதனால் மல ஜலு பந்தம், குடல்வாயு, வயிற்றுப்பிசம், மூத்திரப்பை வலிமுதலிய குணங்களுண்டாகும், a disease in which the deranged and aggravated bodily Vayu incarcerated or lodged in the region between the bladder and the anus, develops a thick lumpy tumour like a pebble, which is hard and non-shifting in its character.

It is marked by supression of stool and urine, flatus, distension of the abdomen, pain in the bladder etc.

அட்டில், சமயலறை, kitchen.

அட்டி வெள்வள, அதிமதுரம், liquorice - Abrus precatorius.

அட்டிளம், சீரகம், Cumin seed - Cuminum cyminum.

அட்டீலிகம், கல், stone.

அட்டீலிகா ரோகம், ஆண்குறியில் விரணத்தைப் பிறப்பித்து அதில் குழி விழுந்து கல்லைப் போல் கெட்டியாக விருக்கும்படிச் செய்யுமோர் குய்ய நோய், a disease of the penis causing deep ulcers with hardened muscles all round it.

அட்டு, வெல்லக் கட்டி, a lump of coarse sugar - Jaggery; . சமைக்கப்பட்டது, that which is cooked; 3. பனாட்டு அதாவது பனங்கனியிலட்டது, dried palmyra jelly.

அட்டுக் காய்ச்சி, சமைத்தது that which is cooked.

அட்டுதல், ஒட்டுதல், to stick or adhere; 2. வார்த்தல், to pour, as we do water or oil; 3. வடிதல், to flow or issue out, as in சீழ் வடிதல்.

அட்டுப்பு, (அட்டு+உப்பு = boiled salt) காய்ச்சிய வுப்பு, salt obtained by boiling sea-water; 2. கறியுப்பு, common salt educed from soils containing it, either alone or in combination with other slats by the process of filtration and evaporation; 3. பூநீர், வெடியுப்பு, சீனம், சாரம், இந்துப்பு ஆகிய இவைகளைக் காமன் தண்ணீல் (கழுதை மூத்திரத்தில்) கணைக்காய் எரித்துப் பதங்கண்டு இறக்கி ஆறியபின் கட்டியாய் நிற்கும் ஓர்வகை வைப்புச் சரக்கு (மச்சமுனி. 800),

a slat obtained by boiling Pooneer, Nitre Alum, Sal ammoniac and Rock-salt dissovled in asse's urine; 4. இருபத்தைந்து வகை இலவணங்களிலொன்றாகிய காய்ச்சு லவணம், one of the 25 kinds of salt described in the Indian Medical Science.

அட்டை, இது நிலத்திலும் நீரிலும் வாழும், புழுப்போன்ற வோர்வகை நீண்ட பிராணி. இது தன் உடம்பை வேண்டும்போது தன்னிச்சைப்படி நீட்டவும் குறுக்கவும் சக்தி வாய்ந்தது. இதற்கனேக கால்களுண்டு. நிறம் சிகப்பு, பச்சை, கருப்பு, மஞ்சள், சில புள்ளிகளும் வரிகளுமுடையதாக விருக்கும். இதை நமது நாட்டின் கிராமங்களில் மரப் மட்டைகளிலும், கூரை வீடுகளிலும் மழை காலத்தில் மிகுதியாய்க் காணலாம். இது ஏரி, குளம், ஓடை, வாய்க்கால், ஆறு முதலிய சதுப்பு நிலங்களி லுண்டாகும். இது உடம்பிற்பட்டா லொட்டிக் கொள்ளுந் தன்மை உடையது. ஆனது பற்றியே இதற்கிப் பெயர் வாய்ந்தது. ஆப்பிரிக்கா தேசத்திற் சில பாகங்களிலுள்ள அட்டைகள் ஒன்று அல்லது இரண்டடி நீள முள்ளவைகளாயும் மனிதர்கள் தூங்கும் போது அவர்கள் மீது ஒட்டிக் கொண்டு உடம்பிலினிலிருக்கு மிரத்த முழுவதையு முறிஞ்சி உயிரைப் போக்கக் கூடுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இக்காரணம் பற்றியே ஒவ்வொரு மருத்துவச் சாலையிலும் நோயாளிக்கு உடம்பினின்று கெட்ட விரத்தத்தை யெடுக்க வேண்டியதற்கு அட்டைகளை வைத்து வளர்ப்பதுண்டு.

இதில் பல மாதிரிகளுண்டு, ஆனால் பாசி நீரி லுற்பத்தியாகிறது தான் சிகிச்சைக் கேற்றவைகளெனத் தேர்ந்தெடுக்கப்படுவது. இது சிறிது பச்சை நிறமும் முதுகிற் 6 சிவப்பு வரிகளுள்ளதாயு மிருக்கும்.

ஆயுள்வேத நூலின் படி· இது 12 வகைத் தாயினும் வைத்தியத்திற்கு 6 வகை மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டவை. மற்ற 6-ம் விஷ தன்மையை வாய்ந்தவைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

பிரயோகத்திற்கு வேண்டிய ஆறுவகை அட்டைகளாவன:-

கபிலம், பிங்கலை, சங்குமுகி, மூஷிகம், புண்டரீகமுகி, சபரிகம்.

It is a long worm-like creature found both on land and in water. It is endowed with powers of contraction and expansion at will and has many feet. There are leeches of different colours such as red, green, black, yellow, brown etc; some have dots on the body and some stripes.

In our country, it is found is abundance especially during the monsoon seasons in villages among trees, shrubs, thatches of huts, tanks, stagnant pools, ditches, canals and marshy soils. It sticks to one's body when it happens to come in contact with him and tries to such his blood. In some parts of Africa, these leeches about 1-2 ft long will be found sticking to the body of men done to death by thme while they were asleep, by sucking their blood. They ae a source of danger to travellers in forests. They are used in Hospitals to draw out the impure blood from patients to effect a cure.

Although it consists of several varieties, the one which originates from the moss in water, is selected to be used on patients for drawing out blood. It is the aquatic blood-sucking worm of the order of Hirudinae.

The officinal or green leech-Sanguisuga medicinalis, is of a blackish-green colour with reddish-brown longitudinal streaks on the back.

Ayurvedic science deals only with 12 kinds, of which 6 are ft for use and the remanining 6 are considered poisonous.

The six that are fit for use and enumerated in the Shastras, are;

1. Capilah or tawny leech.
2. Pingalah or one of pale red tinge.
3. Chunk mookhy or one with a yellow long sharp head.
4. Poondarika mookhi, that which is brown in colour and with mouth like the flower nelumbu.
5. Saharikah, that which resembles the leaf of the lotus flower in colour.

NOTE: The other species of leeches common in Souch India are:

1. The English or speckled leech. It has 6 stripes spotted with black, and a belly greenish yellow and spotted.
2. The Peculiar Madras leech is a bdellium found in stagnant ponds and ditches. It is larger than the European leech and very voracious. These are used by Vaidynas and Hekeems in the same way as is done by Europeans.
3. The large Horse leech has depressed body and a dusky coloured back, with the belly yellowish green.
4. The Ceylon leech about an inchlong with point so sharp as to make its way through small openings is dangerous to pedestrians in certain seasons. It attacks the feet, the legs and the thighs.

அட்டைக்கடி, அட்டையினால், சாதாரணமாய்க் கடிக்கப்படல், ordinary leech bite; 2. அட்டையினால் கடியுண்ட தழும்பு, a scar left by leech bite.

அட்டைக்கடி சிகிச்சை, நோயாளிகளுக்கு அட்டையைக் கடிக்க விட்டு நோயைக் குணப்படுத்தல், the art of healing by bleeding from leech bite Leech Craft.

அட்டைக்குப்பி, சிகிச்சைக்காக அட்டையை வைத்து வளர்க்க வுபயோகிக்கும் புட்டி, a glass tube to hold leeches intended for curative purposes.

அட்டைத் தைலம், அட்டைத் தலைகளின்று தயாரிக்கும் மோர் வகைத் தைலம், an extract prepared from the heads of leeches and employed to prevent the fromation of blood clots.
NOTE: In Surgery, it is used experimentally for intravenous and intraperitoneal injections.

அட்டைப் பால், பனங்கள், palmyra toddy.

அட்டைப் பிசின், அட்டையைப் போலொட்டிக் கொள்ளும் தன்மை வாய்ந்த பிசின், a gum which would stick like a leech i.e., a kind of gum more than ordinarily adhesive.

அட்டைப் பிரயோகம், உடம்பிலிரத்தங் கெட்டுப் போயிருந்தாலும் அல்லது இரத்தங் கட்டிக் கொண்டிருந்தாலும் அவ்விடத்திலுள்ள கெட்ட விரத்தத்தை நீக்கும்படிச் செய்ய அட்டையை யுடம்பின் மேற் பாய்ச்சுவது.

அப்படி விடுவதனாலட்டை இரத்தத்தை உறிஞ்சி விட்டுப் பிறகு கீழே விழும். அது தானாக விழுவதற்கு முன்னமே அதை விழச் செய்ய வேண்டுமானால், உப்புத் தூள், சாம்பற்பொடி, அல்லது வெங்காய ரசம் இவைகளைப் பிரயோகிக்கலாம். உடம்பிலிரத்த வொழுக்கை நிறுத்த வேண்டினால் மூக்குப் பொடி, படிக்காரம், சாம்பற்றூள் முதலியவைகளைக் கடி வயிற்றூவ நின்றுவிடும்.

Leeches are appled to the body of patients having impure or congested blood in their system. They will fall down of their own accord after drawing sufficient quantity of blood. If they are to be removed before that time, powdered salt, or ash or the juice of onion should be applied at the affected part and then it would fall of.

அட்டைப் பூச்சி, ஓர் வகை வயிற்றுப் பூச்சி. இது அட்டையைப் போல் குடலுக்குள் ஒட்டிக் கொண்டு உயிர் வாழும், a kind of stomach worm which breeds by sticking to the walls of the stomach Tapeworm.

அட்டையொட்டல், பிரயாணிகள் அல்லது வேட்டைக்குச் செல்பவர்களின் மேல அட்டை தானாகவே ஒட்டிக் கொள்ளும். இதனால், இரத்த வொழுக்கின் காரணத்தை முன்னிட்டு மிக்கத் துன்பம் ஏற்படும், sticking to the body of leeches by themselves. Such leech bites sometimes give much trouble from bleeding to travellers or sportsmen.

அட்டை லட்சணம், தன் வந்திரி வாகடம், *110-ல்* சொல்லியுள்ள அட்டையைப் பற்றிய விதிகள், a treatise compiled by Dhanwantri on the art of healing by the use of leeches; a science on leech-craft.

சாதாரணமாய்க் குழந்தைகட்குச் செய்வதுண்டு, a mechanical treatment by which the falling of the soft palate is arrested. This is may be done either by thrusting the fingers into the mouth and pressing them against the affected part or by holding up the head by the hair at the crown. This is generally done to a child.

See உண்ணாக்கெடுத்தல்.

அண்ணாத்தல், மேல் நோக்கல், looking upward; 2. மேனோக்கியபடி வாய் திறத்தல் opening the mouth looking upward.

அண்ணித்தல், தித்தித்தல், to be sweet.

அண்ணுதல், சேர்தல், uniting with; joining.

அண்ணெரிஞ்சான் பூண்டு, பச்சையாகப் பறித்து வந்து அப்போதே அடுப்பிலிட எரியுமோர் பூடு, a plant which can be burnt immediately without drying it. See அன்றெரிந்தான் பூண்டு.

அண்பல், மேல் வாய்ப்பல், an upper tooth.

அத, அத்தி, country fig - Ficus glomerata.

அதக கந்தி, கந்தக வண்டல், precipitated sulphur - Lac-sulphur or Milk of sulphur.

அதகக் கொடி, பெருமருந்துக் கொடி, a twining plant, Indian birthwort - Aristolochia Indica.

அதக மனம், வண்டலாகப் பிரிந்து தங்கல், the process by which a substance is made to seperate from another or other substances in a solution and fall to the bottom - Precipitation.

அதகம், சுக்கு, dried ginger; 2. மருந்து, medicine; 3. உயிர்தரு மருந்து, a medicine that is efficacious in restoring one to health and vigour - Restorative; 4. அடையல், precipitate; 5. பெரு மருந்து, a plant, see அதகக் கொடி.

அதகன், மருந்து கொடுப்பவன், one who administers medicine; 2. வைத்தியன், one who prescribes remedies for diseases or who is skilled in the art of healing - Physician.

அதக்காய நாளம், ஈரலின் இடது நாளம், a large yellow vein of the liver - Vena cava hepatica.

அதக் காயம், தொடை, கால், பாதம் இவைகள் அடங்கிய உடம்பின் பகுதி, that portion of the body below the hip comprising the thinghs, the legs and the feet - Lower extremity.

அதக்காய வெலும்பு, இடுப்பின் கீழ்பாகத்திலுள்ள எலும்பு, bone of the lower extremity.

அதக்குதல், மெதுவாக அமுத்துதல், to press gently or softly as is done to a boil to bring out the pus or the other matter; 2. கசக்குதல், to rub in the hand; 3. வாயிலடக்குதல், to cram in the mouth.

அதங்கம், ஈயம், lead Plumbum.

அதசம், காற்று, wind; 2. ஆன்மா, soul.

அதசயம், தரையில் தூங்கல், sleeping on the ground.

அதசி, சணல், flax or hemp Crotolaria juncea.

அதசிரம், தலைகீழாகப் பிடித்தல், holding head downhard or upside down.

அதசுப்தி, இடுப்பின் கீழ் சொரணையற்றுக் கால் விழச் செய்யு மோர்வகைப் பாரிச வாயு. paralysis of the legs and the lower part of the body Paraplegia.

அதட்டம், பாம்பின் கீழ்வாய்ப் பல், the lower fang of a snake.

அதஸ்த சஞ்சயம், உடம்பின் கீழ்ப் பகுதியில் தங்கியுள்ள மல மூத்திரம், the feces and the urine in the lower region of the trunk.

அத படசம், சுக்கு, dried ginger.

அதப வாதம், ஆயுள் வேகத்தில் சொல்லியுள்ள ஓர்வகை வாத நோய், a rheumatic disease mentioned in the Ayurvedic science.

அதம்பம், கற்பரி பாஷாணம், a kind of native arsenic?

அதம் பழம், அழிந்த பழம், over ripe fruit; fruit fructified to excess.

அதர குட்டம், உதட்டின் புண், cancer of the lip.

அதரணவித்தை, பில்லி சூனியம், Blck magic.

அதர பானம், (அதரம் + பானம்) (lit) drinking the lip; 2. உதட்டைச் சுவைத்தல், sucking the lip of a woman. it is one of the sexual operations described in the erotic science of Kokkoga Muni.

அதர மதம், உதட்டின் ஊறல் நீர், a secretion from the lower lip of woman through lust.

அதரமது, see அதர மதம்.

அதரம், கீழுதடு, the lower lip; 2. நிதம்பம், the external part of the organs of generation of the female vulva; 3. மஞ்சள், turmeric; 4. பெண் குறியின் இருபக்கத்து உதடுகள், the hairy fold of the skin on either side of the slit of the vula Labia majora.

அதர வாய்வு, வாயுக் கோளாறினால் வாய் உதடு அல்லது யோனியின்

உதட்டில் காணும் நோய், a disease of the lip of the mouth or that of the genital of a female.

அதராமிர்தம், பெண்ணின் உதட்டினின்று ஊறும் பாலுக்கொத்த ஓர் இனிய நீர், a sweet secretion from the woman's lips through lust. See அதர மதம்.

அதரிசனன், பார்க்க முடியாதவன் one who is destitute of the sense of sight; 2. குருடன், a blindman.

அதரிசனம், பார்க்கக்கூடாமை, incapability of seeing; 2. குருடு, blindness.

அதரிசி, see அதரிசனன்.

அதருண்டாதல், கழிவு உண்டாதல், formation of a deposit or sediment; 2. கிட்டம் ஏற்படல், formation of dross on iron or steel.

அதர், நுண்மணல், fine sand; 2. புழுதி, dust 3. மருந்து வண்டல், medicinal sediment

அதலதலம், காரீயம், black lead; plumbago; 2. காரீய மணல் (Iliteraly,) the term denotes the mineral found in heaps under the earth Plumbum.

அதலமூலி, ஆடுதின்னாப்பாலை, a plant, worm killer - Aristolochia bracteata.

அதலாயி லோகம், பூமியின் கீழுண்டாகும் தாதுப்பொருள், any ingredient or natural inorganic substance in the earth's crust obtained by mining - Mineral; 2. பூமிக்குள் விளையும் உலோகம், any metal dug out from the earth.

அதவம், அத்திமரம், fir tree - Ficus glomerata.

அதவாய்வு, சவுட்டு மண், fuller's earth.

அதவிடம், அதவிடயம், Indian Atees - Aconitum heterophyllum.

அதவு, அத்தி, country fig - Ficus glomerata.

அதவுதல், கொல்லுதல்,. killing.

அதவு நெய், அத்திப்பிசின், the gum of the fig-tree.

அதவுபாசனம், புணர்ச்சி, sexual intercourse.

அதழ், பூவிதழ், the petal of a flower.

அதளக்காய், see அதளங்காய்.

அதளங்காய், பீர்க்கங்காய், acute-angled cucumber - Cucumis actutangulus.

அதளப் பிச்சி, செந்நிறமான சீமைப்பிச்சி. இது வாதுமையைப் போன்றது, பாரசீகத்திலிருந்து இவ்விடத்திற்குக் கொண்டு வந்து பயிராக்கப்பட்டதால் இதற்குப் பாரசீகப் பழம் என்ற பெயருமுண்டு, a well - known fruit of a pale red colour allied to the almond.

The tree is supposed to have been brought originally from Persia and hence it is also called the persian fruit.

அதள மூலி, see அதலமூலி.

அதளமேலிச் சாரணை, சிவப்புச் சத்திச்சாரணை, a red variety of a plant - Boerhaavia procumbens alias B. repens.

அதளை, நீர்ப்பீர்க்கு, a bitter plant - Cucumis tuberosus; 2. பாகல், fig-gourd - Momordica charantia. It is a plant with bitter fruits and is eaten when boiled and made into a curry; 3. நிலப்பீர்க்கு or பீர்க்கு, gourd plant - Cucurbita Acutangulus; 4. புளியதளை, a variety of sour gourd of the species of Cucurbita.

அதளை வற்றல், நிலப்பீர்க்கு வற்றல், the preserves of Athalai fruit.

அதள், தோல், skin; 2. பட்டை, bark of a tree.

அதறஞ்சி, காட்டு முருங்கை, wild drum stick tree - Moringa conconensis alias ormocarpum sennoides.

அதற்றி, மாவிலங்கு மரம், Lingam tree - (Crataeva religiosa (Rox burghii).

அதா, அத்தி, see அதவு.

அதாளம், சிவப்புச் சிவதை, Indian red Rhubarb or Jalap - Ipomaea turpethum.

அதாங்கி, ஒட்டு காட்டு மரம், a kind of wild tee; Nagetta - Gordonia obtusa.

அதாசலம், காட்டு மல்லிகை, wild jasmine creeper with red flowers - Jasminum angustifolium.

அதாதி மந்தம், ஆயுள் வேதப்படிக் கண்ணைப் பற்றிய ஐந்து வகை மாந்த நோய்களுளொன்று, one of the five kinds of ophthalmia according to Ayurveda.

See அதாதி மாந்தரோகம்.

NOTE:- The other kinds are:-

1. வாதாதி மந்தம் - ophthalmia from deranged vayu.

2. பித்தாதி மந்தம் - ophthalmia due to excess of bile.

3. சிலேட்டுமாதி மந்தம் - ophthalmia from aggravated condition of the phlegm.

4. இரத்தாதி மந்தம் - ophthalmia as the result of the excess of blood in the system.

அதாதி மாந்தரோகம், கண்களின் நரம்புகளில் வாயுதங்கி நிற்பதால் பார்வையைக் கெடுத்துப் பிறகு அசாத்தியமாக்கு மோர் கண்ணோய், a disease of the eye in which the deranged, Vayu getting incarcerated in the optic nerve, impairs the faculty of sight and gives rise to an incurable disease - Blinding ophthalmia.

அதாது, தாது வல்லாதது, that which is not a mineral; **2.** (அ+தாது = விந்து + இன்மை) அதாவது விந்துவற்ற தன்மை, absence of semen.

அதாரன், (அ+தாரன்) தாரமில்லாதவன், one who is unmarried, an unmarried man - Bachelor; **2.** தாரமிழந்தவன், one who has lost his wife - A widower.

அதாவரிசி, வெட்பாலை யரிசி, dysentery rosebay; bitter oleander - Nerium antidysentericum alias Holarhena antidysentericum.

அதி, அதிகம், very, **2.** மிகுதி, excess, **3.** சாதாரணமாய் மிகுதியைக் காட்டு வதற்கு மொழிக்கு முதலாகச் சேர்க்க படுமோர் உபசர்க்கம். இது பெயர்ச் சொல், உரிச் சொல் இவைகளின் முன்பாக வரும்போது அதித மிகுதியைக் காட்டும், a prefix commonly used in many compound words to denote excess. It is often prefixed to nouns and adjectives to indicate extraordinary, intense, exceedingly, very much etc., an augmentative prefix.

அதிக சுரசாந்தினி, வல்லாரை, இது மிகுந்த சுரத்தைக் சாந்தப்படுத்துவதால் இப்பெயர், a bitter plant - Hydrocotyle asiatica. It is so called from its soothing effect in cases of excessive fever.

அதிகடப் பால், எருக்கம் பால், milk of the spurge - Calotropis gigantea. **2.** யானைப் பால், elephant's milk.

அதிகடம், see அதிகடப் பால்.

அதி கண்டகம் பெரு காஞ்சொறி, nettle plant of the big species - Tragia involucrata.

அதிகண்டம், சாகுந்த தருவாயில் ஏற்படும் துன்பம், pangs or agony of death; **2.** பெரிய துண்டம், a big piece; **3.** பெரிய கழுத்து, அதாவது ஓர் வகைக் கண்டமாலை, a swollen neck - colloid goitre; **4.** உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய விபத்து, an accident or other crisis endangering human life.

அதிகண்ணி, முள் துடரி, a species of துடரி, plant - Rhamnus circumcissus; **2.** பெரிய கண்ணை யுடையவள், a woman, with big-eyes.

அதிக தந்தம், தொத்துப்பல், a redundant tooth growing over another. See அதிதந்தம்; **2.** யானைத்தந்தம், the tusk of an elephant; **3.** மிகுதியான தந்தம், too much or excess or ivory.

அதிகதம், வாயு, air; **2.** எட்டாதது, that which is beyond reach.

அதிகதாப சுரம், see அதிதாப சுரம்.

அதிக தூக்கம், பகல் நித்திரை, superfluous sleep i.e., day sleep.

அதிகத்தி, குருக்கத்தி, a species of fig-tree. See அதிக மான்.

அதிக நங்கை, சிறியாணங்கை, snake-root-Polygala glabra.

அதிக நாலம், கொடி வேலி, see அதிக நாறி.

அதிக நாலினி, சிகப்புத் தட்டைப் பயிறு, a red variety of gram.

அதிக நாவி, வெண்ணாவி, white aconite - A poisonous root.

அதிக நாறி, கொடி வேலி, Ceylon leadwort - Plumbago Zeylanica; **2.** மிகுதியாக நாற்ற முடையது, that which is excessively fetid or that which has a strong smell; **3.** பெருங்காயம், asafoetida; **43.** பீ நாறி, a fetid plant or tree - Stereulia foetida.

அதிக நேமி, செவ்வந்தி, a plant, chamomile - Anthemis nobilis.

அதி கந்தம், ஓர் வாசனைப்புல், a fragrant grass; **2.** சண்பகப்பூ, Indian magnolia - Michelia champaca; **3.** கந்தகம், sulphur; **4.** அதி வாசனையுள்ளது, that which has an overpowering smell.

அதிக பரீசம், see அதி பரீச்சம்.

அதிகப் பேச்சு, பைத்தியம், சன்னி, வாதசரம் பிடித்தல் முதலிய நோய்களினால் அறிவு கெட்டு உடம்பிலுள்ள இரசதாதுவும், இரத்தத் தாதுவும் சுண்டும்படி அளவு கடந்து பேசுதல், a mental condition marked by excessive indulgence in talking resulting in the loss of vital forces of the chyle and blood in the system, as in lunacy, delirium, apoplexy, devilry etc.

அதிக மந்தாரம், see அதி மந்தாரம்.

அதிகமனம், புணர்ச்சி, copulation; **2.** விவாகம், marriage; **3.** (அதிக+மனம்) அதாவது மிக்க வாசை, excessive desire.

அதிகமாஞ்சு சருமன், கண் சதை வளர்ச்சி, proud flesh in the eye; **2.** அதிக மாமிசவளர்ச்சி, excessive growth of flesh.

அதிக மாலி, குருக்கத்தி, tripterocarp creeper - Biptage Madablota.

அதிக மேனி, கற்காவி, இது ஓர் மங்கல் நிறமான சிகப்புக் களிமண், பாரசீர தேசத்திலிருந்து இறக்குமதியாகிறது, a kind of earth or clay of a brownish red colour or otherwise known as red earth, imported from Persia - Red ochre; **2.** சிகப்புக் குப்பை மேனி, red rubbish plant - Acalypha Indica.

அதிகம், குருக்கத்தி, see அதிகமாலி, யானைத் திப்பிலி, elephant pepper, climbing arum - Scindapsus officinalis.

அதிக ரணத் தைலம், அகத்திய வல்லாதி 600-ல் சொல்லிய முறைப்படி விடாச் சுரங்களுக்காகத் தயாரித்த தலை முழுக்குத் தைலம், a medicated oil prepared as per process laid down in Agastyar Vallathi 600 and used for oil bath in cases of obstinate fever.

அதிகரம், காட்டுமல்லிகை, wild Jasmine Jasminum angustifolium.

அதிகராவிகம், செந்துளசி, a red varieth of basil Ocimum (genus).

அதிகர்ணம், வஸ்து, substance.

அதிகல், see அதிகரம்.

அதிகழிச்சல், மிகுதியாப் பேதியாதல், excessive purgation Hypercatharises; 2. அதிகப் போக்கு, excessive discharge as in bleeding; 3. பேதி, diarrhoea 4. சீதபேதி, dysentery.

அதிகற்றாதி, கொடிவேலி, Ceylon leadwort Plumbago Zeylanica; See அதிக நாறி.

அதிகாந்தம், ஓர் விலை யுயர்ந்த கல், a precious stone.

அதிகாந்தி, குருக்கத்தி, see அதிகமாலி.

அதிகாய சித்தி, கரு மருது, a tree, black marudu; Negroe's Olive Terminalia tementosa alias T.alata.

அதிகாயன், பருத்த உடம்புடையோன், one having a gross or fleshy body; a stout man; 2. உடம்பில் மிகுந்த காயமுடையோன். one with serious injuries; 3. உடம்பில் மிக்கத் தழும்புடையோன், one with numerous scars on the body.

அதிகார மலம், இவ்வுலகூ வின்பத்தை விரும்பும் ஆன்மாவின் விருப்பம், inclination of the soul to function in the Universe.

அதிகாரி, கொடி வேலி, see அதிக நாறி; 2. (அதி+காரி) மிக்கக் கருமை, jet black; 3. கொடிய நஞ்சு, a virulent poison; 4. வெண்காரம், borax.

அதிகாலம், விடியற்காலம், early morning; 2. நெடுநேரம், lone time.

அதிகுகம், பேரா மல்லி, single flowered Arabian jasmine Jasminum sambuc.

அதிகும்பை, பொற்றலைக் கையாந்தகரை. mary gold verbisena; Ceylon verbisena - Wedelia calundulacea.

அதி கூக்குரல், பெருத்த கூச்சல், abnormal loudness of voice Hyperechesis.

அதிகேரம், சீதா செங்கழுநீர், a kind of water lily Grewia rotundifolia.

அதிகோலம், அழிஞ்சில் மரம், sage-leaved alangium Alangium Lamarckii; 2. மிக்க வழகு, excessive beauty.

அதிகோவம், மிக்க கோபம், excessive anger; 2. அழிஞ்சில், see அதிகோலம்.

அதிகோவிகம், செந்தொட்டி, climbing nettle - Tragia involucrata.

அதிக்கிரமம், கற்பழித்தல், committing excess of sin sexually.

அதிங்கம், நாட்டு அதிமதுரம், அல்லது குன்றிமணிவேர், Indian liquorice - Abrus precatrious (Root of).

அதிங்கன், அதிங்கை, see அதிங்கம்.

அதிங் காலிகம், செம்புளியம் பிரண்டை, a red variety of புளிப் பிரண்டை, hairy wildyine Vitis setosa alias Cissus acida.

அதிசத்திரகம், see அதிசத்திரம்,

அதிசத்திரம், நட்சத்திர சீரகம், star anise - Illecium anisatum; 2. காளான், mushroom; 3. மருதோன்றி, nail-dye - Barleria longifolia.

அதிசமாதி யோகம், தன்னை மறந்து புரியும் யோகம், a profound meditation in yoga practice in which the yogee is not only insensible to the surroundings but also forgets his own body.

அதிசயக் குளிகை, ஐந்து தரம் சாரணைத் தீர்ந்த ஓர் ரசக் குளிகை, a mercurial pill animated five times.

அதிசயபுட்பி, அத்தி இதன் பூ ஒருவர் கண்ணுக்கும் புலப்படாத காரணத்தை முன்னிட்டு இப்பெயர். Indian fig-tree Ficus glomerata. It is so called from its flowers not visible to any.

NOTE: The flowers of the fig tree are incomplete and so make no outward appearance, but are concealed within the fig on its internal surface.

அதிசயம், அதிநோய், a severe type of disease 2. (அதி + சயம்) கொடிய சுயநோய், an acute form of consumptian; 3. அதிரோகம், excessive secretion and discharge or urine Polyuria.

அதிசரணம், see அதிசரணயோனி.

அதிசரண யோனி, (அதி+சரணம்+யோனி) அதிகமாக யோனிக்குள் சஞ்சரித்தல், பருத்த ஆண்குறியை யுடைய புருடச் சையோகத்தின் மிகுதியாலும், அல்லது கலவியில் பல முறையிலும் திருப்தியடையாத பெண்களின் அடங்காக் காம மிகுதியாலும், பெண்களுக்கு யோனியில் வீக்கமும் வலியுங் கண்டு விந்து தங்காமற் போகும்படிச் செய்யும் ஓர் நோய். இது சிலேட்டும தோஷத்தினாற் பிறந்த ஐந்து வகை யோனி ரோகங்களில் ஒன்று, இதில் புருஷப் புணர்ச்சியில்லாமலும் யோனி திரவிக்கும், a disease of the vagina in which the semen is not retained or fructified in consequence of inflammation and pain in the part due to excess of sexual intercourse with a male having a stout penis or to an unsatiable desire for intercourse on the part of the female. It is one of the 5 kinds of diseases arising from phlegmatic causes. it is also said that such a condition of the vagina may be brought about even without intercourse.

அதிசரணை, see *அதிசரண யோனி.*

அதிசரம், நெட்டுயிர்ப்பு, inhalation and expiration of a long breath audiby, as from grief or melancholy - sighing.

அதிசரும கூச்சம், *உடம்பின் மேற்றோலில் ஏற்படும் அதிக வுணர்ச்சி*, excessive sensitiveness of the skin - Hyperethesia. See also *அதீத கூச்சம்.*

அதிசல பானம், *மிகுதியாகத் தண்ணீர் குடித்தல்* drinking a good deal of water.

அதிசனசி, see *அதிக நாறி.*

அதிசாதிகம், see *அதிகராவிகம்.*

அதிசாமியை, வெண் குன்றிச்செடி, white country liquorice - Abrus precatorius (alba).

அதிசாரக் கடுப்பு, *அசீரண* பேதியாலேற்படும் வயிற்று வலி, colic arising from diarrhoea due to indigestion - Sabbural colic.

அதிசாரக் கழிச்சல், *சாதாரணமாக* ஏற்படும் பேதி, Ordinary or simple diarrhoea; **2.** *அசீரணத்தினால் மந்தம் உண்டாகி* வாந்தி, பேதி, *பலவீனம்*, களைப்பு முதலிய குணங்களை யுண்டாக்குமோர் வகைக் *கழிச்சல்*, an acute diarrhoea marked by serous stools as in cholera and vomitting attended with fatigue, weakness and sometimes collapse - Choleraic diarrhoea.

3. சீதபேதிக் *கழிச்சல்*, *அதாவது மலத்தில் சீதமும்* இரத்தமும் கலந்துண்டாகும் பேதி, diarrhoea with mucous and bloody stool - Dysenteric diarrhoea.

அதிசாரக் காய்ச்சல், *அசீரண* பேதியனாலேற்படுமோர் *காய்ச்சல்*, fever caused by diarrhoea - Febrilis diarrhoea.

அதிசாரக் கினி, *அதிவிடயம்*, Indian Atees Aconitum hoterophyllum.

அதிசாரங் கட்டி, *அசீரணத்தினாலேற்படும்* பேதியைக் குணப்படுத்தும் *சரக்கு*, any drug capable of stopping or arresting diarrhoea from indigestion; **2.** *கற்கடக சிங்கி*, galls of Pistacia - Rhus succedanea.

அதிசார சன்னிபாத சுரம், *அதிசார* பேதியினாற்காணும் *சன்னியோடு கூடிய காய்ச்சல்*, typhoid fever accompanied by diarrhoea.

NOTE:- In this, the contagions principle is contained in the stools and is introduced into the body through contaminated food and drinking water.

அதிசாரசாந்தி, வயிற்றுப் போக்கைச் *சாந்தப்படுத்து மருந்து*, any remedy which controls the motion in dysentery - Antidysenteric; **2.** *காட்டாத்தி*, jungle autti - Woodfordia floribunda.

அதிசார சிலேட்டுமம், செரியாமையினால் பேதி, வயிற்றிரைச்சல், விலாக்குத்து, நெஞ்சுவலி, நாவறட்சி, உடம்பெரிச்சல், இருமல், தாகம், முதலிய குணங்களை யுண்டாக்கு

மோர் நோய், a form of diarrhoea from indigestion due to the phlegmatic condition of the system. It is marked by rumbling noise in the bowels, darting pain in the sides and in the intercostal region, chest pain, parched tongue, burning sensation of the body, cough, thirst etc; **2.** *அசீரணத்தினால்* குழந்தைகளுக்குப் பேதியும் அதில் சீதமும் ஏற்பட்டு, அத்துடன் சுரமும் காயுமோர் கபநோய், diarrhoea from indigestion in children due to phlegmatic causes. It is followed by fever and watery stools containing thin, white mucous - Watery or serous diarrhoea.

அதிசார சுர சமரசி, *அதிவிடயம்*, Indian Atees Acontium heterophyllum. It is so called from its power in bringing down fever (in diarrhoea) to a normal condition. See *அதிசா ரக்கினி.*

அதிசார சுரம், see *அதிசாரக் காய்ச்சல்*,

அதிசாரஞ் சுருக்கி, இலவம்பிசின், the gum of the silk - cotton tree; **2.** *அதிசார* - பேதியை நிறுத்தும் *மருந்து*, any drug capable of arresting diarrhoea.

அதி சாரணம், *மாவிலங்கு*, lingam tree, holy garlic pear - Capparis trifoliata alias Crataeva religiosa.

அதிசார தோஷம், விஷப் பூச்சியினாலும் அல்லது அசுத்த பண்டம், பாஷாணம் அல்லது விஷத்தன்மை வாய்ந்த பேதிமருந்து முதலியவைகளை உட்கொள்ளுவதினாலும், நோயை உண்டாக்கும் உடம்பின் நிலைமை. இதில் வயிறுபொருமி, வியர்த்து, வாய்பிதற்றி, உடம்பு நடுக்கங் கண்டு, இரத்தம் விழும், a morbific diathesis followed by diarrhoea due to bacterial action or the irritation of the intestines due to improper food, chemic poisons, dratic purgatives containing narcotic poison etc. It is marked by a rumbling noise of the bowels, perspiration, incoherent speech, tremor, blood in stools etc - Inflammatory or Irritative diarrhoea.

அதிசாரத் திரவியம், *அதிசாரத்திற்காகக்* கொடுக்கும் *சரக்குகளின்* தொகுப்பு, a group of elementary drugs prescribed for arresting or regulating diarrhoea - Astringents.

அதிசார நாசனி, *அதிசாரத்தைப்* போக்கு மோர் வகைச் *சரக்கு*, drug capable of curing diarrhoea; **2.** வறட்சுண்டி, a plant - Mimosa tripeutra; **3.** வெட்பூலா, white honey plant - Flueggia; **4.** தீன்பூ an unidentified drug?

அதிசார பந்தனி, *அதிசாரத்தைக்* கட்டு மோர் *சரக்கு*, any drug arresting diarrhoea; **2.** மருவகம், a plant known as Maid's love - Artemesia abrotanum.

அதிசார பந்து, கற்கடகசிங்கி, see *அதிசாரங்கட்டி.*

அதிசார பித்தம், வயிற்றி லிரைச்சலுடன் ஏற்படும் பேதி, வயிற்றுப் *பிசம்*, விலாவலி,

ஈரலெரிச்சல், மயக்க முதலிய குணங்களையுண்டாக்கு மோர் நோய், ● from of diarrhoea arising from the deranged condition of bile in the system. It is marked by rumbling noise in the sotmach, accompained by purging, distension of the abdomen, pain in the sides, burning sensation, giddness and other abdominal disorders Gastrogenic diarrhoea.

அதிசார பேதி, செரியாமையினாலேற்படும் பேதி, diarrhoea due to indigestion Dyspeptic diarrhoea; **2. அதிசாரக் கழிச்சல்,** acute diarrhoea; **3. சீதபேதி,** a fluid. discharge in which the stools consist chiefly of blood and mucous Dysentery.

அதிசார மூரி, ஊணங்கொடி, a winding plant - Convolvulus racimosus.

அதிசாரம், பெருங்குடலினுட் புறத்திலிருக்கும் சிலேட்டும சவ்வுக்கு தாபிதமும், இரணமும் கண்டு அதனால் மலத்தில் சீதமும், இரத்தமும் கலந்து விழுவதுடன் வயிற்று வலியும் காணும் நோய் -சீதபேதி, an acute specific disease due to the inflammation of the large intestine. It is marked by frequent stools containing blood and mucous and attended with griping pain in the bowels - Dysentery;

2. மலமானது வாயுவினால் கரைந்து தண்ணீராகி வயிற்றில் இரைச்சலையும் பேதியையுமுண்டாக்கு மோர் நோய். இது அநேகமாய் உணவின் குற்றங்களினால் ஏழை சனங்களைத் தாக்கும். சவலைக் குழந்தைகளுக்கும், தாய்ப் பாலில்லாமல் செயற்கை உணவினாலாதரிக்கப்படும் குழந்தைகளுக்கும், பல் முளைக்கும் குழந்தைகளுக்கும் இது சாதாரணமாக வுண்டாகும், diarrhoea arising from the deranged condition of Vayu. It is characterised by watery stools and rumbling noise in the stomach.

Poorer classes are chiefly attacked by this disease, the use of incompatible articles of food being the main cause. children weaned and those brought up by artificial food as well as those with out mother's' milk and children during their teething period are liable to this disease - Diarrhoea.

3. கிரகணி அதாவது சாதம் செரியாமல் அக்கினிமீறி, வாயு அதிகரித்து, மூலத்தில் தங்கி, எந்நேரமும் பேதியை யுண்டாக்குமோர் நோய். இது உணவின் குற்றம், அகால போசனம், அசுத்த நீரருந்தல், அதிகமாகப் போதை செய்தல், மலசல விஸர்ஜனம் முதலியவைகளினால் ஏற்படும். வேகத்தையடக்கல், அடலிற் பூச்சிகளுண்டாகுதல் முதலிய காரணங்களினாலுமுண்டாகும். சதா மலவாயிலிருந்து மலம் ஒழுகுவதைால் இதற்கிப் பெயர், a chronic dysentery arising from indigestion due to the excessive heat in the iliac region especially colon. It is chiefly due to extraneous causes such as, incompatible articles of food, untimely meals, use of poisonous substances, drinking impure water, excessive use of liquor, voluntary repression of any natural urgings of the body and germination of parasites in the intestines - Bacillary dysentery. The disease is so named form the constant oozing out of liquid fecal matter from the anus.

NOTE:- Chronic dysentery may continue for many months or even years before recovery takes place and any deviation from a prescribed monotonous diet is certain to bring on a renewed attack.

4. ஆங்கிலேய நூற்படி, அடிக்கடி நீராக மலங்கழியுமோர் வகைக் கழிச்சல் எனப் பொருள்படும்.

இது சாதாரணமாய்ப் பெருங்குடலின் உட்புறத்திலிருந்தும் சவ்வுக்குத் தாபிதமும், இரணமுங்கண்டு அதனால் மலம் நீராகவும் அத்துடன் சீதம், இரத்தம், ஊன், நிணநீர், பித்தநீர், முதலானவைகள் கலந்தும் சமயத்திற் கேற்றவாறு உடம்பை யடுத்தோ அல்லது வெளிக் காரணங்களினாலோ, குழந்தைகளுக்கோ, சிறுவர்கள், அல்லது பெரிய வர்களுக்கோ காணும் கழிச்சல் என்று சொல்லப்படும். அந்நூற்படி இது பல வகைத் தாயினும், அதிற் கூறியுள்ள எல்லா வகை நோய்களையும் நமது நாட்டிற் காணலாம்.

முதலாவது - குழந்தைகளைத் தாக்கும் நோய் வரலாறு:-

1. வேனிற் காலத்திலாவது, உஷ்ண தேசத்திலாவது தாக்குமானால் இதற்கு உஷ்ணக் கழிச்சலென்று பெயர்.

2. மாந்தத்தினால் நீராகவும், அடிக்கடி மிகுதியாகவும் பேதியானால் மாந்தக் கழிச்ச லெனப்படும்.

3. சாதாரணமாய் உணவின் குற்றம், சீதளம், செரியாமை, மலபந்தம் முதலியவைகள் சம்பந்தப்பட்டால் அது குழந்தைக் கழிச்சலென்று சொல்லப்படும்.

4. வெண்மையாகச் சீதங்கலந்து பேதியாகில் வெள்ளுடைக் கழிச்சலென்பர்.

5. ஊன் கலந்து தண்ணீராய்ப் பேதியானால் ஊன் கழிச்சலெனப்படும்.

6. நெஞ்சிற்கபம், வயிற்றிரைச்சல் இவைகள் காணில் சங்கரக் கழிச்சலென்று சொல்லப்படுவதுண்டு,

இரண்டாவது — சிறுவர்கள் அல்லது பெரியோர்களைத் தாக்கும் நோய் வரலாறு:-

(a) செரியாமையினாலும் பித்த நீர்க் கோளாறினாலும் உண்டாகுங் கழிச்சலுக்கு அசீரணக் கழிச்சலென்று பெயர்.

(b) வெயிற் காலத்திலும், ஆனி, ஆடி மாதங்களிலும், உட்டிணப் பிரதேசங்களில் சீதபேதிக்கு முன்னதாகவும் காணுங் கழிச்சலுக்குச் சீதக் கழிச்சலென்று பெயர்.

(c) அசுத்தமான உணவு, உணவின் வகைக் குற்றம், விஷம், ஆகிய இவைகளினாலேற்படும் பேதிக்கு வயிற்றுக் கடுப்பு என்று பெயர்.

(d) வாந்தி பேதிக்கு முன்னதாக வுண்டாகும் கழிச்சல், வாந்தி பேதிக் கழிச்சலெனப்படும். இதில் ஊன் வெளிப்பட்டு, வாந்தி கண்டு, ஓய்ச்சல் காணும்.

(e) உடம்பை யடுத்த கழிச்சலானால் திரிதோஷக் கழிச்சலென்று சொல்வதுண்டு.

(f) செரியாமையினாலுடானால் அது செரியாக் கழிச்சல்

(g) கணச் சூட்டினால் உடம்பு மெலிந்து காணும் கழிச்சல் தான் கணக் கழிச்சல்.

(h) ஏழை சனங்களுக்குக் தொத்து வியாதியைப் போல் பீடித்துச் சுகாதார முறையை அனுசரிக்காத குற்றத்தினாற் பெருவாரியாகக் காணுங் கழிச்சல் பெருவாரிக் கழிச்சலென்று சொல்லப்படும்.

According to Allopathic science, it is an abnormal frequency and liquidity of fecal discharge.

It is generally a term given to a number of disorders due to the inflammation and sometimes ulcers of the intestines, especially in the colon. It is attended with frequent stools containing mucous, blood, serum, chyle or gastric fluids. It may be either constitutional or due to external causes, such as, imprudence in diet, atmospheric changes, chillness etc. So it orginates from numerous causes, and every kind cf it is met with in our country.

Firstly in children-

1. if its attacks them in the Summer season or in hot countries, it is termed Summer diarrhoea or Diarrhoea alba.

2. if it is attended with watery fecal discharge ordinarily due to indigestion it is known as simple diarrhoea.

3. if it arises from errors in diet, chillness, indigestion, constipation etc, it is called infantile diarrhoea.

4. if it is one in which the stools contain thin white mucous, it is named white diarrhoea.

5. if the fecal discharge is softened by copious serous fluid, it is known as serous or watery diarrhoea.

Secondly in youngsters and adults-

(a) if it arise from indigestion or gastric disorders, it is called gastrogenic diarrhoea.

(b)if the attack is during the heat of Summer or in hot countries during June and July premonitory to dysentery it is known, as dysenteric diarrhoea.

(c) if it is one from irritation of the intestines due to improper food, errors in diet and poisons etc., it is termed Irritative diarrhoea.

(d)if it is of a serous form premonitary to cholera, accompanied by vomitting and collapse it is called Choleraic diarrhoea.

(e) if it is due to some constitutional disease, it is named 'Cahetic diarrhoea.

(f) if it is of a form attended with fluid stools containing undigested food it is known as Lienteric diarrhoea.

(g) if it is of a variety peculair to tuberculosis marked by emaciation, it is called Tuberculous diarrhoea.

(h) if it is of kind attacking many a poorer classes, in a patricular area not observing the sanitary principles and then coverting into an epidemic form, it is called Epidemic dysentery.

அதிசாரம், சத்திசாரம். இது வெடியுப்பு நவாச்சாரம், சோற்றுப்பு, பூநீறு முதலியவைகளைக் கொண்டு செய்யும் ஓர் வகை உப்பு, a kind of salt prepared from a mixture of nitre, sal-ammoniac, common salt and Pooneer (fuller's earth); 2. அதிமதுரம், sweet liquorice root - Abrus precatorius, 3. கல்லுப்பு, sea-salt; 4. சவ்வீரம், corrosive sublimate - Hydrargyri perchloridum; 5. அதிக சத்து, essence or extract; 6. மிக்க இனிப்பு, excessive sweetness.

அதிசாரம் போக்கி, ஒதிய மரம், India ash tree Odina wodier. It is s called from its virtue of curin diarrhoea.

அதிசார ரோகம், அசீரணபேதி அல்லது சீதபேதி, diarrhoea c dysentery. see அதிசாரம்.

அதிசார வுபரசம், கருப்பத்தி லுண்டாகும் ஓர் வகை நீர், a flui of the uterus; 2. பனிக் குடத்து நீர் a liquid that forms in the annioti sac in which the foctus lies Liquo amni.

அதி சிகுவை, அடி நாக்கின் கீ வீக்கத்தை உண்டாக்கிப் பின நீர்ப்பை அல்லது சிறுமுளைக போற் கொப்புளங்களை எழுப்பி புசிக்க முடியாது வலிை யுண்டாக்கு மோர் நோய், a discas of the under surface of the tongu accompanied hy a cyst or swellin and pustules all over the parts an thereby causing inability to take foo

அதிசிவம், நாக்கு அல்லது உண்ணாக்கி லுண்டாகு மோர்வி வீக்கம், a peculiar swelling of th tongue or (uvula).

அதிசிவிகம், see அதிசிவம்.

அதிசீதம், மிகக் குளிர்ச்சி, extrem chillness.

அதி சுடுகை யன்னம், சுடுசாதம், h rice.

அதிசுட்கம், சமாக்கினியி குறைவால் நாளுக்கு நாள் உடம் மெலிந்து, கழுத்து, வயிறு தொன

முதலிய உறுப்புகள் உலர்ந்து சூம்பித் தேவாங்கைப் போல் இளைத்த உருவத்தை அடையச் செய்யு மோர் நோய், a progressive wasting disease arising from modeate appetite due to digestive disorders. It is marked by loss of fat, blood and muscles in the thighs, neck, abdomen etc. and a general emaciation owing to want of nutrition - Idiapathic muscular atrophy.

அதிசுரம், கொடிய சுரம், hight fever - Hyperpyrexia,

அதிசுவாசம், மேல்மூச்சு, hard breath; 2. அளவு கடந்து விடு மூச்சு, breathing in excess of the needs of the system - Luxus breathing.

NOTE:- Accelerated respiration is that which exceeds 25 respirations per minute.

அதி சுழுத்தி, மயக்கத்தோடு கூடிய தூக்கம், (In pathology), a sleep accompanied by giddiness or suspension of sensibility - Coma; 2. மூன்றா மவஸ்தையாகிய உயிர் நிலை உபாதி. (In Vedanta philosophy) a state in which the soul rapt in visions seems to have passed out of the body. This engrossment of the faculties is generally experience only in the Yoga practice.

3. சப்தாவஸ்தைகளிலொன்று, தாவது தற்கால நிலைமையைக் கருதிய பின்னிட்டு நடக்கப்போகுங் காரியங்களை யறிதல், -எதிர்கால வுணர்ச்சி, (In Agama Philosophy) an intellectual faculty of knowing the future events from the present condition or circumstances.

4. பரவசம் அதாவது கடவுளிடத்திலுள்ள பக்தி அல்லது அன்பின் மேலீட்டினால் தன்வசமற்றிருத்தல், (In religious philosophy) suspension of the functions of the senses in the contemplation of the Supreme - state of rapture and delight of an outburst of feeling - Ecstasy.

5. மனமானது மேம்பட்ட விஷயங்களில் ஈடுபடுவதால் தன்னுடம்பையும் தன்னைச் சுற்றிலுமுள்ளவைகளையும் மறந்து நிற்கும், நரம்பைப் பற்றிய வோர் நிலைமை, (In psychology), a nervous condition in which the mind is absorbed in a dominant idea and the person concerned becomes insensible to his body and to the surrounding objects - Trance.

6. குறி சொல்லும் பொழுதும் ஆவேசமடையும் பொழுதும் மூர்ச்சை யடையுமோர் நிலைமை, (In historical use) a state of paroxysm supposed to accompany prophetic inspiration, frenzy etc - Poetic frenzy or rapture.

NOTE: Susupti as it is termed in other languages is the consciousness of blissful ignorance or positive consciousness. It is a state of calmness of existence in which there will be absence or negation of pleasure or pain.

A searching analysis of psychological experience will only lead to the conclusion that it is a sort of deep sleep in which the mind is carried every day to Brahmam and the subject becomes indentified or one with the truth.

For further details see under சுழுத்தி.

அதிதல சிலேட்டமும், ஓர் வகைச் சிலேட்டும நோய், a kind of phlegmatic disease?

அதிதனு, பொன், gold.

அதிதாகம், மிக்க விடாய், intense thirst - Anadypsia.

அதிதாபக வாதம், (அதி = மிகுதி + தாபகம் - தவிக்கச் செய்தல்) உடம்பைத் தவிக்கச் செய்யு மோர் வாத நோய். இது உணவின் குற்றத்தினாற் பிறந்து சர்வாங்கத்தையும் அனுசரித்து, பேதி, வாந்தி, ஆயாசம், வயிற்றுப்பிசம் முதலிய பலவித வேதனைகளை யுண்டு பண்ணி, மறத்தல், கழலல், உதரல், முதலயி குணங்களைக் காட்டி, தவிக்கச் செய்யும். மூன்று நாள் வரை அசாத்தியம்; பிறகு சாத்தியமாகும், a kind of nervous prostration arising from errors in diet and extending all over the body.

It is attended with purging, vomiting, distension of the abdoment etc and alos accompanied by numbness, giddiness, tremor and other distressing symptoms. The seriousness will continue for three days after which the patient may show progress - Gastric neurasthenia.

அதி தாரம், இலந்தை, Indian plum - Ziziphus jujuba.

அதிதி பூசிதம், சத்தி சாரணை, a plant; spreading hogweed - Boerhaavia procumbens alias B. diffusa.

அதி திப்பம், பசியின்மை, loss of appetite - Anorexia.

அதி தீபம், பேரரத்தை, greater galangal - Alpinnia galanga (major).

அதி தீபனம், மிகுந்த பசி, voracious hunger - Bulimia, 2. பொறுக்க முடியாப் பசி, an unbearable or abnormal increase in the sensation of hunger - Hyperorexia.

அதி தும்மற் பீனசம், கபால வறட்சியினாலும், நாசித் தண்டாகிய எலும்பில் அடிபடுவதானலும் வாயு மிகுந்து, நாசி, கண், வாய், செவி ஆகிய இடங்களை அடைப்பதனாலும் எந்நேரமும் தும்மலை யுண்டாக்கு மோர் வகைப் பீனசம். இதற்கு வட மொழியில் புரி சட்சல பீனிசம் என்று பெயர், a kind of nasal catarrh marked by constant sneezing. it is due to the dryness of the scalp, traumatic causes and obstruction in nasal passages and other openings due to the deranged condition of Vayu - Acute Catarrhal Rhinitis.

அதி துற்பலம், மிக்க பலவீனம், excessive weakness - Hyperasthenia.

அதி தூக்கம், மிகுந்த தூக்கம், excessive drowsiness - Hypersomnia; **2. ஆழ்ந்த நித்திரை,** deep sleep; **3. மெய் மறந்த தூக்கம்,** unconscious sleep.

அதி தூலம், மிக்கப் பாரித்த வுடம்பு, excessive development of the muscular tissues - Hypermyotrophy; **2. மிக்கக் கொழுத்த உடம்பு,** excessive accumulation of fat in the system -Obesity.

அதிதூல ரோகம், ஆண் பிள்ளைகளுக்குப் பூதம் போல் உடம்பைப் பருக்கச் செய்யு மோர் நோய், (in male) an abnormal over growth of the body - Gigantism. It is said to be the result of a disease of the pituitary body.

2. பெண்களுக்குச் சூதக வாயு, செல்வாக்கு முதலிய காரணங்களினால் உடம்பு பருத்துக் காணுவது மல்லாமல் மார்பு, தொடை, வயிறு, பிட்டம் முதலியன அளவு கடந்து பெருத்தும் அதனால் ஆயாசம், இரைப்பு, மேல் மூச்சு முதலிய குணங்களையும் காட்டு மோர் நோய், (in female) excessive or monstrous size and stature as a result of irregular menstruation, and good circumstances in life without exercise etc. it is marked by an abnormal growth in certain organs or parts of the body such as, the chest, abdomen, thighs, buttocks, etc.

NOTE:-A herediatary tendency to get fat is also an unavoidable cause. Next comes laziness and over indulgence in food, especially when combined with a sleepy disposisition.

அதிதோவயம், சர்வத் திராவகம், a fluid that dissolves any substance or in which any solution is effected - Universal solvent.

அதி நடுக்கம், மிகுந்த பயம், excessive tremor or fear - Hypertromos.

அதி நரம், சீமை அதிமதுரம், sweet root - Glycirrhiza glabra.

அதிநாரம், இலந்தை, Indian plum - Ziziphus jujuba see **அதிதாரம்.**

அதிநிதி, நவச்சாரம், hydrochlorate of ammonia - Sal ammoniac.

அதிநீர், மிக்க நீர், excess of water, as in cold; **2. அதி மூத்திரம்,** excessive urine, as in diabetes.

அதிநீர்த் தாகம், மிக்க விடாய், excessive thirst.

அதி நீலம், இலுப்பை, honey tree - Bassia longifolia alias B. latifolia.

அதிபசமி, கொன்றை, indian laburnam - Cassia fistula.

அதிபசி, அகாதபசி, abnormal increase in the sensation of hunger - Hyperorexia.

அதிப தாதி, செம்பசளை, a red species of Indian spinach - Spinacha oleracea.

அதிபதி, சண்பகம், Indian Magnolia - Michelia champaca.

அதிபதிங்கி கொடி வேலி, a plant, Leadwort - Plumbago zeylanica,

அதிபதிச் சங்கம், வாலுளுவை, climbing staff-plant - Celastrus paniculata alias Vernonia anthelmintica.

அதிபதிச்சம், see **அதிபதிச் சங்கம்.**

அதிபதிஞ்சி, see **அதிபதிங்கி.**

அதிபதுங்கி, see **அதிபதிங்கி.**

அதி பத்திரம், தேக்கு மரம், teak tree - Tectona grandis; **2. மயிர் மாணிக்கம்,** morning mallow - Sida acuta.

அதிபம், வேம்பு, margosa tree - Azardirachta indica alias Melia Azadirachta; **2. மூளையின் முக்கிய பாகம்,** the superior portion of the brain - Cerebrum.

அதிபலம், மிகுந்த பலம், abnormal strength; **2. நேர்வாளம்,** croton - oil plant - Croton tigilium, **3. மயிர் மாணிக்கம்,** morning mallow - Sida acuta.

அதி பலா, சிறுதுத்தி, evening mallow - Abutilon crispum.

அதிபலை, பேரா முட்டி, fragrant sticky mallow - Pavonia odorata; **2. தாகத்தைத் தீர்த்து அதிக பலத்தைத் தரும் ஓர் மந்திரம்,** a powerful mantram, or incantation for removing thirst and bestowing strength and vigour to the body.

அதி பல் கூச்சம், see **அதிபற் கூச்சம்.**

அதி பறிச்சம், வாலுளுவை, intellect tree - Celastrus paniculata. See **அதிபதிச்சங்கம்.**

அதிபற் கூச்சம், பற்கள் அதிகமாகக் கூசுதல், great sensitiveness of the teeth - Odonthemodia.

அதிபாதிதம், முற்றுமொடிந்தது, that which is completely broken; **2. முழுவதம் முறிந்து எலும்பு,** (in medicine) the complete fracture of a bone.

அதிபாரகம், கோவேறு கழுதை, இது கழுதைக்கும் குதிரைக்கும் பிறந்தது, mule which is an offspring of an ass and a mare or a horse and a she-ass.

அதிபாற் சொறிவு, மிகுதியான பால் சுரப்பு, excessive secretion of milk - Hyperlactation; **2. முலைப்பால் மிகுதியாகச் சுரந்து ஒழுகுதல்,** an excessive secretion and flow of milk in a nursing woman - Galactorrhea.

அதிபானம், மதுபானம், toddy, liquor; **2. அதிகமாகக் குடித்தல்,** drinking liquor to excess - guzzle.

அதிபித்தம், பித்தாதிக்கம், excessive secretion of bile - Hypercholia. See also **அகாத பித்தம்.**

அதிபூதம், மாயாமலம், the spiritual substratum of the material or gross objects; **2. மாயாசக்தி** the all-penetrating influences of the Supreme Spirit. **3. பிரகிருதிமாயை அதாவது பிரபஞ்சத்திற்குக் காரணமான மாயை,** material Maya (illusion) from which this material world is created. See **அசுத்த மாயை.**

அதிபேதி, குய்ய பேதி, over-purgatiion i.e., excessive purging or the result of too free use of cathartic medicines - Hypercatharsis; **2. அதிசார பேதி,** which see; **3. அதிகமாகப் பேதித்தல்,** (in alchemy) subjecting to decomposition or testing several times.

அதிபோகம், மிகுந்த பெண் போகம், excess or over indulgence in, sexual enjoyment; . **அதிகமான இன்பம்,** excessive pleasure.

அதிபோக சக்தி, நெடுநேரம் சம்போகம் செய்தற்குறிய ஆண்மை, virile power for sustaining sexual enjoyment for a longer duration; **2. அதிகமாகப் புணர்ச்சி செயதற்குறிய வலிவு,** power in man for excess of sexual intercourse.

அதிபோசம், ஊட்டத்தினாலும், அதிகமாக வுபயோகிப்பதனாலும் அல்லது வேறுவித காரணத்தினாலும், அங்கம் மிகுதியாக வளருதல் excessive growth of an organ by over nourishment, over-use or any other cause - Hypertrophy.

அதி போசனம், அளவு கடந்து புசித்தல், excess in the amount of food taken;- Hyperalimentation.

அதிபோசன ரோகம், மிகுந்த ஊட்டம் அல்லது சாப்பாடினாலேற்படும் நோய், disease due to excess in eating or excessive nourishment.

அதிமதுக் குரு, நீரிழிவு ரோகத்தில் சர்க்கரையினாலேற்படும் குருக்கள், small papules occuring in diabetes due to irritation of the skin - Symptomatic prurigo.

அதிமதுக் குருதி, அதிகமாகத் தித்திப்புச் சேர்ந்த இரத்தம், excess of sugar in the blood - Hyperglycemia.

அதிமதுரப் பாணி, see **அதிமதுரப் பால்.**

அதி மதுரப் பால், அதிமதுரச் செடியின், வேரினின்று வடிக்கும் பால். இது ஓர் கடைச் சரக்கு, இதை வாயிலடக்கிக் கொள்ள நாவறட்சி, வாய்ப்புண், வேக்காளம், முதலியவை நீங்கும், a dry extract prepared from the decoction of the roots of honey creeper by evaporation - liquorice.

It is bazaar drug found often useful in cases of thirst or parched tongue, stomatitis or ulcers of the mouth, inflammation of the mouth etc. It gives to pharmacopoea glicirrhizae radix (officinal).

அதிமதுரம், மிக்கத் தித்திப்பு (lit) excessive sweetness; **2. சீமை அதி மதுரம்,** honey-creeper - Glycirrhiza triphylla; **3. நாட்டு அதிமதுரம் அல்லது குன்றிவேர்,** Indian liquorice root - Aburs precatorious.

NOTE:- This is usually sold in bazaars as a substitute for the genuine drug if it is not available.

அதிமதுரம், ஓர் கடைச் சரக்கு, இது வொரு கொடியின் வேர், சாதாரணமாக வங்காள தேசம், பாரசீகம், பருசாரா, முதலியவிடங்களிலிருந்து இறக்கு மதியாகிறது. இதற்குச் சீமை அதிமதுரமென்று பெயர். இது பெருவிரற் கனத்தில் பார்வைக்குச் சிகப்பு அல்லது சாம்பல் நிறமாயும் ஒடித்தால் மஞ்சள் நிறமாயும் இனிப்பாயு மிருக்கும். இது தான் பெரும்பாலும் எல்லாக் கடைகளிலும் விற்கப்பட்டு வருகின்றது.

நாட்டு அதிமதுர மென்னு மோர் வகையுமுண்டு. அதுதான் குன்றி மணி வேர், கடைகளிலிதை மேற் சொன்ன வேருக்குப் பதிலாகக் கொடுப்பார்கள். இது சிறியதாகவும் விரற் பருமனுள்ள தாகவும் ஒடித்தால் வெண்மையாகவும் சிறிது இனிப்பாகவும், வழ வழப்புள்ளதாகவு மிருக்கும்.

முதற் சொன்ன வேரைக் கஷாய மிட்டு இருமல், க்ஷயம், பெரும்பாடு, வெள்ளை முதலிய நோய்களுக்குக் கொடுப்பர். அது மலத்தை இளக்கும்.

இதன் தூள் பீனசத்திற்கும், சில்லி மூக்கிலிருந்து வருமிரத்தத்தை நிறுத்தவும், நசியமாகக் கொள்ளப்படும்.

இதைக் கரிய போளம், நிலா விரை, நிலவேம்பு, முதலிய கசப்புச் சரக்குகளோடு இனிப்பைத் தருவதற்காகச் சேர்ப்பதுண்டு. இதைக் கஷாய மிட்டுப் பனங் கற்கண்டோடு சேர்த்துக் கொடுக்க நீர்ச் சுருக்கு குணமாகும்.

A sweet root of liquorice plant or Honey creeper - Glycirrhiza glabra, alias G. triphylla.

It is the root of a creeper and is imported from Bengal, Persia, Bussorah and other places. It is called 'Foreign sweet-root'

It is very long, about the size of a thumb, flexible, fibrous, of a brown or grey colour but yellow inside and sweet in taste. It is this kind that is mostly met with in bazaars.

Another variety called Indian or Country liquorice root, which is nothing but the root of Abrus precatorious. It is not only used as a substitute for the root above mentioned (G. glabra), but is also sold indiscriminately under the same name.

It is much smaller and seldom grows to the size of a thumb. It is brown externally and white internally and is not distinctly sweet. It is mucilaginous.

It has a high repute in infusion for cough, consumption, gonorrhoea, menorrhagia etc, and is considered a mild laxative. The powder of the root is used as snuff in catarrhal affections of the nose and to arrest bleeding, as in epistaxis.

It has the power of covering the flavour of nauseous medicines like Black myrrh. Indian senna, Chiretta etc. A decoction of the root mixed with palmyra sugar-candy cures painful urination.

NOTE:- The root is demulcent, cooling and useful in inflammatory affections such as, hoarseness, sore throat etc. it is much used in pharmaceutical prepartions as an adjunct using clarified butter and for covering the flavour of decoctions, oils and ghritas or similar nauseous preparations.

அதி மந்தம், கண்ணை வேருடன் பிடுங்குவது போல் மிக்க வலியையும், அத்துடன் ஒற்றைத் தலைவலியையு முண்டாக்கு மோர் விதக் கண்ணோய், a disease invariably attended with n excruciating pain in the eye with a feeling as if it is being rooted out. The pain extends upward to one side of the head.

அதி மந்தாரம், கண்களில் வலியை யுண்டாக்கிக் கடுத்து நீர் வடிதலுடன் பாவையில் குத்தலுண்டாக்கிப் பார்வையை நாளுக்கு நாள் இரண்டு வரும்படிச் செய்யுமோர் கண்ணோய். இதற்கு மருந்திட அதிகமாகுமேயன்றிக் குணப்படாது, a chronic disease of the eye marked by inflammation and darting pain of the cornea, watery discharge from the eyes, and gradual hazy appearance. It is incurable and if treated likely to grow worse - Interstitial keratitis.

அதி மந்திதம், கண்ணோயால் துன்புறுதல், suffering from eye-disease (ophthalmia).

அதி மயிர் வளர்த்தி, தலைமயிர் அதிகமாக வளருதல், excessive growth of hair on the scalp; 2. உடம்பில் அதிகமாக மயிர் முளைத்தல், excessive growth of hair all over body - Hypertrichiasis universalis.

அதி மலம், மாவிலிங்கம், sacred lingam tree - Crataeva religiosa; 2. அதிக மலந்தள்ளல், excessive discharge of fecal matter.

அதி மாங்கிசம், பொதுவாக அர்த்தங் கொள்ளில், மிகச் சதைவளர்த்தி எனலாம். இது உடம்பில் பல உறுப்புகளிற் ஏற்படலாம், literally is means the excessive growth of flesh in any organ or part of the body - Hypertrophy see அதிக மாமிசம்; 2. கண்ணிற் சதை வளர்ந்து துன்புறுத்து மோர் நோய்; a disease of the conjunctiva characterised by the thickening of the membrane - pterygium.

அதி மாத்திரை, அளவிற்கு மேல், above measure; in excess of prescribed limit; excessive; (in medicine) overdose.

அதிமாமிசகம், ஈறு சுரந்து அதனால் ஏற்படும் பல்வலி, painful sensation in the gum of the teeth due to its abnormal growth; 2. உண்ணாக்கு வளர்ந்து அதனாலுண்டாகு மழற்சி, inflammation due to the elongation of the uvula - Uvulitis.

அதிமாமிசக் கழலை, சதை வளர்ச்சி மிகுதியாகவுள்ள கழலைக் கட்டி, a tumour blended with sarcoma - Hemangio sarcoma.

அதிமாமிச சருமன், வெள் விழிமேல் சதை வளர்ந்து உலர்ந்த இரத்த வுண்டையைப் போல் கறுத்தும், பருத்து மிருக்கு மோர் கண்ணோய், a soft, thick, extended overgrowth of flesh resembling a dried clot of blood in colour, on the white of the eye.

அதி மாமிச பாகம், உடம்பிலுறுப்புகளில் ஏதாவதொரு பாகத்தில் உண்டாகும் சதைப் பெருக்கு அல்லது சதை வளர்த்தி, morbid enlargement or overgrowth of any part of an organ - Hypertrophy, See also அதிமாமிசம்.

அதி மாமிசம் (அதி+மாமிசம்) = அதிகமான சதை வளர்த்தி, excessive growth of flesh; 2. உடம்பின் உறுப்புக்களில் சதை பருத்துக் காணல், the morbid enlargement or over-growth of an organ in the body-Hypertrophy; 3. ஏதாவதோர் உறுப்பில் அல்லது உடம்பின் ஓர் பாகத்தில் புதிதாக வுண்டாகும் கழலை முதலிய சதைவளர்ச்சி, any new or abnormal formation of flesh in any organ or part of the body, like a tumour, false membrane etc - Neoplasm; 4. உடம்பின் சூட்டினால் கண் சிவந்து சதை வளர்ந்து உறுத்துமோர் கண்ணோய், an inflammation of the eyes, especially of the conjunctive, characterised by an abnormal growth and painful irritation - Conjuhctivitis; 5. பாவை பச்சை நிறமாகி நாளுக்கு நாள் கண் புகைச்சல் அதிகமாகிச் சதை வளர்ந்து பார்வையை யிழந்து, எரிச்சல், நீர் வடிதல், நிமிர்ந்து நேரே பார்க்க அலகினால் குத்தினாற் போல் வலியை யுண்டாக்கு மோர் கண்ணோய், an inflammation of the cornea marked by greenish growth over the pupil of the eye, progressive hazy appearance resulting in the loss of sight, watery discharge from the eyes and darting pain in the uvea (dark portion) with the inability to look erect and straight - Green cataract.

6. புரைக் கழலை, சதைப் பற்றுள்ள கழலை, a fleshy growth or tumour generally of a malignant character - Sarcom. See அதி மாங்கிஷம்; 7. ஒரு கழலைக்குள் வளரும் மற்றொரு கழலை, a proliferous cyst situated within a cyst - Serocystic sarcoma.

அதி மாமிச ரோகம், *உடம்பின் வெளி அல்லது உள்ளுறுப்புக்களிலும், எலும்பு, தசை, தோல், முதலிய பாகங்களிலும், சதை வளருவதாலேற்படும் நோய்,* any disease due to hypertrophy or overgrowth of the flesh in any organ or part thereof, either internal or external or on the surfaces of the bones, flesh, skin etc. **2.** *பற்களின் வேர்ச் சந்துகளில் ஆணியை யொத்த கட்டிகளை எழுப்பித் தாடையிலும், காதுகளிலும் வலியையும், சுரத்தையு முண்டாக்கு மோர் வகைப் பல் நோய்,* a disease of the teeth in which alveloar spaces are filled with sarcoma - cells. It is attended with fever, pain in the cheeks and the ears - Alveolar sarcoma, See *தந்த மூல ரோகம்.*

அதி மாமிசா சரும ரோகம், *கண்ணின் வெள்விழியில் அதிகமாய்ச் சதை வளர்ந்து காணப்படு மோர் நோய்,* a fleshy growth in the white of the eye; **2.** *பிறவியில் ஏற்படும் கண்ணின் சதை மடிப்பு,* an anomaly of the eye in which a patch of the thickened conjunctive extends over a part of the cornea - Epitarsus or Congenital pterygium.

அதிமிதம், *ஈரமில்லாதது,* that which is deprived of mositure.

அதி மிருத்தியாதி மாத்திரை, *கோரோசனை மாத்திரை,* a pill prepared from bezoar mixed with other ingredients. It is generally prescribed by veidyans for children.

அதி முத்தகம், *அணிச்சை,* ring-worm root - Rhinacanthus communis; **2.** *மஞ்சள் மந்தாரை,* mountain ebony - Bauhinia tomentosa.

அதி முத்தம், *குருக்கத்தி,* delight of the woods - Hiptage madablota alias Gaertnera racemosa; **2.** *நரி வேங்கை,* a tree - Dalbergia ougeinensis.

அதி மூத்திர நீக்கி, *சிவப்புப் பொன்னாங்கண்ணி,* a red species of edible plant; river Blatty - Illecebrum sessile.

அதிமூத்திரம் *மூத்திரம் மிகுதியாகப் பெய்தல்,* excessive secretion of urine - Hyperdiuresis; **2.** *பகு மூத்திரம்,* a kind of diabetes - Diabetes insipidus.

அதி மூத்திர வொழுக்கு, *மூத்திரம் மிகுதியாக வொழுகுதல்,* an excessive flow of urine - urrorrhagia; **2.** *மூத்திர தாரையினின்று அதிகமாக மூத்திரம் ஒழுகுதல்,* an abnormal discharge from the urethra - Urethrorrhea.

அதி மைதுனம், *அதிகமாகப் பெண்களைப் புணருதல்,* excess of sexual intercourse.

அதி மோகம், *காம விகாரம்,* excessive venereal impulse in the male - Satyriasis; **2.** *ஒரு தலைக் காமம்,* abnormal increase of the sexual impulse before it is reciprocated - Sexual hyperesthesia.

அதி மோதம், *மிக்க வாசனை,* extraordinary fragrance; **2.** *மல்லிகை மரம்,* jasmine tree - Jasmine arboreum.

அதியக்கினி, *நோயாலேற்படும் அகோரப் பசி,* extreme hunger from morbid causes, as in diabetes; **2.** *மிக்கச் சூடு,* extreme heat.

அதியசனம், *உண்ட வுணவு செரியா முன்னம் மறுபடியும் உணவை உட்கொள்ளுதல்,* eating too soon after a meal before it is digested; **2.** *அளவு கடந்து புசித்தல்,* immoderate eating; gormandizing.

அதியண்டம், *பூனைக்காலி,* cowhage plant - Carpopogon pruriens alias Flacourtia cataphracta.

அதியத்தம், *எலும்பின் மேற் பாகம்,* the upper part of a bone.

அதியத்தி, *எலும்பின் மேல் எலும்பு வளர்தல்,* a bone growing over another; a bony growth projecting outward from the surface of a bone - Exostoses.

அதியாமில பரணி, *புளியிலை,* tamarind leaves - Tamarindus indica; **2.** *மாவிலை,* mango-leaf-Mangiferus indica; **3.** *புளிச்சிறு கீரை,* a medicinal plant having sour leaves; Sour greens - Oxalis corniculata.

அதியாமிலம், *புளிமா,* sour mango tree - Spondias mangifera; **2.** *புளிநாரத்தை,* a species of citron - Citron aurantium.

அதியம், *அப்பிரக பாஷாணம்,* a kind of mineral poison prepared from mica.

அதியருவதம், *ஏற்கனவேயிருக்கும் கழலைமேற் புறப்படும் மற்றொரு அசாத்தியக் கழலைக் கட்டி,* an incurable tumour cropping up on one existing already - Secondary tumour; **2.** *ஏக காலத்தில் அல்லது ஒன்றன் பின் னொன்றாக வெழும்பும் பல கழலைக்கட்டிகள்,* numerous contiguous tumours cropping up simultaneously or one after another - Multiple tumour.

அதியாத்துமிகம், *ஆன்மாவுக் குரிய,* relating to the soul; **2.** *பரமாத்துமா,* the Supreme spirit.

அதியாமம், *அறுகம் புல்,* couch grass - Agrostis linearis; **2.** *முயற்புல்,* Cynodon grass - Cynodon dactylon.

அதியுட்டிணம், *மிக்க வெப்பம்,* extreme heat; **2.** *மிக்கக் கொதிப்பு,* excessive rise in temperature - hyperthermia.

அதியுமிழ்தல், *மிகுதியாக எச்சல் உமிழ்தல்,* spitting saliva in excess; **2.** *அதிகமாக வாய் நீருறலால் உமிழ்தல்,* constant spitting owing to excessive flow of saliva; **3.** *ரசமருந்தை உபயோகித்தலால் வாய் பிடித்துச் சதா வாயில் நீர் ஒழுகல்,* abnormal flow of saliva due to misuse of mercury - Mercurialism alias Mercury Ptyalism.

அதியோகம், அதிகமாகச் செய்யு மருந்துப் பிரயோகம், over dosage; 2. பேதியாகுமருந்தை அதிகமாகப் புகட்டல், over-drugging with purgatives.

NOTE:-Wrong application or misuse of Vastis (enema) also comes under this head.

அதியோமகம், சிவப்பு வாடாமல்லி, red globe everlasting jasmine - Gomphrena globosa.

அதியோனிப் பூப்பு, சிறு பெண்களுக்குப் பருவத்திற்கு முன்னதாகவே சனன வுறுப்புகள் அதிவிரைவாகப் பக்குவப்படுதல், excessive activity of the genital glands, resulting in precocious puberty, genital over-development etc. - Hyper-genitalism.

அதிரசக் குழம்பு, மிகவும் தித்திப்பான பாயசம், thickened juice or liquid essence obtained by boiling crushed rice, wheat or other grains in milk and sugar.

It is marked by emaciation, loss of senses, inflammation of the eyes, nausea, sleeplessness, constant thirst, trembling, and other symptoms - Osteomyelitis.

அஸ்தி சுரம், குழந்தைகளுக்கு நடுராத்திரியிற் காணும் எலும்பைப் பற்றிய வோர் வகைக் காய்ச்சல். இதனால் உடல் வற்றிப் புத்தி கலங்கிக், கண் சிவந்து, வெள்ளோக் காளம், தூக்கமின்மை, அடங்காத் தாகம், உடல் நடுக்கம் முதலிய குணங்கள் உண்டாகும், a midnight fever common in children, arising from the affection of bones in the system - Midnight.

அஸ்தி மேகம், மேக நோயினாலேற்படும் ஓர் எலும்புருக்கி நோய், necrosis of a bone caused by syphilis - Syphilitic necrosis; 2. மேகத்தினால் மூத்திரம் பால் போ லொழுகல், discharge or urine with milky appearance due to the presence of fat - Chyluria.

அஸ்வசுகசாதி, சுண் சாதி நான்கு வகைச் சாதிகளுள் ஒன்று, one of the 4 classes of men divided according to lust.

அநகம், புல்லுருவி, a parasitic plant - Loranthus (genus).

அநக்கினி, உதராக்கினியின் செய்கை யற்றவன், one who is deprived in his system of the action of gastric fire, said to be the cause of hunger.

அநங்கம், மல்லிகை jasmine Jasminum Sambuc; 2. இருவாட்சி,.

a running flower plant - Jasminum Sambuc (flore manoral pleno); **3. உடலின்மை,** having no corporeal body; **4. உடலற்ற தன்மை;** the quality or state of being incorporeal Incorporeality.

அநங்கலி, சிறு தேட் கொடுக்கி, இதனால், தீராத எலும்புருக்கி நோயும் போம், small leaved Tiaridium Indicum, a cure for all affections of bones as necrosis etc.

அங்கன், 2. காமன், the Indian cupid.

அநதி ரோகம், அதிக நோயில்லாமை, not much affected by disease.

அநந்த ஞானி, சூரியன், the sun.

அநந்தம், கோளக பாஷாணம், one of the 32 kinds of native arsenic; **2. பொன்,** gold, **3. ஆகாயம்,** sky; ether pervading all space, **4. கொடிப் பசலை,** nail dye Barleria prionitis; **5. நன்னாரி,** Indian sarasaparilla - Hemidesmus indicus.

NOTE It is a common name to those plants with spreading roots.

அநந்த வாதம், முகமும், கழுத்தும் சோரும்படிச் செய்யு மோர் வகை நோய். ஓர் எல்லை அல்லது அளவின்றி உடம்பில் பல விடங்களிலும் பரவக் கூடியதால் இப்பெயர், a form of paralysis affecting the muscles of the face, mouth and pharynx Bulbar paralysis. It is so called from its progressive and extensive nature to the several centres of the body.

அநந்தன், வெடியுப்பு, nitre - Potassium nitrate (KNO_3); **2. கோளக பாஷாணம்,** a kind of native arsenic. See **அநந்தம்.**

அநந்தை, அறுகு, sacred grass; harialli grass - Agrostis linearis; **2. கொத்தான் கொடி,** leafless - creeper - Cassytha filiformis; **3. நெல்லி மரம்,** small-leaved goose-berry - Phyllanthus emblica.

அநபத்தியம், பிள்ளையில்லாமை, incapacity to produce children or progeny - Sterility.

அநம், சோறு, boiled rice.

அநம்பு, சாதகப்புள், lark; **2. நீரில்லாதது,** that which is destitute of water or is waterless; **3. ஈர மில்லாதது,** that which is deprived of moisture.

அநரவன், வெந்தோன்றி, plough root - Gloriosa superba; **2. பாஷாணம்,** poison; **2. பஞ்சபட்சி பாஷாணம்,** a kind of prepared arsenic.

அநலசனப் பட்சி, நெருப்புக் கோழி, the ostrich.

அநல பித்தம், உண்ட வுணவைச் செரிக்கச் செய்யு மோர் பித்த நீர், a fluid secreted in the stomach forming the principle agent in digestion - Gastric juice.

அநலம், பித்தம், bile; **2. உஷ்ணம்,** heat; **3. சித்திரமூலம்,** Ceylon leadwort - Plumbago zeylanica.

அநலல், சூடாயிருத்தல், to be hot; **2. அனற்றல்,** to feel great heat in the body, to glow.

அநலாடு வேந்தன், கார் முகிற் பாஷாணம், a kind of prepared dark arsenic.

அநலி, நெருப்பு, fire; **2. சூரியன்,** the sun.

அநல், கொடி வேலி, a plan,t Ceylon lead, wort - Plumbago zeylanica; **2. பித்தம்,** bile; **3. மூலாக்கினி,** warmth of the stomach - Gastric fire; **4. உஷ்ணம்,** heat; **5. வன்னியிலை,** the leaves of the vanni tree; Arjunas penance tree - Prosopis Spicigera.

அநல் வென்றி, தங்கம், refined gold; **2. நெருப்பை வென்றது,** that which has over come fire.

அநற்காலி, சூரிய காந்தக்கல், sun-stone. It is so called from its production of heat when exposed to the sun.

அநற் கல், சக்கிமுக்கிக்கல், பண்டைக்காலத்திலிதை நெருப்புண்டாக்க வுபயோகித்து வந்தார்கள், a flint to strike fire. It is a very hard silicious stone of the species of quartz formerly used to strike fire in place of match - Flint.

அநற்றல், எரித்தல், to burn with intense heat; **2. சுடுதல்,** to feel the great heat of the body.

அநா, சுவாசம் breath, respiration.

அநாகத சுரம், மார்புத் தானத்திலிருந்தெழுமோர் வகைக் காய்ச்சல், a fever arising from disorders or diseases in the region of the heart.

அநாகதம், சொல்லப்படாதது, that which cannot be revealed or divulged; **2. அறியப்படாதது,** that which cannot be ordinarily recognised; **3. வருங்காலம்,** the future; **4. ஆறாதாரங்களி லொன்று. இது மணி பூரகத்திற்குப் பத்து விரற் பிரமாணத்திற்கு மேல் இருதய கமலத்தில் 'முக்கோண வடி விளதாய்ப் பன்னிரண்டு இதழ்'கள் அமைந்ததெனச் சொல்லப்படும்,** (in Psychology) one of the six supports or mainstay of life. It is one of the six nerve centres in the human body. It is said to be situated in the heart at a distance which is ten finger's breadth above 'Manipurakam' another nervecentre situated in the navel region. It is triangular in shape consisting of 12 petals.

NOTE: This corresponds to the cardiac centre supposed to be the seat of dometic feelings.

The six nerve-centres referred to above are known as lotuses and hence

the use of the term 'petals' which are nothing but nerve-endings. These centres when stimulated, originate forces conducive to the opening of higher spiritual consciousness.

They probably correspond to the various plexuses or ganglionic centres (the nerve groups) where vitality and sensation are believed to be more strongly congregated than in other portions of the body.

See also அனாகதம்.

அநாகாரம், உணவின்மை, being deprived of food.

அநாசிகன், மூக்கில்லாதவன், one who is deprived or destitute of nose.

அநாதப் பிரேதம், கதியற்ற சவம், unclaimed corpse.

அநாதப் பிள்வள, ஆதரவற்ற குழந்தை, a child bereaved of parents; a destitute child - Orphan.

அநாதர் விசிகம், தாயற்ற அல்லது கதியற்ற குழந்தைகளைக் காப்பாற்று மிடம், a place where children without parents or any one to take care of them and also infants, deserted, or left exposed are brought up - Foundling Hospital.

அநாதிபதி, துரியாதீத நிலை, the highest state or soul completely free from corporeal entanglements.

அநாதுரம், நோயற்றிருத்தல், to be free from disease.

அநாமயம், நோயற்ற தன்மை, the state of being free from disease; healthy.

அநாமயன், நோயில்லாதவன், one who is free from disease.

அநாமிகை, மோதிர விரல், ring-finger.

அநாயாசக வாதம், (அநா=பிராணன் + ஆயாசகம் = வருத்தம்) சீதளத்தினாலும், அவபத்தியமான பண்டங்களைப் புசிப்பதனாலுமுண்டாகி, உடம்பில் சகல தாதுக்களிலம் பரவி, அவ்வவ் வுருப்பகளுக் கியற்கையாக வேற்பட்ட தொழில்களை இயக்கி, இரத்தவோட்டம் மல சலம் இவைகளைத் தாக்கி, அதனாலுடம்பு களத்துக் குத்தல், மறத்தல், களத்தல் முதலிய குணங்களை யுண்டாக்குமோர் வாத நோய், a kind of nervous affection characterised by shooting pain, numbness, heaviness etc. in the body. It is due to the affection of the natural function of the respective organs, with reference to the circulatory system as well as to the interference with the discharge of fecal matter and urine, due to the derangement of Vayu caused by errors in diet and climatic conditions such as, chillness etc.

அநாரிய தித்தம், நில வேம்பு, ground neem, French chirreta - Andrographis paniculata alias Justicia paniculata.

NOTE:- This is equivalent to another bitter plant called Colombo root - Severtia chiretta. It is a Non-Aryan bitter plant used for bilious and torpid fever. The bitterness is due to a non-basic principle, there being no alkaloid. For full details see under நிலவேம்பு.

அநாரோக்கியம், சுகமின்மை, not sound and vigorous in body - Unhealthiness; 2. நோய், disease.

அநார்ச்சவம், வியாதி, disease.

அநாவத்துவம், மூச்சுட னிருத்தல், உயிரோடிருத்தல், the state of being endowed with breath or life.

அநாவிருத்தி, மறுதரம் பிறவாமை, not to be born again, not to suffer metempsychosis.

அநாவிலம், கலங்கலின்மை, தெளிவு, being free from sediment; clearness.

அநான்மா, உடம்பு, body; 2. ஆன்மா வல்லாத தேகாதிப்பிரபஞ்சம் that which is not a soul i.e., material body and the material world.

அநி, நெற்பொரி, fried paddy.

அநிசம், தூக்கமின்மை, sleeplessness, 2. நித்தியம், that which is eternal.

அநிச்சா பிராரத்தம், ஒருவருக்குப் பிரிய மில்லா திருந்தும் பலாத்காரத்தினால் அவரைப் பயன் அநுபவிக்கச் செய்யும் முன்னைய வினை அதாவது ஊழ் வினை, an invincible necessity or fixed order predetermined by a divine decree, according to one's Karma, by which he is compelled to do a thing against his will and made to suffer in consequence.

அநிச்சை, see அனிச்சை.

அநித்தம், அநித்தியம், that which is temporal.

அநித்திரை, தூக்கமின்மை, sleeplessness; 2. சிலேட்டுமத் தொழிலினால் உடம்பிற்குண்டாகும் நிலைமை, sleeplessness due to the phlegmatic condition of the system Insomnia.

அநித்திரை சுரம், தூக்கம் பிடியாது ஓயாமல் இருமலை யுண்டாக்கு மோர் வகைச் சுரம், இதனால் உடம்பெரிச்சல், தாகம், மயக்கம், நாவுலரல், மேல்மூச்சு, அடித்துடை முழங்கால்களில் வலி, மூர்ச்சை, பலவீனம், முதலான குணங்கள் உண்டாகும், a kind of fever characterised by sleeplessness with persistent cough. It is marked by burning sensation, thirst, giddiness parched tongue, hard breathing, pain in the joints, swooning or faintness, weakness etc.

அநிந்திரியம், உறுப்பில்லாதது, that which has no animal organ.

அநிந்திரிய வஸ்து; உயிர்ப் பிராணிகளின் அமைப்பில்லாத வஸ்து, substance devoid of the structure of a living being.

அநிப் பிராயயம், புருவத்தையும், கண்ணோரங்களையுந் தாக்கி வலியையும் வீக்கத்தையு முண்டாக்கு மோர் விதக் கண்ணோய், pain and swelling of the eyelids and outer corners of the eyes.

அநிமாலினம், சாவு, death.

அநிமிடன், கண்ணிமை கொட்டா திருப்பவன், one who does not wink.

NOTE: This is characterised of Celestial beings.

அநி மேஷம், ஓர் வகை மீன், a kind of fish; 2. பிசாசு, devil.

அநிர்தம், மாயை, delusion, as of water in the mirage.

அநில சகன், நெருப்பு, fire.

அநிலசம், செம்முகக் குரங்கு, red faced monkey.

அநிலச் சூலை, வாதத்தினாலேற்படும் சூலை, acute arthritis associated with gout Acute gouty arthritis.

அநிலம், காற்று, wind; 2. பிறப்பு, birth; 3. வாத நோய், rheumatism.

அநிலன், வாயு, air; 2. பிராணவாயு, oxygen.

அநிலாமயம், வாத நோய், morbid affection of the deranged wind (Vayu) such as, flatulence, rheumatism etc.

அநீகினி, தாமரைப் பூ, lotus Nelumbium speciosum.

அநு, கதுப்பு, jaw; 2. நோய், disease; 3. சாவு, death; 4. முலைப்பால், woman's breast milk; 5. சமம், like or equal to.

அநுகம், செஞ்சந்தனம், red sandal wood - Pterocarpus santalinus.

அநுகன், காமவிச்சை யுடையவன், one who is inclined to lewdness - A Wanton.

அநுகோதம், மூளையின் பின் பக்கத்தின் கீழ்ப் பிரிவாகிய சிறிய மூளை, that portion of the brain which is posterior to and underlying the great cerebral mass - Cerebellum.

அநுகோர்த்தம், see அநுகோதம்.

அநுக்கம், பாம்பு, snake; 2. சந்தனமரம், sandalwood tree; 3. பயம், fear; 4. சோம்பல், lethargy; 5. வருத்தம், suffering.

அநுக்குரோசம், இரத்தம், Blood.

அநுச சோஷகம், தோள் பொருத்து வாதம், a rheumatic affection of the joints of the shoulders.

அநுசந்தானம் பண்ணல், இடைவிடாது சிந்தித்தல், continuous thinking; 2. விடாயோகம், continuous meditation or contemplation.

அநுசயம், காலில் வரும் நோய், a disease of the leg; 2. உடம்பில் மேற் பாகத்திற் காணு மோர் விதக் கொப்புளம் அல்லது கட்டி, a boil or abscess in the upper part of the body; 3. தலையில் வரும் கட்டி, a boil or abscess on the head.

அநுசிரஞ்ச வாதம், தாடையின் பூட்டையனுசரித்து எந்நேரமும் வாயைத் திறந்தாவது மூடியாவதிருக்கச் செய்யு மோர் வகை வாத நோய். இதனால் எதையும் மெல்லுவதற்கும் வார்த்தை பேசுவதற்கும் மிகவும் கஷ்டமாக முடியும், a kind of tetanic spasm of the jaw, which keeps the mouth always shut or open, thereby rendering the patient unahle to chew things or to speak.

அநுட்டண சீதம், சூடுங் குளிர்ச்சியுமற்றது, that which is neither hot nor cold.

அநுட்டணம், சூடின்மை, that which is devoid of heat.

அநுட்டணா சீதம், see அநுட்டண சீதம்.

அநுட்டினம், நீலோற் பலம், blue lotus - Nymphae craerulea.

அநுதரிசம், தாகம், thirst; 2. மது நீருண்ணுங்கலையம், an earthern pot for drinking toddy.

அநுதரிசனம், கள் குடித்தல், drinking toddy; 2. கட்குடிக்கும் கலையம், a mud pot used drinking toddy.

அநுதாப சுரம், ஒற்றுணர்ச்சியினா லுண்டாகும் சுரம், sympathetic fever.

அநுதாவனம், சுத்தி செய்தல், cleaning.

அநுதினம், நாடோறும், daily.

அநுதேகம், சூக்கும தேகம், astral body.

அநுத்தம்ப வாதம், இரு தாள்களையும், மரத்து இறுக்கி நாவையுள்ளுக்கிழுத்துத் துன்பத்தை விளைவிக்கு மோர் வாத நோய், a kind of spasm characterised by the affection of the jaws, and contraction or drawing in of the tongue - A kind of tetanus; 2. மோவாய்க் கட்டைப் பிடிப்பு, a spasm of the muscles of mastication commonly called lock-jaw; 3. சன்னியால் தாளிறுத்தல், a tetanic condition of the muscles of the jaw - Trismusm.

அநுத் தானம், முகம் குப்புற விருக்கும்படி கிடத்தல், lying with the face downwards.

அநுத் துருதம், ஓர் காலவளவு, a period of time; 2. ஒரு மாத்திரையின் காற் பங்கு, 1/4 of a moment.

அநுத்துவாகம், விவாகமின்மை, unmarried state-Celibacy.

அநுபசயம், நோய் குணப்படாத நிலைமை, the state of being incurable - Incurability.

NOTE:- This is opposed to *உபசயம்* which means curable state.

அநுபந்தம், சிசு, new-born child; 2. **ஒன்றோடொன்** *றிணைக்கப்பட்டது*, that which is collaterally connected - Concomiant, adjunct; 3. *சேர்க்கப்பட்டது*, appendage.

அநுபர்தை, *தாகம்,* thirst; 2. **விக்கல்,** hicough.

அநுபவம், *கண்டறியுமறிவு*, the knowledge gained by trial or repeated trials, observation and experience; 2. **வாசனையாற்றோன்று** *மறிவு*, practical wisdom experienced by the changes and trials of life.

அநுபவாமிர்தம், *தமிழற் செய்த* **வைராக்கிய** *சதகம்.* **இதில்** *உபநிஷத்தின் உண்மையை* **விளக்கமாகக்** *காட்டி, மாயையின்* **மேலீட்டினால்** *உண்மை அறிவிற்குப் புலப்படாதெனவும்,* **ஆகவே, இல் வாழ்க்கையை நீத்துத் துறவறத்தை மேற்கொண்டு ஆத்ம ஞானத்தைப் பெறத் துணிதலே சிறந்த வழியெனவும் கூறும்,** a treatise on determination or will-power complied in Tamil. It contains a sort of exposition of pantheism emboided in the Upanishads. It shows that the unreality the material world cannot be proved and that everything is Maya. So, it finally recommends retirement from domestic life and meditation with a view to attain the soul's purification and final beatitude.

அநுபாகம், *தாடையைச் சேர்ந்த பகுதி,* (in anatomy) maxillary portion.

அநுபானம், *மருந்தையுள்ளே* **செலுத்துதற்குதவியாகக் குடிக்கும் நீர் அல்லது குடிநீர்,** water of other liquid taken as a basis for swallowing medicine without difficulty - Vehicle.

2. **உட்கொள்ளுவதற்காக வேண்டிய மருந்தைக் குழைத்து நாவாற் பருகுதற்குபயோகிக்கும் தேன் முதலிய வஸ்துக்கள்,** a thick syrupy medicament, like honey, ghee or other substances mixed with the intended medicine and taken in by licking - Linctus.

அநுபோகம், see *அநுபவம்.*

அநு மரணம், *உடன் கட்டையேறிச் சாதல்,* ascending the funeral pile or pyre with the deceased husband - Sati.

அநுமை, *கண்ணிமையினடி,* that part immediately below the eye-lid.

அநுரசம், *உண்ட பின் அடையும் ருசி,*a secondary flavour; a taste which succeeds eating and drinking After-taste.

அநுராக போகம், *காமானுபவம், காமந்துய்த்தல்,* sexual enjoyment; 2. *காம போகம்,* sexual bliss.

அநுராக மூலி, *காமவிச்சையை யுண்டாக்கு மூலிகை,* a drug exciting sexual desire - Aphrodisiac.

அநுராகம், *சிற்றின்ப விருப்பம்,* carnal appetite - Lust ; 2. **ஆசை,** lover; attachment.

அநுலேபகம், *உடம்பிற் பூசும் சந்தன முதலிய வாசனைப் பொருள்கள்,* perfumes like sandal paste etc, smeared over the body; 2. **பூசுந் தைலம்,** any soft unctuous substance used for smearing particularly over the body or the diseased part - An unguent or ointment; 3. **தைல முதலியவற்றைப் பூசுதல்,** anoiting the body with unguents.

அநுலேபம், பூசுதல், unctioning, or anointing, See *அநுலேபகம்.*

அநுலேபனம், பூசுதல், smearing or anointing the body; 2. **பூசும் வஸ்து,** oily or emmolient application.

அநுலோபனம், குடலுக்குள் *இயற்கையான அசைவு,* a peculiar mortion of the intestines and other tubular organs in digestion - Peristalsis.

NOTE:- By this motion, the intestines are contracted all round and in successive circles. It consists in a vermicular shortening and narrowing of the tube, thus propelling the contents onward. It is due to the successive contractions of bundles of longitudinal and circular muscular fibres.

அநுலோமனம், *வாயுவைக் கண்டித்து வெளிப்படுத்தும் பேதி மருந்து,* a purgative which helps to check or remove the doshas in the system, especially Vayu (wind), by setting them free.

அநுவாசம், *வாசனை யேற்றல்,* to impart smell.

அநுவாசிதம், *தயாரித்துப் பிரயோகிப்பது,* that which is prepared and administered, as in enema; 2. *புகை போடுதல்,* to fumigate.

அநுவிருத்தம், *முட்டை வடிவம்* shape like that of an egg - Oval shape.

அநுவெல்லிதம், *கட்டுக் கட்டல்,* bandaging or securing with bandages; 2. *கால், கை கட்டு,* the bandage applied to the extremities.

அநுற்பத்தி, *பிறப்பின்மை,* not being born again; absence of birth.

அநூகன், *பிறப்பற்றவன்,* one who is free from re-birth.

அநூடன், **விவாகம் செய்யாதவன்,** an unmarried person - Celibate.

அநூரு, *முடவன்,* a lame person.

அநூர்த்து வாத்தி, *மேல்கதுப்பி னெலும்பு,* superior maxillary bone.

அநேகாங்கம், *பலவங்கம்,* several organs.

அநேகாந்தம், *சந்தேகமானது,* that which is doubtful.

அநேட மூகன், *செவிடும் ஊமையுமானவன்,* a person who is both deaf and dumb Deaf mute.

அநேட மூகம், *செவிடும் ஊமையுமான தன்மை,* a condition of deafness or impaired hearing accompained by imperfect development (congenital) or loss of speech; Deaf dumbness Deafmutis.

அநேதிரு. *உஷ்ணம் அல்லது மின்சார சக்தி எளிதில் ஊடுறுவிச் செல்லக்கூடாத வஸ்து,* a substance which does not transmit a force like that of heat or electricity or which transmits it only with difficulty Non conductor.

அநோக்கம், *மரம்,* tree; **2.** *மரப்பொது,* tree in common.

அந். *அன் எதிர்மறை உபசர்க்கம்,* a prefix having the force of a negative meaning.

அந்தகக் கல், *ஓர் உபரசச்சரக்கு,* one of the one hundred and twenty kinds of natural drugs and other substances described in the Tamil Medical Vocabulary.

அந்தக சன்னி, *மூளைக்கு அதிர்ச்சியை யுண்டாக்கிக் கண்ணைக் குருடாக்கும் ஓர் வகைச் சன்னி,* an apoplexy affecting the cerebral system and marked by loss of eyesight; **2.** *அந்தக சன்னிபாத சுரம்,* which see; **3.** *பாஷாணத்தினாலேற்படும் சன்னி,* delirium due to arsenical poisoning.

அந்தக சன்னிபாத சுரம், *அகோரமாய்ச் சுரங்காய்ந்து, விக்கல், தாகம், சோர்வு, இரைப்பு, உப்பிசம், முதலிய குணங்களையும் மற்றும் தலை நடுக்கம், மறதி, சன்னி முதலிய மூளையின் கோளாறுகளையு முண்டாக்குமோர் சுர நோய். இது மரணத்தை யுண்டாக்கும்,* a fever characterised by high temparature hiccough, thirst, languor, hard breathing swelling, etc coupled with the shaking of the head, forgetfulness, confusion of mind, delirium and other cerebral manifestations. It is sometimes extremely fatal Typhus fever.

அந்தகச் சாரம், *சவுட்டுப்பு,* salt produced form earth impregnated with soda; salt extracted from fuller's earth (Artificially).

அந்தகம், *ஓர் வகைச் சன்னி,* see *அந்தக சன்னி,* **2.** *ஆமணக்கு,* castor plant Ricinus communis; **3.** *சாலாங்க பாஷாணம்,* a kind of arsenic; **4.** *அவுபல பாஷாணம்,* one of the 32 kinds of native arsenic; **5.** குருடு, blindness.

அந்த கரணம், குருடாக்கல், to cause blindness; **2.** *(அந்தக+ரணம்)* கண்ணைக் குருடாக்கும் ஓர் விரணநோய், an ulcer causing loss of eye-sight.

அந்தக ரூபி எலி, rat; **2.** குருடன், a blind person.

அந்த கலை, *சந்திர கலை,* the vital air passing through the left nostril.

அந்தகன், குருடன், a blind man; **2.** *சவர்க்காரம்,* fuller's earth; **3.** வெள்ளாடு, goat; **4.** *புல்லுரி,* a parasitic plant; **5.** *புல்லுரிப் பூடு,* a species of loranthus - Loranthus pentandrus, alias L. Elasticus; **6.** *காய்ச்சு வழலை,* a kind of salt obtained by repeated boiling; **7.** *காசிச் சாரம்,* a mineral salt; **8.** *சிர்பந்த பாஷாணம்,* a kin of native arsenic; **9.** *காசு பாஷாணம்,* one of the 32 kinds of prepared arsenic; **10.** *திராய்,* a mineral one consisting of copper and spelter.

அந்தகன் பீடம், *திராய் மலை,* mountain from which the mineral ore *(திராய்),* - consisting of copper and spelter, is dug up.

அந்த காரம், அதிக விருட்டு, utter darkness; **2.** நெல்லி, Indian gooseberry - Phyllanthus emblica, **3.** *மனவிருள்,* mental darkness.

அந்த காலம், see *அந்திய காலம்.*

அந்த கை, கீழ் வயிற்றினில் வலப்பக்கமாகப் பெருங்குடலின் துவக்கத்திலுள்ள பை. இது பெண்களின் கருப்பையின் கழுத்திற்குப் பின்னாக வுள்ளது, the large blind pouch in which the large intestine begins; a branch of an intestine with one end closed - Caecum. In women it is situated behind the neck of the uterus.

அந்த கோரம், நெல்லி, gooseberry tree - Phyllanthus emblica.,

அந்த கோலம், அந்த கோளம், see *அந்த கோரம்.*

அந்தக் கணம், குழந்தைகளுக்கு மூளையில் கனல் ஏறி அதனாலுடல் வெதும்பி நாவுலர்ந்து, முகம் மஞ்சள் நிற மடைந்து காணுமோர் வகைக் கணை நோய், a disease in children arising from the affection of the brain. It is marked by emaciation, dryness of the tongue, yellow face and other symptoms characteristic of Tabea mesenterica.

அந்தக் கண், உள்ளான் கண், sunken eyes.

அந்தக் கரணம், *மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய வுட்கருவிகளின் சேர்க்கை,* the mental power or intellectual faculties in human beings embracing four aspects viz. Volition, perception, self-consciousness and reasoning faculty. These are otherwise called the mind, reason, energy and will respectively.

அந்தக் கிருமி, உடம்பில் கிருமி களினாலேற்பட்ட வோர் வகை நோய், a disease caused by worms in the body.

அந்தக் கேடு, *(அந்தம்+கேடு)* அழகு கெடுதல், a gross deviation from beauty; **2.** உருவுகுலைதல், injury to the surface or beauty of the body - Defacement or disfigurement.

அந்தங் கெடுத்தல், உருகுலைத்தல், to injure the beauty of aperson or a thing to deface or disfigure.
NOTE:- This is may be caused by deformity which also destroys the beauty. See அந்தக் கேடு

அந்தசடம், வயிறு, stomach; 2. அடிவயிறு, abdomen.

அந்த செயநீர், வழலையுப்பு செயநீர், (In alchemy) a liquid used for preparing (Muppu) known as the Universal solvent with a peculiar property of transmuting metal into gold.

அந்தச் சுண்ணம், வழலைச் சுண்ணம், முப்புச் சுண்ணம், (in alchemy) the highest essence prepared from a mixture of three salts in a small quantity. It is called 'The king of Metals'.

அந்தச் சோபம், புளிப்பு, sourness.

அந்தண நாபி, விஷத் தன்மையைப் போக்குமோர் முதன்மையான மருந்து, sacerdotal antidote for a kind of poison; 2. வெண்ணாபி, a white variety of aconite root.

அந்த தமசம், மிக்க விருள், utter darkness see அந்த காரம்.

அந்தத் துவம், குருடு, blindness.

அந்த பூதனா, கிரகத்தின் ஏவலினால் குழந்தைகளுக்கு... நோயை யுண்டாக்கு மோர் பெண் பேய், a female demon bringing about diseases in children under the influence of evil planets.

அந்தபூதனா கிரகதோஷம், குழந்தைகளுக்குக் காய்ச்ச லுண்டாக்கி அதனால் பாலுண்ணாது, வாந்தி, பேதி, இருமல் அல்லது விக்கல், வீக்கம், குப்புறக் கிடத்தல் ஆகிய விக்குணங்களைக் காட்டுமோர் வகைக் கிரகதோஷம்.

இது அந்தப் பூதனா வென்னும் பெண் பேயின் செய்கையாலுண்டாகிப் பிறந்த மூன்றாவது வருஷம் அல்லது மூன்றா மாதம் அல்லது மூன்றாநாளிலிருந்து தொடரும், a morhific diathesis in children characteried by fever, aversion to milk, vomiting, dysentery or diarrhoea, cough or hicough, swelling and an inclination lie always on the face.

It is supposed to be due to the attack of a female demon acting under the influence of evil planets in the rhird year, the third month or the third day after delivery.

NOTE:- Such diseases occur without any assignable cause and they are sometimes cured without medicines in the usual course. They are usually attributed to the meteorological changes whose action upon the human system Therapeutic science is unable to determine.

See also அதிருட்டி பூதனா.

அந்த மந்தம், உறுப்புக் கேடு, the malformation of an organ in the body - Deformity; 2. செரியாத் தன்மை, indigestion.

அந்தமுள், குறிஞ்சா, a plant, common Indian Ipecacuanha - Tylophora asthmatica.

அந்த மூசிகம், ஓர் வகைப் புல், a kind of grass - Lepeocericis Serrata.

அந்த மூசை, ஒரு பக்கம் துளை விட்டு மூடிய ஓர் சிறிய மூசை, a small covered crucible with ahole in the side.

அந்தம், அவயம், an organ of the body; 2. கஸ்தூரி, Musk; 3. சாவு, death; 4. குருடு blindness; 5. எலும்பின் கடை, extermity of bone; 6. பாஷாணம், poison; 7. பச்சைக் கற்பூரம் crude camphor; 8. நீர், water; 9. சோறு, food, boiled rice; 10. பிண்டம், foetus; 11. தலைச்சன் குழந்தை மண்டையோட்டிலிருந்து செய்யப்படுமோர் வித அண்டச் சுண்ணம், a calcined compound prepared from the skull of the first-born child.

அந்தயெரு, வைத்தியமுப்பு, a kind of salt prepared out of 3 kinds of salts called 'Muppu' by a secret process known only to Siddhars. It is used for curing all kinds of diseases and is primarily used in Tamil medicine.

NOTE:- This is distinguished from வாத முப்பு, which is an elixir sought for by the alchemists for transmulting metals into gold and for prologing life.

அந்தர சாமி, ஆகாய மார்க்கத்திற் செல்வதிலேயே விருப்பமுடையோன். he who has always a mania for passing or travelling in the serial regions.

அந்தர கும்பகம், பிராண வாயுவைக் குடலினுள்ளேயே தப்பிக்கச் செய்தல், the act of retaining the vital air in the intestines by suppression of breath.

அந்தர கெந்தன், சூத பாஷாணம்; a kind of mercurial poison.

அந்தரக் கோன், புல்லூரி, a parasitic plant.

அந்தரங்கக்கரப்பான், கோசமலரின் தோலிற் கடியில் வட்டமாய்ச் சிவந்து, தினவு அல்லது எரிச்சலோடு கூடிய தழும்பு. இத்தழும்பில் சிறிய கொப்புளங்கள் பல காணப்படும். இது பெண்களிலும் புழக்கையில் காணும். an intense itching on the innerside of the foreskin of the penis marked by crops of papules with inflammation, and burning sensation - Pruritus. In females it is found in the vestibule of the vulva - Pruritus vulvae.

அந்தரங்கக் கரு, see உட்கரு.

அந்தரங்கச் சொறி, மேகச் சூட்டினால் ஆண் பெண் இவர்களுக்கு இந்திரிய ஸ்தானங்களிற் சகிக்க முடியாத நமைச்சலோடு சிறிய வியர்க்குருக்கள் போற்காணும் ஓர் வகைச் சொறி சிரங்கு, a chronic skin disease marked by the development of small pale papules and intense itching of the genitals in both the male and the female. It is due to the venereal heat Prurigo.

அந்தரங்கத் தானம், பெண் குறி, the private part of a female; 2. இரகசியமான விடம், a secret place; 3. மனம், mind.

NOTE: It is so called beacuse it is in invisible part between the anus and the navel.

அந்தரங்கத் தியானி, ஆமை, tortoise.

அந்தரங்கம், (அந்தர் + அங்கம்) உள்ளாகவிருக்கும் உறுப்பு, அதாவது மனம், mind.

அந்தரசமி, செரியாமை indigestion; 2. வாயுவினால் வயிறு உப்பல், inflation of the bowels due to wind Tympanites.

அந்தரசாரி, ஆகாய மார்க்கத்தில் உலாவுவோன், he who travels in the aerial regions, Siddhars alone can do this.

அந்தர சிந்து, கற் பாஷாணம், one of the 32 kinds of native arsenic.

அந்தரஞ் சனம், கொடி மாதுளை, lemon citron - Citrus (lemoni medica).

அந்தரட்சி, உடம்பின் துவாரங்களின் வழியாக விட்டுப் பரிசோதிக்கு மோர்விதக் கருவி, an instrument for the examination of a body-cavity through its natural outlet - Endoscope.

அந்தரதம், குடற்புழு, a worm in the intestines.

அந்தர தாகம், சாகுங்காலை ஏற்படும் ஓயாத விடாய், intense thirst in a dying person; 2. மேக வெட்டையின் சம்பந்தத்தினால் ஏற்பட்டு அதிகமான தாகத்தை யுண்டாக்குமோர் நோய், intense thirst arising from the parched condition of the tongue, etc. due to urinary disorders as diabetes etc.

அந்தரத் தாமரை, ஆகாயத் தாமரை. இது நீர்ச்சுருக்கு, மூலம், சீதபேதி, பொடியிருமல் இவைகளுக்கு உபயோகப்படும். a kind of lotus, the root of which floats on water - Pistia stratiotes. It is useful in stranguary piles (prolapsus anus), dysentery, cough etc.

அந்தரத் தேசரி, சிறு பசலை, small Indian purslane - Portulaca qudrifida.

NOTE: This is a small species of பசலை, the names of the other varieties best known in Tamil are the following:

1. கொடிப்பசலை.

(a) வெண் கொடிப் பசலை, Field Basella - Basella Alba.

(b) செங் கொடிப் பசலை, Red Basella or Spinach - Basella rubra.

2. கொத்து அல்லது குத்துப் பசலை அல்லது பெரும் பசலை, a larger variety called Cluster Basella or Heart - leaved Malabar Night shade - Basella Lucida or Basella cordifolia.

3. பேய்ப் பசலை அல்லது கசப்புப் பசலை, a bitter variety from its unwholesome and stupefying nature - Portulaca Meridiana.

4. துலுக்கப் பசலை அல்லது கோழிக் கீரை, common variety called Indian spinach - Portulaca oleracea.

5. வழுக்கைப் பசலை, another variety of Indian spinach containing more of mucilagenous substances.

6. கரும் பசலை அல்லது நீலப் பசலை, a black or blue variety. This is unknown in Botany and great virtues are attributed to this kind by Siddhars.

For full particulars see under பசலை.

அந்தர பவனி, ஆகாய மார்க்கத்தில் உலாவி வருதல், wandering in the aerial regions. This is one of the secret art amongst Siddhars and it can only be performed through success in Yoga practice and with the aid of certain. Mercurial pills (animated).

அந்தர பட்பம், பலாசு, tisso flower - Butea frondosa.

அந்தர புருஷன், ஆத்துமா, the soul.

அந்தரப் பிசாசு, துற்மரணத்தா லேற்படும் பேயுருவம், a disembodied spirit of one who died of suicide, violence or accident - Evil spirit.

NOTE: According to Hindu Pilosophy, the spirit of persons meeting with accidental or other unnatural deaths, cannot enter into the evolutionary process of rebirth until such time as the Karma responsible for bringing about such happenings is completely worked out.

The said spirit in the meantime is supposed to exist or occupy the region between the earth and the next world.

அந்தர மாமூலி, see ஆகாயத் தாமரை.

அந்தர மூலி, see அந்தரத் தாமரை.

அந்தரம், மோகம், desire; 2. ஆகாயம், sky; etheric region; 3. புருவத்திடை, space between the eye-brows; 4. இடுப்பு, waist; 5. இருள், darkness; உள்வெளி, interior open space; 6. அளவு, measure; 7.

தனிமை, loneliness; *8.* பேதம், difference; **9.** நடு, intermediate space; *10.* முடிவு, end, taken distributively - end of each.

அந்தர வருணி, சிறு நெருஞ்சில், a thorny shrub - Tribulus terrestris.

அந்தர வல்லி, கொல்லன் கோவை, air-living bryony, Demon root - Carollocarpus epigaea.

NOTE: It is an antidote to snake-bites. Internally it is prescribed in later stages of dysentery and old venerial complaints.

அந்தர வனசம், கொடிப்பாசி green creeping moss upon the surface of water - Green moss.

அந்தர வாசம், கொட்டைப் பாசி, an epiphytic medicinal plant; **2.** ஆகாயத்தில் சஞ்சரித்தல் moving in the aerial regions.

அந்தரவாசி, ஆகாயத்திற் சஞ்சரிப்போன், a superhuman being moving in the aerial regions.

அந்தர வாயு, குடல் வாயு, gas or air in the intestines; flatulence; **2.** வாயுவினால் குடலிறக்கம், the descent of the bowels from its normal position, as a result of the deranged conditions of Vayu in the system - Rupture *3.* (அந்தரம் + வாயு) ஆகாசத்தினிடமாகவுள்ள காற்று, atmospheric air; *4.* இடுப்பிலேற்பட்ட வாயு நோய், hip-pain due to wind in the system.

அந்தர வாயுக் கிரகணி (அந்தரம் + வாயு + கிரகணி = bowels + air + chronic diarrhoea) குடலிற் தங்கிய வாயுவினால் உண்டவுடன் வயிறிரைந்து பேதியாகித் தாகம், தளர்ச்சி, விலாவிசிவு, விக்கல் முதலிய குணங்களை யுண்டாக்குமோர் வகைக் கிரகணி, a form of chronic diarrhoea characterised by rumbling noise in the stomach and purging, thirst, fatigue, spasmodic pain on the sides, hiccough etc. It is due to gas or air in the intestines (flatus) and occurs soon after meals - Flatulent diarrhoea.

அந்தர விருத்தி, *(அந்தரம் + விருத்தி)* குடல் பருத்தல், enlargement of distension of the bowels; **2.** குடல் தன்னிடத்தை விட்டு நழுகி அண்டத்திற் குள்ளிறங்காமல் ஆண் குறிக்கு மேற் பருத்துக் காணல், the displacement of bowels with protursion or swelling appearance above the penis when they have not passed quite through the inguinal canal - Imperfect hernia; *3.* (அந்தரம் = உள் + விருத்தி = பருமன்) உடம்பின் உட்புறத்தி லிருந்து பருமனாதல், swelling remaining internally; *4.* இடுப்புப் பருத்தல், enlargement of the waist and buttocks; *5.* குடலண்ட விருத்தி, இந்நோய் வாயுவானது பல காரணங்களினாற் பிரகோபமடைவதனா லேற்படுவதாகக் கருதப்படும். இதில் சிறுகுடல் துடையிடுக்கின் உட்புறமாய் விதைக் குள்ளிறங்கிப் பிடுக்கைப் பந்தை போல் பருக்கச் செய்வதுடன், அதை அமுக்கக் களகளவென்ற சத்தத்துடன் மேலெழும்பும். விட்டு விடப் பழயபடி பருத்துக் காணும். இந்நோய் சாதாரணமாக அதிக பாரத்தைத் தூக்குவதாலும், மிகுதியாக முக்குவதாலும் குதித்தல், விழுதல், பாரமிழுத்தல், முதலிய உழைப்பு களினாலும், குடல் தாக்கப்பட்டு அது சவுட்டியின் கீழ் இறங்கும். a rupture caused by the muscles over the bowels, giving way and letting some portion of the intestines escape outwards beneath the skin. It arises from the aggravated condition of Vayu in the iliac region.

The intestines eventually make their way through the opening in the groin and descend into the scrotum which becomes swollen like an inflated air bladder.

They ascend upwards under pressure making a peculiar gurgling sound and when let go they come down again and swell the scrotum as before - Inguinal hernia.

It is caused generally by lifting a heavy load, violent physical strain, jumping, falling, dragging or pulling heavy weights and such like physical labour causing pressure to the bowels which eventually descend through the groin.

அந்தர விகூசனம், வயிற்றிரைச்சல் rumbling of the bowels.

அந்தர விட்டை, குடலிலிறங்கி நிற்கும் மலம், fecal matter in the intestines as opposed to வெளி தள்ளு மலம் discharged faces.

அந்தர விதனம், ஓர் கண்ணோய், an eye disease.

அந்தர வித்திரதி, உடம்பினுள் ளுறுப்புகளிற் காணுங் கழலையைப் போன்ற கட்டி, இது உடம்பினுட் புறத்தில் புற்று மாதிரி காணப்படும். இது சாதாரணமாய் மூத்திரப் பை, ஈரல், தாமரைக்காய், மண்ணீரல், மலப்பை முதலிய இடங்களில் காணும். உள்ளே புறப்படும் குன்மக் கட்டி அல்லது சாதாரணக் கழலைக் கட்டியை வித்திரதிக் கட்டியெனத் தவறுதலாகக் கொள்ளப்படாது. இக்கட்டிகள் புறப்படும் உறுப்புகளின் ஸ்தானங்களுக்குத் தக்கவாறு குணங்கள் ஏற்பட்டுக் குறிகளையும் காட்டி வைக்கும். a tumour like raised abscess in the interior organs of the body. It is often felt to be shaped like an auti hil these abscesses are generally found in the bladder, the liver the heart, the spleen, the rectum etc. and they should not be confused with the enlargement of the spleen or other ordinary internal tumours.

The nature and symptoms of the Internal abscesses vary according to their seats in the different regions of the body.

அந்தர வேஷண சவ்வு, peritoneum.

அந்த ராஞ்சம், புசத்திற்கும் மார்பிற்கும் இடையே யுள்ள பாகம். that part of the body between the shoulder and the breast.

அந்தரா பதிவை, சூல் கொண்ட பெண், a pregnant woman.

அந்தரா பத்தம், சாப்பாட்டிற் கிடையே கொள்ளு மருந்து, a medicine taken between two meals.

அந்தராபவச் சத்துவம், இறந்த பின்னும் மறுபடியும் பிறப்பதற்கு முன்னும் ஆத்துமாவிற்கேற்பட்ட நிலைமை, the soul in its existence between death and rebirth.

அந்தராயாம தனுத்தம்ப வாதம், ஓர் வாத நோய், இது உடம்பினுள்ள வாயு பிரகோப மடைந்து, விரற்கள், புறங்கால்கள், வயிறு, மார்பு, இருதயம், தொண்டை ஆகிய இவைகளை அனுசரிக்குங்கால், உடம்பிலுள்ள என்புக்கட்டுகள் உள்ளுக்கிழுக்க உடம்பு சுருங்கி முன்னம் குனிந்து உள்ளாக வளைந்து குறுகுவதனாலேற்படும். இதனால், விழி பிரளாது தம்பித்துத், தாள்மரத்து, விலா முறிந்து, வாயொழுகிக் காணும், a disease due to the accumulation of the extremely enraged Vayu (nerve force) in the regions of the fingers, insteps, abdomen, chest, heart and throat. It forcibly draws in the local ligaments, when the body becomes contracted and bends forward bringing about a curvature of the inner trunk.

In this disease the movements of the eyes becomes impossible, being fixed in their sockets; the jaw bones are paralysed, the rib bones are fractured and the patient ejects slimy mucous.

அந்தரா யாமம், see அந்தரா யாம வாதம்.

அந்தராயாம வாதம், இது தனுஸ்தம்ப வாத மிருவகைகளிலொன்று, இதில் உடம்பினுட் புறத்து நரம்புகளில் வாதம் சேர்ந்து, அதனால் முதுகும், சிரசும் இழுத்துப் பிடிக்கப் பட்டு, வயிற்றுப் பக்கமாய் வில்லைப் போல் வளைந்து, வியர்வை, கண்நிலை, குத்திடல், தாள் பிடிப்பு, விழுங்க முடியாமை, வாயில் கோழை, வாந்தி, சுரம் ஆகிய விக்குணங்கள் உண்டாகும்.

இந்நோய் மருந்திற்கு வசப்படாது, சில சமயம் அபூர்வமாக வசப்படினும் மிகவும் கஷ்டத்தோடு குணப்படும், தமிழில் இதற்கு முன்னிசிவு என்று பெயர். one of the two distinct types of a disease in which the enraged Vayu, which is accumulated in the nervous system, bends the body of the patient inwards and forwards like a bow and renders it tense. It is characterised by perspiration, fixation of eyes, paralysis of the jaw-bones which makes deglutition extremely difficult, slimy secretion from the mouth, vomitting, fever etc - Emprosthotomos.

The disease rarely yields to medicine and in rare instances only with the greatest difficulty. In Tamil, it is known as (Munnisivu) which means a curve extended invardly and forwardly.

See also ஆகர்ஷண தம்ப வாதம்.

அந்த ரிந்திரியம், அந்தக் கரணம், which see.

அந்தரி யாகம், மானச பூசை, mental worship.

அந்த ரிலயம், துரியாதீதம் அதாவது உலகத்தின் பாசபந்தங்களினின்றும் அல்லது மாயா விகாரத்தி னின்றும் விடுபட்ட உன்னதமான ஆன்ம நிலை, the highest state of the soul which is freed from all corporeal entanglements or Maya.

அந்தர்கத சுரம், உட்சுரம், internal fever.

அந்தர்குத வளையம் ஆசனவாயிற் குள்ளாக விருக்கும் வளையம், (in Anatomy) the inner ring of the sphincter muscle in the anus.

அந்தர் சடரம், இரைக் குடல், the stomach.

அந்தர் சரீரம், உள்ளுடம்பு, body interior, inner body - Astral body; 2. உள்ளிந்திரியம், internal organ.

அந்தர் சீவி, ஓர் உயிர்ப் பிராணி மற்றொரு பிராணிக்குள் தொத்திக் கொண்டிருத்தல், an animal parasite living within the body of another animal - Entozoon.

அந்தர் திருஷ்டி, அகநோக்கம் looking into one's own soul - Introspection.

அந்தர்த் தகனம், மது நீர் வடிதல் distillation of spirit of liquor.

அந்தர்த் தானம், மறைவிடம், a concealed or covered place; 2. உள்ளிடம், private part; 3. பெண் குறி, the genital of a female.

அந்தர்ப்பாகம், உட்பாகம், internal portion; 2. மறைவான பாகம், private part i.e. the genital portion.

அந்தர் மலக்கிருமி, உடம்பினுள் ளுண்டாகும், கபம், இரத்தம், மலம், மூத்திரம் ஆகியவைகளில் பிறக்கும் கிரிப் பூச்சி, இது சர்க்கரை, பால் முதலிய தித்திப்புப் பண்டங்களை புணவிற் சேர்த்து மிகுதியாக உட்கொள்ளுவதனாலும், மலபந்தத்தினாலும் உண்டாகும். Micro - organisms found in the phlegm, blood, feces, urine etc.

அந்தர் மிருதம், பிறக்கும் போதிறந்தது, dead at the birth - Still born.

அந்தர் முகம், உள்ளே நோக்கிய முகம், (in analomy) the condition of facing inward; 2. யோக நிலையில் ஒன்று, (in yoga philosophy) a posture in the Yoga practice.

அந்தர் முகி, *அடங்கிய மனத்தான்,* one who has controlled his mind, and said of a yogi; **2.** *உள்நோக்கிய முக முடையவன்,* one who is always engaged in looking inwards, a state in yoga.

அந்தர்முகி யோனி, பெண்கள் வயிறு நிரம்பவுண்டு, கடினப் புணர்ச்சி செய்வதனால் . வாயு வதிகரித்து, உள்நோக்கிய முகமாக வெடிம்பி, யோனியை விரிக்க முடியாதபடி வலியையும், பூவொதுங்குவதால், அங்குள்ள எலும்பு, மாமிசம், நரம்பு முதலியவைகளுக்கு வலியையு முண்டாக்கி அடிவயிற்றில் சூலையையு முண்டாக்குமோர் நோய், a vaginal disease characterised by pain in every part of the genital, bone, muscles, nerves etc., inability to stretch the part and darting pain in the abdomen and in the lower region just above the pubis.

It is due to the deranged condition of Vayu arising from violent or rude intercourse when the stomach is full after meals.

அந்தர் யோகம், *கழுத்தி நிலை* a state of deep thought or abstraction - Reveric.

அந்தர் யோனி, *பெண் குறியினுட்புறம்* the internal portion of the genital of a female.

அந்தர்வதி, *கருப்பிணி,* a pregnant woman.

அந்தர்வமி, *வாயு,* flatulence; **2.** *செரியாமை,* indigestion.

அந்தர் வித்திரதி, பெண்களுக்குண்டாகும் *மாதவிடாய் தடைபட்டு,* அதனால் இரத்தம் கோளா றடைந்து, கருப்பையிற் திரண்டு கறுத்த கொப்புளங்களாற் சூழப்பட்டு, அழற்சி, வலி, சுரம் ஆகியவைகளை யுண்டாக்குமோர் சூதக நோய், a manstrual disease in women arising from the altered condition of blood in the womb due to the supression of menstrual flow.

It is marked by fever, dark ulcers in the womb, inflammation and pain in the vagina - A kind of Amenorrhea.

அந்தர் வேகசுரம், *(அந்தர் + வேகம் + சுரம்)* அதாவது எலும்பிற் குள்ளிருக்கும் மச்ச தாதுவைப் பற்றி ஏற்படும் ஓர் வகைச் சுரம்.

இதனால் உடம்பெரிச்சல், தாகம், பெர்ருந்தா வார்த்தை, பெருமூச்சு, தலைசுழற்றல், அஸ்தி சூலை, மலபந்தம் முதலிய குணங்களுண்டாகும். சுசுருத சம்மிதைப்படி இதற்கு கம்பீர சுரம் என்று பெயர். (internal + forec + fever) i.e. a fever due to the affection of the marrow in the bone.

It is attended with a burning sensation in the body, thirst, incoherent expressions, sighing, recline of the head, darting pain in the bones, (ustcomyclitic) constipation etc - Osteomyelitic fever.

It is called by a different name according to Susruta Sambita as mentioned above.

அந்தளம், *புல்லுருவி,* a parasitic plant.

அந்தணம், *கடுக்காய்,* ink nut - Terminalia chebula.

அந்தணாதி, *பழம் புளி* old tamarind.

அந்தன், *கடுக்காய்,* see **அந்தணம்;** **2.** *குருடன்,* a blind man.

அந்தாசி, *விஷமில்லாப் பாம்பு,* a non poisonous snake; **2.** *ஓர் மீன்,* a kind of fish.

அந்தாரப் பவள, *தொட்டிப் பனை,* a species of palmyra.

அந்தாலசி, *முகம் விடாக் கட்டி,* a boil or abscess which does not point; a blind boil or abscess.

அந்தி, *இரவு* night; **2.** *தில்லை மரம்,* blinding tree, Tiger's milk-spurge - Excoecaria Agallocha; **3.** *மாலைப் பொழுது,* evening twilight; **4.** *அந்திமந்தாரை,* which see; **5.** *மணி பூரகம்,* one of the six psychic centres of the body, situated in the navel region and corresponding to epigastric centre; **6.** *குருடு,* blindness; **7.** *குருடாக்கல்,* causing blindness **8.** *முச்சந்தி,* junction of three streets.

அந்திகா, *ஓர் கண்ணோய்,* a disease of the eye. See **அந்திகை.**

அந்தி காசம், *(அந்தி + காசம்) சாயுங் காலத்தில் கண்ணொளி* மழுங்குமோர் கண்ணோய், a black catarrh of the eye causing imperfect vision in the evening time or in a dim light; night blindness Nyctalopia.

அந்தி கால், *சுரப்புன்னை,* a tree, Socra poon - Octrocarpus longifolius.

அந்தி காவலன், மாலைப் பொழுதில் தெருக்களில் காவலாகத் திரியுமோர் தேவதை, the guardian deity moving about in the streets in the evening twilight.

அந்தி குணம், *பெருங்காயம்,* asafoetida.

அந்திகை, *கண்ணோய்,* a disease of the eye; **2.** *குருடு,* blindness; **3.** *இரவு,* night time.

அந்திக் காப்பு, குழந்தைகளின் தோஷங்களைப் போக்குவதற்காக வேண்டி மாலைப் பொழுதில் செய்யுங் கிரியை, a mystic ceremony performed in the evening twilight for purpose of curing the evil influences affecting children.

அந்தி சந்தி, *காலை மாலை,* both morning and evening; **2.** *எப்பொழுதும்,* always.

அந்திசந்து, வாதம், *(அந்தி + சந்து + வாதம்)* மிக்க வலியை யுண்டாக்கி மூட்டுகளைத் தாக்குமோர் வாத நோய், இது சாதாரணமாய் இராத்திரியில் கண்டு, விடிந்தவுடன் மாறும், (evening + arthritis) a disease the

bones affecting the joints. The attack usually comes on suddenly in the night and tends to disappear in the morning. It is marked by severe pain Gout.

அந்தி தோஷம், see *அந்திப் புள் தோஷம்.*

அந்தித்தல், பொருமுதல் rumbling of the stomach; **2.** *அந்தி பகல்,* night and day.

அந்தி பந்தி, *கும்பகம்,* suppression of breath.

அந்தி பூதம், குருடாதல், becoming blind.

அந்திப் பிழை, *சிறு பீளை,* woolly caper Achyranthes lanata.

அந்திப்புள் தோஷம், குழந்தைகளை மாலைப் பொழுதில் வெளியிற் கொண்டு போவதனால் தாக்கும் *பட்சி தோஷம்,* an evil influence brought about in children by taking them outside in the streets just when birds are crossing.

அந்திப்பூ, *அந்தி மந்தாரை,* a flowering plant which blossoms just after Sunset in the evening twilight Mirabilis jalapa.

அந்திப் பொழுது, *மாலைப் பொழுது,* கையெழுத்து மறையும் பொழுது, evening twilight, dusk of the evening i.e. about the time when characters are not distinctly visible.

அந்திம காலம், *சாகுந் தருவாய்,* the last moments of life.

அந்தி மந்தாரம்,
அந்தி மந்தாரை, *சாயுங் காலத்திற்* பூர்க்கும் பூ. இதுவே அந்தி மல்லிகை அல்லது அந்திப்பூ. இது நமது நாட்டுச் செடியல்ல. யுனானி வைத்தியர்களிதைச் சுகபேதி மருந்தெனக் கொள்வார்கள். ஐரோப்பிய வைத்தியத்திலிது சேர்ந்ததல்ல. a flower which blossoms in the evening twilight - Mirabilis jalappa. It is a foreign plant, but naturalised in India. It is used by Unani doctors as a mild purgative and is a non-officinal drug.

அந்தி மரித்தான், *சிறு பேய்க் கொம்மட்டி,* bitter apple - Citrullus colocynthis.

அந்தி மலரி,
அந்தி மலரகிசம், see *அந்தி மந்தாரை.*

அந்தி மலர்ந்தான், *பத்திராட்சை,* see *அந்தி மந்தாரை.*

அந்தி மல்லி,
அந்தி மல்லிகை, see *அந்தி மந்தாரை.*

அந்தி மாலை, *மாலைப் பொழுதில்* கண்ணொளியை மறைக்குமோர் கண்ணோய், a degeneration of the retine in which the vision fails at twilight or sunset; See **அந்திகாசம்,** **2.** பகற் பொழுதி னிறுதியில் வரும் *மாலைப் பொழுது,* the faint light

at the end of the day light - twilight; **3.** ஓர் கண்ணோய், இது கண்களுக்கு யாதொரு கெடுதியு மில்லாமலே, கண்ணினரம்பு, தரிச நரம்பு, இவைகளினி மித்தமாகப் பார்வையை மந்தமாக்கும், a sudden transitory blindness occurring without, apparent lesion of the eye, but from the disease of the optic nerve, retina etc. - Amauresis partialis fugax.

Note: In Western medicine this term 'amaurosis' from its vagneness is becoming disused. It implies partial or total loss of vision.

அந்தி மிரியன், ஓர் *மரம்,* a tree, Common Inland Tree Mangrove - Carallia integrifolia.

அந்திய கமனம், இறத்தல், dying, going to the end of life.

அந்திய காபிம், முடிவு காலம், the last period of life; **2.** *சாகுங் காலம்* - the last moments preceeding death.

அந்தியத்துக சுரம், *சாகுங் காலத்துக் காணுமோர் அகோரக் காய்ச்சல்,* a severe type of fever that precedes death.

அந்தி யந்த பித்தன், இச்சி, a tree - Chinese bunyan - Ficus retuse.

அந்திய பரணி, ஓர் ஆயுள் வேத மூலிகை, a plant of the terminalia genus used in Ayur veda.

அந்திய மட்டும், *சாகும் வரை,* till the time of death.

அந்தியம், *மரணம்,* death; **2.** *மரண காலம்,* the last period preceding death, the moment of death; **3.** ஓர் பூடு, a plant Cyperus (genus) Hexastachyus communis.

அந்திய வோடாலிகா கிரகம், எட்டாம் நாளில், எட்டாம் மாதத்தில், அல்லது எட்டாம் வருஷத்தில் தாயை அல்லது குழந்தையைத் தாக்குமோர் வகைக் கிரக தோஷம் a morbific diathesis in a child or the mother in the 8th year or the 8the month or the 8th day after delivery. It is due to the influence of an evil planet called 'Aryaka.'

For details see கிரகதோஷம்.

அந்திர காசம், ஆகாயத்தில் சந்திர னுதிக்கும் போது கண் புகைச்சல் நீங்கியும், மற்றக் காலத்தில் கண் சிவந்து பார்ப்பதற்குப் பயமாயும், நாட்பட்டால் அதிக இருளையுங் கொடுக்கும் மோர்வகைக் கண்ணோய், a disease of the eye in which the vision is clear before moonlight but dart at other times. It is a condition in which the patient sees better in an obscure light than in bright Sun-light - Hemeralopia.

அந்திர கிராணி, குடற் கோளாறினால் லேற்படும் கிராணிக் கழிச்சல், a chronic diarrhoea due to intestinal disorders.

அந்திரக் கண் மணி நீலக்கல் a blue stone, a precious stone of various shades of blue - Saphhire.

அந்திரக் கொடிச்சி, கந்தகம் sulphur.

அந்திர சுரம், குடலுக்குத் தாபிதங் கண்டு அதனிமித்த முண்டாகு மோர் வகைக் கடினமான காய்ச்சல், a severe type of fever characterised by morbid changes of peculiar intestinal lesions - Typyoid or Enteric fever.

அந்திர தாபிதம், குடலின் அழற்சி, inflammation of the intestines - Enteritis.

அந்திர புரீதரம், சிறு குடலுக்கும், பெருங்குடலுக்கும் காணுந்தாபிதம், inflammation of the small intestines and of the colon - Entero-colitis.

அந்திர மயம், குடலாகவுள்ள, consisting of entrails.

அந்திர முட்டி வாயு, குடல் முட்டி வாயு, an intestinal complaint due to the deranged condition of Vayu in the system.

அந்திரம், குடல் intestines; bowels; 2. வயிற்றினுள் இரைப்பை யொழிந்த மற்றக் குடல் முதலானவைகள், the bowels and the other abdominal viscera excepting the stomach; 3. சிறு குடல், small intestines.

அந்திரருகம், குடல் வாதம், a hernia containing a loop of the intestine - Enterocele.

அந்திர லோகிதம், சிறு பொடுதலை, a small creeper of the species of பொடுதலை - Verbena nodiflora.

அந்திர வசனம், பச்சையாகக் காயவைத்த கொட்டைப் பாக்கு, areca-nut which is dried without boiling.

அந்திர வர்த்தமன்,
அந்திர விருத்தி, குடல் விருத்தி, hernia commonly known as rupture.

அந்திர வளசம், See கொட்டைப் பாசி.

அந்திர வாதம், குடல் வாதம், அதாவது பெருங்குடலில் பற்பல வாயுக்கள் சேர்ந்து வயிறு கனத்து வலியுண்டாகி, உப்பல், மல மூத்திரக் கட்டு, வாந்தி, மார்பு வலி முதலிய குணங்களை யுண்டாக்கும் வியாதி, a disease of the colon marked by heaviness of bowels, pain, distension of the abdomen, retention of feces and urine, vomiting, chest pain etc. It is due to the accumulation of gases in the intestines; 2. குடல் நரம்பிற் கேற்படும் வலி, neuralgia of the intestine - Enteralgin.

அந்திர வாயு, குடல் வாயு, the flatulent nature of the intestines Flatulency.

அந்திர வாயு சூலை, குடலில் வாயு சேருவதனாலேற்படும் குத்தல் நோய், இதில் சுரமுங் காணும், an acute abdominal pain due to the accumlation of gas. It is marked by fever etc - Intestinal colic.

அந்திர விரணம், சிறு குடலிற் காணு மோர் விரண நோய், an inflammation of the duodenum Duodenitis; 2. சிறு குடற்புண், ulcer of the duodenum Peptic ulcer; 3. குடற்புண், ulceration of the intestines - Entercicosis.

அந்திர விருத்தி, இது இருவகைத்து - 1. குடல் கவுட்டியின் வழியால் பிடுக்கிற்குள் இறங்காமலே ஆண் குறித் தண்டிற்கு மேற் பாகமாகக் காணும் வீக்கம் அல்லது புடைப்பு, protrusion of the bowels with an appearance of swelling just above the penis, without descending through the groin into the scrotum; hernia which has not passed quite through the orifice - Incomplete hernia. See அந்தர விருத்தி.

2. வாதத்தினால் சிறு குடல் பலவீனப்பட்டுக் கவுட்டியின் வழியாய்க் கீழிறங்கிக் காற்றுப்பை போற் பருத்துக் காணும் நோய். a disease in which a portion of the small intestines which is pressed down through the groin (inguinal canal) deccnds into the scrotum and becomes swollen like an inflated air bladder Inguinal hernia (direct).

அந்தில், வெண் கடுகு, white mustard Brassica alba.

அந்தி விருட்சம், தில்லை மரம், a tree, Mountain Slender Tiger's milk Excoecaria crenulata.

அந்தி வீருகம், சிறு முள்ளங்கி, wall radish Bluemea aurita.

அந்தி கிருதன், குருடனாக்கப்பட்டவன், one who is rendered blind.

அந்தி பூதன், குருடனானவன், one who has become blind.

அந்து, நெற் பூச்சி, a small insect generally found injurious to stored paddy or other grains Weevil.

அந்துக் கண்ணி, பிளிச்சற் கண்களையுடைய பெண், a woman having ulcerative eyelids; blear eyed woman.

அந்துதிம், வாகை மரம், a tree Acacia sirissa.

அந்தே சாதிகம்,
அந்தே சாதிம், தேற்றா, water clearing nut tree Strychnos potatorium.

அந்தே சோலிகம், சிறு எழுத்தாணிப் பூடு, a plant with flowers like a style or style plant Prenanthes Sarmentosa.

அந்தை, பழய காலத்து நிறை, a standard weight used in olden days.

அந்தை மந்தை, மந்தக் குணம், sluggishness; dull nature.

அந்தோட்டம், உதட்டி லுண்டாகுமோ விரண நோய், a sore on the lip due to the disease, as in thrush Labiomycosis; 2. உதடு வெடிப்பு, a crack or fissure in the lip. See கண்டோஷ்டம்.

அந்தோர், செல்லி, Indian gooseberry tree Phyllanthes emblica.

அந்நகத்தி, வயிற்றுளைவு, a flux in which the stools consist chiefly of blood and mucus, accompanied with griping of the bowels Dysentery.

அந்நகரி, see அன் னகரி.

அந்ந கோடகன், சூரியன் the Sun.

அந்நபேதி, See அன்னபேதி.

அந்ந சலம், see அன்ன சலம்.

அந் நாட்டு வெலும்பு, மாரெலும்பு breast plate Sternum.

அந்நிய புட்டம், குயில், a well known bird with a melodius voice Indian cuckoo. It is so called from its habit of depositing its eggs almost exclusively in the nests of other birds viz the common crow, the carrion crow etc.

அந்நியம், see அந்நிய புட்டம்.

அந்நியேத்துக வாதம், உணவின் குற்றத்தினாற் பிறந்து, தோள், முதுகு, கழுத்து, தலை, விலா ஆகிய இவ்விடங்களில் பரவிப் பித்தத்துடன் கூடி ஒரு நாள் விட்டு மறுநாளில் வேதனையை யுண்டாக்கிப் பிரமை, சுரம், மூர்ச்சை, தாகம் முதலிய குணங்களையு முண்டாக்குமோர் வாத நோய், a disease of the nervous system marked by perplexity, fever, swoon, thirst etc. It occurs every alternate day and is due to the deranged condition of Vayu which extends throught the neck, the head or the ribs. It arises from incompatible articles of diet.

அந்நீர், நாரி சுக்கிலம், a fluid discharge from the vagina; 2. பழந் தண்ணீர், stagnant water or water spoiled from long keeping.

அப, ஓர் உபசர்க்கம், (literally) a. particle prefixed to Sanskrit words implying inferiority, seperation, contrariety, privation etc; 2. ஏதாவது ஒரு வஸ்துவுக் கேற்படும் நஷ்டம் அல்லது அழிவு, the privation of any object or its attribute. 3. உடம்பி ளொப்பகுதியிலாவது அல்லது உறுப்பு முதலிய அதைச் சார்ந்த இனத்திற்காவது இயல்பாக உண்டான தன்மையை அழித்தல், (In pathology) privation of any organ or part of the body or depriving them of the nature of their attributes.

அபகத வியாதியை, நோயினின் றெழுந்தவன், one who has recovered from an illness or a disease Convalescent.

அப கமம், மரணம் death.

அப கனம், அவயவம் organ.

அகூப காதம், கொல்லல் killing.

அப கோலம், அழிஞ்சில், sage - leaved alangium - Alangium lamarckil.

அபக்குவ புத்தி, பக்குவப்படாத அறிவு, immature understanding.

அபக்குவ போஜனம், சரியாய் சமைக்காத பண்டங்களைப் புசித்தல், eating food improperly cooked.

அபக்குவம், பக்குவ மின்மை, immaturity; 2. பழுக்காமை, unripeness; 3. செரியாமை, indigestion.

அபங்கம், கோளக பாஷாணம், a kind of arsenic.

அபசகம், சிற்றிலந்தை, small jujube tree - Scutia indica.

அப சஞ்சாரம், தொந்தத்தை மாற்றல், purifying the contagion - Disinfection.

அப சஞ்சாரி, வியாதியின் தொந்தங்களை மாற்றும் வஸ்து, a substance that changes the attributes of a disease.

அபசவ்வியம், இடது பக்கம், left side.

அபசாரம், மரணம், death; 2. அவபத்தியம், (in medicine) unwholesome or improper regimen.

அபசி, அக்குள், ஆண்குறி, இடுப்பு ஆகிய இவ்விடங்களில் உண்டாகும் ஓர் புற்று நோய். a cancer about the regions of the arm-pit root of the penis, and the waist; 2. கண்ட மாலை, அதாவது கடினமும், மினுமினுப்பும் கூட்டி வலியவற்றதாயு முள்ள முடிச்சுகளைப் போன்ற கட்டிகளைத் தாடைப் புறத்திலும், தொண்டையிலும், கழுத்தைச் சுற்றியும், மாலையைப் போல் ஒன்றன் பின் ஒன்றாக எழும்பும் ஓர் இரண நோய், a string of a large crop of hard, glossy, painless, glandular knots gradually growing about the joints of the jaw - bones, the tendons of the neck and about the throat - Scrofula.

NOTE: Some of these knotty formations spontaneously burst, exuding secretions; while others vanish and reappear in succession.

அபசி அம்பர், கருப்பு நிறமான அம்பர், வேறு இரண்டு வகைகளாவன: வெள்ளம்பர், கசகசா அம்பர், black amber. The other two kinds are: Poppy seeds amber, and white amber,

For further details see அம்பர்.

அபக மாரக் கிரகம், குழந்தைகளைத் தாக்குமோர்வகைக் கிரக தோஷம். இது அறிவின்மை, மிக்க அழுகை, வாயில் நுரை தள்ளல், உடம்பு நாற்றம், முதலிய குணங்களை உண்டாக்கும். a morbific diathesis

common in children, arising from the evil influence of planets. It is marked by senselessness, excessive weeping, frothy saliva from the mouth, fetid smell of the body etc.

அபசு மாரம், புத்தியின் தெளிவு நீங்குதல், loss of senses or sensual feelings; 2. உடம்பினுறுப்புக் கேற்படும் அழிவு, privation of any organ.

அபசுமார ரோசம், பித்தம் அதிகரித்து உடல் முழுவதும் பரவுவதால் நரம்பைப் பற்றிக் கொண்டு புத்தியைக் கலக்குமோர் நோய், இதனால் பிரக்கினையற்று, மயங்கி, பூர்வவிஷயங்கள் மறந்து, விழி, மூக்கு, உதடு, புருவம், முதலியவைகள் சேர்ந்திறுகி, வலி யுண்டாகி, வாயில் வெண்ணுரை தள்ளி, மேற்சுவாசங் காணும்.

அன்றியும், கண்களில் இருள் கம்மியது போல் தோற்றத்தை உண்டாக்கி, விகாரமாய் உருட்டி முழிக்கச் செய்து கை கால்களை உதைத்துக் கொள்ளல் முதலிய குணங்களையும் காட்டும், இது தான் தமிழில் காக்கை வலி எனப்படும்.

இது சாதாரணமாய்ச் சதா சிந்தனை, துக்கம், பயம் இவைகளாலும், உடம்பிற் கொவ்வாப் பண்டங்களைப் புசித்தல், இயற்கையான வேகத்தை யடக்குதல், மாதவிடாய் காலத்தில் பெண்களைப் புணருதல், இடைவிடாச் சிற்றின்ப நுகர்ச்சி, உடம்பை யடுத்த தோஷங்கள், முதலியவைகளால் ஏற்படும். a nervous affection arising from the deranged condition of bile in the system. It directly affects the mind.

It is characterised by sudden loss of consciousness and transient loss of intelligense and the faculty of past recognitions.

The other symptoms are; - eys, nose, lips and eye brows are held fast, pain is felt in the muscles, froth issues from the mouth, with hazy apearance to the eyes that are fixed and staring, followed by a succession of tetanic convulsions of the limbs etc. - Epilepsy.

It is due to mental strain such as, constant thinking, worry or grief, fright etc. It is also caused from extraneous circumstances such as, partaking of uncongenial articles of food and violation of regimen of conduct, repression of any natural urging of the body, intercourse with a woman in her menses, indulgence in amorous fancies etc. leading to an aggravation of the bodily humours tending to attack the brain directly. It is a disease of idiopathic origin.

See காக்கை வலி.

அப சுவாசம், ஐந்துவித வாயுக்களில் ஒன்று, one of the five vital airs. See அபானன்.

அபச் சாயை, ஆள் நிழலில் ஏற்படும் விகாரங்கள். இது ஓர் மரணக் குறி, changes appearing in one's shadow, which is a sign of approaching death; 2. நிழலற்ற தன்மை, இது யோகிகளுக்கியலுமே யன்றிச் சாதாரணமாக மனிதர்களுக்கு ஏற்படாதது. a condition in which one does not cast a shadow of himself. This can be done only by a Yogi by making or rendering his body transparent to light, but not ordinarily by men.

அபச்சி, கண்டமாலை scrofula, See. அபசி.

அபச்சு மாரம், காக்கை வலி epilepsy; 2. பைத்தியம், lunacy, See அபசுமாரம்.

அபடங்கி, பத்மினி சாதிப் பெண் one of the four classes of women divided according to lust.

அபடு கரணம், புலன் குறைவு, weakness of perception by the five senses.

அபட்கை, பாம்பின் கீழ்வாய் நச்சுப் பற்களிலொன்று, one of the lower poisonous fangs of a snake.

அபட்சியம், புசிக்கத் தகாதது, that which is unfit for consumption or is unwholesome.

அப தந்திரகம், வாதாதிக்கத்தினால் மூளை தாக்கப்பட்டு அதனாலேற்படும் இழுப்பு வலி convulsions as a result of the affection of brain due to the aggravated condition of Vayu in the system Apoplectic convulsions.

அபதந்திரக வாதம், வாயுவானது சுகித்துத் தன்னிடத்தை விட்டு நழுகிக் கபத்தோடு கலப்பதனால் மேலெழும்பி, மார்பு, தலை, நெற்றி ஆகியவைகளின் நரம்புகளைப் பற்றி, அங்கு வாத நோயையு முண்டாக்கி, அத்துடன் கை கால் இழுப்பையும் விளைவித்து வளையவும் செய்யும். அன்றியும் இது உடம்பையும் வில்லைப் போல் வளைத்து நெட்டுயிர்ப்பையும், நெஞ்சில் சத்தத்தையு முண்டாக்கும்.

மார்பை விட்டுக் கீழிறங்கும்போது, புத்தித் தெளிவையும் அடையச் செய்யும். அப்படி கீறிழங்காவிடில் அசாத்தியமாகும்.

இது பெண்களுக்குக் கருப்பங் கலைந்த காலத்திலும், மாதாந்தர ருது காலத்திலும் உண்டாகில் மரணம் ஏற்படும். இது மந்த வஸ்துக்களையும், அவபத்தியமான உணவுகளையும் உட்கொள்வதனால் பிறந்து, நரம்புகளிற் பரவி, உடம்பின் சில பாகங்களை மரத்தல் அடையச் செய்து, ஞாபக மறதி, பிரமை முதலிய குணங்களையு முண்டாக்கும். a nervous disease ascribed to the action of the enraged Vayu, subcharged with the deranged kapam.

This Vayu is disoldged from its natural seat or other receptacle in the body and in consequence thereof courses upwards and finds lodgment in the regions of the heart, head and the temples. It cuases pressure upon those parts and gives rise to pain and convulsive movements of hands and legs or at times even bends them down.

The spinal column is also bent like an arch causing a peculiar sound in the larynx. The descent of Vayu in its course helps the patient to regain his consciousness and the normal condition of the body. If the said enraged Vayu is obstinate and does not find its course downwards, it is likely to be complicated and incurable.

It is prone to prove fatal in cases of women attacked during abortion or in their menstrual periods.

It is generally due to imcompatible articles of food and errors in diet and it extends to the nervous system causing thereby, numbness, loss of memory, impaired sensibility etc. c.f. **அநுத்தம்ப வாதம்.**

NOTE: According to English Medicine, it is a nanrotic condition charactrised by spasmodic and co-ordinate disturbances of a functional origin extending to the nerve - centres of the thoracic region and upwards.

அபதந்திரம், See, *அப தந்திரகம்.*

அபத ரோகிணி, *ஓர் புல்லுருவி,* a parasitic plant - Epidendron tesselloides.

அப தர்ப்பணம், *பட்டினி யாயிருத்தல்,* fasting; **2.** *விரதம்,* low diet.

அப தாங்கம், *கருவைக் கரைப்பதாலும் அல்லது கரு தானாகவே அழிவதாலும் காயமடைவதனாலும், மற்றும் வேறுவிதக் காரணங்களினாலும் ஏற்பட்ட அதிக இரத்த வொழுக்கினால் உடம்பி லுண்டாகும் அதிர்ச்சி; இது அசாத்தியம்* a condition due to excessive hemorrhage following closely upon an abortion or miscarriage or one incidental to an external blow or injury - Shock. It is generally incurable.

அபதானகம், *எல்லாவித நோய்களிலும் காணும் இசிவு,* a general paroxysm found in all disease; **2.** *வாயுவினால் நரம்புகள் தாக்கப்பட்டு அதனாலேற்படும் வலி அல்லது இசிவு,* convulsion due to the affection of the nerves or nerve - centres of a functional nature; **3.** *காக்கை வலியாற் காணுமிசிவு,* a sharp paroxysm due to epilepsy - Fit.

அபதானக வாதம், *உடம்பு கதித்து வாயு சகல நரம்புகளிலும் பரவுவதால், திடீரென*

எழுந்திருத்தல், பேத்துதல், நடத்தல், நகைத்தல் முதலிய கெட்ட குணங்களைக் காட்டுமோர் நோய், a neurotic disease of a functional origin extending to the nerve centres due to the aggravated condition of Vayu in the system. It is marked by the sudden rising of the person from bed, incoherent speech and peculiar laughter - A kind of neurosis. **2.** *வாதாதிக் கத்தினா லெழுந்து நரம்புகளிற் பரவி எழுந்தெழுந்து விழுவதும், வலிப்புத் தவிர மற்றபடிக் காக்கை வலிப்புக் குண்டான குணங்களை காட்டுவதுமான ஓர் நோய்,* a form of disease in which the patient falls to the ground at intervals and exhibits all symptoms of epilepsy except convulsions.

அபத்த சந்தம், *சாப்பாட்டில் விருப்பமின்மை,* aversion to food, **2.** *பசி யின்மை,* want of appetite.

அபத்த முகம், *நாற்ற வாய்,* foul mouthed.

அபத்தம்ப மர்மம், *சுவாச நாளக் கிளைகள் இரண்டும் கூடுமிடம்.* the meeting of the bifurcated branches of the bronchialying on both sides of the breast.

அபத்தம்பம், *சுவாச நாளக்கிளை அதாவது மூச்சுக்குழாயின் பிரிவு,* the two tubes arising; from the bifurcation of the windpipe with their ramifications Bronchial tubes or Bronchia.

அபத் தம்பினி, *ஓர் பூடு,* a plant.

அபத்தி சந்தம், See *அபத்த சந்தம்.*

அபத்திய சத்துரு, *நண்டு,* crab.

அபத்தியதை, *மருத்துவிச்சி,* midwife.

அபத்திய தோஷம், *பத்தியக் கேட்டினா லுடம்பிற் கேற்படும் குற்றம்,* constitutional defects arising from errors in diet; **2.** *ஏழுவகைத் தோஷங்களு ளொன்று,* one of the 7 kinds of morbid conditions of spontaneous origin from idiopathic casues.

அபத்திய பதம், *யோனி* female sexual organ.

அபத்தியம், *பத்தியத் தவறு,* deviation from prescribed diet; **2.** *இச்சா பத்திய மீறல்,* transgression of abstinence from venery as a medicinal prescription and partaking of food or drink considered unwholesome in particular complaints.

NOTE: In Indian medical science, sexual intercourse is strictly prohibited while under treatment.

அபத்திரவியம், *அசுத்தம்,* want of cleanliness; **2.** *கலப்பு,* admixture.

அபநயம், *பிணி தீர்த்தல்* to cure a disease; **2.** *மரணம்* death.

அபநாசி, *மூக்கின்மை,* lack of nose, congenital absence of a nose.

அப நித்திரை, தூக்கமின்மை, sleeplessness; inability to sleep - Insomnia.

அபந்தலம், செங்கத்தாரி, false peacock's foot tree - Niebuhria linearis.

அபப் பிரசாதை, வயிற்றிற் கருவை யழித்த பெண், a female who has had a miscarriage; an aborted woman.

அப மட்டர், வட்டத் திருப்பி, velvet leaf - Cissampelos pareira. See அம்மட்டம்.

அப மரணம், அகால மரணம் which see; 2. துன்மரணம், unnatural death.

அப மார்க்கம்,

அபா மார்க்கம், நாயுருவிச் சமூலம், the plant as a whole, Indian burr - Achyranthes aspera; 2. ஆன்மா கடைத்தேறும் வழி, the path of emancipation.

அப மார்க்கி, செந்நாயுருவி, a red species of the plant - Achyranthes. See அபாமார்க்கம்.

அப மிருத்தியு, துன்மரணம், unnatural death, as from accident, fire etc; 2. சடுதி மரணம், sudden death; 3. நோய் முதலிய காரணங்களால் ஏற்படாத மரணம், death for which no causes, such as a disease etc. could be assigned; 3. ஆபத்து, a great danger; 4. நோய், illness (from which a person recovers).

அப மிருத்து, see அபிமிருத்தியு.

அபயம், செவ்வியம், common or black pepper - Piper nigrum; 2. ஓர் வாசனைப் புல், a kind of scented grass, see அபயலை.

அபயலை, விலாமிச்சம் வேர் khus khus grass - Andropogon Muricatus.

அபயன், உடம்பில் எலும்புகளைப் பற்றிய நோய்களைப் போக்கும் கருப்பு நிறமான வோர் வகைக் கடுக்காய், இது பொதிகை மலையிலுற்பத்தி யாகும், a species of black Indian myrobalan capable of curing disease affecting the bones in the system. This is said to be found on Pothigai Hills (Tinnevelly) - Chebulic Myrobalan.

See அபையன்.

அபயாதி சல்கம், சுவாசம், விக்கல் ஆகிய இவைகளுக்குச் சுக்கும் கடுக்காயும் சேர்த்துத் தயாரித்த ஓர் வகைப் பிசுபிசுப்பான மருந்து, a paste of dry ginger, and country gallnut prescribed for hard-breathing and hiccough.

அப யாரிட்டம், சுரக்கட்டி, அசீரணம், கிராணி, மார்வலி, காமாலை, நீர்கலிசை, குடற் பூச்சி, முதலிய நோய்களுக்குக் கொடுக்குமோர் ஆயுள்வேத மருந்து, an Ayurvedic preparation given in cases of enlarged spleen, impaired digestion, chronic diarrhoea, heart-disease, jaundice, ascites, worms in the intestines etc.

அபரக் காத்திரம், கால், leg; 2. பின் கால், hind leg (in qudrupeds)

அபரக் கிரியை, பிரேதச் சடங்கு, funeral rites - Obsequies.

அபரங்கப் பருப்பு, உளுந்து black gram - Phaseolus radiatus.

அபர ஞானம், knowledge obtained from study but not practical or divine wisdom; 2. வால ஞானம், superficial knowledge.

அபரஞ்சி, புடம் வைத்த பொன், virgin or pure gold of 24 carats; 2. தங்க ரேக்கு, gold leaf used in setting precious stones; 3. கம்மாறு வெற்றிலை, a species of dark green and pungent thick betel-leaf.

அபரஞ்சித் தூள், தங்கப் பொடி, gold dust; 2. பொன் மணல், gold ore.

அபரதன், வெடியுப்பு, nitre Potassium nitrate.

அபர மார்க்கம், see அபா மார்க்கம்.

அபரம், முதுகு, back or the region of the spine; 2. பின் back; 3. பின் பக்கம் back portion; 4. யானையின் பின்கால், the hind leg of an elephant; 5. பின், latter.

அபர ராத்திரம், see அபராத்திரம்.

அபர வங்கம், பின்னிசிவு, அதாவது உடம்பை வில்லைப் போல் பின்புறமாக வளைக்குமோர் வாத நோய், a tetanic condition of the muscles, especially of the back, whereby there is an arching backward of the trunk which thus rests upon head and heels - Opisthotonos.

NOTE: This condition is generally seen in tetanus, hysteria, hydrophobia, strychnine poisoning, rheumatism etc. See also தனுஸ்தம்ப வாதம்.

அபர வயசு, முதிர்ந்த வயது, advanced age.

அபர வலி, முதுகு வலி, pain in the back - Notalgia.

அபரா, நஞ்சுக் கொடி navel string Umbilical cord.

அபராங்கம், உடம்பின் பின்பக்கம், the posterior or back portion of the body in man.

அபராசிதம், விஷ்ணுக் கிராந்தி, Vishnu plant, Clitoria ternatia alias Evolvulus alsinoides.

அபராணம், பிற்பகல், that part of the day which follows the noon; 2. அந்திப் பொழுது, the fourth part of the day, calculated from 3 12 P.M. to 6 P.M.

அப ராத்திரம், கடைச் சாமம், the last part of the night.

அப ரான்னம், மத்தியானத்தை யடுத்து வரும் ஆறு நாழிகை கொண்ட நேரம், that period of the day which follows noon up to 2 24 p.m.

அபரிச குட்டம், கிரந்தியைப் போல் உடம்பு முழுவதும் வீங்கி வெடித்து அதினின்றும் கறுப்பு இரத்தம் வடிந்து, தொடக் கூடாத வலியை யுண்டாக்கு மோர்வகைக் குட்டம், a kind of leprosy analogons to syphilis, attended with swelling, ulceration and a discharged of venous blood. The prodromal symptoms are associated with hyperesthesia of skin.

அபரிச் சடம், கருப்பம் பூரணமாகுமுன் பிறத்தல் not born fully developed, 2. அகாலப் பிறப்பு, premature birth.

அபரிச் சதம், நிர்வாணம், nakedness - Nudity.

அபரிதை, சம்போக மறியாத பெண், a woman who has had no carnal knowledge of man - A virgin or an unmarried woman.

அபரி பூதம், முதிராதது, that which is not matured 2. திமிங்கிலம், whale.

அபரி மிதம், அளவின்மை, immeasurableness; 2. எல்லையின்மை, unlimitedness.

அப ரூபம், அவலட்சணம், gross deviation from, beauty; disfigurement; defornity.

அபரை, see அபரா.

அபல நாடி, குறை நாடி, feeble pulse - Arachnoid pulse.

அபலந் தரு, பழங்கொடாத மரம், a tree not bearing fruit.

அபலம், பலனின்மை, barrenness; 2. பலவீனம், want of validity - Weakness; 3. மலடு, unfruitfulness, unproductiveness; 4. திமிங்கிலம், whale; 5. ஆற்றலரி, a plant - Tamarix indica; 6. சோற்றுக் கற்றாழை, aloe (Aloe perfoliate); 7. ஓர் பூடு, a plant - Tapia crataeva.

அபலன், பலவீனன், a weak man, an invalid.

அபலை, பெண் woman.

அபல் முசுக்கு, (Hind) கஸ்தூரி வெண்டை, musk bendy - Hibiscus abelmoschus.

அபல்லியம், நோய், sickness.

அபவம், see அபலம்.

அபவரம், நோயை யுண்டாக்கும் பேய், a demon causing illness.

அபவருக்கம் முத்தி, final emancipation of the soul from bodily existence; final beatitude; 2. பிறப்பற்றல், excemption from further transmigration.

அபவனம், காற்றில்லா விடம், an ill-ventilated place; 2. நந்தவனம், flower - garden.

அப வாரணம், மரணம், death.

அப வித்திரம், அசுத்தம், uncleanliness.

அபவித்திரன், சுத்த மில்லான், one who is not clean.

அபனாதி, நிலத் துளசி which see.

அபாக சாகம், இஞ்சி, ginger - Zingiber officinale.

அபாகம், முதிராமை, immaturity; . சமியாக்குணம், incapability of digesting food; the state of indigestion.

அபாகி ரோகம், உடம்பில் பல விடங்களில் கருகி யுலர்ந்த கொப்புளங்களைப் போலெழும்பி, வெகுநாள் வரைக்கும் இறக்கங் கொள்ளாமல் துன்பத்தை விளைவிக்குமோர் அம்மை நோய், an abortive form of variola in which the vesicles which spread over several parts of the body dry before reaching the pustular stage and give them a blackish appearence. It takes a long time for the falling off of the scabs or crusts and thus puts the patient to a great deal of suffering - Variola vaccina atrophica. See also கல்லம்மை.

அபாங்ககம், அவயவக் குறைவு, absence of limbs; organic defect; 2. கடைக்கண், the outer cornor of the eye.

அபாங்க மர்மம், அபாங்க ரகசியம் அதாவது மேல் வாய், கண் மூக்கு இவைகளின் நாடிகளுக்கு ஏற்படும் அதீத சம்பந்தம், a pathologic formation of a passage between the arteries of the upper mouth, eyes and the nose - Anastomosis of the infra-orbital artery.

அபாங்கம், கடைக்கண், outer cornor of the eye; 2. கடைக்கண் பார்வை, looking askance.

அபாடவம், நோய், disease; 2. அந்தக்கேடு, deviation from beauty, ugliness.

அபாதரன், வெடியுப்பு, nitre - Potassic nitrate.

அபாநம், see, அபானம்.

அபாபம், மரணம் death.

அபா மாருத மூலி, வெண்ணாயுருவி, a white species of நாயுருவி, a plant, Indian burr - Achyranthes aspera.

அபாமார்க்க சாரம், நாயுருவிச் சத்து அல்லது சாம்பல், the essence or ashes obtained from the plant, Indian burr.

அபா மார்க்கம் see அபாமாருத மூலி.

அபா மார்க்க ஸ்நானம், உடம்பில் நாயுருவியைத் தடவிக் கொண்டு, செய்யுமோர் குளியல், a kind of scientific bath after smearing the body with the juice of the plant, Indian burr - Achyranthes aspera.

அபாரணக் காலம், உண்ணத் தகாத வேளை, time not intended for taking food; untimely.

அபாரவணா, உண்ணாமை, abstinence from food.

அபா லங்கம், .கொன்றை, a plant - Cassia fistula.

அபாவம், கடுக்காய், gall-nut - Chebulic Myrohalan - Terminalia chebula.

அபாவ யோகம், கரணங்களுக்குக் கெட்டாத பிரமத்தில் மனோலய மாவதற்காகச் செய்யும் ஐவகை யோகநிலைகளிலொன்று one of the 5 stages of Yoga intended for bringing about the union of the mind with the divine spirit.

NOTE: The mind will have to be raised step by step from the gross state to the subtle and then to the casual state and finaly to Samadhi (highest illumination).

அபானக் கடுப்பு, மலவாய் கடுத்தல், irritation of the rectum.

அபானக் காந்தல், மலவாயிலின் எரிச்சல் burning sennation or inflammation of the anus or the rectum - Proctitis.

அபான சுத்தி, வஸ்திச் சிகிச்சை treatment by enema; **2. மல வாயிலைச் சுத்தி செய்தல்,** the cleaning of the rectum.

அபானத் தான லித்திரிதிக் கட்டி, see **அபான வித்திரிதி.**

அபானத் துவாரம், மல வாயில் the opening through which the excrement is expelled - Anus.

அபானப் பிரயோக நீர் மல சுத்தியாக வேண்டி ஆசன வாயுள் புகட்டும் நீர், a liquid substance injected into the lower intestines, to cleanse the bowels - Clyster enema.

அபான மால், அபானவாயு, which see.

அபானம், கடுக்காய், gall-nut or Chebulic myrobalan - Terminalia chebula; **2. குதம்,** anus; **3. மூலாதாரம்,** (in yoga philosophy) one of the six psychic centres of the human body i.e., the posteriors including the hip - Pelvic plexus. See **அகண்ட ரசம்; 4. கீழ்,** down.

அபான ரோகம், பொதுவாகக் குதத்தில் உண்டாகும் நோய்கள், diseases of the rectum or the anus, in general.

அபான வாயு, தசவாயுக்களி லொன்றாகிய கீழ் நோக்கிச் செல்லும் வாயு, இது மலக்குலையே யிடமாகக் கொண்டு, உச்சத் தலத்தில் நின்று, இடுப்பின் பூட்டு, மர்மஸ்தானம், அடிவயிறு, அடித்தொடை ஆகிய இவ்விடங்களிற் பரவி, விந்து, நாதம், மலம், மூத்திரம், கருப்பம் ஆகிய இவைகளை வெளிப்படுத்தும். இது விகாரப்படின், கடுமையான மூத்திர நோய்களையும், குடல்

நோய்களையு முண்டாக்கும். இவ்வாயு, வியானன் என்னும் வாயுவோடு கலக்கப் பிரமேகம் முதலிய விந்துவைப் பற்றிய ரோகங்களு மேற்படும். one of the ten vital airs, having a tendency to pass downwards. It emanates from the region of the pelvic plexus and extends over the genitals, abdomen, pelvic region etc — Ventris crepitus. It form the active agent in the discharge of semen, menstrual blood, fecal matter, and urine and also in expelling the contents of the womb.

It is identical with the force of the Hypogastric plexus. An enraged condition of this Vayu tends to bring on serious disease that are peculiar to the urinary bladder and the distal portion of the large intestines. Combining with Vyana, it may produce urinary disorders and disorders of the seminal fluid (Prahmeha)

அபான வாயுக் கடுப்பு சூட்டினாலும், குதத்திலுண்டாகும் இரணத்தினாலும் ஏற்படுமெரிச்சல், a burning sensation due to excess of heat and ulceration of the anus — Rectitis or Proctitis.

அபான வாயுக் கெரிச்சான், புகையிலை, tobacco as an agent for driving out wind through the anus.

அபான லித்திரிதி, குதத்தில் எழும்பி மிக்க வலியை யுண்டாக்கு மோர் கட்டி, an abscess of the anus causing intense pain - Marginal abscess.

அபான லிப்புருதி, குதத்தி லெழும்பு மோர் வகைச் சிலந்தி, an ulcer inside the rectum or at its extermity. c.f. **பவுத்திரம்.**

அபான விரிவு, ஆசன வாய் விரிதல், dilatation of the rectum or of the anus — Proctectasia.

அபான விருத்தி, குடலில் அபான வாயு அதிகரித்தல், a condition marked by the presence of excessive gas in the intestines — Flatulence.

அபான வேர், மூல முளை, an eversion of the rectal mucous membrance observed in cases of piles.

அபானன், தொப்புளின் கீழ், நேராகக் குய்யத்திற்கும் குதத்திற்கும் மத்தியே யுள்ள மூலாதாரப் பகுதியில் இருந்து கொண்டு தன் தொழிலை நடத்தும் அபான வாயு, the vital air that discharge its functions taking its seat in the sacral region just opposite to that part below the navel, and between the anus and the genital. See also **அபான வாயு.**

அபானியம், குடிக்கத் தகாதது, that which is unfit to drink.

அபானோத் காரம், see **அபானவாயு.**

அபி, ஓர் உபசர்க்கம். இது வினைச் சொற்களோடு கூடுங்கால்,

அசைதல், போகுதல், கிட்டுதல் ஆகிய வித் தொழில்களைக் காட்டும், as a prefix to verbs it expresses the notion of moving, going or approaching.

2. பெயர்ச் சொற்களோடு சேருங்கால், இது, மேன்மை, மிகுதி ஆகிய இக்குணங்களைக் காட்டும், as an intensive prefix to nouns, it expresses superiority, intensity or inferiority etc. e.g. அபிவிருத்தி, அபிகாயம், அபிசாங்கி.

அபி கரணம், செவி பாகம், the region of the ears.

அபி கருஷணம், தேய்த்தல், rubbing, anointing.

அபிகாச சேத்துமம், இருமல், இளைப்பு, ஈளை, முதலியவைகளுண்டாகி வயிறு மந்தித்து, உடம்பு வற்றி, உரு வழிந்து, பலத்தைக் குறைக்கு மோர் நோய், a phlegmatic disease attended with cough, fatigue, phlegm etc. Its symptoms are: - loss of appetite, emaciation, loss of strength denutrition, change of features etc.

அபிகாத சுரம், கத்திக்காய், இரணம் முதலிய காரணங்களினாலும், நெருப்பண்டை யிருந்து வேலை செய்தல், பனியில் திரிதல், அதிக நடை, உழைப்பு, முதலியவைகளாலு மேற்படு மோர் காய்ச்சல், a fever arising from shock due to various causes such as, knife-injury, ulcers, working in close proximity to the fire-place, excessive walking, exertion or strain, etc.

அபிகாத சூலை, கல் முதலியவைகளால் செவியில் அடியுண்ட காலத்தில் அதனுள் சீழ், இரத்தம் முதலியன சேர்ந்து, குத்தலை யுண்டாக்குமோர் வகைக் காது நோய், a disease of the ear marked by darting pain arising from the collection of pus and blood inside. It is due to traumatic causes - Otalgia or Otitis.

அபிகாத சோபை, இரசகந்த பாஷாணம், சேராங் கொட்டை முதலிய மருந்துகளினாலுடம்பி லுண்டாகு மோர் வகைச் சோகை நோய், a form of anemia due to the action of certain poisons, such as Mercury, sulphur, arsenic, marking nut etc. — Toxic anemia; 2. ஆயுதக் காயத்தினால் இரத்த வொழுக் கேற்பட்டு அதனால் உண்டாகும் சோகை, anemia due to the loss of blood from an injury or a wound - Traumatic anemia.

அபிகாதசம், அடி அல்லது காயத்தினா லேற்படும் அதிர்ச்சி, shock due to external injury or blow - Traumatic shock.

அபிசாதம், வேதனை, pain, suffering; 2. காயமுண்டாக்கல், inflicting injury; giving a blow; 3. வெடிப்பு, பிளவு, fissure, crack; 4. வருத்தம், torture, affliction; 5. அதிக உழைப்பு, strain (physical); exertion; 6. கருப்பைச் சுருக்கம், uterine

contraction; 7. பறவைகளுக் கேற்படும் சுரம், fever in birds.

அபிசாத வாதம், அதிவேக நடை, வாகனங்களேறி விரைவிற் செல்லல், மல்யுத்தம் செய்தல், நெடுந்தூரஞ் செல்லல், அதிக உழைப்பு, முதலிய செய்கைகளினாலுடம்பு தாங்க முடியாது நரம்புகளுக்கு அசதி ஏற்பட்டு, வலி, ஆயாசம், படுக்கையாய்க் கிடத்தல், இளைப்பு முதலிய குணங்களை யுண்டாக்குமோர் வாத நோய், a functional disorder of the nervous system not dependent on any discoverable lesion, but supposed to arise from excessively fast walking, riding, wresting, long journey, and undue exertion, etc. It invades the whole system and is marked by pain, exhaustion, prostration fatigue, etc.

அபிகாமின், புணருதல், புணர்ச்சி, sexual intercourse, copulation.

அபிகாயம், ஓர் கொடிய காச நோய், asthma of a virulent type; 2. உள்ளழற்சி, internal inflammation, as of the lungs in consumption.

அபிகாரம், தூவல், scattering over, 2. தெளித்தல், sprinkling.

அபிசங்க சுரம், (அபிசங்கம் = தழுவுதல்) பூதாவேசம், ஔடதம், விடம், கோபம், பயம், துக்கம், காமம் ஆகிய இவ்வேழு வகைக் காரணங்களை முன்னிட்டுச் செயற்கையா லுண்டாகும் காய்ச்சல், a fever due to the excited condition of the body, arising from any of the following seven causes viz - demoniac frenzy, virulent medicine, poison, anger, fear, distress and passion - Idiopathic fever.

NOTE: In certain cases of fever of this type, a younmg beautiful girl is asked to take the patient into a firm embrace as a means of cure.

அபிசந்தம், see அபிசி யந்தம்.

அபிசயந்தி போசனம், உடம்பைப் பருமனாக்கக் கூடிய தயிர் முதலிய உணவுப் பொருள்கள், articles of food such as, curd etc, likely to inflate the system.

அபி சர்ச்சனம், கொலை, murder.

அபிசவம், புளிப்பேறிய கஞ்சி, sour rice water.

அபிசாங்கி, அத்தினி சாதிப் பெண், the last of the four classes of women divided according to lust.

அபிசாப சுரம், சித்தர்கள், யோகிகள் முதலிய பெரியோர்களின் கொடிய சாபத்தினால் ஏற்படும் காய்ச்சல், இது பூர்வ கருமத்திற்குத் தக்கபடி வந்து சேரும். fever from severe curse of Siddhars, Yogis and such other great men. It comes on according to one's Karma.

அபிசார சுரம், ஆரிய கொள்கைப்படி, மந்திரம், செபம், ஓமம்,

முதலியவைகளினால் எழும் சுரம், இது அதர்வண வேதத்திற் சொல்லியுள்ள மாரண மந்திரங்களைக் கொண்டொருவன் பேரைச் சொல்லிச் செய்தலினால் பிறருக்கு மௌக் கருதப்படும், according to the Aryam science, it is a kind of fever ushered in through the dynamic forces of deadly incantions or through the performance of magic, meditation, sacrificial rites etc. It is supposed to be caused by chanting the name of the intended party along with the magic spell contemplated in the Atharvana Veda with a view to strike a mortal blow at him.

2. சித்தர் நூல் கொள்கைப்படி, அஷ்ட கருமங்களிலொன்றாகிய மாரண மந்திரத்தைக் கிரமப்படிச் செபித்து, அதனால் ஒருவனுக்கு விளைவிக்கும் சுரம், இதனால் உடம்பு முழுமையும் கொப்புளங்கள் தோன்றி, சன்னிபாத சுரத்திற்குக் குரிய குணங்களைக் காட்டும், இது மணி மந்திர மருந்துகளினாற் குணப்படும், according to Siddhar's Science, it is a fever brought about by chanting one of the eight kinds of magic incantation contemplated in the Mantric science of Siddhars called, "Attakaruma Siddhi". Psychologically, it is known as 'Black art'. It is said to develop boils all over the body followed by the symptoms of typhoid fever. It can only be cured by a combined treatment of magic and medicine.

அபிசார மந்திரம், மாரண மந்திரம் ஒருவனுக்குத் தீங்கிழைக்க வேண்டி இதை ஓமத்தினாலும் யந்திர தாபிதத்தாலும் செய்து முடித்தல், இதனால் சித்தப் பிரமை, ஆசை, வெறுப்பு, மரணம் முதலியவை களேற்படும், a magic for a malevolent purpose. It is practised with sacrificial fire or with spells and magic diagrams and is supposed to bring on or produce mental aberration, love, hatred, paralysis, and death; **2.** மோகன மந்திரம், one of the eight kinds of magical enchantments by which super human powers are attained - the power of bringing about libinous fascination by magic.

அபிசாரம், மோகனம் see அபிசார மந்திரம், **2.** மரணம் death; **3.** மாரணம், black art for purpose of invoking death; **4.** சூனியம், அல்லது பில்லி, magic practised to bring about insanity, disease etc; employment of spells for a malevolent purpose.

அபிசாரி, மோகங் கொண்ட பெண், a woman inspired by lust or sexual appetite; **2.** மோகன வித்தைக் காரன், a magician having the power of chanting mantrams to excite lustful feelings or desires in a person; **3.** விபச்சாரி, a prostitute.

அபிசாரிகை, அயலானோடு சம்போகஞ் செய்த பெண், a woman who had illicit intercourse.

அபிசாரிக்கை, பிறருக்குக் கொலை, காமம், பைத்தியம் முதலிய தீங்குகளை விளைவிப்பதற்காக வேண்டிச் செய்யும், மந்திர சாதனை, the practice of black art with the aid of magical enchantments for purposes of bringing about death, lust, lunnacy or other evil effects in a person.

அபிசிந்தி, (Hind) மாசிப் பத்திரி, இது ஒரு யுனானிப் பெயர், a Hindustani term for Santonin wood - Artemesia absinthium.

அபிசியந்தம், வாயுவினா லேற்படும் ஓர் கண்ணோய், ophthalmia due to the action of deranged Vayu and it is attended with pricking pain, horripilation of the eye lashes and irritation of the eyes - Conjunctivitis.

See அபிடியந்தம்.

அபிசுதம், கஞ்சி, rice - water.

அபிசுரம், ஏவலினா லுண்டாகுங் காய்ச்சல், a fever caused by magic spells. See அபிசார சுரம்.,

அபிடவம், see அபிசவம்.

அபிடி யந்தம், கண்ணின் பலக்குறைவு, weakness of the eye.

அபிட்டம், இரசம், quick silver.

அபிஷதம், அபிதம், See அவுடதம்.

அபிஷியந்தி, உடம்பினில் உள்ள நாளங்களின் பிசுபிசுப்பையும், அதனால் கை கால் கனதியையு முண்டாக்குமோர் சிலேட்டுமம், anything that produces a sliminess in the channels and a consequent heaviness of the limbs; **2.** நீர் கசியச் செய்தல், causing defluxions or watery effusions.

அபிஷேகப் பால், பால், இரசம் முதலியவைகளைக் கொண்டு கொங்கணவர் முறைப்படி தயாரித்த மருந்து. இதனால் காயசித்தி, வாதசித்தி, முதலியவைகளுண்டாகும். சுழிமுனை திறக்கும். இதை நவ லோகத்தில் தெளித்துக் காய்ச்சப் பொன்னாகும். a mercurial preparation obtained by boiling milk and mercury, with other ingredients for purposes of rejuvenation and transmutation of metals by a mystic process, as described in Konganava's work on Alchemy; **2.** மதி யமிர்தம்.

"மேலான அபிஷேகப்பாலை யுண்டால்
விரைந்தேழு நாளையிலே காயசித்தி."
(கொங், வாத, காவி)

an ambrosial fluid supposed to be oozing in drops from the opening behind the uvula during the advanced stage in Yoga. It is said to promote longevity

See அமுத நிலை.

அபி ஷோரா, பொட்டி லுப்பினால் சில்லிட்ட குடிநீர், water cooled by means of solution of saltpetre.

அபிஷேஷாலா, *ஷர்பத்தினால் சில்லிட்ட குடிநீர்,* watre cooled by syrup, a solution of sugar combined with other drugs.

அபிதாபம், *மிகுந்த வெப்பம்,* extreme heat.

அபிதான கோசம், *ஓர் வடமொழி யகராதி,* a Sanskrit medical dictionary.

அபிதான சிந்தாமணி, *ஏம சந்திரன் என்பவரால் செய்த வோர் வடமொழி அகராதி,* a Sanskrit dictionary of synomyms hy Hemachandran.

அபிதான சூடாமணி, *காஸ்மீர தேசத்தில் வசித்து வந்த நரஹரி யென்னும் பண்டிதரால் மூலிகைகளின் உபயோகங்களைப் பற்றி சிறப்பாக வடமொழியில், எழுதப்பட்ட ஓர் பெரிய வைத்திய நூல். இந்நூல் மேற்படி தேசத்து அரசன் ஆதரவினால் 700 கி.பி.யில் எழுதப்பட்டதால் இதற்கு இராஜ நிகண்டு என்றும் பெயர்.* an excellant work on Materia Medica compiled by Narahari of Kashmere. It is a glossary of medicinal substances with specifications of their virtues. It is also known as Raja Nigandu for, it was composed under the patronage of the king of Kashmere in 700 A.D.

அபிதானம், *அபிதான கோசம்,* which see; **2.** *நிகண்டு,* a vocabulary of synonyms; a dictionary; **3.** *சலாகை,* a surgeon's probe.

அபிநய நூல், *காமக்குறிப்பைப் பற்றிய வோர் நூல்,* a treatise on gestures of lust or of passion.

அபிநயம், *காமக் குறிப்பு,* indication of sexual passion of gestures viz. movements of the eyes, attitude of the breast etc.

அபி நாகனம், *கண்கட்டு,* bandage over the eyes.

அபி நாகிதம், *தேத்தான் கொட்டை,* water cleaning nut Strychnos potatorum.

அபிநாச சன்னி, see *அபிநியாச சன்னி.*

அபிநாசி, see *அபீனசம்.*

அபிநித மாது, *பத்மினி சாதிப் பெண்,* the first of the four classes of woman divided according to lust, chastity. etc.

அபிநியாச சன்னி, *அகோரமாய்ச் சுரங்காய்ந்து, பசியின்மை, முக பளபளப்பு, உடம்பு வலி, மேற்சுவாசம், பலவீனம், பஞ்சேந்திரியத் தன்மைக் குறைவு, மயங்கிய நித்திரை, அறிவின்மை முதலிய குணங்களைக் காட்டுமோர் வகைச் சன்னிபாத சுரம்.*

இது வாத பித்த சிலேட்டுமம் சமமாக அதிகரிப்பதினா லுண்டாகி, 15-நாளைக்குள் மரணத்தை

யுண்டாக்கும். a kind of typhoid fever characterised by high temperature, loss of appetite, glossiness of face, pain all over the body, hard-breathing, weakness, depression of vital powers of the five sensory organs, sommolence, loss of consciousness etc.

It is said to due to disordered state or abnormal condition of the 3 fluids (humours) † prevailing in the system.

The incubation period varies from one to fifteen days.

NOTE: - A case of *சன்னிபாத சுரம்,* attended with somnolence is known as *அபிநியாச சன்னி.*

அபிநியாச சுரம், *உட்காங்கை, நிறம் குன்றல், பசி நீங்கல், முக பளபளப்பு, பேச்சின்மை, பஞ்சேந்திரியத் தன்மைக் குறைவு, மயங்கிய நித்திரை, மற்றும் சன்னி பாதத்திற்குரிய குணங்கள், முதலியவைகளுடன் கூடிய சுரம்,* a fever accompanied by a slight or impereeptible rise of the bodily beat or a slightly sub-normal temperature, dulness of complexion, loss of appetite, glassiness of face, loss of voice, loss of vital powers of the sensory organs, somnolence or subcomatose state and other concomitant symptoms of typhus fever - Ardent fever.

See *அபினியாச சன்னிபாத சுரம்.*

அபிநியாச வாதம், *பிராண அபான வாயுக்கள் வாத பித்த சிலேட்டுமங்களை அதிகரிக்கச் செய்வதனால் அதிக சுரங்காய்ந்து, காதடியில் வீக்கத்தை யுண்டுபண்ணும் ஓர் வாத நோய்.* a rheumatism marked by high fever and Swelling below the lobes of the ears.

---

† According to the Physiolocigal doctrine of Indian medical science, the air (wind) bile and phlegm are the three supports of the human system and that without those three humours (as they are termed) and the blood, an individual could not exist, and if they get deranged, disease or death would be the result. In pathology also it is explained by the Hindus that the principles are similar to those furnished in Physiology.

The harmony of the said humours of the body is also considered liable to derangement and it is also believed that diseases at one time arise from a relative increase of one or more of the principle humours and at another time from the dimunition of them.

This doctrine of Humoural Pathology was in vogue at one time over a great part of the globe and among Hindus also. It is still universally believed and followed especially by the Indian Hakeems and Vaidyans of the present day.

Even in Europe, this doctrines was believed in by all secs and all theoristis until the commoncement of the eighteenth country and it was also very zealously defended by the Greecian doctors viz. Hippocrates and Galen.

The fall of the Galenic School paved the way for the growth of the Western Medicine which began with the establishment of the Medical School at Salerno and has been gaining ground will until the present day.

For further details see under திரிதோஷம்.

It arises from an abnormal increase of the three humours as a consequence of the vital airs Prana and Apana prevailing upon the region of the ear.

அபி நீலம், மிகக் கருப்பு, very black or dark.

அபிந் நியாசம், see **அபிநியாசம்.**

அபி பிங்கலம், மிகச் சிவப்பு, very red or reddish brown.

அபி மந்தம், கண்ணோய், a disease of the eye.

அபிமந்தி ரணம், மந்திரித்தல், to treat by magical enchantments.

அபி மந்திரம், செபித்தற் குரிய மந்திர பீசம், a formula or prayer for working a charm.

அபிமானம், தத்துவ நூலின்படி இது, அகங்காரத்தினுடைய தொழிலை அதாவது தனக்கே ஏற்படும் மமதையைக் குறிக்கும், In philosophy it refers to Egotism or self conviction i.e. belief in self.

அபிமான விருத்தி, அகங்காரம், egoism.

அபிமானிதம், புணர்ச்சி, copulation; sexual intercourse.

அபியங்கம், தைலந் தேய்த்தல், rubbing over the body with oil - Unction; anointing or applying an oil or ointment with friction - Inunction.

அபி யந்தரம், உள், inside.

அபிரங்கி, கரு நெல்லி, black - berried featherfoil - Phyllanthus reticulatus; 2. நீர்ப்பூலா, a species of Phyllanthus reticulatus.

அபிராமஞ்சி, சடா மாஞ்சில், a plant - Valeriana jatamansi.

அபிராமி, மூலி, சார்வளை, a plant - Trianthema decandra.

அபிருத்தம், மேக நோயினால் ஆண் குறியின் முன் தோலில் ஏற்படும் சுருக்கம், the retraction of the prepuce behind the glans penis - Paraphymosis.

See also **நிருத்தப் பிரகாசம்** and **கிருத்தமணி.**

அபிரேகம், அபிரேக்கு, see **அப்பிரகம்.**

அபிவாக தாரை, நிணநீர்த் தாரை முடிவு, the terminal ducts of the lymphatic gland; 2. **கோளத்தினின்று வெளிவரும் நிண நீர்த்தாரை,** the efferent vessels of the lymphatic gland - Vasa efferentia (Lymphatica).

அபி வியாதம், விழுங்குவதற்காக வாயைத் திறத்தல், opening one's mouth for swallowing.

அபிற் சாந்து, பூஞ்சாந்து, a tree bark sold in the bassars.

அபிற் சீரம், சிற்றீஞ்சு, the dwarf date palm - Phoenix humilis.

அபினி, கசகசாப் பால், இது கசகசாச் செடியின் முதிராத காயைப் பீறி அதினின்று வந்து உறைந்த பால், இந்தியாவில் உற்பத்தியாகும் அபினி இரண்டு வகைப்படும். 1. மால்வா அபினி அல்லது பால் அபினி. 2. பாடலிபுரத்தபினி, மாளவ தேசத்து அபினியைப் போல், ஊதா நிறமா யிராமல் பாடலிபுரத்தபினி மிருதுவாயும், சிறிது கசப்பாயும், புகை வாசனையுள்ளதாயு மிருக்கும்.

இது நமது தேசத்திற்குப் பூர்வத்தில் அரேபியர்களாற் கொண்டு வரப்பட்டதெனக் கருதப்படுகிறது. அபினியின் சத்தை ஆங்கிலேயர்கள் மார்பைன் என்று சொல்லுவார்கள். உயர்தரமான அபினியில் நூற்றுக்கு எட்டு அல்லது ஒன்பது வீதம் மார்பைன் என்னும் போதை வஸ்து அடங்கி யுள்ளது. இதைச் சீனத்தார்கள் விசேஷமாய் உபயோகிக்கிறார்கள்.

இம்மருந்து சாதாரணமாய்ப் போதையை உண்டாக்கு வதற்காகவே உபயோகப் படுத்தப்படுகிறது. இதை வழக்கமாகச் சாப்பிட்டால் வயிறு சுருங்குமெனக் கருதப்படும். இதை வைத்தியத்தில் பலவிதமாக உபயோகப்படுத்துவதுண்டு. சிறிய அளவில் உத்தீபன மருந்தாகவும், மயக்கத்தை உண்டாக்கவும், நோய்களை ஆற்றுவதற்கும், உபயோகப்படும்.

கருப்பையிலிருந்து வரும் இரத்தப் பெருக்கை இது அதிகப்படுத்தும். சிறிது அதிகமாகக் கொடுக்க, மேற்கண்ட பெருக்கை முற்றிலும் நிறுத்தும். அன்றியும், இதைத் தூக்கத்தை யுண்டு பண்ணுவதற்கும், தாளையிருத்தும் காய்ச்சலுக்கும் சன்னி, வலிப்பு இவைகளைச் சாந்தப்படுத்தவும், சீதபேதிக்கும், கொடுப்பதுண்டு. இதற்குச் சுரப்பு நீர்களை வற்றச் செய்யும் குணமுண்டு. ஆகவே இதைப் பேதி, வாந்தி பேதி, வயிற்று வலி, அதி மூத்திரம், மது மூத்திரம், காது வலி, நீரடைப்பு, நீரெரிச்சல், பல்வலி முதலியவைகளுக்கும் கொடுப்பதுண்டு. வாத நோய்களிலும், இதைச் சாராயத்தில் கலந்து பூச்சு மருந்தாகவும் உபயோகிப்பதுண்டு. நமது நாட்டு வைத்தியர்கள் இதைப் பூரணாதி முதலிய லேகியங்களில் தாராளமாய் உபயோகிப்பார்கள். குறைந்த அளவில் இதை மனக் கிளர்ச்சிக்கும், நாடி நடைக்கும் கொடுப்பதுண்டு. புளித்த தயிர், சுண்ணாம்பு நீர், முதலான வஸ்துக்கள் இதற்கு மாறாகக் கொள்ளப்படும்.

நோயின் வலியைச் சாந்தப்படுத்தும் குணத்திலும், உடம்பை இளைக்கச் செய்யும் நோய்களிலும், இது மிகச் சிறந்த மருந்தெனக் கொள்ளப்படும். இது ஆயுளை நீடிக்கச் செய்வதிலும், உடம்பை வலுவடையச் செய்வதிலும், மிக்க மேன்மை வாய்ந்ததெனச் சிலாக்கியமாகச் சொல்லுவார்கள்.

இது உடற் கூற்றின் மாறுபாட்டை மறுத்துக் கிழத்தனத்தைத் தடுப்பதில் சிறந்த மருந்தென நம்பப்படுகிறது. மிக்கவளவில் இது கொடிய நஞ்சுத் தன்மையது. மரணத்தை யுண்டாக்கும். the milky sap of poppy seed Affium. It is the concrete inspissated juice of the plant obtained by scratching immature poppy capsules and not the foliage.

The opium obtained in our country (India) consists of two varieties. The first variety is known as Malwa opium. The second variety is called the milk opium or the Dhooth opium which is very soft, bitter and darker in colour.

The use of the drug opium is considered to have been introduced into India by ths Arabs. The active principle in opium is known in English as Morphine. The best opium contains eight to nine percent of morphine. It is commonly used in China.

It is generally used as an intoxicating drug and it is believed that it contracts the walls of the stomach if taken as an addicted drug.

It is used in medicine in various ways. In small doses it is a stimulate, narcotic and antispasmodic and it increases bleeding from the womb, but given a little in excess, arrests the hemorrhage completely.

Moreover it is prescribed to induce sleep, to shorten cold fit of an intermitent fever, in lock-jaw, dysentery and other bowel affections.

It is commonly believed tô be a prophylactic agent and as such as used in cases of diarrhoea, cholera, colicm diabetes insipidus, diabetes mellitus, ear ache, stricture of urine, inflamed or high coloured urine, tooth ache etc.

As an external applications, when mixed with arrack, it is valuable in various rheumatic and neuralgic affections.

Veidyans in India use opium freely in medicine and especially in the preparation of electuries such as, pooranathi etc.

In small doses, it increases the energy of the mind and the frequency of the pulse. Acetic acid being a perfect counter poison for opium, substances such as curd, lime water etc, are freely used as antidotes, as also permanganate of potassium.

The belief in its use in the mitigation of suffering and in painful and wasting diseases is but universal. Great virtue is attributed to it as it tends to promote longevity and much of the invigoration produced by it, is mainly artificial. It is believed to have the desired effect in old age of arresting or retarding the molecular changes.

NOTE: The other kinds derive their names from the places where they are grown, as given under.

1. Turkey or Smyrna.

2. East India or Bengal.

3. Egypt.

4. Europe.

அபினிச் சத்து, அபினியினின்று இறக்கும் சத்து. இதை ஆங்கிலேயர்கள் மார்பைன் என்று சொல்லுவார்கள். இது வெள்ளைப் பற்பமாயும் கசப்பாயுமிருக்கும். இதில் சிறிய அளவு 1/10 கிரேய்ன், முழு அளவு 1/2 கிரேய்ன்; அதிக அளவிற் கொடுத்தால் மரணத்திற் கிடமாகும். இதை மயக்கத்திற்காகவும் உணர்ச்சி அறியாமலிருக்கவு முபயோகிப்பதுண்டு. சீனத்தார்கள் இதை விசேஷமாய் உட்கொள்ளுவார்கள். extract of opium - Morphine or Cocaine. It is a white amorphous powder with a bitter taste. 1/10 grain of this is a small does and 1/2 grain is a full dose. If given in over doses it may cause death. It is used to induce intoxication, unconciousness or insensibility. It is largely consumed by the Chinese.

அபினிச் சாராயம், பங்கி என்று சொல்லப்பட்ட வோர்வகை மதுபானம். இது கசகசாவினின்று தயாரிக்கப்படும். இது பக்கிரிகளாலும், இன்னும் சிலராலும் பண்டிகைக் காலங்களில் உட்கொள்ளப்படும். an intoxicating liqour which is formed by macerating or infusing the poppy heads in water and sweetening the same with molasses. It is drunk by fakirs and by some others on festival occasions - Bhang.

2. அபினிச் சத்திலிருந்து வடிக்கும் ஓர் வகை மேனாட்டுச் சாராயம். இது அபினிச் சத்துடன் இலவங்கப்பட்டை, இலவங்கம், முதலிய சரக்குகளைக் கலந்து தயாரிக்கப்படும். இது கண்வலி முதலிய கண் ரோகங்களுக்கு உபயோகப்படும். wine of opium - Vinum opii. It is prepared from the extract of opium with cinnamon bark, cloves and other ingredients as per British pharmacoepia. It is employed as a local application in ophthalmia and other affections of the eyes.

அபிச் செடி, கசகசாச் செடி. இது 2—3 அடி உயரம் வளரும். விதைகள் சிறியவைகளாகவும், வெண்மை நிறமுள்ளனவாகவும், பூக்கள் ஏராளமாகவும், வெண்மையாகவும் இருக்கும். முதிர்ந்து காய்களிலிருந்து தான் கசகசா உண்டாக்கப்படும். அவைகள் வாசனை யற்றவைகளாயும், சிறிது கசப்பாகவுமிருக்கும். அக்காய்களினின்று வந்து உறைந்த பால் தான் அபினி. அபினி செடி

முழுமையும் பால் உள்ளதாதலின் அதைக் கஷாயமாகக் காய்ச்சிச் சத்தெடுப்பதுண்டு. அது இந்தியாவிற்குக் கொண்டு வந்து பயிராக்கப்பட்ட செடி, poppy plant - Papaver somniferum. It is 2—3 ft in height. Its seeds are small and white, and the numerous flowers are generally white. The matured capsules are called poppy heads and they are devoid of odour, but are of a slightly bitter taste. Milky inspissated juice of the plant is opium. All parts of the poppy plant abound in a milky juice which is extracted partially from its decoction. It is naturalised by cultivation in India.

அபினிச் செம்பு, அபினி, கந்தகம், துருசு, முதலான சரக்குகளைக் கொண்டு, போகர் நூலிற் சொல்லிய முறைப்படி மெழுகாக்கிச் செம்புருகையில் கிராசங் கொடுத்துச் சுத்தி செய்த களிம்பற்ற ஓர் உயர்தரமான செம்பு. இது வேதைக் குதவும், a purified superior copper free from verdigris, prepared according to the process laid down in a Bogar's work, using opium, sulphur, blue stone etc. as chief ingredients. This is useful in Alchemy.

அபினித் தைலம், அபினிச் சத்திலிருந்து தயாரிக்குந் தைலம், இது மேற்பூச்சு மருந்தாக வாத நோய், வாதப்பிடிப்பு முதலான வலியுள்ள நோய்களுக் குபயோகப்படும். an oily liquid preparation from the extract of opium used as an external application in cases of rheumatism, gout and other painful affections.

அபினிப்பாகு, கசகசாத் தோல், சாராயம், சர்க்கரை ஆகிய இவைகளை வெள்ளீரிற் கலக்கிக் கொதிக்க வைத்துப் பாகுபதமாய் இறக்கியவோர் மருந்துப்பாகு. இதற்குத் தற்காலத்தில் 'ஷர்பத்' என்று யுனானி முறையில் பெயர் வழங்கும். the syrup of poppies - Syrupus papavaris. It is a syrup prepared from poppy capsules, rectified spirit and refined sugar by boiling them sufficiently until the mass is reduced to a concentrated solution of sugar.

அபினியுப்பு, அபினியினின்று எடுக்கப்படும் உப்புச் சத்துக்கள், alkaloids obtained from opium. Some of them are hydrochlorate, sulphate, and acetate of opium.

அபினி ரஞ்சம், அபினியைச் சாராயத்திற் கரைத்துப் புளிக்க வைத்து வடித்த ஓர் திரவச் சத்து, இதை ஆங்கில முறைப்படியும் ஆயுள் வேத முறைப்படியும் செய்யலாம். இதற்கு அரிஷ்டமென்று பெயர். a preparation obtained by fermenting the solution of opium and alchohol according to either the English system or the Ayurvedic system. It is known as Arishtam - Tincture of opium.

அபினி லேகியம், கபாட லேகியம், மலத்தைக் கட்டக் குழந்தைகளுக்குத் தயாரித்துக்

கொடுக்கும் ஓர் வகை லேகியம், an electuary prepared with opium as a chief ingredient and given to children for arresting motions.

அபினி வைப்பு, கடுகு, கசகசா, மராட்டிமொக்கு, முதலான சரக்குகளைக் கொண்டு தயாரித்து, அபினிக்குப் பதிலாக மோசடியாக விற்கும் போலி அபினி, இதன் முறைபோகர் (7000)ல் கூறப்பட்டுள்ளது. a faked opium prepared from a mixture of the following drugs as ingredients viz, mustard, poppy seeds, gunjah and buds of dhatura and sold as a subtitute for the genuine drug. The process is described in Bogar (7000) and the drug was used formerly by mendicants.

அபின் see அபினி.

அபின் சாரம், பல வகை அபினிச் சத்துக்களிலொன்று, one of the several alkaloids of opium - Laudanam.

Note: The other kinds are: Morphine, Codeine, Narcotine, Cocaine etc. The medicinal value of opium depends upon the presence of these alkaloids and their proportion varies greatly in different forms of the drug.

அபீசனம், நோயற்ற நிலைமை, the state of being free from disease; absence of disease; freedom from disease.

அபீசு, கைவிரல்கள், fingers.

அபீடனம், see அபீசனம்.

அபீரு, தண்ணீர் மிட்டான், a plant, water root - Asparagus raccmosus.

அபீர் (Hind) சந்தனத் தூள், ரோஜா, கஸ்தூரி, கற்பூரம் முதலியவைகளைக் கொண்டு தயாரிக்கும் ஓர் வாசனைப் பொடி. இது முகத்திலும், உடம்பிலும் தேய்த்துக் கொள்வதற்கும், துணிகளில் தூவி வைப்பதற்கும், மகம்மதியர்களால் உபயோகிக்கப்படும் ஓர் வாசனைத் தூள், a perfumed powder made up of sandal wood powder, Zedoary, Rose musk, camphor etc. It is rubbed on the face and over the body and is also sprinkled on clothes to scent them.

அபீனசம், பீனச மின்மை, absence of catarrh, 2. மூக்கின் வரட்சி அதாவது சளியின்றி நாசி வறண்டிருத்தல், dryness of the nasal passages owing to the absence of mucous fluid; 3. மூக்கடைப்பு, இதனால் மூச்சு விட முடியாமை, நாசி எரிச்சல், வரட்சி, நாற்றமான சிராய் போன்ற சளி, வாசதனை, ருசி, இவைகளில் உணர்ச்சியின்மை, முதலிய குணங்கள் ஏற்படும். obstructions in the nostrils. The following are the specific indications of it - Chokedness, buring sensation in the nostrils attended with dryness and a deposit of filthy slimy and hardened

mucous in the passages and deadning of the faculty of smell and taste.

அபீனச ரோசம், சிலேட்டுமத்தினால் மூக்கின் நரம்புகள் அடைபட்டு, மூக்கினின்று சளி வராது வரண்டு, மூச்சுவிடும்போது, 'குரு குரு' என்ற சத்தத்தையுண்டாக்கி, எந்நேரமும் வியர்வையை யுண்டுபண்ணுமோர் பீனச நோய், a disease of the nose arising from the phlegmatic condition of the body in which the mucous is prevented from being discharged owing to the obstruction in the nasal passages and the adjacent sinuses. It is due to the catarrh of the mucous membrance and is characterised by constant perspiration and a peculiar sound in the nostrils.

அபுட்ப பலம், பூவாது காய்த்தல், bearing fruits without flowering; 2. பலாமரம், the jack tree Artocarpus integrifolia; 3. அத்திமரம், fig tree Ficus glemerata.

அபுட்பம், பூர்க்காதது அதாவது மொக்கு, that which has not blossomed, a hud.

அபுத்திரகன், பிள்ளையில்லாதவன், one who is without a son.

அபூபம், அப்பவர்க்கம், cakes made of flour, 2. கோதுமை மாவினாற் செய்யப்பட்ட பலகாரம், a cake prepared with wheat flour.

அபூரண காலசம், முதிராமற் பிறந்தது, that which has come out before maturity; 2. காலம் முடிவதற்குள் முன் பிறந்தது, that which has taken birth before the due time or the prescribed period.

அபூரணம், முற்றாதது, that which is undeveloped.

அபூரணி, பட்டுப் பருத்தி, silk cotton Bombax malabaricum alias B.peptaphyllum.

அபூர்ண காலம், முற்றுவதற்குப் போதாத அல்லது' குறைவான காலம், the period wanting for maturity.

அபேதி வாதம், முதியார் கூந்தல், a plant Poederia foetida.

அபேய பானம், குடிக்கத் தகாதது, that which is unfit to drink.

அபேனம், அபினிச் செடி, poppy plant Papaver somniferum.

அபேன ரசம், see அபின் சாரம்.

அபையன், 7 விதக் கடுக்காய்களிலொன்று. இது கருப்பு வர்ணமாயிருக்கும். இது சிறந்தது. அபூர்வமாய் மலைகளினுச்சியிற் கிடைக்கும். இதைப் பொடி செய்து அமுரியில் கலந்து 40 நாள் இருவேளை கொள்ள, மும்மலக் களிம்பும் போம். நாடி யெல்லாம் முறுக்கேறும். அநேக நாள்

உடம்பை நிலைபெறச் செய்யும். மிகப் புத்தி விர்த்தியை உண்டாக்கும். சகல பூதப்பிரதே சங்கைகளையும் தீர்க்கும். எலும்பைப் பற்றிய நோய்களைப் போக்கும். இது பொதிகை மலையில் உற்பத்தியாகும்.

> "அபயனுங் கடுக்கா யங்க நோ யெல்லாம்
> அபயமிட் டோட வடிக்கும் — அபையற்
> கதிக நிறங் கறுப்ப தாகும் விளை பூமி
> பொதிகை மலையாம் புகல்"
>
> (பதா, குண, சிந்)

one of the seven kinds of the Indian gall-nuts. It is black in colour and is found on the tops of hills and that too rarely. A powder of this mixed with purified urine and taken twice a day for forty days is said to cure all defects in the body and strengthen the nervous system. It promotes longevity and increases the power of intellect. It is also said to eliminate all complaints or disorders arising from the morbid fears due to evil influences of demons. It is of great use in the affections of bones. The above stanza goes to show that this drug is available in Pothigai hills in the Tinnevelly District.

அபோகம், போக மின்மை, absence of sexual enjoyment.

அபோசம், பருத்தி, cotton Gossypium herbaceum.

அபோசனம், பட்டினி, starvation; 2. விரதம், fasting.

அபோச்சியம், தின்னத் தகாதது, that which is unfit for consumption.

அபோஷம், உடம்பை உருக்கிப் பலவீனப்படுத்துமோர் நோய், a wasting disease resulting in weakness and loss of weight, size and function of an organ or organs - Atrophy.

அபேதகம், கொத்துப் பசலை, cluster basella - Basella cordifolia alias B.lucida.

அப் சந்தீன் (Hind), யுனானி முறையில் வழங்கும் ' மோர் மூலிகை, இது தீனிப்பை, ஈரல், நுரையீரல், இவைகளுக்கு வலிவை யுண்டாக்கும். ஸ்திரீகளின் உதிரச் சிக்கல், சுரம் இவைகளைப் போக்கும், a drug used in the Unani Medicine. It strenthems the stomach, the liver and the lungs and cures menstrual disorders and fever.

அப்தி பேனம், கடல் நுரை, sea-froth; 2. மீனெலும்பு, cuttle-fish bone.

அப்தி மண்டூசி, முத்துச் சிப்பி, pearl-oyster.

அப்திமூன் (Hind) யுனானி வைத்தியத்தில் வழங்கும் ஓர் கடைச் சரக்கு, இது ஓர் வகைக் கொடி, இதன் கிளைகள் மெல்லிய கயிறுகளைப் போலும், அல்லது நூல்களைப் போலுமிருக்கும். மரங்களிலும், அவைகளின் பக்கங்களிலும் படரும். மிகக் கோடையிலும் காயாது, இது

உலராததற்கு முன் சிகப்பாகவும், உலர்ந்தால் மஞ்சளாகவும் இருக்கும். கசப்பும் வாசனையுமுள்ளது. இது உடம்பின் தோஷத்தைக் கபம், பேதி, முதலியவைகளால் வெளிப்படுத்தும். நரம்பு வலி, ஒற்றைத் தலைவலி, இசிவு, காக்கை வலி, வீண் கவலை, பைத்தியம், முகவாதம், கீல் வாயு, பிளவை முதலியவைகளுக்கும் கருங் குட்டம், வெண் குட்டம், படை, பெருநோய் முதலிய சரும நோய்களுக்கும் இதை உபயோகிக்கலாம். a bazaar drug used in the Unani system. It is a kind of creeper resembling a rope or a string and creeping over plants or on their sides. It never dries up even in the Summer. It is red when afresh and yellow when dried, bitter and fragrant.

It removes impurities from the system through phlegm and purgation. It is a very useful remedy in cases of nervous affections, hemicrania, spasms, epileptic fits, undue agitation of the mind, lunacy, facial paralysis hemiplegia, rheumatism, cancer, carbuncle etc.

It is also used with great advantage in black and white leprosy, eczema, leprosy attended with mutilation of fingers or toes, and other skin affections.

அப்பகம், வட்டத் திருப்பி, Indian Pareira — Cissampelos pareira.

அப்ப காசம், சீமைச் சோம்பு, Foreign anisee or Armenian cumin - Carum carui.

அப்பக் கொடி, see அப்பைச் கொடி; 2. ஓர் வகைச் கொடி, a common weed - Ageratum conyzoides.

அப்பச்சி, சிற்றுண்டி, a sweet cake; luncheon.

அப்பட்டப் பால், தண்ணீர் கலக்காமல் கறந்தபடி யிருக்கும் சுயப்பால், undiluted milk.

அப்பட்டம், சுயம், that which is pure; 2. கலப்பற்றது, that which is not mixed with anything.

அப்பட்டர்,
அப்பட்டா, see அப்பசம்.

அப்பம், அடை, rice cake; 2. சிற்றுண்டி, pastry, lunch; 3. புட்டு, boiled rice cake.

NOTE: In Tamil, it is the name of the unleavened cakes of rice flour and cocoanut milk resembling the wheaten chapatties of upper India. 4. புட்டுத் திருப்பி, a plant - Sida acuta; 5. வட்டத் திருப்பி, Indian pareira - Cissampelos pareira.

அப்பயத் துடராகம் எட்டி மரம், nux vomica tree - Strychnos nux vomica.

அப்பரியந்தம், ஒதிய மரம், Indian ash tree - Odina Wodier, see also அப்பிரியா.

அப்பர், ஆண் குரங்கு, male monkey; 2. ஆடு, he-goat.

அப்ப வருக்கம், சிற்றுண்டி வகை, different kinds of cakes, such as rice cakes, pastry, etc.

அப்பளக் காரம், see அப்பளாகாரம்.

அப்பளம், உளுந்தினாலும் அரிசி மாவினாலும் செய்த ஓர் வகைப் பணிகாரம், a preparation from flours of black gram and rice - Pappadams.

NOTE: The name is derived from Appu which means to clap on with the hand. It is a light thin cake made either of the flour of Phaseolus Mungo or black gram or other flours and flavoured with salt and asafoetida. Whenever required it is fried in ghee or oil, and eaten with rice or other articles of food.

அப்பளா காரம், அப்பளத்திற்காக உபயோகிக்கும் உவர்ப்பும் உறைப்பு முள்ள ஓர் கடைச் சரக்கு. இது பூநீரிலிருந்து தயாரிக்கப்படும். இது வாத குன்மம் வயிற்றுப்பிசம் கீல் வீக்கம் முதலிய நோய்களுக்கு உபயோகப்படும், subcarbonate of soda (சவுடு) or soda earth as it is commonly trmed. It is used in the manufacture of thin wafer-like biscuits called Pappadams or Appalams. It is saltish and pungent. It is obtained from a particular kind of பூநீர் (Pooneer) containing saltness or acidity mixed with much sharpness. It produces a burning sensation of the tongue. It is used in dyspepsia, flatulency, rheumatism etc. 2. சவர்க்காரம், fuller's earth.

அப்பளா சிட்டி, அப்பளம் வெண்மையாவதற் குபயோகிக்கும் சாறுள்ள ஓர் பூடு a herbaceous plant, the juice of which is used in making applams look white. See also பேப்பா சிட்டி.

அப்பளாம், see அப்பளம்.

அப்பறாத் தூணி, சரகண்ட பாஷாணம், a kind of native arsenic.

அப்பாகம், வாலுளுவை, intellect tree - Celastrus paniculata.

அப்பாரகம், புளிமா, sour mango Mangifera indica.

அப்பாரிசம், அந்தப் பக்கம், the other side.

அப்பாலுக்கப்பால், மனத்திற்கு எட்டாத தூரம்,
"அணுவிற் கணுவாய்
அப்பாதுக் கப்பாலாய்"
(விநா, அகவல்)

distance beyond imagination.

அப்பி யங்க ஸ்நானம், எண்ணெய் முழுக்கு, oilbath. Anointing the body with oil preparatory to bathing.

அப்பி யங்கம், சிரசிலும் உடம்பிலும் எண்ணெய் அல்லது தைலத்தைப் பூசிக் கொண்டு ஒரே சுடுகையுள்ள

தண்ணீரிற் தலை முழுகல், எண்ணெய் தேய்த்துத் தலை முழுகல், anointing the head and the body with sesamum oil preparatory to bathing; 2. உடம்பில் வாசனை யூட்டல், to perfume the body; 3. கண்ணுக்கு மை தீட்டல்; painting the eye lids with collyrium. See அபியங்கம்.

அப்பியங் களம், see அப்பியங்கம்.

அப்பிய சித்தல், பழகுதல், to practise.

அப்பி யஞ்சனம், எண்ணெய், oil; 2. எண்ணெய் பூசுதல், smearing the body with oil; 3. மை தீட்டல், applying collyrium to the eye lids. See அப்பியங்கம்.

அப்பிய மதின், நோயினால் பீடிக்கப்பட்டவன், a sick person.

அப்பிய மேகம், மூத்திரம் யானையின் மதசலத்தைப் போல் ஆறுமணி சுமாருக் கொருதரம் ஒவ்வொரு வேளைக்கும் ஒருபடி யளவாக யிறங்குவதும், காய்ச்சினால் உவர் மண்ணைப் போலடியில் வண்டல் படிவதுமான ஓர் வகை மூத்திர நோய், a disease characterised by excessive secretion of urine as much as even one measure for every 6 hours. It leaves a sediment when heated Diabetes insipidus.

See also அத்திமேகம்.

அப்பியாசம், பழக்கம் practice.

அப்பியாச யோகம், தியானம், இது மனவொருமை ஏற்படும்படித் தொடர்ச்சியாகச் செய்யும் சிந்தனை. இதனால் அலையைப் போல் ஓயாது எழும்பும் நினைவுகள் அல்லது சம்ஸ்காரங்களை அடக்கி ஆளுவதற்கு ஓர் .ஏதுவுண்டாகும். தியானம் சித்தியானால், இயற்கையாக வுள்ள தத்துவங்களைச் செயிக்க ஆத்துமத்துக்குச் சக்தி தானாகவே ஏற்படும். சதா செய்யும் தியானத்தால் உலகத்தை மறக்கவும் ஏதுவாகும். இவ்விதமாக ஒருவாறு செய்து முடிப்பின், அதிசயிக்கத்தக்க சித்திகளெல்லாம் இதை அப்பியாசிக்கும் யோகிக்குக் கைவல்லியமாகும்.

ஆகவே மனிதரை ஆட்டுவிக்கும் சக்திக்கெல்லாம் இவன் ஓர் சூத்திரதாரி போலாவது மன்றி, உலகத்திலுள்ள பஞ்சபூதச் செயல்களெல்லாம் இவனது ஆற்றலுக்கு இணங்கி வணங்கும். இதனால் ஆகாயத்திலும் தண்ணீர் மேலும் உலாவலாம். தியானத்தால் தன்னைத் தானறியலாம். அன்றியும் தன்னை அறியும் அறிவைத் தன்னால் அறியலாம். ஆழ்ந்த தியானமே சுழித்தி நிலை. இதனால் பஞ்சேந்திரியங்களின் செயல்கள் இயக்கமடைந்து மனதின் அலைவு நீங்கி அதனால் தான் கோரிய சித்தி இவனுக்குத் தானாகவே அமையும். ஏகாந்த நிலையில் இருக்கச் செய்தலால் மனது பரிசுத்தமடைந்து உலகப் பற்றற்றுச் சீவன் முக்தி நிலையை அடையச் செய்யும், meditation which is practised for a long time for the purification of the mind.

It is the extension of concentration. It is one of the means of controlling the rising wares of the mind from thoughts and recollections (samskaras). By the success in meditation, the soul attains all the powers of nature. By continued meditation upon things Divine, the student forgets the world and once he can, do this. he will be able to obtain wonderful powers and become the master of all that masters the ordinary man. The realms of psychic force how down before him and he can walk upon air and water.

By meditation, the Yogin beholds the Self, the Inner Intelligence in the Self by the Self. In deep meditation, all the functions of the sense are inhibited and there comes a dead stop to the outward flow of the mind. It brings out the real nature of the object in view and infuses it into the soul of the meditator. Meditation in solitude for sometime will make one live in the world unattached. (Sircar)

அப்பியாச வைந்தியம், பழக்கத்தைக் கொண்டு செய்யும் வைத்தியம், the practices of a quack Quackery.

அப்பி யிடல், பூசுதல், smearing.

அப்பிரக அரிதகி, அப்பிரக பற்பம், கடுக்காய்த் தோல் முதலியவைகள் சேர்ந்த ஓர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic medicine comprising calcined mica and gall-nut powder as chief ingradients.

அப்பிரக கற்பம், அப்பிரகத்தைச் செந்தூரம், பற்பம் முதலிய மருந்துகளாகச் செய்து உபயோகப்படுத்தும் விதத்தை விவரமாய்க் குறிக்குமோர் ஆயுள் வேத நூல், an Ayurvedic treatise dealing with the method and use of several compounds of mica and their preparations in detail.

அப்பிரகக் கிண்ணி, அப்பிரகத்தை உருகும்படிச் செய்து மெழுகு கட்டி அதை வார்த்தெடுக்கு மோர் வகைப் பாத்திரம். இதைச் சித்தர்கள் காய சித்திக்காக, உண்கலமாகவும், இரசத்தைக் கட்டவும் உபயோகிப்பார்கள். a basin made of melted mica cast into a mould. It is used by Siddhars as a vessel for taking food from and for consolidating mercury.

NOTE: This process of melting mica or consolidating mercury for alchemical purposes, is unknown to Western science. It is very much doubted if this is dealt with even in the other systems of Indian medicine or in any alchomical science.

அப்பிரகக் குகை, வாத முறையில் உபயோகிப்பதற்காக, அப்பிரக பற்பத்தினாற் செய்த குகை, a crucible made of calcined mica for the purpose of using it in Alchemy.

அப்பிரக செந்தூரம், அப்பிரகத்தை முறையாகச் சுத்தி செய்து, பிறகு அதைப் புடத்திலிட் டெடுக்கும் ஓர் வகைச் செந்தூரம், a red oxide of mica obtained after cleaning mica as per process laid down in the Tamil medical science for cleansing minerals and then subjecting it to calcination. It is a powder of brick-dust colour and a saline earthy taste. Chemically, it is a silicate of magnesia with iron in excess.

NOTE: Vaidyans use it in certain cases of flux, diabetes and venereal disease, in different mediums with great success on account of its extraordinary virtues.

அப்பிரகச் சத்து, அப்பிரகத்தி னின்று தயாரித்த வோர்வகைச் சத்து, இது இரசத்தைக் கட்டும், essence prepared from mica. It consolidated mercury.

அப்பிரகத் தகடு, அப்பிரகச் செதில், a loose, filmy mass of talc separated in layers - Talc flakes; 2. அப்பிரகத்தை யுருக்கி அதனின்று தயாரிக்கு மோர் தகடு, plate obtained by melting mica.

அப்பிரக நவநீதம், அப்பிரக வெண்ணெய், அதாவது, அப்பிரகத்தை மற்றச் சரக்குகளோடு சேர்த்து, வெண்ணெயைப் போற் செய்யப்படு மோர் வித மருந்து, an ointment prepared out of mica treated with other drugs; 2. அப்பிரகத்தைச் சுத்தி செய்யும்போது அடியில் நிற்கும் வெண்ணையைப் போன்ற தூள், the white powder left as a residue in the process of cleaning it.

அப்பிரக பற்பம், அப்பிரகத்தைப் புடத்தி லிட்டுத் தயார் செய்து நீரிழிவு முதலிய நோய்களுக்குக் கொடுக்கும் மருந்து, an oxide of mica obtained by calcination as per process of India Medical science. It is used for diabetes etc.

அப்பிரக பாஷாணம், விளைவுப் பாஷாணம் முப்பத்தி ரெண்டி லொன்று, ஆயுள் வேதப்படி இதற்கு இரசப் பிரீதி, இரசமாதா வென்னும் பெயர்கள், according to Siddhar's science. it is one of the thirty-two kinds of mineral poisons containing mica. It is known as 'Rasapreethi or Rasamatha' in Ayurveda.

அப்பிரக மணல், பூமியினின்று வெட்டி யெடுக்கப்படும் அப்பிரகமும் மணலுங் கூடிய வோர் தாது, a mineral ore consisting of sand and talc - Talc ore; 2. கருமணல், black sand mixed with mica.

அப்பிரகம், கண்ணாடியைப் போன்ற ஓர் தாதுப் பொருள். இது சாதாரணமாய் மற்ற உலோகங்களைப் போலவே, நெல்லூர், மத்திய மாகாணம் முதலிய விடங்களில், சுரங்கங்களினின்றும் அடுக்கடுக்காய் வெட்டி

யெடுக்கப்படும். இது தமிழ் வைத்தியப்படி, நூற்றிருபது உபரசச் சரக்குகளில் ஒன்று. இதற்குப் பூ விந்து நாதம், மனோன்மணி நாதம், மகா விந்து, மகாப் பிரகாச சத்தி, கேசரம், அம்பரை நாதம், என்ற பல பெயர்களு முண்டு.

தமிழ் நாட்டு வைத்தியர்கள் இதைக் கொண்டு பற்பம், செந்தூரம், சுண்ணம், சத்து, வெண்ணெய் முதலிய மருந்துகள் செய்து முடித்து, நீரிழிவு, குடலண்ட விருத்தி, எலும்புருக்கி, மகோதரம், வெட்டைச் சூடு, உடம்பு வறட்சி, மேகம் முதலிய நோய்களுக்கும், உடம்பிற்கு வலிவு, தேகக் காந்தி, தாது புஷ்டி, முதலியவைகள் ஏற்படுவதற்கும் உபயோகிப்பார்கள்.

ஆனால், ஆயுள் வேத பண்டிதர்களும், யுனானி வைத்தியர்களும், இதைத் தண்ணீரிலூறப் போட்டு அத்தண்ணீரைக் குடிப்பதற்கும், மருந்துகளில் சேர்த்தும், உபயோகிப்பார்கள். இது ஐந்து வகைப்படும். அவையாவன:- கிருஷ்ண அல்லது கருப்பு அப்பிரகம், வெள்ளி யப்பிரகம், பொன் னப்பிரகம், கெந்த காப்பிரகம், தேனப்பிரகம்.

தமிழ் சித்த நூற்படித், தாது வகைகளில் இது ஐந்து வகைகளாகக் வகுக்கப்பட்டிருப்பினும், ஆயுள் வேதப்படி நான்கு விதங்களாகவே கொள்ளப்படும். அவையாவன:- நாகம், பேகம், பிநாகம், வச்சிரம், ஆனால் கடைசியாகக் கண்ட வச்சிரம் என்பதே வைத்தியத்தி லுபயோகிக்கப்படும். the term (literally) means அப்பு + பிரகம், which means water bearer. It is a trade name for Indian mica, transparent like glass. It is a mineral called hydrous silicate of magnesia and like several other metals, it is usually dug out from the mica mines of Nellore, Central Provinces and other places in India. It splits up into thin elastic plates - Talcum.

It is called by several names and is regarded as the menstrunum of the Godess of the Universe called Sakthi. The Tamil Vaidyans prepare different medicines by calcining it, such as oxide, red oxide, calcinum compound of mica and so on and prescribe them for various disease viz. Diabetes, Hernia, Tuberculosis of the bone, Dropsy or Ascites, Venereal heat, Urinary disorders etc. They also use them as tonics for invigorating the system and for improving the secretion of semen and giving lustre to the body. Unani and Ayurvedic doctors soak it in water and prescribe the water as a drink. The ointment prepared from it is called 'Navaneetham'. The drug consists of five varieties according to the nature of the colour such as

1. Black coloured - Adamant mica. Calcined, it is given by Vaidyan for fluxes.

2. Silver or gray coloured White mica. Granulated silver sand. It is a common kind prescribed for diabetes.

3. Gold coloured Yellow mica looking like yellow orpiment. Calcined, it is a pectoral medicine.

4. Sulphur coloured Sulphur mica.

5. Honey coloured Teenah according to the Tamil Siddhar's science. Although it consists of 5 varieties, yet as per Ayurveda, it is divided into only four classes as mentioned above, according to their virtues. The last mentioned vajram alone is fit to be used in Medicine.

NOTE: Although this mica is sometimes called talc it is not the talc of the European Geologists, which is a silicate of magnesium, a white unctuous neutral powder.

The Hindus and the Mahomadans of Sourthern India, confound talc and mica together and Mr.Murray has classed the first under the Mazoosiam earth and the latter under Silicious. Talc can be distinguished by its unctuous tonch and by its plates being flexible, but not elastic. Indian mica is rarely found in large flakes and it consists of thin, glossy, transparent scales, composed of aluminium silicate.

All the different kinds of talcs and micas are to be found in Hindustan and Southern India, but the gray variety is the most common, Yellow-talc *(மஞ்சள் அப்பிரகம்)* is generally mistaken for the golden coloured orpiment *(தாளகம்)*, .European talc is sometimes used in insufflating powders and as a remedy for diarrhoea.

அப்பிர கிருட்டம், *காக்கை,* crow.

அப்பிரசம், *மலடு* barrenness.

அப்பிரசன், *சந்ததி யில்லாதவன்,* one who is without issue.

அப்பிரக சூதை, *மலடி,* a barren woman.

அப்பிரசை, *சந்ததியற்றவள்,* a woman deprived of issue.

அப்பிரதிப் பழம், *பேரீந்து,* date fruit of date tree — Phoenix dactylifera.

அப்பிரபஞ்சம், *எலிப் பயறு,* a wild grain wild horse - gram.

அப்பிர புட்பம், *மழை* rain; **2.** *மழை நீர்,* rain water.

அப்பிரம், *ஆகாசம்,* sky; **2.** *பொன்,* gold; **3.** *மேகம்,* cloud, **4.** *அப்பிரகம்,* mica; talc.

அப்பிராகிருத சரீரம், *கற்ப வுடம்பு,* body strengthened by drugs, so as to live long; **2.** *மானச தீட்சை பெற்ற வுடம்பு,* a body with divine illumination; **3.** *மேலான வுடம்பு* divine subtile body as opposed to

the gross; **4.** *அழியா வுடம்பு,* immortal body; **5.** *நித்திய வுடம்பு,* permanent body.

அப்பிரா கிருதம், *பிரகிருதி சம்பந்த மில்லாதது,* that which surpasses matter.

அப்பிராணம், *பிராண வின்மை,* absence of life; **2.** *மரணம்* death.

அப்பிரிய தரு, வெறுக்கத் தக்க மரம், contemptible tree;a tree not useful for any purpose; **2.** *ஒதியமரம்,* Indian ash- tree - Odina wodier.

அப்பிரியம்,
அப்பிரியா, see **அப்பிரிய தரு.**

அப்பிரு, *பேரோசனை,* one of the 120 kinds of natural substances described in Tamil medical science.

அப்பிருகம், *அப்பிரக பாஷாணம்,* which see.

அப்பிரேசம், see **அப்பிரகம்.**

அப்பிரசம், *புளிமா,* Indian bog-plum Spondias mangnanifera.

அப்பீரா, **சீமையத்தி,** foreign fig tree; European edible fig — Ficus carica.

NOTE: It is also called **தேனத்தி,** Teenah of the Hebrews.

அப்பு, *பாதிரி மரம்,* or *பூம் பாதிரி,* trumpet tree with purple-rose flowers Stereos permum suaveolens; **2.** *வங்கம்,* lead; **3.** *நீர்,* *அதாவது பஞ்ச பூதங்களி லொன்று,*

''உப்பாலே அப்பாச்சு அப்பு வுப்பாச்சு''

water one of the five elements; **4.** *கடல்,* sea, **5.** *பனிக் குடத்து நீர்,* liquid of the ammiotic sac — Liquor amnil; **6.** *துடை,* thigh.

அப்புக்காய், *ஓர் விதக் காய்,* a kind of unripe fruit?

அப்புக்குட்டி, *ஓர் வகைக் கடல் மீன்,* sucker fish Remora.

அப்புக் கோவை, *கற்கோவை,* see *அப்பைக் கோவை.*

அப்புதல், *பூசுதல்* to clap with the hand as we do with clay on a pot; **2.** *ஒற்றுதல்,* to apply anything repeatedly to the body to foment; **3.** *வாயில் திணித்தல்,* to thrust into the mouth.

அப்புத் திரட்டி, *கட்டுக் கொடி,* a creeper which is capable of solidifying water — Smilax pseudo-china.

அப்புநீர், *சமுத்திரத்து நீர்,* sea water.

அப்புநீறு, *கடலுப்பு,* sea salt.

அப்புப்பு, *சோற்றுப்பு,* common salt generally extracted from the sea-water and used with food.

அப்புரா, *பாதிரி* trumpet-flower tree — Bignonia chelonoides.

அப்புருவம், *உப்பு* salt; **2.** *நவாச்சாரம்,* salammoniac - Ammonium hydrochlorate.

அப்பு லோகிதம், *சீமை யிலந்தை* foreign jujubc - Zizyphus jujuba.

அப்புவின் கூறு, *உடம்பிலிருக்கும் நீர்ப் பாகங்கள் அதாவது நீர், இரத்தம், சுக்கிலம் முதலியன,* the liquid portion of the body viz. urine, blood, semen etc.

அப்புவின் கோபம், *சிலேட்டுமம்,* phlegm.

அப்புலின் ரசம், *உப்பு,* essence of water i.e. salt.

அப்பவுப்பு செய்நீர், *பிண்ட உப்பு செயநீர்,* a liquid obtained from the salt extracted from the foetus.

அப்புளண்டம், *தகரைச் செடி,* ring-worm plant - Cassia Tora.

அப்புளாகாசம், *வேரில்லாக் கொத்தான்,* princess hair; Moss creeper — Cassytha filiformis.

அப்புறத்தையோட்டி வைத்தான், *காசுக்கட்டி,* a brown red colouring matter obtained from areca-nut; Areca red — Arecin.

அப்புறாத் துணி, see *அப்பறாத் தூணி.*

அப்பை, *அப்பைக் கோவை,* a climbing plant called 'beaked bryony saffron' Indian caper — Bryonin rostrata; **2.** *கொன்றை,* common Cassia — Fintula; **3.** *ஓர் சிறுகடல் மீன்,* a small marine fish about a foot long — Monocanthus monoceros; **4.** *சரக் கொன்றை,* Indian, Laburanam; **5.** *கற் கோவை,* a plant — Bryonia epigea.

அப்பைக் காய், *கொவ்வைக் காய்,* the unripe fruit of a climbing plant — Bryonia.

அப்பைக் கிழங்கு, *அப்பைக் கோவைக் கிழங்கு,* the root of a climber — Bryonia rostrata.

அப்பைக் கொடி, see *அப்பைக் கொவ்வை.*

அப்பைக் கொவ்வை, see *அப்பைக் கோவை.*

அப்பைக் கோவை, *ஓர் வகைக் கோவைக்கொடி, இது படற்கொடி, இதன் அடித்தண்டு நுண்ணியதாகவும், மொசுமொசுப்பாகவும், இலைகள் இருதய வடிவமாகவும் நீண்ட காம்புகளுடன் கூடியும், காய் ஒன்றுக்கு 2—6 விதைகளுள்ளதாகவும் இருக்கும். விதைகள் கருப்பாயும் தட்டையாயுமிருக்கும்; பூக்கள் இரண்டு ஒன்று சேர்ந்தும் இருக்கும். இதன் சூரணம் அழற்சியைப் போக்கிச் சாந்தப்படுத்தும். இது தரங்கம் பாடியில் விசேஷம். இதன் இலை தட்சணத்தில் கீரையாக உபயோகப்படும்.* a kind of creeper; Saffron Indian caper - Rhyn chocarpa foetida alias Acchmandra rost ratc. It is a spreading plant; the stem is slender and hairy; the leaves with long peduncles are heart shaped; the legume has 2 – 6 seeds, and they are dark and flat. The seed is compressed and the flowers are usually two together. The powder of the seed is medicinally demulcent. It is common in Tranquebar. The leaves are used in Deccan as a vegetable green to make curries.

See *அப்பைக் கொவ்வை.*

அப்பைக் கோவைக் கிழங்கு; *அப்பைக் கிழங்கு, . இது சிறியதாயும், சாம்பல் வர்ண முள்ளதாயும், தித்திப்பாயு மிருக்கும். பிசுபிசுப்புள்ளது. இதன் சூரணம் உள்ளுக்குச் சாப்பிடக் காசம், மூலம், உள்ளழற்சி முதலியவைகளைப் போக்கும்.* the root of the climber bryony Bryonia rostrata. The root is small and of a light gray colour. It is sweet to the taste and mucilaginous. The powder is medicinally a demulcent.

அப்பைச் சுருக்கி, *சிறுகீரை,* a kind of vegetable green - Amaranthus campestris.

அப்பைச் சேவகம், *சீமை யாமணக்கு,* foreign castor or golden parcira Baliospermum montanum. The seed is used as an ingredient in curry powders to flavour curry.

அப்பைத் திரட்டி, see *அப்புத் திரட்டி.*

அப்பை மாரிசம், *செங்கத்திரி,* orbicular leaved caper shrub Capparis pedunculosa.

அப்ரகம், see *அப்பிரகம்.*

அமங்கலம், *ஆமணக்கு,* castor plant Ricinus communis.

அமசம், *நோய்,* disease.

அமட்டம், *வட்டத் திருப்பி,* see *அப்பகம்.*

அமணம் see *அம்மணம்.*

அமண்டம்,

அமண்டலம், *ஆமணக்கு,* castor plant Ricinus communis. See *அமங்கலம்.*

அமண்டலாதி, *செங்கடம்பு,* a red species of Kadambu tree Barringtonia acutangula.

அமதம், *நோய்,* disease; **2.** *சாவு* death; **3.** *காலம்* time, period.

அமத்தம், *(அ + மத்தம் = இன்மை + வெறி) வெறியின்மை,* absence of lunacy; sanity; soundness of mind.

அமத்திரம், *பாத்திரம்,* a vessel; **2.** *வெண்கலம்,* bell metal which is a mixture or an alloy of copper and pewter.

அமாஸ்தம், *இராஜ யோத்தி னோர் நிலைமை, அதாவது மனமிறந்து நிற்பது,* that stage of Raja yoga

in which the mind is raised from the gross to the subtle state to remain there in equilibrium.

NOTE: He who controls the mind controls matter. Raja yoga propoands the method of gaining control over the inner nature which is more difficult than the external. It helps one to acquire a perfect control over the various activities of the mind which is called the Raja or the 'King of the senses' and thus renders it completely inactive as if it were dead.

அமந்தம், *நாட்டு வாதுமை மரம்,* wild almond myrobalan Terminalia catappa; **2.** *மந்த மின்மை,* the state of being free from indigestion or dulness of appetite.

அமந்தலம், *செங்கத்தாரி,* false peacock's foot tree Niebuhria linearis.

அமந்தா சிகம், *சுருள் பட்டை,* red creeper Ventilago madraspatana.

அமந்தி, see *அமந்தம்.*

அமம், *நோய்,* disease.

அமர கண்டம், *ஓர் வகை வலிப்பு நோய், அதாவது குதிரை வலி,* a severe type of convulsion or spasm so called from its similarity to the attack in horses.

அமர கண்டவலி, *உடம்பு வலி, மூர்ச்சை, அசைவறக் கிடத்தல், வியர்த்தல், பல்லை இளித்தல் முதலிய குணங்களைக் காட்டுமோர் வலிப்பு நோய், இதற்குக் குதிரை வலி என்று தமிழில் பெயர் வழங்கும்,* a kind of convulsion characterised by bodily pain, swoon, prostration, perspiration and grinning. It is known in Tamil as 'Horse fit'.

அமர கிச்சிலி, *மஞ்சட் கிச்சிலி,* a gold coloured orange.

அமர குணர், *கடுக்காய்ப் பூ,* galls of chebulic myrobalan.

அமர கோசம், *அமர சிம்மனால் வடமொழியிற் செய்யப்பட்டவோர் நிகண்டு,* a Sanscrit vocabulary compiled by Amarasimhan.

அமரசயம், *இரைக் குடல்,* the stomach and the intestines where the food is digested.

அமர சிங்கம், see, *அமர கோசம்.*

அமர சிம்மன், *அமரகோச மென்னும் வடமொழி நிகண்டை இயற்றியவன்,* the author of a vocabulary in Sanskrit.

NOTE: Amarasimhan was a Jain poet and he was one of the 7 poets who adorned the court of king Vikramaditya in Ujjain (Central Provinces).

அமர சிலை, *ஓர் வகைக் கெந்தகம்,* a variety of sulphur; **2.** *ஓர் வகை வைப்புப் பாஷாணம்,* a kind of prepared arsenic.

அமர சிலைக் கெந்தகம், *அமரசிலைக் கெந்தம், வைப்புப் பாஷாணம், முப்பத்திரண்டி லொன்று,* one of the 32 kinds of prepared arsenic described in the Tamil Siddhar's medicine. See *அமரசிலை.*

அமர தாரு, *தேவதாரு,* deccany deodar — Erythroxylon monogynum, **2.** *தேட் கொடுக்கி,* scorpion plant — Heliotropium indicum.

அமர பில்லம், *கண்ணிமையில் இரத்தம் போற் சிவந்து தசை தடித்துப் பீளை தள்ளிக் கீழிமையை யொட்டிக் கொண்டு, கண்ணொளி மயங்கி நீர் வடியும் ஓர் கண்ணோய்,* an eye disease characterised by inflammation of the eye lids, hyperemia of the conjunctiva with a catarrhal or muco-purulent discharge, sticking of the eye-lids, defective vision etc. — Castarhal ophthalmia.

அமரபுட்பி, *ஒருவிதச் செடி,* a plant — Andropogon acicularis.

அமர புட்பிகம், *ஓர் வகைப் பெருஞ்சீரகம்,* a kind of anise — Anetheum sowa.

அமரப் புகைச்சல், see *அமரம் புகைச்சல்.*

அமர மாலை, *ஓர் வடமொழி அகராதி, அமரகோசத்தைச் செய்த நூலாசிரியரே, இதையும் செய்ததாகக் கருதப்படும்,* the title of a dictionary considered to have been compiled by the same author as of the book known as 'amarakosam.'

அமரம், *இரசம்,* mercury; **2.** *பொன்,* gold; *3.* *ஓர் கிரந்த நிகண்டு,* a thesaurus in Sanksrit. see *அமரகோசம்,* *4.* *வெண்மை,* whiteness; *5.* *இறப்பின்மை,* immortality; **6.** *கண்களின் இரப்பைத் தோலில் குருக்களைப் போலெழுப்பி அப்பாகத்தை உருவழியச் செய்யும் ஓர் கண்ணோய்,* a disease of the conjunctivae attended with the formation of small elevations on the conjuctivae of the lids which results in the deformity of the lids — Granular conjunctivitis or Trachoma; **7.** *ஓர் பூடு* a plant —Tiaridium indicum; *8.* *ஓர் மரம்,* a species of pine; *9.* *நஞ்சுக் கொடி,* umbilical cord; *10.* *பலவிதப் பூண்டுகளின் பெயர்,* the name of several plants such as, Panicum Dactylon, Cocculus Cordifolia etc; *11.* *ஓர் செடி,* a plant — Senseviera roxburghiana.

அமரம் பால், *சுத்தமான பால் அதாவது பனங்கள்,* palmyra toddy.

அமரம் பிரிதற்கண், *ஓர் வகைக் கண்ணோய்,* an eye-disease.

அமரர் வணங்குங் கன்னி, *இந்திர பாஷாணம், இது, நாக பாஷாணத்தை, வைப்பு முறைப்படி வைத்துத் தயாரிக்கும் போது மேற்கவசத்தில் பதங்கித்து நிற்கும்*

சரக்கு. அதற்குத் தானிப் பெயர் வழங்கும், it is the name of a poisonous compound deposited on the inner surface of the covering of the vessel which was used for preparing the poisonous arsenical compound of zinc.

அமர வல்லரி,
அமரவல்லி, கொத்தான், a plant — Cassytha filiformis.

அமரா சயம், கருப்பை the uterus of a female; the womb; 2. வயிறு, the stomach. See அமரசயம்.

அமராஞ்சனம், சந்தனம் sandal paste.

அமரி, கற்றாழை, aloe; 2. மூத்திரம், urine; 3. அமிழ்து, the fabled food of the ancients which was supposed to confer immortality upon those who partook of it — Ambrosia; 4. விஷம், poison, 5. பேய்ப்புல், a kind of poisonous grass; 6. காயகற்பம், a medicine which promotes health and bestows longevity. See அமுரி.

அமரிதம், கடுக்காய், Indian gall-nut — Terminalia chebula.

அமரிதாவிகம், செங்கரிப்பான், அதாவது சிகப்புக் கரிசலை, a red variety of a plant — Euclypta prostrata.

அமரிப் பூகம், செங்கரந்தை, red basil — Sphoe ranthes.

அமரியம், குருந்த மரம், wild lime tree — Atlantia missionis; 2. சண்பகப்பூ, flower of tulip tree — Michelia champaca.

அமரியுப்பு, see அமுரி யுப்பு.

அமரை, அறுகு, panic grass — Cynodon dactylon; 2. கருப்பை, the uterus of a female; 3. கொப்பூழ் கொடி, the navel string; the umbilical cord.

அமர், வெறி, passion; 2. நோயின் கடுமை, virulency of a disease; 3. சுரத்தின் உக்கிரம், the acme of fever.

அமர்க்கம், எருக்கு, a milky shrub, giant swallow, wort — Calotropis gigantea.

அமர்தல், இளைப்பாறுதல், taking rest.

அமல கமலம், கோசலம், கோமயம், cow's urine.

அமலகம், நெல்லி, gooseberry tree — Phyllanthus emblica; 2. புளியமரம், tamarind tree — Tamarindus indicus; 3. பித்தத்தால் ஏற்படும் வாய்ப் புளிப்பு, sour taste in the mouth from biliousness; 4. வயிற்றுப் புளிப்பு, acidity of the stomach (from indigestion); 5. ஓர் செடி, a plant — Artocarpus lakuca; 6. புளியாரை, woodsorrel — Oxalis corniculata.

அமலக வடகம், நெல்லிக்காய் வடகம், a kind of dried cake of goose berry fruit.

அமல காண்டம், ஓர் பூடு, a plant (unidentified)

அமல கேசரம், நாரத்தை மரம், citron tree — Citrus aurantium.

அமல சம்பீரம், எலுமிச்சை மரம், lime tree — Citrus medica.

அமல சாகம், ஓர் செடி, a kind of sorrel (potherb).

அமல சாந்தம், சுண்ணாம்பு, lime or slaked like; பசுவின் சாணம், cow's dung.

அமல சாரம், எலுமிச்சை, lime; 2. ஓர் ஆரைச் செடி, a kind of sorrel; 3. வடித்த கஞ்சிக் காடி, fermented rice water.

அமல சுக்கிரம்,
அமல சூடம், ஓர் விலாரிச் செடி, a kind of sorrel plant.

அமலதிக்த கஷாயம், துவர்ப்பு, கைப்பு, புளிப்பு இவைகள் சேர்ந்த கஷாயம், a decoction of astringent, bitter and sour drugs.

அமலத் திரவம், புளிக்க வைத்த பழங்களின் சாரம், acid or fermented juice of fruits.

அமல நாயகம், புளியாரை, see அமலகம்.

அமல நிசா, சிச்சலிக் கிழங்கு, the root of a plant — Curcuma zerumbet.

அமல நிம்பூரம், எலுமிச்சை lime Citrusmedica.

அமலந்தை, புளிப்பு sourness.

அமல பஞ்சகம், ஐந்து வகைப் புளித்த காய்கள் பழங்கள் இவைகளின் ரசம், a mixture of the juices of five kinds of sour ripe and unripe fruits.

அமல பத்திரை, புளியாரை முதலிய பூடுகள், oxalis and other plants.

அமல பலம், புளிய மரம், tamarind tree Manganifera indica.

அமல பனசம், ஈரப்பலா, monkey jack tree Artocarpus lacucha (Roxb)

அமல பித்தம், வயிற்றுப் புளிப்பு, acidity of the stomach; 2. புளிப் பித்தம், sourbile; 3. நெஞ்செரிவு, குலையெரிவு, burning sensation of the chest or the heart. See அமலகம்.

அமல பேதனம், ஓர் ஆசைச் செடி, a sorrel plant.

அமல மேகம், ஓர் மூத்திர நோய், அதாவது மூத்திரம் புளித்தல், acidity of the urine.

அமலம், மும்மலத்தினால் பந்திக்கப் படாமை, (in philosophy) the state of being free from the three kinds of evil passions or inherent principles of the soul viz., selfishness, delusion and lust; 2. அழுக்கின்மை, purity;

3. மரமஞ்சள், tree turmeric — Coscinium fenestratum; 4. வெண்மை, whiteness; 5. செவ்வள்ளி, red yam red sweet potato — Disorya purpurea; 6. அரி நெல்லி, country star goose berry — Phyllanthus distichus; 7. அழகு, beauty; 8. நெல்லி மரம், goose berry tree — Embilica officinalis; 9. நஞ்சுக் கொடி, umbilical cord; 10. ஓர் பூடு, the plant saptala; 11. அப்பிரகம், talc; 12. புளிப்பு, sourness or acidity; 13. புளியாரை wood sorrel — Oxalis corniculata; 14. புளித்த தயிர், sour curd.

அமலருகம், ஓர் வித வெற்றிலை, a kind of betel leaf.

அமல லோனிகம்,

அமல லோனி, புளியாரைச் செடி, wood sorrel — Oxalia corniculata.

அமலவரித்திரா, கிக்கிலி கிழங்கு, See அமலநிசா.

அமல வர்க்கம், நாரத்தை, கிச்சிலி முதலிய புளிப்பான இலைகளையுடைய மரம், the class or trees and plants bearing leaves or fruits that taste sour such as, orange, lime, tamarind, etc.

அமல வல்லி, ஓர் செடி, a plant — Pythonium bulbiferum.

அமல வாடகம், புளிமா, hog-plum — Spondias mangifera.

அமடி வாடிகம், ஓர் வெற்றிலை, see அமலருகம்.

அமல விருட்சம், புளிய மரம், tamarind tree — Tamarindus indicus.

அமல வேதசம், ஓர் ஆரைச் செடி, a kind of sorrel — Rumex vesicarius; 2. காடி, vinegar obtained from fruits.

அமலினிட்ட மணி, சிவன் தரித்த ருத்திராட்சம், a sacred berd worn by Siva — Elcocarpus tuberculatus.

அமலன், கடுக்காய், Indian gall-nut — Terminalia Chebula.

அமலா, நெல்லி முள்ளி அல்லது நெல்லி வற்றல், dried fruit of goose berry — Phyllanthus emblica.

அமலாங் குசம், ஓர் செடி, a kind of sorrel?

அமலாதி யுசிதம், புளித்த வுணவு அல்லது புளித்த மாங்காயைப் புசித்தலினால் ஏற்படுமோர் கண்ணோய், a disease of the eyes caused by eating sour mangoes or fermented food.

அமலிகம், வயிற்றுப் புளிப்பு, acidity of the stomach; 2. புளியாரை, wood - sorrel — Oxalis corniculata. See அமலகம்.

அமலை, கடுக்காய், ink nut — Terminalia chebula; 2. கொப்புளம், boil; 3. கொப்பூழ்க் கொடி, umbilical cord; 4. சோறு, boild rice; 5. நெல்லி, Indian goose - berry — Phyllanthus emblica; 6. சோற்றுண்டை, rice - ball.

அமலோத்காரம், எதிர்க் களித்தல், sour aructation.

அமளிதம், தீவ தாட்சி, a fruit unknown in Southern India.

அமனை, ஓர் செடி, cobbe — Allophyllus cobbe; 2. கடுகு ரோகிணி, black helibore or bear's foot — Helleborus niger.

அமளோகிதம், செங்கீரைத் தண்டு, a red species of amaranthus.

அமற குணர், கடுக்காய்ப் பூ, see அமர குணர்.

அமனிதம், புளியாரை, sorrel — Oxalis corniculata.

அமனைக் கன்னி, காணம், losse gram — Dolichos uniflorus alias D.biflorus.

அமாசயம், உண்ட வுணவும் தண்ணீருந் தங்குமிடம், வயிறு, a membraneous sac or receptacle to receive the food and water which we take. It serves as the principal organ of digestion — Stomach.

அமார்க்கம், see அபா மார்க்கம்.

அமாவாசைக் கண்டம், நோயாளிக்கு அமாவாசையன்று நோய் மிகுந்து [illegible], மரணத்திற்கேதுவான [illegible] நிலைமை, that period of crisis in a patient leading almost to death on the New Moon day, owing to the severity of the disease supposed to arise, then from the planetary effect which may have some bearing on the human system.

அமானசம், மனக் கிருக்கு, imbecility of the mind — Amentia.

அமானி, புளியாரை, a sour green called sorrel — Oxalis corniculata.

அமாநுஷ ரோகம், தெய்வீகத்தினாலும், தேவதைகள், பேய், பிசாசுகள் முதலியவைகளினாலு மேற்படும் நோய், diseases brought on through super-human influences. Here super human beings include the deities, demons, ghosts, monsters, malignant spirits etc.

அமிசபிதம், தோளெலும்பின் கவை, a cavity in the scapula (shoulder-blade) to receive the knob of the humerus — Glenoid cavity.

அமிசகம், இலை, leaf.

அமிதம், (அ + மிதம்) அளவுக்கு மேல், in excess of the limit.

அமிரம், மிளகு, pepper — Piper nigrum.

அமிராகிதம், செங் கருங்காலி, red ebony of south India — Diospyros Candolleana.

அமிரி நாளம், வெட்டி வேர், the root of a fragrant grass (khus khus) - Andropogon muricatus.

அமிருதம், see அமிர்தம்.

அமிருதை, திப்பிலி, long pepper — Piper longum; 2. மது, sweet drink, 3. துளசி, holy basil — Ocimum sanctum.

அமிர்த கடுக்காய், விம்மித் தஞ்ச மிகுந்துள்ள 32 விதக் கடுக்காய்களி லொன்று, இது காசி தேசத்தி லுற்பத்தியாகும். கண்டத்தி லுண்டாகும் சத்தத்தை நீக்கிக் கபத்தை ஒழிக்கும், one of the 32 kinds of country gall-nuts which contain thick coverings and small kernels — Terminalia chebula. It is said to grow in Benares and it cures the wheezing sound or the whistling noise in the throat due to phlegm.

அமிர்த கஷாயம், சீந்திற் கொடி யிலை யினின்று வடிக்குங் குடிநீர், a decoction prepared from the leaves of the moon-creeper. It is used as a tonic in gout and is a febrifuge.

NOTE: This plant is bruised and put in water and taken by the Brahmins at some of their religious ceremonies in some places.

அமிர்த கரணன், கருடன், a Brahmini kite.

அமிர்த கலசம், முலை, the breast of a female.

அமிர்த கலை, சந்திர கலை, phase of the moon.

அமிர்த கல்பம், குணம் செய்வதில் அமிர்தத்திற்கு ஒப்பான கடுக்காய் அல்லது நெல்லிக்காய், efficacious gall-nut or goose - berry.

அமிர்த கிரணன், சந்திரன், one who sends out pleasent and sweet rays i.e., the moon.

அமிர்த கிருதம், விஷத்தைப் போக்கி இறந்தவனுக்கு உயிர்த்தருமோர் ஆயுள் வேத மருந்து, an Ayurvedic preparation which embraces within the pale of its therapeutic virtues all cases of poisoning and is said to be capable of bringing back an apparently dead man to life.

அமிர்த குமரி, சீந்திற்கொடி, கற்றாழை முதலிய மூலிகைகளினாற் செய்யும் மோர் தைலம், a medicated oil prepared from moon-creeper, aloe and other plants.

அமிர்த குழல், மனோகரப் பணியாரம், a kind of sweet confection pleasing to the mind and taste.

அமிர்த கொடி, சீந்திற் கொடி, moon - creeper; bile killer — Tinosphora cordifolia alias Menispermum cordifolium.

அமிர்த கோசம், (அமிர்தம் + கோசம் = milk + receptacle) முலை, the breast of a female which is something like a receptacle for holding milk.

அமிர்தங் கலக்கல், மூளை கலங்குதல், concusion of the brain.

அமிர்த சஞ்சீவி, ஆயுளை விருத்தி செய்யச் சித்தர்கள் உண்ணும் காய கற்ப மருந்து, a medicine sought for by the Siddhars or prolonging life — Elixir; 2. சீந்தில் சர்க்கரை, see under அமிர்த சர்க்கரை, 3. பூநாகம், இது செம்மண் பூமியிலுண்டாகும், காலில்லாமலும் பளபளப்புமாயு மிருக்கும். இதில் செம்பு உள்ளதெனக் கொள்ளப்படும். a common worm found generally in red soil with a shining body without any legs. It is said to contain without any legs. It is said to contain copper; 4. உயிர்தரு மருந்து, a medicinal plant supposed to possess the extraordinary virtue of restoring the dead to life.

NOTE: This is said to exist even now on the tops of the Maruthuma hills in Tinnevelly District. This is the drug referred to in the Ramayana. It is said to have been taken by Hanuman to revive the dead in the Great War with Ravana.

அமிர்த சஞ்சீவித் தைலம், பித்தத்தினா லெழுந்த காசம் தீருவதற்கு அகத்தியர் வல்லாதி 600-ல் சொல்லியுள்ளபடித் தயாரித்த தலை முழுக்குத் தைலம், a medicated oil used by persons suffering from asthma due to bilious disorders. Its preparation is mentioned in Agastyar's work 600.

அமிர்த சஞ்சீவினி, see அமிர்த சஞ்சீவி, 2. கடுக்காய், chebulic myrobalan — Terminalia chebula; 3. நோய்களைக் குணப்படுத்துவதற்காகத் தயாரித்த அமிர்தத்தைப் போன்ற மருந்து, an infallible remedy prepared for curing all diseases.

அமிர்த சம்பவம், see அமர்த சர்க்கரை.

அமிர்த சர்க்கரை, சீந்திற் சர்க்கரை, இது சீந்திற் கொடியினின்று எடுக்கப்படும் வெண்மையான உப்பு. இது மண்ணீரல் வலிவுக்கும், மெலிந்த உடம்பைப் பலப்படுத்தவும் உபயோகப்படும். a white salt extracted from the Moon-creeper. It is used in diseases of the spleen. It also acts as a tonic in convalescence; 2. சீந்தில் மா, a flour made from the stalk of gulancha.

அமிர்த சாமரம், சிகப்புச் சிற்றகத்தி, a red variety of Sesbane; common sesbane — Sesbania aegyptiaca.

அமிர்த சாரம், கற்கண்டு, sugar candy; . வெண்ணெய், butter (literally); 3. பாலின் சத்து, essence of milk — Cream.

அமிர்த சித்தி, கடுக்காய், Indian gall-nut. Ink nut — Terminalia chebula.

அமிர்த சுரோணிதம், இந்திர கோபப் பூச்சி, இது சிகப்பாயும், சகலாத்தைப் போல், மிருதுவாயும்,

பட்டாணி யளவுள்ளதாயும், தட்டையாயும் உள்ளது. இது மாரி காலத்தில் முதல் மழை பெய்யுங்கால், செம்மண் தரைகளில் உற்பத்தியாகும். நமது நாட்டு வைத்தியர்கள் இதைப் பாம்பு கடிக்கும், பலத்தைத் தருவதற்கும் உபயோகப்படுத்துவார்கள். lady fly or scarlet moth - Mothlla occidentalis alias M.antiguensis.

It is a scarlet velvetty - soft insect, about the size of a large pea, but flat. It is commonly found in reddish sandy soil after the first rain of the monsoon. Veidyans use it in snake - bites and also as a tonic.

NOTE: It should not be confounded with foreign cochineal insect or indigenous lac insect (jantoo). For full details see under இந்திர கோபப் பூச்சி.

அமிர்த சூரணம், சீந்திற் கொடிச் சூரணம், இது மிகவும் கசப்பு, குடற் கோளாறுக்கும், காமாலைக்கு முபயோகிப்ப துண்டு, the powder of the dried tender shoots of the moon creeper — Tinosphora cordifolia alias menispermum cordifolium.

This powder is bitter and a little nauseous to the taste. The Tamil practitioners prescribe this as an alterative in cases of depraved habit of the body, proceeding from visceral obstructions and jaundice.

அமிர்த செந்தூரம், சூலை, புண், புரை, இரணம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கு மோர் செந்தூரம், இதன் விவரத்திற்கு, அகஸ்தியர் வைத்திய காவியம் *1500ஐப் பார்க்கவும்,* a red metallic oxide (calcined) prescribed for healing acute pain, sores, sinuses or other wounds. Its preparation is described in Agastiya's work 1500 on medicine.

அமிர்த சோதரம், குதிரை horse.

அமிர்த தலைச்சி, சீந்தில் see அமிர்தக் கொடி.

அமிர்த பலம், நெல்லிக்காய், country goose berry - Phyllanthus emblica.

அமிர்த பலா, கொய்யா, guava tree — Pisidium guyava.

அமிர்த பலை, ஓர் மரம் pear tree, See *அமிர்த பழம்;* 2. ஓர் பூடு, a plant —Trichosanthes Diocca; 3. எலுமிச்சை, lime — Citrus medica; 4. கடுக்காய், country gall-nut — Terminalia chebula; 5 நெல்லிக்காய், see அமிர்தபலம்.

அமிர்த பழம், ஓர் நீலகிரிப் பழம், nectar fruit or Pear — Pyrus communis. It is a small thorny tree found on the Nilgris.

அமிர்தப் பால், தாய்ப்பால், mothers' milk.

அமிர்த மூடிய விடம்,
அமிர்த மூடுமிடம், மாச்சுக்கு, soft dried ginger.

அமிர்தம், இனிப்பு sweetness; 2. திருப்பாற் கடலைக் கடைந்தெடுத்த அமுதம், ambrosia, the nectar beverage of the gods, produced at the churning of the cocea; 3. தேன், honey; 4. நீர் water; 5. சீந்தில், moon creeper — Menispermum cordifolium; 6. அழியாமை, immortality; 7. நெய், ghee 8. விஷந் தீர்க்கு மருந்து; remedy to counteract the effects of a poison — Antidote; 9. சுக்கிலம், sperm; *10.* முலைப்பால், woman's breast milk; *11.* வெண்ணெய், butter; *12.* அமிர்த பீஜம், the seat of milk; *13. (பரிபாஷை)* வெள்ளைப் பாஷாணம், white arsenic; *14.* சிவப்பாமணக்கு; red castor seed — Ricinus communis; *15.* சாராயம், liquor, arrack; *16.* மூர்ச்சை தீர்த் துயிர்தரு மருந்து, a medicine or beverage that increases the strength and the spirit — Cordial; *17.* ஓர் பூடு, a plant — Phaseolus Trilobus; *18.* ஓர் பூண்டின் வேர், the root of a plant; *19.* இரசம், quick silver; *20.* அமிர்தம் போன்ற வுணவு, nectar-like food; *21.* சோறு; boiled rice; *22.* தித்திப்புப் பண்டம்; sweat meat; *23.* பொன், gold.

NOTE: இது காய் வகைகளைக் குறிக்கும்போது, அன்னாசி, எலுமிச்சை, நெல்லி, கொய்யா, கடுக்காய், சீந்தில் முதலியவைகளைக் குறிக்கும், when referring to fruits, the term would means the following plants — Anona squamosa; Citrus medica; Methonica superba; Phyllanthus emblica; Psidium guyava; Pyrus communis; Terminalia chebula and Tinosphora cordifolia.

அமிர்த ரசம், see அமிர்த சாரம்; 2. நீலகிரிப் பழத்தினின்று சாறு எடுத்துப் புளிக்க வைத்த ரசம், the fermented juice of the nectar fruit or pear found on the Nilgris, — Perry.

அமிர்த வடிகம், அமிர்தத்தைக் கொடுக்கு மோர் கொடி, a creeping plant that gives all essence like nectar. It is a common name for Cindil *(சீந்தில்)* or moon-creeper on account of its superior virtues.

அமிர்த வடை, தித்திப்பான உளுந்து வடை, a sweet cake prepared out of black gram.

அமிர்த வரிதகி, ஆயுர் வேத முறைப்படித் தயாரித்த ஓர் மருந்தின் பெயர், the name of a medicament in Ayurveda.

அமிர்த வல்லாதித் தைலம், உடம்பிலுள்ள பித்தக் கதிப்பு, மாறல் சுரம், கண்ணோய் முதலியவைகளைப் போக்க வேண்டி அகத்தியர் வல்லாதி 600-ல் கண்ட முறைப்படிச் செய்யுமோர் வகைத் தலைமுழுக்குத் தைலம் a medicated oil anointed over the body including the head preparatory to a bath by those suffering from biliousness, alternative fever and eye-diseases in general. Its preparation is described in Agastiya's Vallathi 600.

அமிர்த வல்லி, *சீந்தில்,* cow protector or bile killer — Tinosphora cordifolia alias Anamirta cocculus. See also *அமுதவல்லி.*

அமிர்த வல்லித் தைலம், *சன்னி வாதத்திற்குக் கொடுக்கும் சீந்திற் கொடித் தைலம். முறைக்கு அகஸ்தியர் வல்லாதி 600-ஐப் பார்க்கவும்,* an oil prepared from creeper and used for delirium, rheumatism etc. For process of preparation see Agusthya Vallathi (600)

அமிர்த வள்ளி, *சர்க்கரை வள்ளிக் கிழங்கு,* sweet potato — Dioscorea purpurea.

அமிர்த விந்து, *வாலை ரசம்,* sublimed mercury; purified mercury.

அமிர்த வுப்பு, *சீந்திலுப்பு,* salt extracted from the moon - creeper — Tinosphora cordifolia. See *அமிர்த சர்க்கரை.*

அமிர்தா, *சீந்தில்,* see *அமிர்தவல்லி.*

அமிர்தாதிச் சூரணம், *சீந்திற் சூரணம்,* a medicinal powder prepared out of moon-creeper. See *அமிர்த சூரணம்.*

அமிர்தாதி யுண்டை, *குழந்தைகளுக் குண்டாகும் மாந்தம், நீர்த் தோஷம், சந்நிசுரம் முதலிய நோய்களுக்குக் கொடுக்க வேண்டிப் போகர் நூல் (700)ல் சொல்லியபடித் தயாரித்த ஓர் வகை மாத்திரை,* a medicinal pill prepared according to the recipe mentioned in the Tamil medical work (700) of a Siddha named Bogar. It is prescribed for children's diseases such as, indigestion, cold, delirium, typhoid fever etc.

அமிர்தா மலகம், *சீந்தில்,* see under *அமிர்தவல்லி.*

அமிர்து, *அன்னம்* boiled rice; **2.** *பால்,* milk.

அமிர்தை, *நெல்லி,* embelic myrobalan; country goose berry — Phyllanthus emblica; **2.** *வெள்ளைப் பூண்டு,* garlic — Allium sativum; **3.** *கள்,* toddy; **4.** *திப்பிலி,* long pepper — Piper Longum; **5.** *சீந்தில்,* moon creeper — Tinosphora cordifolia; **6.** *அமிர்த கடுக்காய்,* which see; **7.** *துளசி,* holy basil — Ocimum sanctum; **8.** *இரசாஞ்சனம்,* sulphuret of antimony; **9.** *அழிவின்மை,* immortality.

அமிர்தை யுப்பு, *வளைய லுப்பு,* a white salt extracted from fuller's earth and used in the manufacture of bangles — Fel vitri. It is also called glass-gall.

அமிலகரம், *பிராணவாயு* a gaseous element which is very essential to respiration — Oxygen.

அமிலக் கினம், *உடலில் அழிந்த தாது பாகத்தை உள் வாங்கு மல்லது வெளித் தள்ளு மருந்து.* (In materia medica) a drug or medicine that produces absorption or exudation of diseased tissues.

அமிலதம், *கறி, கந்தம் முதலியவைகளோடு கூடி அமில வர்க்கங்களை யுண்டாக்கும் பதார்த்தம்,* that which converts vegetables and roots into sour substances.

அமிலதி கரணம், *பிராண வாயுவைக் கலக்கச் செய்தல்,* the act of uniting or causing to combine with oxygen — Oxygenation.

அமிலத் தன்மை, see *அமிலம்.*

அமிலப் பிரதிகாரம், *புளிப் பெதிர்க்கை,* the reciprocal action of acid — acid reaction.

அமில மாக்கல், *புளிப் பேற்றல்,* to convert into acid, to make sour.

அமிலமை, *திராவகத் தன்மை, புளிப்புத் தன்மை,* acidity, sourness.

அமிலம், *திராவகம்,* acid; **2.** *புளிப்பு வஸ்து,* sour substance; **3.** *மண், உலோக முதலியவைகளோடு சேர்ந்து உப்பு வர்க்கங்களை யுண்டு பண்ணுமோர் பதார்த்தம்,* (In chemistry) a sub-substance which combines with bases to form salts, and of which hydrogen is an essential constituent.

அமிலித்த, *புளித்த* acidified.

அமிலித்தல், *புளிக்க வைத்தல்,* converting into an acid — Acidity.

அமிழ்தக் கொடி, see *அமிர்த கொடி.*

அமிழ்தம், *அமிர்தம்,* which see; **2.** *உணவு,* food.

அமிழ்து, *மருந்து,* a common term for medicine; **2.** *சாகா மருந்து,* elixir, ambrosia; **3.** *பால்,* milk.

அமீதுரம், *செம்மறிக் கடா,* the male of a sheep which butts with its head — Ram.

அமுகம், see *அமுதம்.*

அமுகாரி, *பூனைக்காலி,* a perennial climbing plant called 'cat bean' — Mucana pruriens.

அமுக்கடி, *மந்தாரம்,* cloudiness.

அமுக்கடி காசம், *மந்தார காசம்,* a paroxysmal dyspnea attacking one in a cloudy weather — A kind of asthma.

அமுக்கம், *உள்ளே யமிழ்ந்த தன்மை,* compression.

அமுக்கனாங் கிழங்கு see, *அமுக்கிலாங் கிழங்கு.*

அமுக்கன், *தூக்கத்திலமுக்குமோர் ஆவி,* the gas which is said to cause suffication during sleep — Nightmare succubus.

அமுக்கி, *தூங்குபவன் நெஞ்சில் அல்லது வயிற்றின் மேல் யாரோ ஒருவரேறிய பாரத்தினாலமுக்குண்டு அசையவும் பேசவும் மூச்சு விடவு முடியாமலும், செய்வது போற்*

காணுமோர் உணர்ச்சி. அன்றியும் இது கெட்ட அல்லது பயங்கரமான கனவு காணுதலால் உடம்பை அசைக்க முடியாதது போற் காணும். ஆகவே இதைப் பேயினுடைய சேட்டையென நம்புவது முண்டு, a feeling of oppression or suffocation during sleep, accompanied by intense anxiety, fear or horror with some overpowering oppressive or stupefying influence — Night mare.

It is also attended with hideous dreams and often with inability to stimulate muscular activities except in a very slight degree. It is generally believed to be the action of the devils. See அமுக்கன்.

அமுக்கிரா, see அமுக்குரா.

அமுக்கிராக் கிழங்கு,
அமுக்கிராங் கிழங்கு, அமுக்கிரா என்னும் ஓர் கடைச் சரக்கு, இக்கிழங்கைச் சூரணஞ் செய்து, இருமல், சயம், பாண்டு, வயிற்று மந்தம் இவைகளுக்குக் கொடுக்கலாம். வீக்கங்களுக்கு இதைச் சுக்குடன் அரைத்துத் தடவக் குணமாகும். வாயுக் கட்டிக்கும் இழைத்துப் போட அது கரையும். கரப்பான் குணமாகும். horse-root — Withania somnifera. It is a bazaar drug. The powdered root is given for cough, consumption, dropsy, and bowel complaint; externally it is very useful in cases of swelling when used as a paste, ground with dried ginger. It is also useful in boils and abscesses which disappear on its application. It also cures eczema.

அமுக்கிரா வேர், அமுக்கிராச் செடியின் வேர். இது குளிர்ச்சியான சலபேதியை யுண்டாக்குமென்பது நமது நாட்டு வைத்தியர்களின் கொள்கை, the root of Indian winter cherry — Withania somnifera. It is a bazaar drug and Veidyans consider it to have cooling de-obstruent and diuretic qualities.

அமுக்குரவு,
அமுக்குரா, அமுக்கிராச் செடி, இதுவோர் தாழ்ந்த செடி. 2 — 3 அடி உயரம் தான் வளரும். பூக்கள் மஞ்சளும், பச்சையும் கலந்த நிறமுள்ளவைகள், காய் சிறியதாகவும், சிகப்பு நிறம் வாய்ந்தும், பட்டாணி யளவும் உள்ளது. இவ்வேர் மேனாட்டு 'ஜென்டியன்' வேரைப் போன்றது. இதன் இலைகள் கசப்பு, மயக்கத்தை யுண்டு பண்ணும். இதைச் சுரத்திற்குக் கஷாயமாகக் கொடுப்பதுண்டு. அன்றியும், சிவந்த கட்டிகளுக்கும் இதை யரைத்துப் பூசலாம். வேரைத் தீராத ரணத்திற்கும் வாத வீக்கத்திற்கும் மேற்பூச்சாக உபயோகிக்கலாம். இதன் காய் சல பேதியை யுண்டாக்கும். இலைகளை விளக்கெண்ணையிற் குழைத்து உபயோகிக்கலாம். இதன் விதை, பாலிலிருந்து வெண்ணெய் எடுப்பதற்காகப் பிரைக் குத்தலுக் குதவும். இதில் மற்றொரு இனமுமுண்டு. அது ஐரோப்பிய தேசத்திற் பயிராகும். அதன் வேரும் அமுக்கார வேர் மாதிரியே காணப்படும். அது குதிரை மூத்திரம் போல் எரிப்பு நாற்றம் வீசும். அது மனோவசியத்திற்குதவும். horse-root shrub — Withania somnifera.

It is an under shrub 2—3 ft. in height with yellowish green flowers. Its berry resembles gentian root in external appearance. The leaves are very bitter and are given in infusion in fever. They are applied to inflamed tumours. The root is applied to obstinate ulcers and rheumatic swellings of the joints. The fruit is medicinally diuretic, and the roots and leaves are powerfully narcotic and alexipharmic. The leaves rubbed over with castor oil are applied to carbuncles. The seeds coagulate milk and thus help in making butter. Another species is winter - cherry of Europe - Physalis sommifera alias P.alkekengi. The root of this resemblies gential root, which has the peculiar odour of a horse's urine.-

It is plant recommended as a hypnotic and is nearly related to Atropa belladona.

